அடி பாடி 475/2. பரமன் ... *. திருவடிகளை ஸ்தோத்ரம் செய்து.

அடி போற்றி 497/1. அன்றிவ்வுலக மளந்தாய் ... *. திருவடிக்கு மங்கலம். சேவடி செவ்வி திருக்காப்பு போலே.

அடி மட்டை – மட்டையின் அடிப்புறம். "சம்பான் மரத்தினுடைய அடிப்பக்கம்" (?)

அடிமண்டி யோடே கலங்கிற்று 2934/4. அடிச்சேறு, அடியிலே மண்டியிருப்பது, தேங்கியிருப்பது. அடிவண்டி என்பது அடிவண்டல்.

அடிமை - கைங்கர்யம் 1373/2. நின் ... யருளெனக்கு *.

அடிமை - அடியாள். "ஸ்தன அடிமை" (வா. மா 271.) ஸ்ரீதநமாக வந்த அடிமை.

அடிமைக் குற்றேவல் 3793/1. ... செய்து *. அடிமைத் தொழிலுக் குண்டான, குற்றேவல் - சிறு தொழில், அந்தரங்கமான செயல்.

அடிமைத் திறத் தாழியார் 3593/4. அடிமை விஷயத்தில் ஆழ்ந் தவர்கள்.

அடிமைத் திறம் 462/2. ... நேர்பட விண்ணப்பம் செய்*. அடிமை விஷயம்.

அடிமைத் தொழில் 1048/4. இன்று ... பூண்டாயே.* கைங்கர்யம்.

அடிமைப் பணி 3861/2. ... செய்யப் புகுந்தேன்*. கைங்கர்யம்.

அடிமைப் பயன் 945/4. ஆட்புக்க காதல் ... *.

அடிமையறக்கொண்டா(ய்)ன் 3324/3. அற அடிமை கொண்டான். அற - பூர்ணமாக, முழுமையாக, அநந்யார்ஹமாக.

அடிமையின்றித் திரிவார் 370/2. நிலை பெயர்ந்து திரிவார், அநர்த் தப்படுவார்.

அடியர் 3989/2. அந்தமில் பேரின்பத்து ... ரோடு. அடியவர்.

அடியரோர்க்கு 3793/2 ... அருளி *. அடியோர்க்கு, அடியரான எங்களுக்கு.

அடியவர்கள் 1107/2. அடிகளடியே நினையும் ... *. சேஷ பூதர்கள்.

அடியளப்புண்டது 2697/2. அடியால் அளப்புண்டது - அளக்கப் பட்டது.

அடியற்ற த்வநி 3010/2. ஆதாரமில்லாத பேச்சு. அடி - மநஸ்ஸு மனமற்ற பேச்சு, அஹ்ருதயமான பேச்சு.

அடியற்றால் வாடும் 3231/4. அடி - திருவடியும் வேரும். ஈசுவர னுடைய திருவடியில்லாவிடில் வாடும், வேரில்லாவிடில் வாடும்—என்று இரண்டு அர்த்தம்.

அடியற்றிருப்பன. அடி - முதல் அற்றிருப்பன - உண்டாயிருப்பன. "முடிவு காணாதிருக்கச் செய்தேயும் ... சில உண்டிறே" 3376/1. முடி வில்லாத போனாலும் அடி யுள்ளவை சில உண்டு — என்று பொருள்.

அடியற்று - முதலற்று. "தம்மடைவிலேயாய் அடியற்றிருக்கை யன்றிக்கே என் குடிக்கு நாயகனானவன்."(?) தான் கைம் முதலில்லாத வனாயிருப்பதோடு என் குடிக்கு நாயகனுமாயிருக்கிறவன். தம்மடைவிலே யாய் - தன் வரையில், தன் கையில், தன் மட்டில். அடியற்றிருக்கை - கைம் முதலற்றிருக்கை.

அடியறியாதார் – திருவடி யறியாதார், வழிய றியாதார். அடி – திருவடியும் வழியும். "அடியறியாதாரிறே உபாயாந்தரங்களான விலக்கடிகளிலே போகிறவர்கள்," 3231/ப்ர. விலக்கடி – துர்மார்க்கம். விலக்கின, அடி - வழி.

அடியறிவார் - காரணம் அறிவார். 2906/3.

அடியறுக்க – நிர்மூலமாக்க. பூண்டறுக்க, அடியோடு அழிக்க. "ஸம்ஸாரம் மறுவலிடாதபடி ..." (அர்ச்சி. ப்ர. 1.)

அடியறுப் புண்ட பின்பு – த்வம்ஸம் செய்யப்பட்ட பின்பு, நிர்மூலமாக்கப்பட்ட பின்பு. "ஜநஸ்தாநம் ..." 3041/1.

அடியனேன் 1420/4. ... னும் வந்து அடியிணையடைந்தேன் *. அடியேனான நான்.

அடியாட்டி - அடியாளுக்குப் பெண்பால். "கூனி சொன்னது கேட்க வேண்டா; அவள் ... யாகையாலே." 2063/4.

அடியார்கள் 658/3. மெய் ... தமீட்டம் *. அடியவர்.

அடியார்கள் குழாங்கள் 3040/4. மாயப்பிரான் ... *. ததியரின் திரள்கள்.

அடியார் தம்மடியனேன் 3946/1. அருள்பெறுவார் ...*. அடியார்க்கடியனான நான்.

அடியார் தம்மடியார் 3195/4. ... எம்மடிகளே.* அடியார்க்கடியார்

அடியார்ந்த ஆயிரம் 3197/3. ... த் துளிவை பத்து *. அடிகள் நிறைந்த ஆயிரம் பாட்டான திருவாய் மொழி.

அடியார்ந்த வையம் 3196/1 ... உண்டு ஆலிலை *. திருவடிக்கு அளவான பூமி.

அடியார் நிலாகின்ற வைகுந்தம் 2552/3. நித்ய ஸூரிகள் நித்ய வாஸம் பண்ணுகிற ஸ்ரீ வைகுண்டம்.

அடியாரடியார் தம்மடியாரடியார் 3196/3,4. அடிமையின் எல்லை.

அடியாவி 2562/4. அடியேன் ... *. அடிமையான, ஆவி – ஆத்மா.

அடியிட்டபடி – உத்யோகித்தபடி, அடிகோலினபடி. "முன்பே ... யிறே இது." 3196/1.

அடியிட்டுப் போந்த ராஜ்யம் 2861/2. "மஹாபலி தான் ..." அநுபந்தம் பார்.

அடியிடுவது 90/2 பெயர்ந்து ... போல் *. அடியிட்டுச் செல்வது, தொடர்ந்தோடுவது.

அடியிணை 984/3. அந்தரத்தமரர்கள் ... வணங்க *. இணை சேர்ந்த திருவடி, இரண்டு திருவடி.

அடியில் ராகமிறே இவனை இப்படியாக்கிற்று. 3244/3 ஆரம்பத்திலுண்டான காதல், திருவடியிலுண்டான பக்தி. ராகம் – காதலும் பக்தியும்.

அடியில்லை - ஸம்பந்தமில்லை. "சொல்லுக்கும் செயலுக்கும் ..." 704/4.

அடியிலே தலையாக வாழ அடியிடுகிறார் 3187/3. அடியிலே முதலிலே, தலையாக - நன்றாக, அடியிடுகிறார் - ஆரம்பிக்கிறார். திருவடியிலே தலைவைத்து வாழ ஆரம்பிக்கிறார். இரு பொருள்.

அடியிலே நாய் அடியிட்டு நலியத் தொடங்கிற்று. 3232/4. நாய் காலிலே பிடித்து, ஆரம்பத்திலே பிடித்து நலியத் தொடங்கிற்று. இரு பொருள்.

அடியிலே பச்சையிட்டாள் 3242/3. பச்சை - காணிக்கை. முதலிலேயே காணிக்கை ஸமர்ப்பித்தாள். பாதத்திலே, பச்சை - துளஸி ஸமர்ப்பித்தாள்.

அடியிலே பிறந்துடைய கந்தம் 3264/1. அடி - ஆதியும் திருவடியும், பிறந்துடைய கந்தம் - பிறந்த போதே உண்டான மணம். பூமிக்கு ஆதியிலேயே, அதாவது — எம்பெருமான் திருவடியில் அது உண்டான போதே உண்டான மணம். பத்ப்யாம் பூமி:, — என்ற சாஸ்த்ரத்தின்படி பூமி எம்பெருமான் திருவடியில் உண்டாயிற்று; அப்போதே அதற்கு மணம் ஏற்பட்டது.

அடியிறை 357/3. எம்பிரானுக்கு ... *. பாத காணிக்கை. அடி - பாதம். இறை - காணிக்கை.

அடியினன் 1096/1. தொண்டாயார் தாம் பரவும் ... *. திருவடிகளையுடையவன். அடியீர்காள் ! 1804/2. அடைமின் ...*. அடியவர்களே !

அடியுடைமையிறே எல்லாரும் சிரஸா வஹிக்கிறது 3378/4. "அடியுடைய பேராகையாலே ஸர்வர்க்கும் தாரகமாயிருக்குமே" 3378/4. அடியுடைமை - பாக்கியமுடைமை.

அடியுடையார் 3241/3. மூலமும் எம்பெருமான் திருவடியும் உடையவர். "அடியுடையார்க்கெல்லாம் சாதித்துக்கொள்ளலாமே" 3470/அவ. ஐச்வர்யமுடையவர், திருவடிகளையுடையவர்.

அடியுற்றான எம்பெருமான் (வா. மா. 313.) அநுபந்தம் பார்.

அடியெடுப்பதன்றோ அழகு 2614/4. சடக்கெனக் கால் வாங்குவது புறப்படுவதுதான் அழகு.

அடியே பிடித்து ஜீவிக்கப்போந்த நான் 3207/3. முதலிலே பிடித்து, திருவடிகளையே பற்றி ...

அடியேன் நான் 438/1. காரண காரியாய் ...*. அடியேனான நான். அடியேன் நான் 2028/1 ... பின்னுமுன் சேவடியன்றி *.

அடியேன்பட்ட கடை 2191/4. நான்பட்ட பொல்லாங்கு. கடைப்பட்டேன் - என்பதோடு ஒத்துப் பார்.

அடியேனுள் 2440/3. கேடின்றி ஆள்வாய்க்கு ... *. அடியேன், நான், ஆள். அடியேனான நான் ஆள் - அடிமைப்பட்ட ஆள்.

அடியேனுக் கின்பாவாய் 2440/1. ஆரமுதமாவாய் ... *. அடியேனுக்கு இன்பம் தந்தவனுவாய்.

அடியேனுள்ளத் தின்னுயிர் 929/4. என்னுடைய நற்சிவன். என்னுடைய உள்ளத்தில் வர்த்திக்கிற, இன்னுயிர் - ஹ்ருதயம்.

அடியேனுள்ளான் 3748/4, ... 9/1. அடியேனை என்னுடைய, உள்ளான் - அகவாயிலே பிரகாசியா நின்ருன்.

அடியொத்திப் போய் - அநுஸரித்துப் போய். 948/அரு. அவ.

அடியொத்தினுர் - தேடினுர் (?)

அடியொற்றி - அடி பிடித்துக் கொண்டு பின்னே சென்று 3038/4. "அடியொற்றிக் கொண்டு திரியா நிற்கும்" 1911/3. தகர நகரங்களால் பொருள் வேறுபாடில்லை.

அடியோங்க ளடிக்குடில் 10/2. அடியரான எங்களுடைய அடிமைக் குடும்பம்.

அடியோங்கு நூற்றுவர் 3197/1. ராஜ்யத்திலே வேருன்றின துர்யோதநாதியர் நூறு பேர். **அடிவட்டம்** 2294/2. ... த் தாலளப்ப *. 'பாத வலயம்.'

அடிவாய் 267/2. ... யுறக் கையிட்டு *. அடிப் புறம்.

அடி விடாதே கொள்ளுங்கோள் 3232/4. "அவன் முடியைத் தரிலும் திருவடியைச் சேருங்கோள்; நீங்கள் உங்கள் ...." அடி - ஸ்வருபம், நிலை.

அடிவிடார் - திருவடியை விடார். "எல்லா அவஸ்தையிலும் அவனை ..." 3207/2.

அடி வீழ்கின்றேன் 602/2. நடம் பயின்ருடுகின்றீர்க்கு...*. காலிலே விழுகின்றேன்.

அடி வீழ்ச்சி விண்ணப்பம் 583/2. திருவடிகளிலே விழ்ந்து செய்யும் விண்ணப்பம்.

அடுக்க 2194/2. அன்று இடர் ... *. அடர்க்க, வந்து மேல் விழ.

அடுக்கல் (வடுக்கலிட்டு வில் பார்.)

அடுக்கும் - தகும், இருக்கலாம், இருக்கக்கூடும். "ஸர்வேசுவரனுகிருன் பிரம்மாவாக ... ஜகத் ஸ்ருஷ்டிக்ஷமனுகையாலே." (?) "நமக்கு பகவத் ஸம்பந்தமுண்டென்று இருக்க ..," (?) "நீர் போக ..." 1940/அரு.

அடுகணை 82/3. ... யாலே நெருக்கிய *. அடுகிற கணை, கொல்லை யம்பு.

அடுகளம் 2162/1... த்துளர்ந்ஞான்று *. முடிப்பதான போர்க்களம்

அடுகுவளம் - போனகப் பெட்டி. "அடுகுவளம் தடைப்படும் போலே காணும்" 3926/3. அடுகு - அடுக்கு பெட்டிமேல் பெட்டியாய், வளம் - போஜ்ய வஸ்துவாய், போனகப் பெட்டி. சாப்பாடு கொண்டு

வரும் அடுக்கு. டிபன் செட்டு என்று சொல்லும் அடுக்கு முற்காலத்திலும் உண்டு போலும்! அடுகுவளம் - முழுச் சொல்லாய் போஜநம் என்றே பொருள். அடை குவளம் அடுகுவளத்தின் கொச்சை.

அடுசரம் 1414/3 ... துரந்து *. அடுகிற சரம். கொலையம்பு.

அடுசிலை 1821/1. சுடுசரம் ... துரந்து *. முடிக்கவற்றுன சிலை-வில்.

அடுசிறு சோறு 3470/3. யாம் ... *. அடுகிற, கொஞ்சமான சோறு. சமைக்கிறவருக்கு மட்டுமேயாய் புறம் பொருத்தருக்கு புஜிக்க வொண்ணுத சோறு. அல்லது சாதரணமான சோறு.

அடுஞ் சக்கரம் 2480/3. அழல்போல் ... *. சத்துருக்களை நலியும் திருவாழி.

அடுஞ் செக்கு 3565/1. ... கிலிட்டு *. நெருக்குகிற செக்கு.

அடுத்த கடும் பகைஞன் 2161/1 ... ற் காற்றேன் *. இயற்கை யிலேயே கொடிய சத்துரு. ஸஹஜ விரோதி.

அடுத்த சீர் நலங்கொள் மால் 864/3. கல்யாண குணங்களால் நலமுடைய திருமால். தகுந்த சிர், இயற்கைக்குச் சேர்ந்த சிர்.

அடுத் தடுத்து - மேல் மேல் (?)

அடுத்தணித்தாக - மிகவும் ஸமீபமாக. "பிரம்மாதிகளின் குரல் கேட்கும்படி ... திருப்பாற் கடலிலே கண் வளர்ந்தருளினுன்." 1341/2. அடுத் தணித்தாய் - அடுத்தாற் போலே. அடுத்ததாய், அணித்து அண்மையிலுள்ளது. "பரமபதத்துக்கும் ... யிறே திருமலை இருப்பது." 1636/1.

அடுத்த தோருரு 3673/4. ... வாயின்று நீ வாராய் *. தகுந்த தோருரு.

அடுத்துக் கட்டி - சேர்த்துக் கட்டி. "தாம்பாலே ஒருரலோடே ..." 2921/3.

அடுத்தூணுக வுடையவன் - இலக்கைக்கு விட்ட ஸீமையாக உடையவன். ஆஸந்ந ஜீவநமாக உடையவன். "வாய்க்கரைப் பற்றை ..." 3315/4. நெடுந் தூரம் போக வேண்டியிராதே அருகிலேயே உண்ணவுணுடையவன். இலக்கை - மாஸச் சம்பளம். அதற்காக விட்ட பூமியை உடையவன்.

அடுத்தேருக - அதிகமாக. அடுத்து ஏறினதாக. "... வந்த கரத்தைக் கழித்து" 3206/4.

அடு திறல் 920/4. ... அயோத்தி *. அடும் திறல். சத்ரு பக்ஷம் மண்ணுண்ணும்படியான மிடுக்கு.

அடுந் தீவினை 3569/1 குல முதல் ... *. முடிக்கவற்றுன பாபம்.

அடுந்துனி 1575/1. ... யைத் தீர்த்து *. நலிகிற கர்ம பந்தம்.

அடுந் தொண்டை 2487/4. ஆயோ ... யோ *. காமுகர்களை ஹிம்ஸிக்கும் தொண்டை - கோவைப் பழம், அதுபோன்ற உதடு.

அடுப்படைக்கல் - அடுப்புக்கு அடைக்கும் கல். "பிரம்மாதிகளைக் கண்டால் ... லாக நினைத்திருக்குமத்தனை. * வியவேன் திருமாலையல்லது தெய்வமென்று ஏத்தேன்.* 2145/2. அடுப்படைக்கல் பிறிதொன்றுக்கும் பயனில்லை; அதுபோல பிரம்மாதிகளான பிற தெய்வங்கள்.

அடுப்பது - தகுவது. "செய்ய ... தென் ?" 3295/3.

அடுப்பிடு கல் - அடுப்புக்கு இடும் கல். "தேவதாந்தரங்களை ... லோபாதியாக நினைத்திருக்குமத்தனை." 3330/ப்ர. அலக்ஷியமாக நினைத்திருக்குமென்றபடி. அடுப்புக்கு உபயோகமாயிருப்பது அந்த ஸமயத்துக்கு மட்டுமே; மற்றைக் காரியத்துக்கு அலக்ஷியமாகும்.

அடுப்பு 206/1. பாலைக் கறந்து ... ஏற வைத்து *.

அடுப்புக் கிடை - அடுப்பங் கரை. அடுப்பின் கிடை - இடம். அட்ட தொழியவிலே பார்.

அடுபகல் மாலை 3874/2. ... யும் நெஞ்சும் காணேன் *. பகலை அடுகிற, முடிக்கப்பட்ட பகலையுடைய, மாலை.

அடுபடை 3674/3. ... யவித்த அம்மானே *. கொல்ல வந்த சேனை.

அடுபுள் 2963/3 ... ஞயர்த்த வடிவார் மாதவன் *. சத்துருக்களைக் கொல்லும் கருடன்.

அடுமாலை 3870/2. பகல் ... *. பகலை அடுகிற மாலை.

அடுவாளமர் 1080/2. ... ரில் பல மன்னர் *. அடு ஆள் அமர். ஆட்களை அடுகின்ற பூசல். அடுகிற, வாள் - ஒளி, மதிப்புடைய, அமர் பூசல்.

அடைக்கலத் தோங்கு கமலத்தலரயன் 2563/1. அடைக்கலமாய், ஓங்கு - வளர்கின்ற, கமலத்தலரில் பிறந்த, அயன் - பிரம்மா.

அடைக்கலம் 843/4. ... புகுந்த என்னை *. நிக்ஷிப்த ரக்ஷணீயம். ரக்ஷணீயமாக நிக்ஷேபிக்கப்பட்டது. அடைந்த கலம் - பாத்திரம். அடைக்கலம் புகுகையாவது — என்னுடைய ரக்ஷணம் உன்னுடையதென்று எளியவன் பற்றினால், உயர்ந்தவன் அவனை அடைத்து வைத்து, மறைத்து வைத்து, விரோதிகள் அணுகாதபடி செய்த கலமாவான்.

அடைக்காய் ८/2 கை ... *. அடை - வெற்றிலை. காய் - பாக்கு. "அடைக்காயமுது நீட்டுவான்" — என்று தாம்பூலம் எடுத்து நீட்ட கோயிலில் அருள்பாடு உண்டு. அடைக்காயான அமுது-திவ்யதாம்பூலம்.

அடைகட்ட 938/1. "அண்ட கடாஹம் வெடித்து ... வேண்டும்படியாயிறே அபேக்ஷிதம்பெற்று வளர்ந்தபடி." அடைத்துக்கட்ட-சிதறிப் போகாதபடி பிடித்துக்கட்ட. அடி பிடிக்க வேண்டும்படி. அடை குவளம்-அடுகுவளம் பார்.

அடைகொடுபாழ் கொடுமவன் 3880/ப்ர. அடை கொடுப்பதாகக் கைக் கொண்டு பாழாக்கிவிட்டவன். பாணாஸுரனை ரக்ஷிப்பதாக வந்து பாழாக்கினவன். "அடைகொடுபாழ் போக்குமவன்" 3444/2. அடை-

லட்டு அப்பம் முதலியன. அடையை வாங்கிக் கொண்டு, அது கொடுத்தவனைப் பாழாக்கினவன்.

அடைகோட்டைப் பட்ட வளவில் - கோட்டை முற்றுகை யிடப்பட்ட ... (தேசிகர்).

அடைத் தேற்ற லாயிறே இவ்விடம் இருப்பது. 3528/2. மேட்டு மடையான இடம், விரோதியான இடம், வருந்திக் காரியம் கொள்ளும் இடம் — மூன்று அர்த்தம். தண்ணீர் எளிதாகப் பாயும் இடமாயிராமல் அடைத்து வைத்து ஏற்றும்படியான மேடு என்று சொல்லடைவிலேயே பொருளாகிறது. "அடிமை செய்ய என்றால் அடைத் தேற்றலாயிறே இருப்பது." 3187/ப்ர. 9. வருத்தமாயிருப்பது.

அடைப் புண்ணும் - அடங்கும், அந்தர்ப்பவிக்கும். "கழிந்தவற்றிலும் வருமவற்றிலும் ... வர்த்த மாநம்" 2902/4.

அடைப்பு நீக் கொண்ணாது - அடையவும் நீக்கவும், அதாவது - பற்றவும் விடவும் இயலாது. என்னில் ... இறையவனே *. 2587/3.

அடைப்பை - அடைப்பம், வெற்றிலைப் பெட்டி. (ஸம். ஸா.)

அடைபுடை தழுவி - அஹோராத்ரம் அணைந்து, இராப் பகல் தழுவி. *... அண்டம் நின்ற திரும். 1340/4.

அடைமதிட் படுத்தி - முற்றுகை போட்டு. "படை விட்டை... வந்து கிட்டுகையன்றிக்கே." 3222/4. மதிளை அடைப்படுத்தி - அடைத்து, சுற்றிலே விட்டுக்கொண்டிருக்குமாப் போலே. அடைமதிட்படுத்துவார் 3827/2. அடைமதிள்படுத்தி - அடர்த்தெறிந்து 808/2. என்பதன் பொருள்.

அடைமின் - அடையுங்கோள். 1804/2. ... அடியீர்காள் *.

அடையப் படுத்தி - அநுபந்தம் பார். "அப்பேயின் கையில் அகப்பட்டது ... க்கால் நடை தந்தது 2115/3.

அடையவளைந்தான் 3572/ப்ர. 3597/4. ஸ்ரீரங்கத்தில் எட்டாவது ப்ராகாரத்துக்கு அடையவளைந்தான் என்று பெயர். அடைய - சுற்றிலும், முற்றிலும், வளைந்தான் - வளைந்திருப்பது, சூழ்ந்திருப்பது. ஸர்வவேஷ்டநம் - எல்லாவற்றையும் சுற்றியிருப்பது என்ற ஸம்ஸ்க்ருதத்துக்கு அடையவளைந்தான்—என்பது சரியான தமிழ். அடையவளைந்தான் அரும்பதம்— திருவாய் மொழிக்கு வியாக்கியானமான ஈட்டின் பெரிய அரும்பத விளக்கத்துக்கு இப்படிப் பெயர். சிறிய அரும்பதம் என்பது சிறியது.

அடைய - எல்லாம். "நாட்டை யடைய வென்று" 1/4.

அடைய நின்றனர் 2903/4 அவரவர் விதி வழி ... ரே *. ஆசிரயித்துப் பலனடையும்படி இருந்தனர்.

அடையார் சியம் - சத்துருக்களுக்கு சியம், ஸிம்ஹம்போல அணுக முடியாதவன். அருள்மாரி அரட்டமுக்கி ...* 1187/2.

அடையா வரக்கர் 1542/3 ... வியப் பொருது *. ஸ்நேஹமாய் வந்தடையாத, அணுக மாட்டாத அரக்கர். அடையாளம் - குறி 318/4.

அடையுமாகில் - 879/3. குறிப்பெனக்கு ... *. வாய்க்கு மாகில், கிடைக்குமாகில், கிட்டுமாகில்.

அடைவு - தகுதி, ஸம்பந்தம், ப்ராப்தி, "வேதாத்ய யநத்துக்கு ... இல்லாத அவைதிகர்." 2899. மு. ஸ்ரீ.

அடைவு கெடப் பரிமாறினர்(?) முறைகெட, இஷ்டம் போலே, ஒரு நியதியின்றிக்கே பரிமாறினர்.

அண்டக்குலம் அண்டங்களின் திரள் 5/1. ... த்துக் கதிபதி யாகி*. அண்டம் - உலகம், குலம் - திரள்.

அண்டத் தகத்தான் – அண்டர்களுக்கெல்லாம் நிர்வாஹகன்; அண்டங்களின் அக்வாயிலுள்ளவன், எல்லாவற்றுக்கும் அந்த ராத்மா. ... புறத்துள்ளான் *. 3749/1.

அண்டத்திரு சுடர் – அண்டத்திலுள்ள இரண்டு சோதிகள், சந்திர சூரியர்கள். ... ருமாய இறை *. 2319/3.

அண்டத் தும்பரில் நெடியான் 3198/3. பரமபத வாஸிகளான ஸூரிகளுக்கு நிர்வாஹகனான பெரியான்.

அண்டத்தின் முகடு 2010/1. ... அழுந்த *. அண்டபித்தி, அண்டச் சுவர், அண்டத்தின் ஓரம்.

அண்டநாறும் பொழில் 1380/4 அண்டம் - ஆகாசம் முழுதும், நாறும் - மணம் வீசுகிற, பொழில். அண்டம் - நாவி, புழுகுப் பூனை, அல்லது கஸ்தூரி மானுடைய பீஜம். அது மணம் வீசுகிற பொழில்.

அண்ட பகிரண்டம் 932/3. அண்டர் ... *. இந்த அண்டமும், இதற்கப்பாலுள்ள அண்டமும்.

அண்டம் திருமாலகைப்பு 2418/4. உலகம் திருமாலின் எழுச்சி – பிரயத்தினத்தாலானது.

அண்டர் 17/4. ... மிண்டிப் புகுந்து. * தேவ ஜாதியும் இடையரும். இங்கே இடையரைச் சொல்லுகிறது.

அண்டர்கோன் 936/3. ... அணியரங்கன் *. அண்டாந்தர்வர்த்திகளுக்கு, அண்டத்துக்குள்ளிருக்கும் யாவருக்கும் நிர்வாஹகன்.

அண்டரண்ட பகிரண்டம் 932/3. அண்டர் - அண்டத்துக் குள்ளிருப்பவர், அவர்களுடைய அண்டம் அண்டரண்டம், அதற்கப்பாலுள்ளது பகிரண்டம். அண்டரண்டமும் அப்பாலுள்ள அண்டமும் – இவ்வுலகமும் இதற்கப்பாலுள்ள உலகமும்.

அண்டவாணர் 1860/4. ... உகப்பதே செய்தாய் *. தேவர்கள்.

அண்டவாண னரங்கன் 671/3. அண்டர்களுக்கு அண்டத்திலுள்ளார்க்கு, வாணன் - நிர்வாஹகனான அரங்கன். ஸாமர்த்தியம் என்னும் அர்த்தத்திலுள்ளது அண்டவாணன். [வண்டவாளம் என்பது இதன் கொச்சையாகலாம். உன்னுடைய வண்டவாளம் தெரிந்ததே!—என்ற வழக்குச் சொல் காண்க.]

அண்டன் 2002/4. ... னையே ஏத்திர்களே *. அண்டம் - உலகம். பிரம்மாண்டமான இவ்வுலகத்தை யுடையவன், ஸர்வேசுவரன்.

அண்டை கொண்ட - ஆசிரயித்த. "திருநாமத்தை ... பலத்தாலே" (?) "ராஜ்யம் ஆனவாறே ராஜாவை ... சிறையிலே வைப்பது"(?)

அண்ணல் - ஸ்வாமி. ஸர்வேசுவரன். புருடோத்தமத்துள் ... *. 1267/2. அண்ணல் செய்து 1449/1. ... அலைகடல் கடந்து.* ஸ்வாமித்வத்தை நிர்வஹித்து, ஔதார்யம் செய்து.

அண்ணல் மலை 1978/4. ... யு மரங்கமும் *. ஸ்வாமியின் மலை. அவனுடைய ஸ்தாநமான திருமலை.

அண்ணலார் 3242/2. ... தாளிணைமேல் *. அண்ணல், ஸ்வாமி.

அண்ணற் கண்ணன் 202/4. இவை செய்யவல்ல ... *. அண்ணனான பல ராமனுக்கு அண்ணியனாகாதவன், அடங்காத கண்ணன்; அண்ணல் ஸ்வாமியாய் ஸ்வாமித்வத்துக் கேற்ற கண்ணழகுடையன்.

அண்ணா - அண்ணன் என்பதன் விளி. "அண்ணா எங்கே"— என்று விளியையே முதல் வேற்றுமையாகச் சொல்லுகிறோம். "சீரியார் சேஷ பூதர்களையும் (குழந்தைகளையும் வசப்பட்டவர்களையும்) "அண்ணா ஆச்சி - என்று நிற்பர்."(?) ஏண்டா அண்ணா, ஏண்டீ அம்மா - என்பர்.

அண்ணாந்து நிற்கும் 268/4. கூனற்பிறை வேண்டி ... *. மேலே பார்த்து நில்லா நிற்கும். அண்ணாறும் அநுபந்தம் பார்.

அண்ணிக்கும் - தித்திக்கும். * ... அமுதாறும் 937/4. [பண்ணும்."

அண்ணிமை - ஸாமீப்யம். 917/2. "கால ... யாலே பூக்கள் ஸ்மிதம்

அண்ணியார் - கிட்டின உறவினர் 1458/1. அண்ணிய உறவு - கிட்டின உறவு (?)

அண்ணுமை - ஸாமீப்யம் 1265/4. அண்மை அண்ணிமை அண்ணுமை — மூன்றும் ஒன்றே.

அண்மை விளி: நெஞ்சமே நெஞ்சே என்றில்லாமல் நெஞ்சம் நெஞ்சு என்று முதல் வேற்றுமையிலேயே விளி தோற்றுவது அண்மை விளி.

அணங்கமரர் 3076/3. சீர் ... *. அணங்கான திவ்யரான, அமரர்கள். அணங்கு தெய்வப் பெண். தேவலோக வாஸிகளான அமரர். அணங்கு என்று தனித்து வந்தால் பெண். இங்கு ஆண் பெண் இருபாலரையும் குறிக்கிறது.

அணங்காடுதல் 3290/1. ... அன்றந்தோ *. அணங்கேறியாடுதல், ஆவேசம் வந்து ஆடுகை.

அணங்காடுதல் கீழ்மையே 3293/4. ... சாலத் தண்ணிது, இழுக்கு. க்ஷுத்ர தெய்வங்களை உபாஸித்து அவை ஆவேசம் வந்ததாகக் கூத்தாடுவது மிகத் தண்ணிது.

அணங்காடுதிர் 3291/1. நீர் ...*. நீங்கள் தெய்வா வேசம் வந்தாற் போல ஆடா நின்றிகோள். [வீண் வேலே.

அணங்காடும் பொய் 3294/2. ... காண்கிலேன் *. அணங்காடும்

அணங்காடு மிளந்தெய்வம் 3287/2. ஆடுகின்ற க்ஷுத்ர தெய்வம்.

அணங்காய சோதி 1165/3. ...த்தேவாதிதேவன்*. திவ்யதேஜஸ்.

அணங்கு - விருப்பம். சீர் ... மறையாளர்.* 1147/2. வார் ... முலே.* அழகு. 1147/3 *. ...ம் பல பல வாகி. 2573/3. தெய்வம். [விஷ்டமாகி.

அணங் கெழுந்து 1822/2. ... அவன் தன் கவந்தம். * தைவா

அணங்கெழு மாமலே 1173/3. தைவா விஷ்டமான மலே.

அணர் 276/1. இட ...*. மேலுதடு. மீசை முளைக்கும் இடம். அணர் 1791/1. காரிமிலேற்று ... *. ஸாஸ்நா. மாட்டின் தாடை.

அணவி 3430/2. புது மாதவி மீது ...*. அணேந்து. அணவும் 1842/4. திங்கள்தான் ...திருக்கோட்டியூர்.* ஸ்பர்சியா நிற்கும், தொடும்.

அணர் 271/3. நடுவே சென்று ... சொறிய.* கழுத்து.

அணுவாய்த்துக் காலம் கழிக்கிருர் 2945/அவ. விநோதமாய், ஸம்சயித்து. அணுவாய்த்துத் திரியும் 999/1. அதுவே போது போக்காகத் திரியும்.

அணுறு 1791/1. "அணுறிலே தாழ ஸஞ்சரிக்கிற மணி" மாட்டுக் கழுத்தில் தொங்கியாடும் மணி. அணுரே அணுறு. ரகரம் வல்லினமாய் உகர ஈருயிருக்கிறது.

அணி - வ்யூஹம். "தூசியும் அணியும் பேரணியுமாக வகுத்து விட்டார்" 3376/4.

அணிக்கொள் நால் தடந்தோள் 3899/3. வேறு ஆபரணம் வேண்டாமல் தானே ஆபரணமாயுள்ள நாலு பெரிய தோள்.

அணிகலத்தன் 3393/3. உலப்பில். ... *. அணியப்பட்ட, கலன் - ஆபரணங்களையுடையவன்.

அணிகலன் 3254/2. தேசமான...னும்*.அணியத்தகுந்த ஆபரணம்

அணிகுருகூர் 3593/2.... ச் சடகோபன்.* உலகுக்கு அலங்காரமான, குருகூர் - ஆழ்வார் திருநகரி.

அணிகெழு தாமரை 1764/3. ...யன்ன கண் *. அழகியதாய், கெழுமிய - நெருங்கின தாமரை. அணிகெழு மாகில் 1764/4. [உதடு.

அணிகொள் செஞ்சிறுவாய் 714/3. அழகிய சிவந்த திருப்பவளம்,

அணிகோட்டியர் கோன் 11/1. ஸம்ஸாரத்துக்கு, உலகுக்கு அலங்காரமான திருக்கோட்டியூர். அதிலுள்ளவர்க்கு நிர்வாஹகன்.

அணிசேர் மார்வம் 735/1. ஆபரணங்கள் அணிந்த மார்பு.

அணித்தாக - ஸமீபமாக 3265/1.

அணித் தொத்து 1855/1 பான்மணியை ... தை.* அணியான, அழகான மாலே. மணித் தொத்தாகில் மணி மாலே,

[அணி திகழும் சோலை, அணி திருவரங்கம் என்று அணி முதலா யுள்ள தொடர்கள் நூற்றுக்கணக்காயுள்ளன. இவையெல்லாம் தொட ரகராதி என்னும் தனிப் புஸ்தகத்தில் வெளியாகும்.]

அணியன் 1045/1, 2452/1. சேயன் ... *. ஆஸந்நன், கையாள், ஸுலபன். அண்மையி லிருப்பவன். "ஆபத்ஸகனுப் ... னுகையாலும் இவனே ஈசுவரன்." 3025/4.

அணியிடாத அநுஷ்டாநம் - ஸந்தேஹியாத ... (தேசிகர்).

அணில் 898/2. சலமிலா ... லும் போலே. *

அணில்கள் 1185/2. ... தாவ நெட்டிலைய கருங்கமுகு. *

அணுக்கடித்துத் திரியா நின்றார் 3586/1. அணுக் கடிக்கை. அந்த ரங்கமாகை. "... த்துப் போன நெஞ்சினர்" 2489/3.

அணுக்கம் - அந்தரங்கதை. "அவன் பக்கல் ... த்தைக் கொண்டு இத்தலையை உதறிப்போனபடி" 1780/2.

அணுக்கர் 576/4. ஏத்த வல்லாரவரும் ... ரே *.

அணுக்கர்கள் 473/4. பாடவல்லார் தாமும் ... ளே*. அண்ணியர். * ... ளாய்ச் சார்ந்தொழிந்தார் 2591/2. [யான்.

அணுக்கன் 238/1. பெண்டிர்க்கு ... னுப் *. அந்த ரங்கனான அடி

அணுக்கன் - குடை. "... னிட்டாற் போலே நிழல் செய்யும்படி" 3153/2. "எனக்கு ... னிடவேணும்." 3287/ "... க்கனைக்கவிழ்த்து" 3401/1.

அணுக்கன் வாசல் - திருவணுக்கன் திருவாசல் (கோயிலொழுகு). கர்ப்ப க்ருஹத்துக்கு ஸமீபமான வாசல், ஸ்ரீரங்கத்தில் ஸந்நிதி வாசல்; ஜய விஜயர்களான துவார பாலர்களுக் கருகில் மணிக் கதவுள்ள வாசல். அணுக்கன் - குடை என்ற பொருளிலும் இந்த வாசலுக்கு இந்தப் பெயர் பொருந்துகிறது; பெருமாள் வெளியே புறப்படும் போது உள்ளே எழுந்தருளும் போது இந்த வாசலி லிருந்தும் இந்த வாசலளவாயும் குடை பிடிப்பதால். அணுகப்பெறு நாள் 3859/4. அடியேன் ... *.

அணுகிற்பன் 3136/4. உன்னையெங்கு வந்து ... *. கிட்டுவேன்.

அணுமை - ஸாமீப்பம். "உரியவப்பனை உரியவென்று ... சொல் லுகிறது." 3681/2.

அணைகில்லாது 3708/2. என்னுவியமர்ந்து ... *. அணையாது.

அத்தகு சீரயோத்தி 325/3. ... யர்கோன் *. அந்த நிலைக்குத் தகுதியான ...

அத்தத்தின் பத்தா நாள் - திருவோணம் 28/3. அத்தம் - ஹஸ்தம். அதிலிருந்து பத்தாவது நாள்.

அத்தவாளத்தலை - அத்தவாளம் - உத்தரீயம், மேலாக்கு, அத னுடைய தலை-முந்தானை. "மேல்கட்டிக்கு ... தையும் கொள்." 499/7. பந்தலின் மேல்கட்டிக்கு தனியாகத் துணி இல்லாதபோது மேல் உத்த

ரியத்தையும் கட்டவேண்டியது — என்று பொருள். "அத்தவாளத் தலை யிட்டு மறைத்து" 3880/ப்ர.

அத்தன் - ஸ்வாமி 973/3. ... எந்தை யாதி மூர்த்தி *.

அத்தனைபோது 1898/3. ... அங்காந்தவன் *.

அத்தாணி 190/1 ... யுள்ளங்கிருந்தாய் *. அருகிருப்பு.

அத்தாணிச் சேவகம் 8/1. நியதமும் ... *. பிரியாத சேவை. அருகிருந்து செய்யும் ஸேவை. அத்தாணி ... பிரியாமை.

அத்தாளத் தளிகை - வானமாமலை திருக்குறுங்குடி முதலான தெற்குத் திருப்பதிகளில் இந்தப் பெயரால் ஒரு நைவேத்யம் உண்டு. இந்த சொல்லடைவில் பொருள் அறியத் தக்கது. அத்தாளநல்லூர் என்று அவ்விடத்தில் ஒரு ஊர் உண்டு.

அத்திக் காயில் அறுமான் 2899/மு. ஸ்ரீ. 2991/4. அறுமான். கொசுகு, பூச்சி. அத்திப் பழத்தில் புழு பூச்சி நிறைந்திருப்பது.

அத்தியாயம் படிப்பர் 1053/அரு. படித்தவர்களாக வேஷம் போடுகிறவர்கள். "வைராக்ய ஸூசக வேஷம் கொண்டு ..."

அத்தியூர்/ரான் 2276/4. ஆழியான் ... *. ஹஸ்திகிரி, அத்திகிரி, அத்தியூர், காஞ்சிபுரம், அதில் நிற்கிற வரதராஜப் பெருமாள்.

அத்திரம் 323/2. ... மே கொண்டெறிய.* அஸ்த்ரம்.

அத்து - அத்துச்சாரியை 177/1. ஆலத்திலையான்*. 1304/2. மாத்தமர்பாகன்*. அத்து - அசை 2054/3. ஒரு வடிவத்தோருரு *.

அத்துணைக்கண் 2859/2. ... மின்னார் மணிமுடி *. அப்போதே.

அதக்கி - அடக்கி, நெருக்கி 418/1. மாவலியைக் குறும்பு ... *. 445/1. வன்புலச் சேவை ... *.

அதக்குவார் - நெருக்குவார். 377/1. சே ... வார் போலப் புகுந்து.

அதகன் 126/4. ... வந்தப் பூச்சி *. மிடுக்கன்.

அதர் - வழி 1701/4. மல்லை முந்நீர் அதர்பட *. 1936/2. அருவழி வானமதர்பட அதர்வாய் - வழியில். 1016/3. ... ச் சில்லி *.

அதரிடை 239/3. கான் ... *. வழிகள் தோறும்.

அதவி 2270/2. ... ப் போர் யானையொசித்து *. அடர்த்து.

அதள் - தோல் 1798/1. அக்கும் புலியின் ... ளும் *. 1935/1. மானுரி ... ளும் *.

அதன்றி 791/1. ... ஆயர்பிள்ளையாய் *. அதுக்குமேலே. அதன்றியும் 770/1. ஓதினாய் ... *.

அதாகிறது - அதாவது(?) அதாவது-வார்த்தைப் பாடு. 3198/ப்ர.

அதிபதி 2899/3. அமரர்கள் ... *.

அதிர் சங்கம் 1125/2. அப்பால்...*. அதிரும்படி முழங்கும் சங்கம்.

அதிர்தலில் - கோஷிக்கையில் 917/4. பிடியொடு முரசும் ... *.

அதிர்ந்த அட்டஹாஸம் 3314/2. அதிரச் செய்கிற பெருஞ்சிரிப்பு

அதிர்முகமுடைய வலம்புரி 393/1. அதிர்கிற வாயையுடைய சங்கு

அதிரச் சொன்னுய் (?) நடுங்கும்படி சொன்னுய்.

அதிருங் கடல் 31/1; அதிருங் கருங்கடல் 2539/2. அதிருங் கழல் 328/3. கழல் - காலணி. அதிலுங் கடையாயிற்று 3658/1.

அதுக்கதுக் காக்கினது 1966/அரு.

அதுகிடக் கிடாய் - அது கிடக்கட்டுமடா 3411/1.

அது கிடக்கிடீர் - அது கிடக்கிட்டுங்கள். கிடாய் ஒருமை, கிடீர் பன்மை. அது கிடக்கிடு வேணுமாகில் 3410/2. அது இருக்கட்டும்.

அதுவன்றியும் - அதுக்கு மேலே 1079/2. முனிந்ததுவும் ... *.

அதுவுமது 2524/2. சொரிகின்றது ... *. அதுவுமப்படியே.

அந்தகன் சிறுவன் 1073/1. ...அரசர் தமரசற்கு *. குருடன பெற்ற மகன்.

அந்த காலம் 373/2. ... அடைவதன் முன்னம் *. முடிவு காலம். அந்தக் காலம் என்பது வேறு.

அந்தண் கழனி 1062/3. நெய்தல் ... *. அழகிய குளிர்ந்த கழனி.

அந்தண்ணந்துழாய் 2482/2. அம் - தர்சநீயமாய், தண், அந் துழாய் - திருத் துழாய், பசு மருந்து - பச்சை மருந்து. புது மருந்து, ஸாரமான மருந்து. அந்தண் துழாய் 3768/1. இவள் ... *.

அந்தண் பணை 1210/4. வஞ்சி ... *. அழகிய குளிர்ந்த மூங்கில்.

அந்தணமை 896/1. குறிகொள் ... *. பிராம்மண்யம்.

அந்தணர் கற்பு 1643/3. ஆழி யேந்திய கையனை ... பினை *. பிராம்மணர்களாலே அத்யயநம் பண்ணப்படுகிறவன். கற்பு - கல்வி. பிராம்மண வித்தை, பிரம்ம வித்தை — என்றும் பொருள்.

அந்தணர் மாட்டந்தி வைத்த மந்திரம் 2055/3. மாடு - தநம். அந்தணர் மாடு - வேதம். "ப்ராஹ்மணாநாம் தநம் வேத:" — அந்தி - அந்தம். அந்தணர் மாட்டந்தி - வேதாந்தம். அதில் வைத்த மந்திரம் - வேதாந்த ரஹஸ்யம், ரஹஸ்யார்த்தம், பகவாந்.

அந்தணன் - சுத்தன் 2055/3. தேவர்க்குமறியலாகா ... னை *.

அந்தணன் தோட்டம் 1940/4. நன்ருய்ப் பரிபாலியாத தோட்டம்.

அந்தணுளன் பிள்ளை 1494/2. பிராம்மண னுடைய மகன்.

அந்தது 3992/4. உம்பர் ... *. அந்த அது. அப்படிப்பட்ட அது. அதது, அந்த அந்த என்பது அந்தந்த என்னுவது போல.

அந்தம் 1306/2 ... மாய் ஆதியாகி *. முடிவு, நாசம்.

அந்தம் - இடம் 1409/4. பல்லுயிர்க் கெல்லாம் ... *. அந்தம் நாநார்த்த சப்தம், இங்கே இடப் பொருளாகிறது.

அந்தமில் சீர் 693/4. அந்தமில் புகழினர் 3911/4.

அந்தமில் பேரின்பம் 3989/2. அந்தமில்லதோர் நாடு 3091/2. நலம் ... *. முடிவில்லாதது. அந்தமில் வரை 1071/4. அந்தமிலடிமை 3068/2. அந்தமிலாதியம் பகவன் 2925/2.

அந்தமிழ் இன்பப் பா 650/2. அழகிய தமிழாலான இன்பப் பா.

அந்த முதல்வன் 1696/2. ... அமரர்கள் தம் பெருமான் *. அந்தத்தையும் ஆதியையும் நிர்வஹிக்கிறவன். ஸர்வ ஸம்ஹர்த்தாவாயும் ஸர்வஸ்ரஷ்டாவுமானவன்.

அந்தரத் தமரர் 984/3. ... அடியிணை வணங்க *. ஸ்வர்க்கத்திலுள்ள தேவர்கள்.

அந்தரத்தார் 2314/4. வானகத்தும் ... க்கு *. ஆகாசத்தே நிற்கிறவர்கள். அந்தரப்பட்டாள் 3049/4, 3561/ப்ர. அநர்த்தப்பட்டாள்.

அந்தரம் 1140/2. ... மே வரத்தோன்றி *. ஆகாசம். அந்தரம் 69/3. ... மின்றியிழித்தாடிய *. இடைவெளி, அபாயம்.

அந்தர முழவ 259/2. ... த் தண் தழைக்காவின் *. ஆகாசமெல்லாம் வாத்ய கோஷத்தாலே முழங்க முழவம் – மத்தளம்; அதினுடைய முழக்கம் அத்யாஹாரமாய்க் கிடக்கிறது.

அந்தர மேழு 1818/2, ... ம் அலைகடலும் *. ஸப்த த்வீபங்கள், அந்தரமேழு 1614/2. ... முனைய் *. மேலுலங்கள் ஏழு.

அந்தரமேற் செம்பட்டு 3621/3. அந்தரம் – நடுவு, இடுப்பு. அதில் சாத்தின பீதாம்பரம்.

அந்தர மொன்றில்லையடை 2139/4. அவகாசம் ஏக தேசமும் இல்லை; கடுகச் சென்று கிட்டு; ஒரு க்ஷணமாத்ரம் போதே. ஒருப்படு. (போது ஒரு க்ஷணமாத்ரமே).

அந்தரி 558/4. ... சூட்டக் கணு *. அந்தரத்திலே ஆகாசத்திலே ஸஞ்சரிக்கிற துர்க்கை.

அந்த வந்த ஆகுலங்கள் 821/4. அந்தந்த துன்பங்கள்.

அந்தளிர் 1188/3. ... அணியா ரசோகு.

அந்தாதி 2382/3. ... மேலிட்டு *. அந்தாதித் தொடையான பாடல்.

அந்தாதியாகப் பிறந்து 3071/அவ. பூர்வ தேஹத்தினுடைய அந்தம் உத்தர தேஹத்துக்கு ஆதியாம்படி பிறந்து.

அந்தாதி யாயிரம் 2942/3. அந்தாதித் தொடையாய் அமைந்த ஆயிரம் பாட்டான திருவாய்மொழி.

அந்தாமத் தண்டுழாய் 3017/4. அழகிய மாலையாய் அமைந்த திருத்துழாய். அந்தாமம் – அழகிய மாலை.

அந்தாமத் தன்பு 3053/1. தாமம் ஸ்தாநம். அந்தாமம் – பரமபதம். அங்குள்ளார் பக்கல் பண்ணக் கடவ. அன்பு – ஸ்நேஹம்.

அந்தாமரைக் கண் 713/1. தண் ...

அந்தாமரைப் பேதை மாமணவாளன் 672/3. விஷ்ணு.

அந்தாமரையடி 1632/4. செவ்விப்பூப் போலே யிருக்கிற திருவடி.
அந்தாம வாண் (வாழ்) முடி 3053/2.

அந்தி 1378/4. ... போலும் நிறத்தார் வயல் *. ஸந்த்யை, சந்தி.

அந்திகாவலன் 1688/3. ...அமுதுறு பசுங்கதிர்*. சந்திரன்.[சொல்.

அந்திதொழுஞ் சொல் 3974/2. ·முடிவிலே தொழும் நம: — என்ற

அந்திப்பலி 346/2. ... கொடுத்து *. ஸந்த்யா கால ஆராதநம்.

அந்திப்பொழுதத்து 2346/1. ... மங்கவிரணியன் *. ... அரியாய் *. 2376/1. அந்திப் பொழுதம் – அந்திப்போது. பொழுதத்து – பொழுதில்.

அந்திப் போது 193/3. மன்றில் நில்லேல் ... *. 3576/3 ... அவுணனுடலிடந்தான் *. அந்தி போல் நிறத்தாடை 929/3. ஸந்த்யா ராகம் போலே யிருந்துள்ள பிதாம்பரம்.

அந்திபோலும் நிறத்தார் வயல் 1378/4. கருவடைந்த பயிராகையாலே வயல் எங்குமொக்க இருண்டு தோன்றும். ஸந்த்யா காலம் போல கரு கரு என்றுள்ள வயல். ஸந்த்யா காலத்தின் சிவப்பைச் சொல்லுவதாகில், நுனி நெல் பழுத்திருப்பதால் சிவந்த வயல்.

அந்தி மூன்று 1588/4. ... மனலோம்பும்*. மூன்று ஸந்தி. த்ரிஸந்தி-காலே, நடுப்பகல், மாலே; முச்சந்தி. நாற்சந்தியாவது நாலு திக்குப்பாதையும் சந்திக்கும் இடம். நடுச்சந்தியும் நாற்சந்தியே.

அந்தியம்போது 6/3. ... திலரியுருவாகி *. 192/4. ... இதுவாகும் *. 1885/4. ... அங்கு நில்லேல் *. ஸந்த்யா காலம்.

அந்திவான் 2368/4. ... காட்டுவது *. ஸந்தியா ராகத்தாலே சிவந்த மேகம். அந்தியாலாம் பயனென் கொல் 2114/4. அந்தி -ஸந்த்யா வந்தநம். எம்பெருமானுக்குடலல்லாத ஷேவல ஸந்த்யை வ்யர்த்தம்.

அந்தியீன்ற கோலவிளம்பிறை 1792/2. ஸந்த்யா தேவி பெற்றெடுத்த அழகான பால சந்திரன்.

அந்தி விளக்கும் அணி விளக்காம் 2297/2. அந்தியை விளக்குகின்ற-பிரகாசிப்பிக்கிற, அணி விளக்கு - மங்கள தீபம்.

அந்துகில் 1781/4. ... லும் நில்லாவே. அழகிதான துகில்.
அந்துழாய் (?) அழகிய திருத்துழாய். அத்துழாய் அந்துழாயின் திரிபு.

அந்தூபம் 2498/2. ... தாரா நிற்கவே. பரிமளம் மிக்க தூபம்.

அந்தேன் 1218/3. ... இசைபாட *. அழகான வண்டு,

அந்தொண்டை வாயமுது 36/2. அந்தோ கேசவா 709/4. அந்தோ பிறவியுட் பிணங்குமாறே 875/4. ஐயோ! என்ற இரங்கல்.

அந்தோழி! 2533/2. அஞ்சல் ... *. என்னுடைய பேறே உனக்குப் பேருயிருக்குமவளே! என்னோடுஸமமான ஸுகதுக்கங்களை உடையவளே.

அந்தோள் 1938/2. பாழி ... ளுடைப் பற்பநாபன். அழகியதோள்.

அந்நான்று 1494/2. அந்தணாளன் பிள்ளையை ...*. அஞ்ஞான்றின் பாட பேதம். அக்காலத்திலே அந்த நாளிலே.

அநாள் 835/2. அன்புறைக்க வைத்த நாள் *. அந்நாள் என்பது அநாள் என்று கடைக் குறைத்தலாயிற்று.

அநியாயம் 204/3. ... செய்வதுதான் வழக்கோ *. [றுண்டி.

அப்பம் 143/3. பெரியன ... தருவன் *. 156/1. ... கலந்த சிற்

அப்பர் 969/3. இதுவென் ... *. பெரியவர். அப்பர் 1145/2. " அவனை ... ராக சேமம் சாத்தி வைத்து", பூஜ்யராக.

அப்பன் 104/1. என் ... அறிந்திலன் *. தகப்பன்.

அப்பன் மலை 346/2. ஆவத்தனம் செய் ... *. ஸர்வ காரணபூதன் வர்த்திக்கும் மலை. தகப்பன் மகனை உத்பத்தி செய்வதால் காரண பூதனாகிறான். அப்படியே ஈசுவரன் ஸ்ருஷ்டிகர்த்தா வாகையால் காரண பூதனாகிறான்.

அப்பா 1032/4. என் ... வந்தடைந்தேன் *. உபகாரகனே !

அப்பா! அம்மே! 1560/1. அப்பனையும் அம்மாவையும் விளிக்கிறது.

அப்பாலது எப்பாலைக்கும் சேமத்ததே 2503/4. அப்பாலுள்ளதாகிலும் எல்லா நிலைகளிலும் க்ஷேமகரமாயிருக்கும்.

அப்பாலவன் 2966/4. அவ்வருகானவன், அப்பாற்பட்டவன்.

அப்பாவி 702/4. " ... உன்னை அறியாதவளாகையாலே மெய்யென்றிருக்கிறவள்." அந்தப்பாவி என்றுபொருளல்ல. கபடமில்லாதவள். "அவனொரு ...; அவளொரு ..." என்ற வழக்குக் காண்க.

அப்பி 565/1. குங்குமம் ... *. பூசி, தடவி.

அப்பிலருபொருள் 2384/3. ... ளையானறிந்தவாறு *. ஜலத்தில் கண் வளர்ந்தருளுகிறவன்.

அப்புத்தட்டியிருந்தான் 3380/1. தொடை தட்டியிருந்தான்.

அப்பு நீண்முடியான் 1034/3. அப்பு - ஜலம். கங்கையை நீண்ட ஜடையிலே தரிக்கும் ருத்ரன்.

அப்புறத்தும் 759/1. அண்டமாய ... *. பரம பதத்தில்.

அப்பூச்சி காட்டுகின்றான் 118/4. பாலர்கள் எதிர்த் தலைக்கு பயங்கரமாகக் காட்டுவன சில சேஷ்டிதங்கள்.

அப்பூச்சி பாடல் 127/2. அப்பூச்சி விஷயமான பாடல்.

அப்பொழுது, 3056/4. ... தென்னராவமுதம் *. அப்பொழுதைக்கு ... அவ்வோ காலங்களிலே.

அப்பொழுதைத் தாமரை 3056/4. அப்போ தலர்ந்த செவ்வித் தாமரை. அப்பொழுதையில் 1507/2. அரு. துமேல் ஐயும் இல்லும் இருப்பது காண்க. அப்போது 194/2. ... நான் உரப்பப் போய் *.

அபிமானதுங்கன் 11/1. அணிகோட்டியர் கோன் ... *. அபிமானத்தாலே உயர்ந்தவன். நளிர்ந்த சிலன் நயாசலன் ... *. 367/1.

அபிமானபங்கம் 497/1. ... மாய் வந்து *. அபிமாந சூந்யம். ஆசையில்லாமை. அம்பகவன் 2925/2. அந்த மிலாதி ... *. அவகுணங்களுக் கெதிர்த்தட்டான பகவான்.

அம்பரதலம் - ஆகாசம். 924/4. ... த் தினின்று அகல்கின்றது *.

அம்பரம் - ஆகாசம் 280/3. ... திரியும் காந்தப்பர் *.

அம்பரம் - புடவை, வஸ்திரம் 490/1. ... மே தண்ணீரே*.

அம்பராவும் கண் மடவார் 1590/4. அம்பை அரைக்கிற, இளைப்பிக்கிற கண்களையுடையவர்கள். அம்பலம் 1278/4. திருத்தெற்றி ... *.

அம்பலம் 2067/2. "எல்லாரும் திரள விருக்குமிடம்."

அம்பறுத் தெய்யவேண்டும் 2916/அவ. அம்பைத் தூணியிலிருந்து வாங்கி - எடுத்து, எய்யவேண்டும்.

அம்பன்ன கண்ணன் 1523/3. அம்பு போலப் பாயும் கண்ணையுடையவன். அம்பார் களிறு 2499/2. அம்பு, ஆர்ந்த - தைத்த, ஆனை.

அம்பாரம் (?) நெற்குவியல். அம்பிள்ளை 2554/1. திங்கள் ... *. அழகிய பிள்ளை. அம்பு 1450/2. அழல் நிற ... *.

அம்புதம் 1120/4. இருண்ட ... *. மேகம்.

அம்பு பாடரைப் போல உழைப்பர் (அர்ச்சி 2.) அநுபந்தம் பார்.

அம்புருடன் 3157/3. ஆதி ... *. அம்புருவம் 1579/1. ... வ வரி நெடுங்கண் *. [வும் மீன்.

அம்புலாவுமீன் 786/1. ...னுமாகி *. அம்பு - ஜலம், அதிலே உலா

அம்புலி 56/4. ... வீ கடிதோடிவா *. சந்திரன். நடுவிலிருக்கிற கரை அழகான புலி போலிருப்பதைப் பற்ற. [3253/ப்ர.

அம்புலியம்மான் - சந்திரன். "... ளைப் பிடித்துத் தரவேணும்."

அம்புள் 3278/2. தாவி ... *. அழகிய பறவை, கருடன். 3872/3. தூவி ... ளுடைத் தெய்வ வண்டு *.

[அம்பூ அம்பூங்கழனி முதலான அம்தொடர் பல; தனிப் புஸ்தகத்தில் காண்க.] [பந்தம் பார்.

அம்புறுத் தூணி 2072/பட்டர் அவ. அம்புறுப் பொதி (?) அநு

அம்பெரி 3249/2. ... யுய்த்தவர் *. அம்பாகிற தீ, சராக்நி.

அம்பொற்கலை 686/2. ... யல்குல் *. அழகிய பொற்கலை, பொன்னுடை. அம்பொனுருலகம் 1435/1. அழகிய பொன்போல் சிலாக்கியமான உலகம். அம்போரேறு 3059/4. அழகான போர்க் காளை.

அம்ம என்று அப்புத்தட்டியிருந்தவன் 3380/1. அம்ம அம்மே-விளி.

அம்ம ஓ (வோ) கொடியவாறே! 908/4. ஐயோ! மிகக் கொடியது. அம்ம அம்ம என்பது விஷாத த்யோதகம்; துக்கக் குரல்.

அம்மணம் - அம்மணி பார். அம்மணி 77/4. ...மேல் கொட்டாய் *. அம்மணி, அம்மணம் - அரை இடுப்பு துடை முதலியவற்றுக்குப் பெயர். அம்மணியம்மா என்ற பெயர் அங்கத்தினழகால் உண்டானதென்னலாம்.

அம்மம் 233/2. ... தாரேனென்ற மாற்றம் *. உணவு.

அம்மம் சேமம் 1878/4. என் ... உண்ணுயே *. ராஜாக்களுக்குக் காவலோடே வருகிற சோருயிற்று சேமமாகிறது. அம்ம மாகிற சேமம். சேம மாகிற அம்மம் என்றும் சொல்லலாம். சேமம் தளிகை — என்று கோயில் வார்த்தை.

அம்ம வம்ம 3877/4. யாது மொன்றறிகிலம் ... *. அம்மே அம்மே அம்மம்ம — என்று உளேந்து சொல்லுகிற வார்த்தை.

அம்மனாய் 483/1. நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற ... *. அம்மனே என்பதன் விளி. அம்மை அன்னை - இரண்டும் சேர்ந்து அம்மனேயாகக் குறைந்தது. **அம்மனே** 118/4. ... அப் பூச்சி *. பயப்பட்டுச் சொல்லு கிற வார்த்தை. அம்மனுக்கு விளி.

அம்மனே ! அம்மனே ! 607/4. நோக்காரால் ... *. அந்தோ ! அந்தோ ! பயத்தில் சொல்லும் வார்த்தை.

அம்மனே 2725/2. கேட்டெங்கள் ... யும் *. அன்னை.

அம்மனேமார் 530/3. ... காணி லொட்டார் *. தாய்மார். **அம் மனேமீர்** 1390/4. ... அறிகிலேனே *. அன்னைமீர்.

அம்மனோ 2513/3. துன்பத்த ளென்றிரங்கார் ... *. அச்சத்தில் சொல்லும் வார்த்தை. அம்மன் மேல் ஓ அசை.

அம்மா 225/4. ... உன்னையறிந்து கொண்டேன் *. ஸ்வாமீ என்று விளி. 917/4. அரங்கத்தம்மா பள்ளி யெழுந்தருளாயே *.

அம் மாவிளே வயல் 1718/3. அழகியதாய் மா-பரந்த, விளைவயல்.

அம்மான் 1418/4. திருவரங்கத்து ...னே *. ஸ்வாமி. அம்மான் - தகப்பன். 1244/2. ... கருதுமிடம் *. ஸ்வாமி. **அம்மான் திருமலை** 3963/3. ஸ்வாமியினுடைய மலை.

அம்மான் பொடி 482/6. "அம்மான் அம்மான் என்று கொண்டு பின் தொடரும்படியான சுக்குப் பொடி." 517/2. மாயமந்திரம் *. என் னுமிடத்தில் சொக்குப் பொடி என்று காண்கிறது. "வாகம்ருதமான ... டியை இட்டுக்கொண்டு போனபடி." 1209/2. "அவற்றிலொரு ... யை சொல்லிக் காணும்." 3145/1. "வசீகரண ஸாதகமான மூலிகா சூர்ணம். அதாவது — கள்ளர்கள் பாலர்களை வசீகரிக்கைக்காக, அம்மான் என்று சொல்லி ஒரு பொடியைத் தூவினுல் அவர்கள் "அம்மான் ! அம்மான் !" —என்று சொல்லிக் கொணடே கள்ளர்களின் பின்னே போவார்கள்."

அம்மா னதிடம் 1010/2. வள்ளுகிரால் வகிர்ந்த ... *. ஸ்வாமி யினுடைய இடம்.

அம்மானூர் 1544/2. ஒழியா வண்ண மெண்ணி நின்ற ... *. ஸர் [வேசுவரன்.

அம்மானு மம்மனேயும் 1560/2. ... அடியேனுக்காகி *. அம்மான்- தந்தை, அம்மனே - தாய்.

அம்மி 299/3. (வ்யா) அரைக்கிற கல். **அம்மி** 563/4. ... மிதிக்க *.

அம்மே 1560/1. அம்மாவுக்கு விளி. அம்மை 77/3. நின் ... தன் எம்மணி *. தாய்.

அம்மொழி 1507/3. ... வாய்க்கலிகன்றி *. அப்படிப்பட்ட பேச்சு.

அமணக் கூத்தடிக்கும் தேசம் 3/அரு. நிர்வாணமாயிருந்து கூத்தாடும் நாடு. அமணக் கூத்தடியாதே 2033/1. அமணக் கூத்தெல்லாம் ஆடிற்றது 905/3. அம்மணம் அமணமாயிற்று. அம்மணம் ஆண் பெண் குறி. அதை மறைக்காமல் தெரிய விட்டு ஆடும் விபரீதச் செயல்.

அமணர் 1582/1. ஜைநர்களில் நிர்வாணமாயுள்ள திகம்பரர்.

அமணன் – நிர்வாணமாயிருப்பவன், திகம்பர ஜைநன். ச்ரமணன் என்ற வடமொழியின் திரிபு அமணன். அவன் உடையில்லாமல் திரிவதால் அமணக்கூத்து முதலான தொடர்கள் உண்டாயின். [ஆலயம்.

அமணன் பாழி 3291/3. ஜைந தேவாலயம். பாழி – இடம், இங்கு

அமணேப்பட்டு 2492/அவ. "பிடியை இழந்ததொரு களிறு தன் னுற்றுமையாலே ... திரியுமாப் போலே." ஆனே அமண்பட்டுத் திரியுமாப் போலே என்று பொருள். அமண் படுகையாவது – மந்மத விகாரத்தாலே ஆண் குறி தெரியும்படி நாலவிட்டுத் திரிகை.

அமம் 2379/2. ... சூழ்ந்தற விளங்கி *. எல்லாவற்றையும் சூழ்ந்து.

அமர்க்களம் 1873/2. ... த்து வெல்ல இல்லாது *. போர்க் களம்.

அமர் காதல் 3848/2. ... குருகினங்காள்! *. அமர்ந்த, பொருந்தின, காதல். அமர் கொளாழி 3778/2. யுத்தோந் முகமான திருவாழி.

அமர்சுவையாயிரம் 2931/3. ரஸ கநமான ஆயிரம் திருவாய் மொழி. அம்ருத ருசியான ஆயிரம். [தகுந்த துணை.

அமர் துணை 3705/4. யாவர் மற்றென் ... யே *. சேர்ந்த துணை,

அமர்ந்த நிலம் 3183/2. "வழிபறிக்கும் நிலத்தில் போவார் சிரிய தனங்களை விழுங்கி, பின்னை ... த்திலே புக்கால் புறப்படவிட்டுப் பார்க்குமாபோலே." பயமில்லாத இடம்.

அமர்ந்து வந்து 132/4. ... என் முலையுணயே *. மெள்ள வந்து.

அமர்ந்தேன் 3713/4. முக் கணம்மானை நான் முகனை ... னே *. கிட்டப் பெற்றேன், அடைந்தேன்.

அமர் பெருமான் 3706/1. என் ... *. அமர்ந்த ஸ்வாமி.

அமர் பொழில் வளம் குருகூர் 2931/2. பொழில் வளம் அமர்ந்த குருகூர். அமர்வு 398/2. அரி புருடோத்தமன் ... *. அமரும் இடம்.

அமரத் தழுவிற்று 2973/4. ... இனியகலுமோ *. பொருந்தக் கலந்தது. அமர நினைந்து 3173/4. ... எழுந்தாடி *. நெஞ்சிலே பொருந்தும்படி நினைத்து. [அமர நாயகன் அமரர்க் கதிபதி என்று அமரர் தொடர் அநேகம்; தனிப் புஸ்தகத்தில் காணலாம்.]

அமர வழும்பத் துழாவி 2973/3. அமர – அமர்ந்து, கிட்டி, அழும்ப– நெருங்கி, துழாவி – அநுபவித்து.

அமரிய புனிதர் 1711/2. போது செய்து ...*. பூர்ணமான புண்ணியன்.

அமலங்களாக விழிக்கும் 2995/2. பார்த்த பார்வையிலே பாபங்களெல்லாம் அமலங்களாம்படி விழிக்கும். [சுரமான தெய்வம்.

அமலத் தெய்வம் 2995/4. ... த்தோடு உலக மாக்கி *. ஸத்வ ப்ர

அமலனுதிபிரான் 927/1. இந்தத் தொடரை முதலில் கொண்ட பாடல்; திருப்பாணாழ்வார் அருளிச் செய்தது. அமலன் – சுத்தன்.

அமளி 452/1. அரவத் ...*. 960/3. நறு மலர் ...*. படுக்கை.

அமறி 1093/1. கிளர் பொறி ...*. மான் குட்டி.

அமா 852/1. ஏமநீர் நிறத்து ...*. அம்மா என்பது அமா வாயிற்று. அமா – உறவு, நிருபாதிக பந்து.

அமுக்கி 79/2. அட்டி ... *. 1187/2. அரட்டு ... *. அமுக்கிக் கட்டீரோ 633/4. அணைய ...*. அமுக்கிக் கட்டுங்கள்.

அமுத கீத வலை 280/3. ... யால் சுருக்குண்டு *. அம்ருதம் போல இனிதான கீத வலை.

[அமுதங்கொண்ட பெருமான் அமுதங்கொண் டுகந்த காளை – என்று அமுதத் தொடர் அநேகம்; தனிப் புஸ்தகத்தில் காணலாம்.]

அமுதப் பொதி யின்சுவைக் கரும்பு 1638/3. அமுதத்தை நீராகப் பாய்ச்சி வளர்த்தாப்போல் நிரதிசய போக்ய பூதமான கரும்பு போலே இனியனு யிருக்கிறவன். அமுதன்ன தேவகி 23/1. சீதக் கடலுள் ...*.

அமுதில் வரும் பெண்ணமுது 1449/2. லக்ஷ்மி.

அமுது செய் – சாப்பிடு. சாப்பிட்டு அம்ருதமாக்கு. அமுது செய்கிருர் என்ருல் சாப்பிட்டு அம்ருதமாக்குகிருர் — என்று பொருள். பெருமாள் அமுது செய்கிருர் — நாம் ஸமர்ப்பிக்கும் போஜ்ய வஸ்துக்களை உகந்து உண்டு, அம்ருதமாக்குகிருர் — என்று அர்த்தம்.

அமுதுண்ட வாயான் 2014/2, அமுதுண்டு 1246/1, வெண்ணெய் ...*. அமுதாம்படி உண்டு. அமுது நீர் 995/3. இலங்கு ...*.

அமுதுறு பசுங்கதிர் 1688/3. அந்தி காவலன் ...*. அம்ருதத்தால் பசுமையான கிரணங்கள்.

அமேனி 3280/1, கரிய மேனி மிசை ...*. கரிய அம் மேனி – அழகிய மேனி என்பது அமேனியாகக் குறைந்தது.

அமை – பொருந்து 2621/4. அன்பால் ...*.

அமைக்கும் பொழுதுண்டே 2622/1. ஆறியிருக்கப் போதுண்டோ.

அமைத்திருந்தோம் 2632/2. உச்சமதாம் வீட்டை ...*. அமைவு – சமைவாய் பாரித்திருந்தோம்; அமைவு – அமையு மென்ருய் வேண்டா என்றிருந்தோம்.

அமைத்து வந்து பிறப்பது 3088/3. "சக்ரவர்த்தி ஸ்ரீ வாஸுதேவர்களளவிலே ... ஸங்கோசித்து (தேவாதி தேவனுன தன்னுடைய பெருமையைக் குறுக்கிக்கொண்டு) வந்து மநுஷ்யனுய் பிறப்பது."

அமைத்து வைத்தேன் 246/3. *நீராட்டம் ...**. சமைத்து வைத்தேன் – சித்தமாய் வைத்தேன்.

அமைதி 1935/2. *கர தலத்து ... யின் கருத்தோ **. மிடுக்கு.

அமைப்பான் 2608/3. *பார் கீழ் மேலாம் மீண்டு ...**. ரக்ஷிப்பான்.

அமைப் பொலிந்த மென் தோளி 2632/3. வேய் போலே விளங்கி மிருதுவான தோளையுடையவள். அமை – மூங்கில். அநுபந்தம் பார்.

அமையா 1988/2. *ஒருருவாய் மானை ...**. நிரஸித்து, கொன்று. அமையா – அமைத்து, சமைத்து, முடித்து.

அமையாப் பொறி புலன்கள் 2113/2. *... ஐந்தும் **. திரிய விடுக்க வொண்ணாத பொறியும் புலன்களும். திருப்ப முடியாத பொறி ...

அமைவார்கள் 3692/4. *இங்கு மங்கு மெல்லாம் ... தாமே **. குறை வற்றிருப்பார்கள், பரிபூர்ணரா யிருப்பார்கள்.

அமைவுடை நாரணன் 2923/4. *தானும் ...**. எல்லாம் தானேயாம் படியாகச் சமை வுடையவன். [ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்கள்.

அமைவுடை முதல் கெடல் 2923/2. சமைவை யுடைத்தான

அமைவுடை யமரர் 2923/3. விதேயராம்படி, உத்தரவுக்குக் கீழ்ப் பட்டிருக்கும்படி, சமைந்த பிரம்மாதிகள். கைவந்திருக்கும் அமைவுடைய பிரம்மாதிகள்.

அமைவுடை யறநெறி 2923/1. தப்பாமல் பலனளிக்கும் தர்ம மார்க்கம். வ்யவஸ்தையுடைய தர்ம மார்க்கம்,

அய்யர் ஐயர் – என்று இருவிதமாயும் பல இடங்களில் காண்கிறது. பெரியவர், தகப்பன், உபாத்தியாயர் என்று பொருள். அய்யர் செய்து வைத்த விவாஹம், அய்யர் தடுக்கு, நம்மையர் வந்தார் — என்று பல வாக்கியங்கள். அய்யர் தடுக்கு – உபாத்தியாயர் வீடு.

அய்யன் பாழி 2903/4. அய்யனார் கோயில். பாழி இடமாய் கோயிலாகிறது. அய்யே நீ எங்களுக்குப் பூவிட வல்லையே! 1422/2.

அய்யோ! இவ் வஸ்துவை நீ இழந்தாய் கிடாய் 1563/2. அந்தோ! ஐயோ!

அயர்க்கின்றதே 260/4. *என் மகள் ...**. ஈடுபடுவதே.

அயர்க்கின்றேன் 898/4. *அளியத்தேன் ... னே **. அநர்த்தப்பட்டுப் போகா நின்றேன்.

அயர்த்தார் பவுத்தர் 2387/1. அறிவு கெட்டிருப்பார்.

அயர்ப்பாய் அயராப்பாய் 2667/1. மறப்பாய், மறவாது மிருப்பாய்.

அயர்ப்பிக்கின்றான் 3272/4. *அலற்றி ... னே **. மோஹிக்கும்படி பண்ணு நின்றான்.

அயர்ப்பிலன் 2930/4. *... அலற்றுவன் **. மறக்கக்கடவே னல்லேன்.

அயர்வறு மமரர்கள் 2899/3. அயர்வு – மறதி. அது இல்லாத நித்ய ஸூரிகள். அயர்வி லமரர்கள் 2968/3. *... ஆதிக் கொழுந்தை **.

அயர்வென்ற தீர்க்குமவன் 3183/4. அஞ்ஞான மென்று சொல்லப் படுவதை யெல்லாம் தீர்ப்பவன். அயர்வென்ற தீர்ப்பான் 2469/2.

அயர்வொன்றில்லாச் சுகம் 656/2. துக்கமொன்றும் கலவாத சுகம்.

அயர வாங்கும் நமன்தமர் 3183/3. அறிவு கெடும்படி உயிரை வாங்கும் யம படர்.

அயராப்பாய் 2667/1. அயர்ப்பாய் ...*. மறவாதிருப்பாய். அய ராப்பு – மறவாமை.

அயல் சதுப்பேதிமார்கள் 910/1. பகவத் கைங்கர்யத்துக்கு அப் பாற்பட்ட சதுர்வேதிகளான வெறும் வேதாத்யாயிகள்.

அயல் தையலார் 3372/3. ... நாமடங்க *. பிறர் மனைவியர்.

அயல் நின்ற வல்வினை 2138/1. அருகே நிற்கின்ற கொடிய பாபம்.

அயல் வயல் 1717/2. ... அணி மங்கையர் *. அயல் வீடு போல அயல் வயல். அருகே யுண்டான வயல்.

அயலார் 1330/4. ... ரு மேசுகின்ற திதுவே *. புறம்புள்ளார்.

அயலிடத் துற்றூர் 1891/1. பேர்ந்தங்கு ...*. கிட்டின உறவு முறையா யிருப்பர். அயலிடம் – கிட்டின இடம்.

அயலிடையார் 2533/3. ... ரு மறிந்திலர் *. அருகிலிருக்கிறவர்.

அயலோர் 2492/2. ... அறியிலும் *. அசலார். [தார்.

அயற் சேரி யுள்ளார் 3520/2. ... ரு மெல்லே *. பக்கத்து கிராமத்

அயன் 1270/2. பங்கயத்து ...*. பிரம்மா. [மலை.

அயன் மலை 3112/4. ... யடைவது *. அருகின மலை, அருகிலுள்ள

அயன் மலை, புற மலை 3110/ப்ர. அருகிலுள்ளது, அப்பாலுள்ளது.

அயன் வாளி 1082/3. கால மிதுவென்று ...*. பிரம்மாஸ்த்ரம். அயன் – பிரம்மா. வாளி – அம்பு.

அயனனையார் 1598/3. செங்கமலத்து ...*. பிரம்மாவைப்போன்ற பிராம்மணர்கள். அயிந்திரபுரம் 1153/4. ... தன் திரு ...*.

அயில் வாள் 992/1. அவள் முக்கு ... ளால் *. கூரான வாள். [கண்

அயில் வேற் கண் 2682/2. ... மடவார் *. கூரான வேல்போன்ற

அயீற்றுப்பரவி (தனிப்ரண) அகரத்தின் ஈற்றுப் பொருளான அவ-ரக்ஷணே என்ற ரக்ஷணத்திலே பரவி யிருப்பவன். அகார வாச்யனுன ரக்ஷகன். [ரகராதி காண்க.

அயோத்திக் கரசன் 314/4. [அயோத்தித் தொடர் பல. தொட

அர்ச்சிக்கின்று 3907/2. அமரர் கோன் ...*. மலையாள பாஷை; அர்ச்சிக்கிருன்; அர்ச்சிக்கையில் – என்று அர்த்தம். [நிற்கமாட்டா.

அரக்க நில்லா 527/2. ... க் கண்ணநீர்கள்.* அடக்கிஞலும்

அரக்கர் குடி 1861/2. நஞ்சுதான் ... க்கு *. ராக்ஷஸ குலம். [அரக் கர் தொடர் பல. தொடரகராதியில் கண்க.]

அரக்க ராடழைப்பாரில்லை 1858/4. ஆடு - வெற்றி. அரக்கரில் வெற்றி சொல்லக் கடவர் யாருமில்லை.

அரக்காம்பல் 1633/1. முழு நீலமும் ... அலராம்பலும் *. என்பதில் அலராம்பலின் பொருள். அரக்காம்பல் - சிவந்த ஆம்பல் 1180/3. அரக்குச் சிவப்பு, அரக்குப் பட்டு — என்பது போல.

அரக்கியர் 1937/1. ... ஆகம் புல்லென *. ராக்ஷஸிகள்.

அரக்கிலச்சினை செய்து 827/1. ... புன்புல வழியடைத்து *. அரக்கு முத்திரை யிட்டு அடைத்து.

அரக்கும் 1111/3. துணை முலை ...*. அடக்கும்.

அரக்கும் மெழுகு மொக்கும் 3044/2. அரக்கும் மெழுகும் போல இருப்பாள். சிக்கென்ற அரக்கும் மெத்தென்ற மெழுகும் ஒக்க உருகும். சிக்கென்ற - கெட்டியான.

அரக்கு வழித்த தோர் கோல் 173/4. ... கொண்டு வா *. நிற முடைத்தாம்படி அரக்கு வழித்த கோல். அரக்கு வழிக்கையாவது-சாந்து (ஜாதி)லிங்கத்தோடு அரக்கு இடிப்பித்து என்றபடி. வர்ணம் பூசின கோல். பழுக்காய்த் தடி என்பது போல.

அரங்க 406/2. உரு ... ப்பொருது *. கழிய, சின்ன பின்ன மாம் படி. அரங்க 783/2. அரக்கர் அங்கு ... *. அஞ்சும்படியாக. அரக்கல் - கரத்தல். அரக்க என்பது அரங்க என்று மெல்லொத்தாய் கிடக்கிறது. அரங்க 844/4. இரும்பு ...*. வெஞ்சரம் அழுந்தும்படி.

அரங்கத்தணையான் 52/4. [அரங்கம் தொடர் பல. தொடரகராதி காண்க.]

அரங்க வோட்டி 800/2. உண்டை கொண்டு ...*. உள்ளே புகும் படி ஓட்டித் தெறித்து.

அரங்கு 844/1. சுரும்பு ... தண்டுமாய் *. படிந்த.

அரங்கு 2411/1. அரங்கத்து ... இல் *. நாடக சாலை.

அரங்கும் அறையும் (?) "தென்னருகே ... வட வருகே ... மா யிருக்கு மாயிற்று." அரங்கு பெரிய கூடம். அறை - சிறிய உள்ளு.

அரசமர்ந்தான் 747/4....அடிசூடு மரசு *. ராஜ்ய பாரம் பண்ணுகிறவன்.

அரசர்தம் குரிசில் 1426/1. ... தொண்டை மன்னவன் *. ராஜாக் களுக்கு ராஜா. ராஜாதி ராஜன். அரசவை (?) ராஜ ஸபை.

அரசளித்த பெற்றி 784/2. ... யோய் *. தம்பியான பரதனுக்கு ராஜ்யம் கொடுத்த ஔதார்யம். அரசன் 1322/2. குரக்கு...னென்றும் *.

அரசாணி 299/3. ... யை வழிப்பட்டு *. அரைக்கிற சாணை - கல். அம்மி. அரைசாணை என்பதில் ஐகாரம் அகரமாயும் இகரமாயும் மாறி அரசாணி ஆயிற்று. ஜாத்யுசிதமாம்படி (ஜாதி வழக்கத்தின்படி) அலங் கார பீடத்துக்கு மேலே நாட்டின அசுவத்த தண்டம். அரசு ஆணி - அர சங்கால்.

அரசிப்படுதி 211/1. ... நங்காய் *, கோபம் தோன்றி விழுகையா வுதி, கோபியா நின்றாய்.

அரசிலை 8²/2. பின்னல் துலங்கும் ...*. பொற்பின்னலில் (பொன் னரை நாணில்) கோவைப்பட்ட வெள்ளி அரசிலைப் பணி. அரச இலை போன்ற தொங்கட்டான். பெண் குழந்தைகளுக்கு அல்குலை மறைக்கக் கட்டும் அரசிலை யல்ல இது. இடுப்பில் கிண்கிணிகளோடு கூட அரச இலை போல ஒரு தொங்கல் உண்டு. அதைச் சொல்லுகிறது இந்த அரசிலை. [அரசாக எண்ணேன் மற்றரசு தானே *.

அரசு – ராஜ்யம் 747/4. அரசமர்ந்தா னடி சூடும் அரசையல்லால்

அரசு களை கட்ட : 318/3. அருந்தவத்தோன் ...*. அரசாகிற களை களை விரோதிகளை, கட்ட – நிரஸித்த பரசு ராமன்.

அரசு செய்வார் (2635/1. வன் குறும்பர்) என்பதன் பொருள். கைக் காயிரத்துக்குச் சேவிப்பார். (அரு.)

அரசு நான் கண்டு கொண்டேன் (?) அரசடியிலே காட்டிக் கொடுத்த காட்சி. அரசு – திருவரசு. (அரு.)

அரசு போர் 3594/1. "தோற்றத்திலே அரசு போராயிற்று"–ஆரம் பத்திலேயே ராஜ யுத்தமாயிற்று.

அரட்டமுக்கி 1187/2. அருள் மாரி...*. சத்துருக்களைத் தலையெடா மல் அமுக்கினவர், திருமங்கை யாழ்வார். [கன்.

அரட்டன் 121/4. ... வந்தப் பூச்சி காட்டுகின்றான் *. தீம்பன், மிடுக்

அரட்டு 1187/2. ... அமுக்கி *. சத்துரு, தீம்பு, மிடுக்கு. "புலி அரட் டோடே நடந்தது, வ்ருஷபம் செருக்கோடே நடந்தது" (?) [அரட்டு – பயம்.] அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பயம் என்று வழக்கு, அரட்டையடிப்பது என்ற வழக்கச்சொல் அரட்டு – விரோதம் என்றதிலிருந்து வந்ததாகலாம்.]

அரண் தந்தருளாய் 1432/2. ...யென்ன பொன்னுகத்தானே *. புகல் தந்தருள வேணும். [மாம்படி சமைந்த மதிள்.

அரண் அமைந்த மதிள் 3884/3. ...சூழ் திருக்கண்ணபுரம்*. ரக்ஷக

அரணமாவ ரற்றகாலைக்கு 3784/1. அற்றகாலைக்கு – கைம் முத லற்ற காலத்தில், புகலிடமாவர்.

அரணாய மூர்த்தி 1984/4. ... அது நம்மை யாளுமரசே *. ரக்ஷித்த

அரணியம் 1860/1. தண்டகா ... புகுந்தன்று *. [திருமேனி.

அரணியவான கவி 3211/3. "மிகவும் நல்லவாய் ... களைக் கொண்டு". –சொற் செறி வுடைத்தான கவிகள், கனத்த கவிகள்.

அரத்தவடியிணை 1654/2. அவ் ... யும் *. சிவந்த திருவடிகள்.

அரத்தவுடையாடை 1654/1. செவ் ...*. சிவந்த உடை யாடை.

அரந்தை 1343/1. ... யுறக் கடலரக்கர் *. துன்பம்.

அரந்தை 2672/12. ஒரு தனி வேழத்து *. துக்கம்.

அரம்பன் 228/4. ...பா வுன்னை யறிந்து கொண்டேன் *. தீம்பு, நச்சினதொன்று தலைக்கட்டவற்றுதிருக்கை.

அரம்பை 278/3 ... யுருப்பசியர் *. ரம்பை.

அரம்பையர் 652/1 ... ரும் மற்றும் *. ரம்பை முதலான அப்ஸரஸ்ஸுக்கள். அரம்பையர்கள் 678/1 ... தற்சூழ *. அப்ஸரஸ்ஸுக்கள்.

அரயன் - அரசன். "... வந்தானும் அவ்வளவிலே அவர் கையில் கிரந்தத்தை ஆழ்வான் தான் வாங்கிப் படித்துக் கொண்டிருந்தான்." 1589/2. அரையன் என்று வேறிடங்களில் காண்க.

அரவணையான் 128/1 ... யா யாயரேறே *. அரவத்தை, அணை - படுக்கையாகவுடையவன். அரவணை - ஸ்ரீரங்கத்தில் ராத்ரி கடைசியாக அமுது செய்விக்கும் சர்க்கரைப் பொங்கல். ஆதிசேஷனுக்கு அமுது செய்விக்கும் காரணமாய் அரவணைப் பிரஸாதம் அரவணை என்றாயிற்று.

அரவத்தமளி 452/1 ... யினோடும் *. பாம்பாகிற படுக்கை. அமளி- படுக்கை.

அரவத்திரை யுலவு குரை கடல் 1204/1. ஆரவாரத்தையுடைய திரைகளானவை, உலவு - ஸஞ்சரிப்பதாய், குரை-கோஷி யாநின்றுள்ள கடல்.

அரவதண்டம் 373/4, 379/4. ... த்திலுய்யலுமாமே *. யமபடரால் வரும் கிலேசம். அரவன் - யமன், ரவி - சூரியன், அவனுடைய மகன். ரவியன் மகன் அரவன். தண்டம்- சேனை, அல்லது கிலேசம். யம பாதை, யமனுடைய தண்டம் தண்டனை. அபரதண்டம் என்ற வழக்குச் சொல் அரவதண்டத்தை மாறுடியதாகும். அரவம் ஓசையாய் அழுகைக் குரலாய் அது உண்டாம்படியான யம பாதை.

அரவப்பகை யூர்தி 274/1 ... யவனுடைய *. அரவம் - பாம்பு, அரவப்பகை - கருடன், அவனை வாஹநமாகவுடைய விஷ்ணு. ஊர்தி - வாஹநம்.

அரவரசப் பெருஞ்சோதி 647/2. அரவரசு 2580/6. நளிர்கடற் பட ... *. திருவனந்தாழ்வான்.

அரவாட்டி 2414/1. அடிச்சகடம் சாடி ... *. அரவமாகிற காளியனை ஆட்டி - துரத்தி. அரவாரத்தார் 2472/2. ஆடு ... *. அரவத்தை ஆரமாக வுடைய சிவன்.

அரவிந்தத் தமளி 1154/3. அன்ன மாமலர் ... *. அரவிந்தம் - தாமரை, அமளி - படுக்கை.

அரவிந்தப் பாவை 452/2. ... யும் தானும் *. தாமரைப் பூவைப் பிறப்பகமாகவுடைய பெரிய பிராட்டி.

[அரவிந்தத் தொடர்கள் தொடரகராதியில் காணலாம்.]

அரவு 2134/4. புல்கு மணியாம் திருமாற்கு... *. பாம்பு. திருவனந்தாழ்வான். அரவேரகலல்குல் 1185/1. பட்டு ... *. அரவம் போல - அதன் தலைபோல, ஏர் அழகாய், அகல்-அகலமாயுள்ள, அல்குல்-பெண்மையிடம். அரவேரல்குல் 1249/2. பட ... *.

[அரவத் தொடர்கள் தொடரகராதியில் காண்க.]

அரன் – சிவன். நல் ... நாரணன் *. 1128/2. அரன்சேய் – ஸுப் ரம்மண்யன் 1247/2. அன்றயனும் ... யும் *.

அராட்டுப் பிராட்டு – போரும் போராததாய். "பகவத் விஷயம் ... டாயோ இருப்பது" 3189/4. அசட்டுப் பிசட்டு – என்பது போலவாக லாம் அராட்டுப் பிராட்டு. வல்லின றகரமாயும் சில இடங்களில் காண் கிறது.

அராவு 1590/4. அம்பு ... கண் *. இளைப்பிக்கிற. அராவும் – அரைக்கும், தேய்க்கும், தேய்த்துக் குறைக்கும். அராவு 836/1. நச்சரா வணை. அரவு – பாம்பு என்பது நீட்டிக் கிடக்கிறது.

அராவு நுண்ணேரிடை 3000/3. அரவு போல் நுண்ணிதான இடை. அரி 1501/1. பைங்கணாளரி *. ஸிம்ஹம்.

அரிக்கண் 791/3. ஆனைகாத்து மை ... மாதரார் *. செவ்வரிகளை யுடைய கண். செவ்வரியோடி நீண்ட ... என்பதிலுள்ள அரி. போதரிக் கண் மையரிக்கண் என்பதெல்லாம் நினைக்கலாம்.

அரிக்குஞ்சட்டி (வாமா 161) அருக்குஞ்சட்டி கொச்சை. "அத்ய வஸாயமாகிற ... டியிலே பிரபத்தியாகிற நீரை வார்த்து தவிடறக்கழுவி, கல்லற அரித்து."

அரிக்குழி. "பகவத் விஷயத்தில் ஒவ்வோக்குழி யிடாதே யிருக்கிற உங்களுக்கு நான் எத்தைச் சொல்லுவது!" 3397/4. அரிச்சுவடிபோல அரிக்குழி. அரிக்குழி வெட்டுகிறான் என்ற வழக்குக் காண்க. அரி: ஓம்– என்று எழுதக் கற்கிறான் என்று பொருள். அக்ஷராப்யாஸத்தில் ஹரி: ஓம்—என்று தொடங்கி அ ஆ முதலான எழுத்துக்களை மணலில் குழி யாக எழுதுவதால் வந்த சொல். அரிக்குழி என்பதற்கு சரியாக வியாக் கியானங்களில் ஒவ்வோக்குழி என்று காண்கிறது. ஏ பி ஸி டி கூட தெரியாதவன் என்ற இப்போதைய சொல் அக்காலத்தில் ஒவ்வோக்குழி யிடாதவன் என்று நல்ல தமிழாய் இருந்தது.

அரிகண்ட மிட்டாற்போல அவர் சாத்துகிற ஆபரணத்தைப் பூட் டினி கோள் 3287/2. கழுத்துப் பிடி. கண்டத்தை கழுத்தை அரிவது அரிகண்டம்.

அரிகாண் நரி 3623/1. ... யாய் அரக்கர் *. ஸிம்ஹத்தைக் கண்ட நரி. அரிகுரல் 1778/1. அன்றில் ... *. தழதழத்த குரல். அரி – இருள். அவ்யக்தமான குரல்.

அரிகுலம் 959/1. ... பணி செய்ய *. குரங்குகள். ஹரி – குரங்கு.

அரிசி 208/1. செங்நெல் ... *; 252/3. கறியும் கலத்தரிசியும் *. 510/1. ... கட்டி ... யவலமைத்து *.

அரி சிதறுதல் 2486/1. (வாதிகே.) அநுபந்தம் பார்.

அரிசினம் 688/3 ... த் தாலின்ற தாயகற்றிடினும் *. "அரிந்து போகட வேண்டும் சினம்."

அரிதன்றே 2621/1. அறிவுடையாராவது ... *. அரிதன்றோ.

அரிந்தனன் 3069/2. முழுவேர் ... யான் *. போக்கினேன்.

அரிப்புண்டு 372/2. ஈயினால் ... மயங்கி *.

அரிமலர்க் கண் 1781/4. ... நீர் ததும்ப. வண்டு படிந்த பூப் போன்ற கண். அரி – வண்டு.

அரிமா 1845/1. ... ச் செகுத்து *. வேகத்தையுடைத்தான குதிரை. அரி – பச்சை. பச்சைக் குதிரை என்னுமாம். அரிமா 2769/2. கோள் ... த் தான் சுமந்த *. பாய்மா கைமா என்னுமாப் போலே.

அரிமிதியான நெல்–ஸ்ரேஷ்டமான நெல். அரிக் காய்ச்சல் போட்ட நெல். "அரிமிதியான பரிமளத்தைக் கொய்து கொண்டு" 410/3. அரியாலே வண்டாலே மிதிக்கப்பட்ட பரிமளம்.

அரி முகன் 564/4. ... அச்சுதன் கைமேல் *. ஸிம்ஹம் போல் எதிர்க்கவொண்ணாத முகத்தையுடையவன்.

அரிமேய விண்ணகரம் 1238/4. சீர்காழிக்குத் தெற்கிலுள்ள திவ்ய தேசம்; திருமங்கையாழ்வார் பாடினது.

அரிய – போக்க. தீவினையை முதல் ... *. 1097/4. பழவினையை முதல் ... *. 2081/4.

அரியணை 730/2. ...மேலிருந்தாயை *. ஸிம்ஹாஸநம். அரி – ஸிம்ஹம். அது உள்ள படுக்கை, கட்டில், ஆஸநம். சிங்கக் கால்கள் போல் காலமைத்த ஆஸநமாகையால் ஸிம்ஹாஸநம்.

அரியர் 2639/2. மருங்கே வர ... ரேலும் *. துர்லபர்.

அரியரி 1344/3. ... யென்றவை யழைப்ப *. ஹரி : ஹரி :

அரியவர் 2904/3. நினைவு ... *. அரியராயிருப்பார். அரியவன் 2901/1. நினைவு ... *.

அரிய வின்னிசை பாடு நல்லடியார் 767/4. அருமை பெருமைகளையும் சுவைப் பாட்டையும் உடைத்தாயிருக்கை. இயலிலும் இழியலாம்; பொருளிலும் இழியலாம்; இசையில் ஒருவர்க்கும் இழிய வொண்ணாது.

அரியனகள் 879/2. பொறுப்பு ... பேசில் *. அரிவையாயிருப்பவை.

அரியாய வம்மான் 3817/4. நரஸிம்ஹமான ஸர்வேசுவரன்.

அரிவிரவு முகில் 1669/1. கறுப்பு, எங்கு மொக்கப் பரந்திருக்கிற காளமேகம். அரி என்று மா. அத்தால் கறுப்பை நினைக்கிறது.

அரிவை 1661/2. (அரு.) பேதை பெதும்பை தெரிவை அரிவை மடந்தை மங்கை பேரிளம் பெண்—என்கிற ஏழு பருவத்தில் 3-வது.

அரிவையர் 3918/2. ... ரோடு மணந்து வந்தாய் *. பெண்கள்.

அருக்கன் 1054/4. வானிடை ... மேவி *. ஸூர்யன்.

அருகலிலாய பெருஞ் சீரமரர்கள் 2989/1. அருகல் – குறைகை. குறைவில்லாத குணங்களையுடைய தேவர்கள்.

உயர்கொள் மாக் கடிகா * 1863/1. ஓங்கி, மா - பரந்து, கடி - பரிமளத்தையுடைய கா - சோலை. உயர் சாலிகள் 1261/3. ... விளை தரு கழனி *. இசலி வளரா நின்றுள்ள செந்நெல். உயர் ஞானம் 2521/3. உற ... *. ப்ரத்யக்ஷ ஸமாந ஜ்நாநம்.

உயர்த்தி 2386/3. ஒரு நான்று நீ ... *. வெளியிட்டு.

உயர் தாமரை 3435/2. ... செங்கழுநீர் *. அடி யுரத்தாலே உயர்ந்த தாமரை.

உயர்ந்த செல்வம் 1286/3. ஊழி தோறும்*. விருத்தியாகிற செல்வம்.

உயர்ந்த தானம் 3198/1. அதிப்லுதமான உச்ச ஸ்வரம்.

உயர்ந்தவர் 2145/2. உயவேன் ... ரோடல்லால் *. உத்தமர், பெரியோர், மஹாத்மாக்கள்.

உயர்ந்த வேய் 811/1. ... விழுந் துலர்ந்து *. ஓங்கின மூங்கில்.

உயர்ந்துயர்ந்த பெற்றியோய் *. 833/1. உத்கர்ஷத்தை ஸ்வபாவமாக உடையவனே! [யாண குணங்கள்.

உயர் நலம் 2899/1. உயர்வற ... * உயர்ந்த ஆநந்தம், கல்

உயர்வற வுயரும் 3085/1. ... பெருந்திறலோன் *. உயர்வு அல்ப்பமாம்படி உயராநிற்கும்.

உயர்வினை 2968/2. ... யே தரும் *. ஜ்ஞாந பக்தி அபிவிருத்தி.

உயரச் சொல்லும் (?) உத்க்ருஷ்டமாகச் சொல்லும்.

உயரத் தொருத்தன்/தா 3819/3. ... உன்னை யுள்ளும் *. அத்விதியனானவன்.

உயலிடம் 2833/2. ... பெற்றுய்ந்தோம் *. உய்கைக்கு அவகாசம்.

உயவேன் 2145/2. ... உயர்ந்தவரோடு *. உசாவேன்.

உயிர்க்கழுவில் நிற்குமவன் 3323/2. உயிரை வாங்கும் கழுமரத்தில் இருப்பவன். "லே ... யிருக்கிறவன்" 3785/4.

உயிர்க்கும் 2063/1. நிற்கும் சோரும் நெடிது ... *. பெருமூச் செறியாநிற்கும்.

உயிர் காமின்கள் 2483/4. ... ஞாலத்துளே *. ரக்ஷியுங்கள்.

உயிர் கொள்கின்றது 3634/4. கொடியேன் ... * பிராணனை நலியாநின்றது.

உயிர் செய்த பரமன் 3137/3. பற்பல வாயிரம் ... *. ஸ்ருஷ்டி செய்த ஸர்வாதிகன்.

உயிர்த் தாதை 3630/3. மதனன் தன் ... *. உத்பாதகன்.

உயிர்த் துயிர்த்து 3083/2. வெவ்வு ... *. நெடுமூச் செறிந்து

உயிர்த் தோழி 2811/1. தன்னுடைய இன் ... *.

உயிர் நிலை 3075/ப்ர. மர்ம ஸ்தாநம்,

உயிர்ப்பகை 3379/4. "பிரிவிலும் முடியாத என் ...". ஜீவிக்கையாகிற சத்ரு. உயிராகிற சத்ரு.

உயிர்ப்பிடம் 456/2. பாத நிழலல்லால் மற்றோர் ... *. மூச்சு விடுமிடம். (பிழைப் பிடம், பிழைக்குமிடம் என்றும் லௌகிகமாகச் சொல்லலாம்.)

உயிர் பிரிந்த மலைத் துண்டம் *. 3317/1. இந்த்ரச் சிங்கமாய் நிஷ்பிராணமான பர்வத கண்டங்கள்.

உயிர் வவ்விய 1622/2. பேய்ச்சி மாள ... *. உயிரை முடித்த.

உயிர் வீடுடையான் 2910/2. ... னிடை *. உயிரை - ஆத்மாவை வீடாக உடையவன், அந்தராத்மா.

உயிரளிக்கும் வித்து 2403/4. மீனாய் ... *. ஸ்ருஷ்டி செய்யும் உபாதாந காரணம் — என்று சொல்லடைவில் பொருள்.

உயிராளன் 417/2. ... உறையுங் கோயில் *. ஆத்மாக்களை ஆண்டு போகிறவன்.

உயிருண்ணு முபாயம் *. 3443/2. உயிரைப் போக்கின உபாயம். உயிருண்ட விசாதி 3357/1. கொன்று ... *. உயிரை மாய்க்கும் வியாதி.

உயோகு துயில் 64/2. பைய ... *. யோக நித்ரை.

உரக்க விட்டு 3462/ப்ர. த்ருடமாக. உரக்கப் பிடித்துக் கொண்டேன் 3970/1. த்ருடமாக.

உரகமெல் லணையான் *. 363/1. திருவநந்தாழ்வானை மிருதுவான படுக்கையாக உடையவன்.

உரங்களா லியன்ற மன்னர் *. 1571/1. மிடுக்காலே நடத்திக் கொண்டு போருகிற மன்னர்கள்.

உரந்தரு மெல்லணை 1134/1. ...ப் பள்ளி*. பலத்தை தரும் - உடைய மெல்லணை.

உரப்பகில்லேன் 1908/2. இரப்பன் ... *. பொடிகிறிலேன். உரப்ப மாட்டேன் 130/3. உன்னை நானொன்றும் ... *. அதிரக் கோபித்து நியமிக்கமாட்டேன். உரப்பாள் 532/3. அஞ்ச ... *. அதட்டாள். உரப்பி 2709/1. சென்றுரைக்க நின்று ... *. மலக்கி. உரப்புவதஞ்சுவன் 1916/4. கூடிய பின்னை ... *. பொடிவதற்கு அஞ்சுவேன்.

உரம் பற்றி 419/1. ... இரணியனை *. மார்பை அமுக்கி. உரம் பெற்ற மலர்க் கமலம் *. 419/3. சேற்று வாய்ப்பாலே உரம் பெற்றிருக்கிற தாமரைப் பூ.

உரல் 32/1. பெரு மா வுரல் *. பொத்த வுரல் *. 114/1.

உரவிடை 2921/3. ... யாப்புண்டு *. மார்பிடை. உரம் - மார்பு உரம் - மிடுக்குடைய ருஷபம் போலிருக்கிறவன். உரத்த விடை. உதரம் இடைக் குறையாய் உர விடை - உதரத்திடை ஆப்புண்டு. வயிற்றில் கட்டுண்டு.

உரவுடைய நீராழி 2164/2. ... யுள் கிடந்து *. முது நீர், மிடுக்கான நீர், திருப்பாற் கடல். உரவு - மிடுக்கு, ஸர்ப்பமுமாம்.

உரவு நீர்ப் பொய்கை 3484/2. ... நாகம் *. உரவு - மிடுக்கு, அத்தால் ஆழம். ஆழமான நீரையுடைய பொய்கை. உரவ - விஷம், விஷ ஜலம். உரவு - வலி, வலிய நீர்,

உரவோள் 1990/2. உண முலை முன் கொடுத்த ... *. வெந்நெஞ்சி, உரத்தையுடையவள். உரவோன் 979/1. கொடுந் தொழில் ... *. மிடுக்குடையவன்.

உரன் 2648/2. ஞாலொரு மூன்று *. மநஸ்ஸு. உரனென்று உரஸ்ஸாய், உரஸ் – மார்பு அத்தாலே நெஞ்சு.

உராய் 2165/2. ... உலகளந்த நான்று *. உரோசி (உரசி), அநாயாஸேந என்று பட்டர், அநாயாஸமாய்.

உரி 1603/2 ... யானை உகந்தானை *. தோல். "உரி சூறை கொண்டு போனவன்" 3586/2. வஸ்த்ரத்தை சூறை கொண்டு போனவன் - அபஹரித்துப் போனவன். சூறை கொண்டதுக்கு அப ஹரிப்பது என்றறியாமல் கூறை என்று யோஜிப்பது சரியல்ல. உரி கூறை இரண்டும் வஸ்த்ரம் என்று ஒரே பொருளாகும்.

உரிஞ்ச 1982/3. அகல்வான் ... *. வீசும்படியாக. உரிஞ்சி 407/3. தாழை மடலூடு ... *. நெருங்க முழுசி. உரோசிக் கொண்டு புகுந்து. உரிஞ்சி 980/3. விலங்கலில் ... *. தாக்கி. உரிஞ்சும் 1236/4. மங்குல் மதிபகடு ... *. தோயும், உராயும். வல்லினத்தில் வருமிடம் காண்க — மூக்குறிஞ்சி என்று.

உரித்தாக்கினை 471/4. உனக்கு ... யே *. அநந்யார்ஹ மாக்கினாய், பிறர்க் கல்லாமல் செய்தாய்.

உரித்து வைத்தார் 3210/1. "கீழே ... ரிறே அவர்கள் ஸ்வரு பத்தை". வெளிப்படுத்தி வைத்தார். தாத்தா சாயலை உரித்து வைத் திருக்கிறது — என்று சொல்வதுண்டு. தாத்தாவைப் போலவே எல்லா குறிப்புகளும் முகச் சாடைகளும் நிறைந்திருப்பதைப் பற்ற இப்படி உலக வழக்குண்டு.

உரிமை 2238/3. ... யா லேத்தினோம் *. ப்ராப்தி, பாத்யம்.

உரிய சொல் 3280/3. ... லா விசை மாலைகள் *. தகுதியான சொல். உரிய சொல்மாலை 3681/4. ... யிவை பத்தும் *. நேராகச் சொல்லும் பாட்டுகள்.

உரியதள் 1935/1. மான் ... ளும் *. உரித்த தோல்.

உரியானையுகந்தான் 1603/2. யானை உரியை, தோலை உகந்து உடுத்தின ருத்ரன். யானைத் தோல் போர்த்தவன்.

உருக்கலந்து 854/4. ஒழிவிலாது ... *. வடிவழகோடு.

உருக்கள் 756/1. ... டோறு மாவியாய் *. சரீரங்கள்.

உருக்காட்டான் 631/1. அழிலும் தொழிலும் ... *. நேரில் வந்து நில்லான்.

உருக்கி 852/3. உள்ளம் ... யுள்விடலே *. நீர்ப் பாண்டமாக்கி.

உருக்கு நறு நெய் 1454/1. ... கொண்டு *. உருக்கின நறு நெய் வெண்ணெயை உருக்கின நல்ல நெய்.

உருகி யுக்கிட்டு 2046/3. என்பெலாம் ... *. சிதிலமாய்.

உருகு பதம் 2934/1. "... த்திலே வளைந்தவை நிமிர்க்கவொண்ணா" ம்ருது பக்வம். இளம் பதம். இளகின பதம். "ஒன்றை ... த்திலே பிடித்தால், வலித்தாலும் அப்படியே உருவ நிற்குமாயிற்று." 3493/2 (24).

உருட்டா 1280/3. மாங்கனிகள் திரட்டு --- *. உருட்டிக்கொண்டு.

உருத்த மா கஞ்சன் 794/1. --- னைக் கடிந்து *. க்ருத்தனாய் சினங் கொண்டவனாய் மா கஞ்சன் - பலிஷ்டனான கம்ஸன்.

உருத்திர னப்பன் 3681/1. பிரம னப்பனை ---- னை *. ருத்ரனுக்கும் நிர்வாஹகன்.

உருத் தெழு வாலி 1300/1. --- மார்வில் *. உரு - சீற்றம். உருத்து - சீற்றத்தோடு, எழு - அகாலத்திலே வந்து அறை கூவுகிறவன், உரு - பெரிய, எழு - கிளர்த்தியோடே வந்து தோற்றுகிற வாலி.

உருப்பசி 278/3. --- யாவர் வெள்கி *. உர்வசி. உருப்பன் 349/2 னை...யோட்டி*. ருக்மன், ருக்மிணியின் ஸஹோதரன். உருப்பிணி நங்கை 349/1. --- தன்னை மீட்பான் *. ருக்மிணிப் பிராட்டி. நங்கை யென்று இவளுடைய குண பூர்த்தியைச் சொல்லுகிறது.

உருப் பெற எழுதின சித்திரம் 3271/2. சீ. அரு. அழகு பெற.

உருப் பொலார் 820/1. காணிலும் --- *. வடிவு பொல்லாதாயிருப்பார். பொல்லாத க்ரூரமான உருவை யுடையவர். [யுடைய நான்.

உருப் பொலிந்த நாவினேன் 469/4. தழும் பேறின நாக்கை

உரு மாய்ந்து 3078/3. "--- போம்படி ஓட்டி." உரு வழிந்து.

உருமாறு மாயவன் *. 2640/2. ஒரு வழியில் ஒருவனைப் புகாதபடி தன்னுடைய ஸ்வரூப ஸ்வபாவங்களை அழிய மாறும் ஆயவன் - கிருஷ்ணன்.

உருமின் மறை யுடை மால் விடை 1136/1. உருமு - இடி. அது போன்ற குரலையும் மறை - கோபத்தையு முடைய பெரிய எருது.

உருமுரலொலி 2580/6. --- மலி நளிர் கடல் *. உருமுகிற இடியோசை.

உருவ ஒருபடிப் பட ஜீவிக்கக் கடவன் 3320/1. உருவ - அநேக காலம், கடைசி வரை. உருவ நடத்தா - கடைசி வரை செல்ல — என்று

வருவது பார். உருவக் காணும் என்னும்படியாயிற்று (தனி சுலோ. ராமம் மேநுகதா.) முழுக்க.

உருவக் கருங்குழ லாய்ச்சி 1172/3. அழகிய வடிவையும் கறுத்த குழலையுமுடைய நப்பின்னைப் பிராட்டி.

உருவக் குறளடிகள் 1629/4. அழகியதாய் கண்டார் மேல் - விழும்படியான வடிவை யுடைய ஸ்ரீ வாமனனுன ஸர்வேசுவரன்.

உருவச் செஞ்சுடராழி 1608/2. ----- வல்லானே *. அழகிய வடிவை யுடைத்தாய் நிரவதிக தேஜோ ரூபமான திருவாழி.

உருவ மலர் 169/1. உந்தி யெழுந்த --- *. அழகிய மலர் (தாமரை).

உருவ மழகிய நம்பி 185/4. --- உகந்திவை *. வடிவாய், அழகி யனுமாய், நம்பி - ஸர்வ ப்ரகார பரிபூர்ணனுமாயிருக்கிறவன்.

உருவரங்கப் பொருதழித்து*. 406/2. உருவம் கழியும்படி பொருது- அழித்து.

உறுவறைக் கன்றுகளைக் காற்கடைக் கொண்டு 298/1. உருவறை கள் — என்று பொகட்டு 298/1. உருவமற்றவை அழகற்றவை என்று பொருளாகலாம். திருவாய் மொழிப் பிள்ளை மட்டுமே இப்படி எழுது கிறர்; மணவாள மாமுனிகள் எழுதவில்லை.

உருவறைக் கோபாலர்*. 298/1. ரூப ஹீநரான ரூப குணமில்லாத கோபாலர். தேகத்தை அழுக்கறுத்துப் பேணமாட்டாதவர். அறைக் குப் பொருள் அறிக. அறையை அற்றவையின் கொச்சையாக்கினுல் பொருந்தும்.

உருவாகிய அறு சமயங்கள் 3821/1. ஆபாத ப்ரதிதியில் (பொது வில்) ஒன்று போலே யிருக்கக் கடவதான (இருப்பதான) ஆறு சம யங்கள் - மதங்கள்.

உருவாய மாமாயன் 447/1. மாயம்தான் ஒரு வடிவு கொண் டாப் போல இருப்பவன். உரு - அழகு. அதுதான் ஒரு வடிவு கொண் டாப் போல இருக்கை.

உருவார் சக்கரம் சங்கு 3699/3. அழகு மிக்கிருந்துள்ள ஆழ்வார் கள். திருவாழியாழ்வான் பஞ்சஜந்யாழ்வான் — என்னும் திவ்யாயுதங் களான ஆழ்வார்கள்.

உருவார் பிறவிக்கள் 2025/1. --- இன்னம் *. தேஹாத்மாபிமாந ஜநகமாயிருக்கிற ஜந்மங்கள். உருவிலே உடலிலே ஆர்ந்திருக்கிற அபிமாநித்திருக்கிற ----.

உருவி 1461/2. அருளென்னு மொள்வாள் --- *. உருவி 2053/1. பார் --- நீர் எரிகால் *. உர்வியை உருவி என்கிறது- உர்வி - உருவி-பூமி. ஆரியச் சிதைவு. ஸம்ஸ்க்ருதத்தின் அபப்ரம்சம், சிதிலமான சொல் என்றபடி.

உரு வியந்த வின்நிலைமை 2926/1. உருவிற் காட்டில் வேறுபட்டிருக்கிற நிலைமை. உருவு இயந்த — என்றால் இயத்தல் - கடத்தலாய் உருவிற் காட்டில் கடந்த வேறுபட்ட என்னவுமாம். ஜடமான உருவில், சரீரத்தில் வேறுபட்டிருக்கிற ஆத்மாவினுடைய ஸ்வரூபம்.

உருவினன் அருவினன் 2901/2. உரு - அசேதநம். அரு - ஆத்மா.

உருவினார் பிறவி 1813/1. --- சேரான் *. நித்யமான ஆத்ம வஸ்துவுக்கு ஜந்மமாகிறது, ஸூக்ஷ்ம சரீரத்தோடே கூட ஸ்தூல சரீரத்திலே பிரவேசிக்கை. தேஹ ஸம்ச்லேஷ ரூபமான ஜந்மம். இன் சாரியையாய் உருவிலே ஆர்ந்த பொருந்தின பிறவி.

உருவு 1451/2. கலைதரு குழவியின் ... வினை *. உருவு 1233/1. பெரிய பேயினது ---- *. உருவு கலந்து 3728/2. ---- உள்ளுந்தோறும் உருவு வடிவு தெரியாதபடி.

உருவு கரிய ஒளி மணிவண்ணன் 39/3. ரூபத்தால் கரியதாய் உஜ்ஜ்வலமாயிருத்துள்ள மணி போன்ற வடிவை யுடையவன்.

உருவுடை மலர் நீலம் 412/4. அழகை யுடைத்தான நீல மலர்.

உருவுடை வண்ணங்கள் 3271/2. நல்ல நிறங்கள், விலக்ஷண ரூபத்தையுடைய பதார்த்தங்கள். உருப் பெற எழுதின சித்திரங்கள்.

உருவு மருவும் 3647/2. தொல்லை நன்னூலில் சொன்ன ---- *. அசித்தும் சித்தும், அசேதநமும் சேதந பதார்த்தமும்.

உருவுருவே கொடுத்தான் 402/2. சரீரத்தை அப்படியே விகாரமின்றிக்கே கொண்டுவந்து கொடுத்தான். ஸாந்திபிநி புத்திரனுடைய சரீரத்தை ---- .

உருவு வெளிப்பாடு 3637/4. "மாய்கையும் --- ம் பர்யாயம் என்றிருக்கிறார் காணும்." "... ட்டாலே முன்னிலை இவனுக்கு 3671/1. உரு வெளிப்பாடு - என்று வுகரம் இல்லாமலும் வருவது காண்க.

உரு வெண்ணுமந்தி 2114/3. மந்திரத்தை உருச் சொல்லும் எண்ணிக்கையைக் கணக்கெடுக்கும் அந்தி - ஸந்தியாவந்தநம். மந்திரத்தை எண்ணும் அஹ்ருதய கார்யமான ஸந்தியாவந்தநம்.

உருவெளிப்பாடு 3173/ப்ர. (?) ஜ்ஞாந வைசத்யம். அறிவின் தெளிவு. "அநுஸந்தாந ப்ரகர்ஷத்தாலே வந்த --- ட்டாலே வந்தானாகக்

கொண்டு" 3273/3. ஜ்ஞாந வைசத்யம். "--- போலன்றியே மெய்யாகக் காணவேணுமென்று விரும்பா நின்றது" 3200/4 (?) "--- அன்றியிலே கண்ணாலே கண்டநுபவிக்கலாம் தேசம்" 3588/1. ப்ரத்யக்ஷஸமாநாகாரமான ஸ்வாநுபவம். உருவு வெளி - உருவெளி இரண்டுக்கும் பொருள் விளங்கவில்லை.

உருவேழு 3580/2. அன்று --- ந் தழுவிய *. இடிபோல பயாவஹமான ருஷபங்கள் ஏழு. உரு - உருமு - இடி. [புகர்.

உருவொளி 589/2. --- . காட்டுகின்றீர் *. நிறம் பெற்றிருக்கும்

உருள் சகடு 1626/1. ஒண்கரியும் --- டும் *. உருளும் வண்டி.

உருளுடைய சகடர் 414/2. உருண்டு வந்த சகடாஸுரன்.

உருளை (ஸம். ஸா.) சக்கரம்.

உரைக்கலாம் படியனல்லன் 3749/2. உபமாந ரஹிதன். உரைக்கிடக்குமுள்ளன் 2431/4. ... த் தெனக்கு *. வார்த்தை நெஞ்சிலே கிடக்கும். [லுகிறேம்.

உரைக்கியம் 2532/2. ஒன்று ... *. சொல்லுகிறேன். சொல்

உரைக்கின்ற திசைமுகன் 3403/1. ப்ரமாண ப்ரஸித்தனான பிரம்மா. உரைக்கும் மாற்றம் 3682/2. ... நோக்குகின்றேன் *. சொல்லும் வார்த்தை. உரைக்கோம் 1858/2. இனி யாவர்க்கு ... *.

உரை கல் 467/1. ... மிதே நிறமெழ *. உரைக்கிற கல், சாணைக்கல். உரைகொள் சோதித் திருவுருவம் *. 3259/4. பேச்சுக்கு நிலமல்லாதபடி யிருக்கிற தேஜோ ரூபமான திரு வடிவு. வேதாந்த வசநங்களால் அபரிச் சேத்யமான தேஜஸ்ஸை யுடைய திருமேனி.

உரைகொளின் மொழியாள் 3497/2. ஒருத்தி பேச்சே! என்று நாடெல்லாம் உரைக்கும்படி யிருந்த மென் மொழியாள். பொருளின்றி உரையே கொள்ளப்படும் மழலை வார்த்தையையுடையவள். லோக மெல்லாம் கொண்டாடும்படியான இனிய மொழியாள். மாற்றும் உரையும் இன் - அற்ற, பேச்சையுடையாள். [வேணும்.

உரைசெய் 854/4. உரைக்குமாறு ... யே *. அருளிச் செய்ய

உரை செயல் 3604/2. சடகோபன் ... *. உரையாகிய செயல் வாசிக வ்ருத்தி.

உரைத்த நன் பொன் 3122/2. சுட்டு ... *. தப்பிட்ட நல்ல பொன். உரைத்த நன்றான பொன். மெருகிட்ட பொன்.

உரைநூல் மறை 2086/2. ... உறையுங் கோயில் *. ஒருவனுக்கு உத்கர்ஷம் சொல்லும் ஆகமம், வேதம்.

உரைப்பெல்லாம் 2661/2. ... நின்னன்றி*. சொல்லுவதெல்லாம்

உரைபெற்றிருக்கும் 3506/2. " உகப்பாலே பெறுமது ... மே." உரை — என்று மாற்றுய் மாற்று ஏறியிருக்கும். உரை என்று கொண்டாட்டச் சொல்லாய் லௌகிகருடைய கொண்டாட்டத்தை யுடைத்தாயிருக்கும் என்னுதல்.

உரையா 2695/2. கட்டுரைத்தாள், கட்டு ... *. உரைத்து. உரையாடமாட்டேன். 158/4. மறந்தும் ... *. உரையார் தொல் புகழுத்தமன்*. 1943/3. சப்த பூர்த்தியை யுடைத்தாய் நித்யமான புகழை உடையவன் — என்று ஸ்ரீ ராமாயணமாய் அதுக்குப் பிரதிபாத்யனுயிருக்கிறவன். புகழ் - ரக்ஷிக்கையால் வந்த புகழையுடையவன். உத்தமன் - பிராட்டிக்காக தன் மார்பிலே அம்பேற்ற தீரோதாத்தன்.

உரையா வெந்நோய் 3703/1. சொல்ல முடியாத அதிக்ரூரமான நோய். உரையோய் சொல் தொடை *. 3703/3. உக்தியால் சேர்ந்த சொல் தொடை, உக்தி ப்ரகாரமாய் ஏய் - செறிந்த சொல் தொடை.

உரோசிக்கொண்டு புகுந்து: உரிஞ்சி 407/3. க்குப் பொருள்.

உரோடம் 518/3. ... ஒன்று மிலோம் *. ரோஷம். [குச்சு.

உரோம கூபங்கள் 439/3. ... ளாய் கண்ண நீர்கள் *. மயிர்க்

உரோமசன் 1179/1. நலமிகு சீர் ... *. ரோமச மஹரிஷி.
உரோமம் 1006/1. ... வேய்ந்து ஒன்பது வாசல்*. மயிர்.

உலக்க 3125/4. எங்கு ... ஓதுவளே *. முடிய. * ... த் தேர் கொடு சென்று *. 3492/2. முடிய. "கடலை உலக்கை விடுநக மிட்டு நெருக்கி" 3808/4. உலக்கையாலே கிட்டி கட்டி. உலக்கையும் வில்லும் *. 495/1. முஸலாயுதம்.

உலகந்தாயவன் 2092/2. கை ... *. உலகத்தை அளந்தவன். தாயவன் - தாவினவன், மூவடி அளக்கைக்கு, உலகந்தாயோன் 2285/4, அன்று ... அடி *. உலகத்தை அளந்தவன்.

உலகம் கைப்படுத்து 1349/1. மாவலியை வஞ்சிகது ... *. உலகதைத ஸ்வாதிநப் படுத்தி.

உலக மலி புகழ் 3664/4. ... பாட *. உலகமாக்கி 2905/4. அமலத் தெய்வத்தோடு ... *. உலகத்தை ஆக்கினவன், உண்டாக்கினவன். உலகமேத்தும் காரகம்*. 2059/2. உலகம் புகழும் காரகமென்னும் திவ்ய தேசம். உலகமேத்தும் கண்டியூர்*. 2061/2.

உலகர் 3798/4. இம்மட ... *. உலகத்தார். உலகாரச் சுரக்கும் வெண்டிங்கள்*. 2550/1. பால் விண் ... *. நிலவாகிற பாலை லோகம் நிரம்பும்படி சுரக்கிற வெளுத்த நிறத்தையுடைய சந்திரன். உலகிறந்த ஊழி 2142/1. உலகும் ... யும் *. உலகமெல்லாம் கழிந்து கிடக்கிற ஸம்ஹார காலம். உலகின் வண்ணம் 2048/2. இவ் ... *. சாஸ்த்ர மரியாதை. உவகை யென் காணும் 2525/4. லோக வ்ருத் தாந்தத்தில் என் அறியவற்று? லோக வ்யாபாரத்தை எங்ஙனே அறியும்படி!

உலங்குண்ட விளங்கனி 582/2. உலங்கு - பெரு நுளங்கு. (மொலுங்குப் பூச்சி). அவை விளாம்பழத்தில் மொய்த்தவாறே அதில் ரஸ மெல்லாம் குடி போமாய்த்து. பெரு நுளங்கு - பெருங் கொசுகு.

உலப்பில் பல் காலம் 1751/2. ஒன்றுலாவுருவத்து ... *. முடிவின் றிக்கே இருக்கும் அநேக காலம்.

உலப்பில் கீர்த்தி யம்மான் 3550/1. ... னே *. முடிவில்லாத கீர்த்தியை யுடையவன். குணங்களுக்கு முடிவின்றிக்கே யிருக்கை. உலப்பில்லை 3646/4 ... நுணுக்கங்களே *. முடிவில்லை. உலப்பிலன 3750/3. உடம்பும் மற்றும் ... *. எண்ணிறந்தவை. அஸங்க்யாதங்கள். உலப்பில் வலி 1900/1. ... யாலவர்பால் *. நிரவதிகமான பலம். உலப் பிலான் 3421/2. ... எல்லா வுலகுமுடைய *. முடிவில்லாதவன்.

உலவி 3536/2. நீர்த்திரைமேல் ... * உலாவி, ஸஞ்சரித்து. உலவு கால் 1775/3. ... நற்கழியோங்கு*. ஸஞ்சரியா நின்றுள்ள தென்றல். உலவுசொல் மாலை 1757/4. ... ஒன்பதோடொன்று *. லக்ஷணங்க ளில் குறைவற்றிருந்த சொல்மாலை. உலாவுகை நாட்டில் நடையாடு கையாய் அத்தால் பலிதம் லக்ஷணங்களால் இத்யாதி. உலவுதிரை 990/1. ... யும் குலவரையும் *. ஸஞ்சரியா நின்றுள்ள திரை.

உலறி 511/1. உடம்பொடு தலை ... *. உலறல் - காய்தல்.

உலாகின்ற கெண்டை யொளியம்பு 2552/1. உலாகின்ற கெண்டை போலே யாயிற்று கண்களின் மௌக்த்யம் இருக்கிறபடி. குழையளவும் சென்று மீளுகையாலே உலாவா நிற்பதாய் கெண் டையான ஒளியையுடைய அம்பு. குழை - காது.

உலாம் 915/1. பெண் ... சடையினான் *. உலாவுகிற. உலாய் மயங்கும் 3575/1. எழுந்து ... *. உலாவி மயங்கும். உலாய சீர் 774/3. ... நானிறத்த வேதம் *. ஸர்வலோக ப்ரஸித்தம்.

உலோக பாலீர் 451/3. எண்மர் ... காள் *. அஷ்டதிக் பாலர்கள்.

உலோக மலோகம் 3104/1. மகிழ் கொள் தெய்வம் ... *. மநுஷ்யர் களும் மிருகங்களும். "உலோகர் சிரிக்கநின்ருடி" 3172/3, 3165/ப்ர.(9).

உலோபன் 187/1. ஏது முலோபாய் *. ஒன்றிலும் லோபமற்றிரா நின்ருன். அதாவது தேஹத்தைப் பேணுதல் பிராணனைப் பேணுதல் செய்யாதிருக்கை.

உவணப் புள் 1221/2. சிறையார் ... *. உவணமாகிற புள். உவ ணம் - பெரிய திருவடி (கருடன்.) புள் - பக்ஷி.

உவத்தலை (உவர்த்தலை) 3922/3. ... உடன் திரிகிறிலை *. உகக் கிருயில்லை. உவர்த்தலை - வெறுப்பை யுடையை. உவர்த்தல் - வெறுப்பு. உவத்தி பசுநிறை மேய்ப்பு ... *. 3922/4. உவப்புதி, உகத்தி.

உவந்த வுள்ளத்தன் * 928/1. உகந்த திருவுள்ளத்தையுடையவன்.

உவமன் 2319/1. தானே தனக்கு ... *. உபமாந பூதன்.

உவர் 2902/2 அவரிவர் ... *. அதூர விப்ர க்ருஷ்டர்கள். அதூர வர்த்திகள்.

உவர்க்குங் கருங்கடல்* 2318/2. உப்பாயுள்ள கருங்கடல். திருப் பாற் கடலே இங்கு இப்படி சொல்லப்படுகிறது, பொதுவாக கடல் உப்பாயிருக்கையாலே. உவர்க் குழி 948/4. "... யிலே முழுகிப் போக வேணுமோ." உப்புக் குழி – ஸமுத்ரம். உவர் கழியும்படி 3608/2. "விளை நிலம் ... நீரைத் தேக்கி வைக்கும்" *. சவர் கழியும்படி.

உவரி சூழ்ந்த நெடும் புணரி *. 1702/2. உவரே உவரி. உவர் நிறைந்தது உவரி. உப்பு மயமான. சூழ்ந்தது என்பது இலங்கைக்கு. உவரியோதம் 1726/3. ... முத்துந்த *. உவரை யுடைய கடல். அத னுடைய ஓதம்.

உவலை யாக்கை 2950/2. ... கிலே யெய்தி *. ஹேயமான சரீரம்.

உவன் 2620/1. அவனுமிவனும் ... னும் *. நடு விலவன்.

உவனியப் பிறப்பு 1424/1. ஓது வாய்மையும் ... ம் *. உவனியப் பிறப்பாவது — உபநயநம் ஆகி உண்டாகும் த்விஜத்வம், இரண்டாம் பிறப்பு. பிராம்மணனுகை.

உவா 569/2. இடை ... வில் *. பௌர்ணமி. உவாத்து 998/2. "இவர்க்கிப்போது இது தன்னை விடுகைக்கு ... இவை தானேயாயிற்று" உபாத்தியாயன். "பொறைக்கு ... தாயிருக்கு மொருத்தி" 3671/1. உபாத்யாயராய்.

உவை 2902/3. அவை யிவை ... *. உவன் போலே,

உழ 1105/2. உழவர் ... ப் பின் முன் *.

உழக்க வுழக்குண்டு 630/2. காரேறு ... * துகைக்கத் துகை யுண்டு வருந்தி. **உழக்கி** 278/1. திப்பப் பூடுகளடங்க *. வாட்டி அழித்து. "தேர்க்காலாலே ... ப் பொகட்டான்." 3613/4. மர்த் தித்து, துகைத்து.

உழக்கிய பாதம் 365/3. ... த நூளி *. ஸஞ்சரிக்கிற பாதம்.

உழக்கோல் 3488/2. " ... லாலே தகர்க்கிரேும்." தாற்றுக் கோல் - சாட்டை நுனியில் ஆணி குத்தியிருக்கும்; அதற்குத் தாற் குச்சி யென்று பெயர். அதுவே இங்கு தாற்றுக் கோலாகிறது. உழக் கும் கோல், வருத்தும் கோல். முட்கோல் என்றும் வருவது காண்க. ஆணியே முள். முள் உள்ள கோல். [வளர்த்து.

உழங்தோம்பி 1566/1. ... ... வைத்தமையால் *. சிரமப்பட்டு

உழல் புள்ளினங்கள் *. 3453/1. உழலுகின்ற - ஸஞ்சரிக்கின்ற புள்ளினங்கள்.

உழலையென்பில் பேய்ச்சி 3428/1. உழலை கோத்தாப்போலே யிருக்கிற எலும்புகளையுடைய பேய்ச்சி - பூதனை. உழலை - குறுக்குக் கழி. **உழவர்** 1105/2. உழுநீர் வயல் ... *. கர்ஷகர். உழவை யுடையவர்.

உழவிட்டு 3293/4. கிதம் ... *. முழவு வாத்தியம் என்று வியாக்யானங்கள். கிதம் உழவிட்டு என்றும் பிரித்துப் பொருளாக்கலாம்.

உழவுகோல் 3598/4. "கையும் ... லும்" உழக்கோல், உழக் கப்பண்ணும் கோல். சாட்டை. பிள்ளை லோகாசார்யர் முமுக்ஷுப் படி, தனித்வயம், பரந்த ரஹஸ்யம் முதலிய கிரந்தங்களில் இந்த வார்த்தை எழுதுவதற்கு இவ்விடத்து ஈட்டு வார்த்தையே ஆதாரம். இந்த 24000-ப் படியில் உழவுகோல் இல்லாமல் முட்கோல் காண்கிறது

உள் நினைந்து 1749/1. ... துவளமேல் வந்து தோன்றி *. நெஞ் சால் நினைந்து.

உள்பட 3484/2. நாகம் காய்ந்ததும் ... *. முதலாக, முதலான. **உள் மடுத்து** 3983/4. வேள்வி ... *. உள்ளே வைத்து. **உள் மீதாடி** 3543/4. என தாவி ... *. உள்ளே குறைவற ஆடி. மீது - மீகவும். **உள் மெலிந்தாள்** 1660/4. ... உருகினாள் *. ஆத்ம வஸ்து வாடிற்று. உள் - உள்ளே யிருக்கும் ஆத்மா. **உள் மெலியப் புகுந்து***. 52-/3. மெலி யும்படி உள்ளே புகுந்து **உள் மெலிவு** 623/2. உண்ண லுருமையும் ... வும் *. ஞான ஸங்கோசம்.

உள் வாசலளவும் வந்து (தனித்வ. அவ.) **உள் வாயிலே**(ஸம். ஸா.) உள்ளே. **உள்வெதுப்பு** 3331/2. மநஸ்தாபம். அந்தஸ்தாபம்.

உள்ளகிற்கும் 3788/2. போழ்து போக ... *. நினைக்க வல்லராகும்.

உள்ளங் குழைந்து 3722/1. ... நாளும் *. நெஞ்சு சிதிலமாய். **உள்ளங் கூடக் கூடிற்றாகில்** *. 3755/4. உள்ளங் கூடுகை – அநுஸந்திக்கை. அதாவது — அநுஸந்திக்கிற அர்த்தம் கூடிற்றாகில். [சழிய.

உள்ளஞ் சோர 439/3 ... த் துயிலணை கொள்ளேன் *. நெஞ்

உள்ளடி 91/1. ... பொறித்தமை *. உள்ளங்கால். **உள்ளத்தகம்** 2652/4. அடியேனது ... *. ஹ்ருதயம். **உள்ளத் தகம்பால்** 3800/1. என் ... *. மநஸ்ஸிலே. **உள்ளத்திருள்** 375/3. ... அற நோக்கி*. நெஞ்சில் அஜ்ஞாநாந்தகாரம். **உள்ளத்துக் கொண்டு** 479/6. ... முனிவர்களும் யோகிகளும் *. ஹ்ருதயத்தில் த்யாநித்துக்கொண்டு. **உள்ளத்துக் கொள்ளும் தெய்வங்கள்** 3358/1. நிறுத்தி நும் ... *. புறம்பே சிலர் அறிவில் அபஹாஸிப்பரென்று தாங்கள் அறிந்ததாக உள்ளத்திலே உபாஸிக்குமத்தனை; வெளிக்காட்டார்.

உள்ளத்துக் கொள்ளு மவர் 3192/3. ... கண்டீர் *. நெஞ்சாலே அநுபவிக்கு மவர்.

உள்ளதனையும் ஜீவிக்க ஒரு குறையில்லை. 3320/1. மேலுள்ள காலமெல்லாம். உள்ள வரையில், ஜீவனுள்ள வரையில்.

உள்ளந்தூயர் 826/2. அவன் குணங்களுள்ளி ... ராய் *. பரிசுத்தாந்த:கரணர். **உள்ள நோய்கள்** 3067/4 ... எல்லாம் துரந்து*. அஹங்கார அர்த்தகாமங்கள். **உள்ளப் பெற்றேன்** 3276/3. இசை மாலைகளேத்தி ...*. நெஞ்சாலே அநுபவிக்கப் பெற்றேன். **உள்ளம் கூசியிட்டீர்** 975/1. ஹ்ருதயம் கூசினீர். **உள்ளம் பேதம் செய் திட்டு***. 3443/2. மதி பேதங்கள் செய்து.

உள்ளமரர் 2930/1. நல் ஞானத்துள் ... *. மேலான அமரர். உள்-மனமும் இடமும் மேலும். இங்கே மேல்.

உள்ள முரை செயல் 2917/1. ... உள்ள *. மநோவாக் காயங்கள். **உள்ள மெள்கி** 976/1. போந்திருந்து ... *. ஹ்ருதயம் ஈடுபட்டு.

உள்ளவா கண்டா ருளர் * 328/4. உள்ளவாறு கண்டார் உளர். **உள்ளறியார்** 2598/1. ... ஆய் நெஞ்சே *. ஆழ அநுபவிக்க அறியார். உள்ளபடி அறியார். **உள்ளாதார்** 2017/4. ... உள்ளத்தை *. நினையாதார். **உள்ளிற்று** 905/3. உள்ளுவார் ... *. அநுஸந்தித்தது.

உள்ளு நிற்கிறவன் 3495/1. உள்ளே. “உகந்தருளின நிலங்களிலே ...” [ஆரறிவார்.

உள்ளுள் ஆரறிவார் 3026/3. ... அவன் தன் *. மனக் கருத்தை

உள்ளுளாவி 3048/1. ... உலர்ந்துலர்ந்து *. ஆந்தரமான மநஸ்ஸுக்கு தாரகமான ஆத்மா. **உள்ளுறக் கண்டு** 3459/3 (12).

உள்ளுறை 3646/4. "வடிவழகைக் காட்டியாயிற்று கவிக்கு ... கொடுத்தது". விஷயம்.

உள்ளூரும் சிந்தை நோய் 2074/1. ... எனக்கே *. ஸர்ப்பம் ஊர்ந்தாற்போலே ஸஞ்சரியா நிற்கும் மாநஸ வியாதி. ஒரு ப்ரதேசத்திலே யாகில் அவ்விடத்தே அந்வேஷித்து சிகித்ஸிக்கலாமிறே. அது செய்ய வொண்ணாதபடி கழலை கரப்பான் போலே எங்குமொக்க ஸஞ்சரிக்கும் நோய்.

உள்ளே பதி கிடந்து ஸத்தையே பிடித்து நோக்கி (முமு. திரும.) உள்ளே பதிந்து கிடந்து.

உளங்கொள் ஞானம் 3338/4. ... த்து வைமின் *. மாநஸ ஜ்ஞாநம். உளங்கோயில் 2235/3. ... உள்ளம் *. ஹ்ருதயமாகிற கோயில். உள நலங் கூர 3798/3. நாம் களித்து ... *. நெஞ்சிலே ப்ரேமம் வர்த்திக்கும்படியாக, கூர - மேலென, மிக்கு வர. உளம் 83/3 ... தொட்டு இரணியனுகம் *. ஹ்ருதயம்.

உளராயில்லை யாகியே *. 3757/1. இல்லையாகியே உளர் — என்று நிரீசுவர ஸாங்க்ய மதம். உளருமில்லையல்லர் *. 3756/4. ஈசுவரனுயிருப்பானொருவன் உளன்; இல்லையென்ன வொண்ணாது — என்று ஸேசுவர ஸாங்க்ய மதம்.

உளவா 3343/1. உள்ளன மற்று ... *. உளவாக. உளவாய்த்து 599/4. நாவுமிரண்டும் ... *. உளவாயிற்று.

உளவுகோல் 3134/1. (9). உழவு கோல். உளுக்காக்கப் பண்ணுகிறேன் 3492/3 (36). படிந்துகொடுக்கும்படி பண்ணுகிறேன். உளுக்கினபடி*. 3445/1. "நின்று மிருந்தும் கிடந்தும் என்று திரளச் சொல்லவமையுமாயிருக்க, நின்றவாறும் இருந்தவாறும் கிடந்தவாறும் என்றுரிறே; தனித்தனியே ...". ஈடுபட்டபடி.

உளுக்காந்தது 3704/1. கொம்புகளைப் பறித்தவாறே ... (குவலயாபீடம் என்னும் யானை). அரும் பதத்தில் அர்த்தம் எழுதவில்லை. உள்ளுக் காய்ந்தது - உள்ளே உலர்ந்து போயிற்று — என்று பொருள்.

உளுக்கும்படி 3796/4. ஆனையின் துயரமென்று நெஞ்சு ... யிறே பட்டது (ஸர்வேசுவரன்). ஈடுபடும்படி.

உளுப்பு 288/4. தட்டு ... ஆகின்றதே *. உளுவுடைய மரம். தட்டுளுப்பு – தடுமாற்றம்.

உளைந்த அரி 1721/1. ... யும் மானிடமும் *. உளைந்த - பயந்த, தன்னுடைய தோற்றரவிலே சத்ருபக்ஷம் குலைந்தோடும்படி யிருக்கிற

ஸிம்ஹம். உளைந்து 2546/1. செகிலேற்றின் சுடருக்கு ... *. தோற்றி. உளைந்தோடி 3442/3. "தாயெடுத்த சிறு கோலுக்கு ... யிறே," சிறு கோல் - வைக்கோல். உளைந் தோடி - பயப்பட்டோடி.

உளைப் பொங் கரிமா 1906/1. ... த் துலேய *. உளை மயிர் கிளர்ந்த ஸிம்ஹம்.

உளைய 3869/ப்ர. குன்றிப்போக. "அம்புகளாலே ... ஏவுண்டு".

உற்றது 1740/2. ... முன்னடியார்க் கடிமை *. அறுதியிட்டது. உற்றது வீடுயிர் * 2914/2. உயிர் வீடு உற்றது, ஆத்மா மோக்ஷத்தை ப்ராபித்தது. உற்றது 3011/4. யாம் ... உற்ருயோ *. பட்டது.

உற்ற நல் நோயிது 3286/2. ... தேறினேம் *. உள்ளுறப் பெற்ற சிலாக்கியமான நோய். உற்ற நோய் 3288/4. ... க்கும் அரு மருந் தாகும் *. உள்ளுறக் கொண்ட நோய். உற்றபேது 613/2. தாம் ... எல்லாம் *. பட்ட எளிமை, துக்கம். உற்றபோது 880/2. ... அன்றி நீங்கள் *. கிட்டினபோது.

உற்றவர் 1808/1. ... பற்றி நின்று *. ஸம்பந்திகள், உற்ருர், உறவினர், பந்துக்கள்.

உற்ற விருவினை 3997/2. ... யாய் *. இரண்டு வகைப்பட்ட புண்ய பாப ரூப கர்மங்கள். உற்ற - உற்றிருக்கிற. உற்ற உறு பிணி நோய்கள்*. 448/1. உற்ற நோய், உறு பிணி அஸாதாரண மென்னும் படியான நோய். மறுபாடுருவக் கொண்ட பிணி - துக்கம். நோய் - வியாதி.

உற்றன 3401/4. என் மகள் ... வே *. லபித்தவை. அடைந் தவை. உற்றன பேசி 166/3. ... நீயோடித் திரியாதே *, தோன்றிய தைச் சொல்லி. உற்ருர் 2308/1. துன்பு ... *. அடைந்தார். உற்ருர் 3319/1. நல்லு ... கரைந்தேங்க *. பந்துக்கள்.

உற்று நோக்கி 3499/4. தொழுமத்திசை ... யே *. மறுபாடுருவப் பார்த்து, ஏகாக்ர சித்தையாய் நோக்கி. செறிய நோக்கி. [படி.

உற 267/2. அடிவாய் ... க் கையிட்டு *. உறும்படியாக, கிட்டும்

உறக்கம் 374/2. கண் ... ஆவதன் முன்னம்*. நித்திரை. உறக்கம். 845/1. ... மோடுணர்ச்சி *. அஜ்ஞாநம்.

உறக லுறகல் 451/1. ... ஒண் சுடராழியே சங்கே*. உறங்காதே.

உறங்கி யறிவுற்று 2704/1. ஓராதவன் போல் ... *. உறங்கி யுணர்ந்து. அறிவு குடி புகுந்து. மூரி நிமிர்வது கொட்டாவி கொள்வதா யுணர்ந்தபடி.

உறங்குதியோ 488/1. இன்னும் ... *. உறங்கக் கடவையோ.

உற நோக்கி 218/2. அவனை ... *. உரைக்கப் பார்த்து, குறிப் பாகப் பார்த்து.

உறல் 3181/3. நாற்றத் தோற்றச் சுவை யொலி ... *. ஸ்பர்சம்.

உற வற வார்த்தை சொல்லுகிருள் 3462/1 (12). உறவறும்படி.

உறவு சுற்றம் 1049/1. ... என்றென்றிலா *. பந்துக்கள், ஜ்ஞாதிகள். உறவுண்ட 2568/2. ... பெரு வயிற்றனை. பொருந்தும்படி உண்ட - விழுங்கிய. உறவு முறை 3320/2. "ஒரு ... உண்டாயிற்று." பந்துத்வ ப்ராப்தி. உற முறையார் என்பது கொச்சை.

உறவுயர் ஞானம் 2521/3 ... சுடர் *. உயர் வுற்ற ஞானம்.

உற வுறுதி சொல்லீர். (வா. மா. 312) "உமக்குண்டான ---". உறுதி புறச்....

உறற்பொருட்டு 3750/1. அவனதருளால் ... *. உறுவதற்காக, பெறுவதற்காக. உறுது 2542/2. உற்றும் --- ம் *. பொருந்தாதது. உறுமை 2478/2. இனி யாம் --- *. அணுகாதபடி.

உறுவின 3187/ப்ர. (9). பரிமாற்றத்திலே --- ஆழ்வார் அவ்வுருவுதல் தீர." "--- திருக்கண்கள் உத்புல்ல பங்கஜ தடாகம் போலே விகஸிதமானபடி" 3053/3. (24). "காணப் பெறுதே --- கண்களும் கண்டு செவ்விபெற்றுக் குளிர்ந்தன." 3463/1. "அவர்களுடைய நோக்குப் பெறுதே உறுவிக் கிடந்தவன் அவர்கள் தன் முகம் பார்க்கப் பெறுகையாலே ஸந்தோஷித்தான்" 3462/1. (சி. அரு.) உருவுதல் வாடுதல் என்று எங்கேயோ குறிப்புக் காண்பது தவிர, இவ்விடங்களிலும் மற்றும் பல இடங்களிலும் அரும்பதக் காரரின் விளக்கம் யாதுமில்லை.

உறுவும்படியான தன்மை 3605/4. "பெற்றபோது ஜீவிக்கும் படியாய் பெறுத போது --- யை உண்டாக்கினுன்."

உறிக்கொண்ட வெண்ணெய் *. 3038/3. உறிகளிலே சேமித்து வைத்த ... . உறிகள் போல் மெய்ந்நரம்பெழுந்து *. 970/1. பால்யத்தில் மறந்து கிடந்தவை சரீரம் பசையற உலர்ந்தபடியாலே உறிபோலே மேலே புடைக்குமாயிற்று. புடைக்கும் - பரம்பும். உறிபோலே என்பது உறிக் கயிறுகள் போலே என்றபடி. உறிபோட்டுக் கொள்ளுகை (வா. மா. 217) தூக்குப் போட்டுக் கொள்ளுகை. தூக்குப் போடுவதற்கு 'உரி நீபடம்' என்று தெலுங்கு.

உறிஞ்சி 129/4. மூக்கு ... முலையுண்ணுயே*. உரிஞ்ச உறிஞ்ச - மெல்லின வல்லின வேறு பாடுகள் காண்க.

உறியார்ந்த நறு வெண்ணெய் *. 1143/1. உறியிலே வைத்து சிக்கென கள்ளக் கயிறு முருவி கடைந்த போதைச் செவ்வி மாருத

வெண்ணெய். கள்ளக் கயிறு - உறி பிரிந்திராமல் நெருங்கி யிருக்கும் படி செய்யும் சுருக்குக் கயிறு. அது இருக்கு மிடம் எளிதில் அறிய மாட்டாமையால் கள்ளமாகிறது. [உற்றுல்.

உறில் 288/1. சிற்றிலும் முற்றத் திழைக்கல் ... *. ஒருப்படில்,

உறுக்கி 2921/3. " ... விட்டால் போகமாட்டாதே கிடக்கும்." மிரட்டி, "உண்ணென்று ... க் கொடுக்க." 2991/2. அதட்டி. " விடு நகம் கட்டுவாரை நெகிழக் கட்டினுயென்று ... ... க் கட்டுவிப்பர்". 3516/1. (?) உறுக்கி - உறுத்தி. கெட்டியாக. விடுநகம் - கிட்டிக்கோல்.

உறுக 2795/2. பொன்னனையார் பின்னும் திரு ... *. திரு - ஸம் பத்து. உறுக - பொருந்தி யிருக்கட்டும்.

உறுகின்ற கன்மங்கள் *. 2558/1. கிட்டி நிற்கிற காரியங்கள். உறுகோ 3675/4, 3676/1. எங்கு வந்து ... கோ *. கிட்டுவேன். கிட்டவோ, கிட்டுவதோ, உறுகவே என்றபடி. ஆர்க்கிடுகோ என்பதும் இப்படியே.

உறுங்கண்டாய் 2258/1. ... நன் நெஞ்சே *. தகும் காண்.

உறுத்த சிந்தை 833/3. நின் பத்து ... *. மிக்க சிந்தை, உறுதல் அழுத்தலாய் மிகுதி. உறுத்து 605/1. உன்னைக் கடைந்து கலக்கு ...செய்து*. கலக்குறுத்து - கலக்கி, கலக்கம் செய்து. உறுதி 2039/4 ... யே வேண்டினரே *. உறுதியேல் 55/3. ஆடலாட ... *. அறுதி யிட்டாயாகில், உறுதியாகில், உறுதி கொண்டாயாகில். உறுதிராகில் 618/2. பண்டு பண்டாக்க ... *. பார்த்திகோளாகில்.

உறு துயர் 126/3. அங்கு ... தீர்த்த *. அதி மாத்ரமான துயர். உறு துயரம் 749/4. ... அடையோமன்றே*. உறும் துயரம் - வரக்கூடிய துயரம். உறு நோய் 2248/3. ... வினையிரண்டும் *. அநுபவிக்கக் கடவதான நோய்.

உறுப்பு 3646/2. கர சரணம் முதலாக எல்லா ... ம் *. அவயவம், கரணம், இந்திரியம். உறுப்புத் தோல் 638/2. " ... போர்த்த." உறுப் புத் தோலும் வெண்ணெய் பூசின உடம்புமான யஜமாந வேஷம்" யாகத்திலே தீக்ஷிதனுக்கு 3341/4. மான் தோல். "போர்த்த உறுப்புத் தோலுக் குறுப்பாகிறதில்லை." 3311/4. உறுப்பு (?) (தனி சுலோ. தவ்ம ப்ரமேய:) உறு பூசல் 3870/அவ. கை கலந்த யுத்தம். மூல பல யுத்தம் உறு - பெரிய, பூசல் - போர்.

உறும் 661/4. இன்பு ... தொண்டர் *. அடையும். உறுமோ 3771/4. யான்பெற்றது ... *. ஒக்குமோ. உறுவது 3817. ... இது வென்று *. யோக்யமானது, உத்தேசியம், பிரயோஜநம்.

உறுவினை 818/4. நும் ... துயருள் *. சூழ்த்துக் கொண்டதாய் அவச்யம் அநுபோக்தவ்யமான பாபம்.

உறைக்க வூன்றி 419/1. ஒள்ளிய மார்பு ...*. உறையும்படி ஊன்றி மறுபாடுருவும் படியாக ஊன்றி. [ணுகிறார்.

உறைகின்றார் 3757/2. ... என்னுளத்தே *. நித்யவாஸம் பண்

உறை கோயில் 1258/2. அளித்தவன் ... *.

உறைத்ததிலே ஊன்றி நிற்கும் 3627/ப்ர. ப்ரபலமானதிலே. உறைத்திட்ட உறைப்பன் 349/2. உருப்பனை யோட்டிக் கொண்டு ...*. சிக்கெனப் பரிபவித்திட்ட அவமதித்த உறைப்பன் சக்திமாந்.

உறைப்பத் துற்று 3203/2. காலப் பண்தேன் ...*. மிகவும் உண்டு, செறிய உண்டு.

உறைப்பன் 349/2. உறைத்திட்ட ... *. 403/2. ஒருப்படுத்த ...*. மிடுக்கன்.

உறைப்பு 3755/4. கூடிற்றாகில் நல் ... பே *. வாய்ப்பு, உறுதி. "சேஷித்வ ... த் தோற்ற *. 3060/1. தார்ட்யம்.

உறைபவன் 3221/2. கோலச் செந்தாமரைக் கண் ... போலே *. உறங்குபவன். உறைகை - உறங்குகை. உறையுங் கோயில் 2086/2. உறைநால் மறை ... *. வஸிக்கும் கோயில். உறைவு 551/3. உனக் கென மறந்து ... *. உறைதல், இருப்பு.

உன்தமர் 974/2. ... காண்மின் *. உன்தரவு – சீட்டு. "ஒன் றைப் பெறுகையன்றிக்கே முடிகைக்கும் ... வேண்டுமாகில் அத்தைத் தந்தருள வேணும்" 3319/ப்ர.

உன்தன் 3921/1. ... திருவுள்ளம் *. உன்பால் 3018/2. ... லே வீழ்த் தொழிந்தாய் *.

உன்மத்தங்காய் 3564/1. "... தின்னப் பண்ணி." ஊமத்தங் காய் வருவதும் காண்க. உன்மத்தன் 671/4. ... காண்மினே *.

உன்மத்தர் 3755/2. போகும்போது ... போல் *. உன்மாதம் கொண்டவர்.

உன்றமர் 1744/3 ... க் கென்றும் நமன்தமர் *. உன்னுடையார். உன்றன் *. 454/1. உன்னுடைய. உன்றிறத்து *. 424/3. உன் விஷ யத்தில். உன்ன பாதம் 806/3. ... என்ன சிந்தை *. உன்னுடைய.

உன்ன 2156/1. ஆப்புன்னை ... க்கழியும்*. நினைக்க. உன்னடைந் தேன்*. 1470/2. உன்னை யடைந்தேன். உன்னண்ட வாணர்*. 1860/3. உனக்கு இஷ்டர். உன்னது *. 3260/3. உன்னுடைய.

உன்னி 2792/1. ... யுடலுருகி *. நினைத்து. உன்னித்து 508/3. ... எழுந்த என் தட முலைகள் *. அநுஸந்தித்து. உன்னிய யோகம் *. 2757/2. சிந்திக்கிற யோக நித்ரை.

உன்னு சுவை 3646/3. ... யொளி *. ஆசைப்படும் ரஸம். உன்னு மின் 2911/4. ... நீரே *. உணருங்கோள், ஆராயுங்கோள். உன்னு வர் 1787/4. வாளுடும் ... ரே *. பெறுவர்.

உன்னுடைய மேலே 132/1, உன் மேல் *. என்றதுக்கு இப்படி வியாக்யானம்.

உன்னை யுன்னை 3998/2. ... எனைநாள் வந்து கூடுவன் நான் *. நீயான உன்னை.

உனக்கேற்கும் 3995/4. ... கோல மலர்ப் பாவை. உனக்குத் தகும்' உனக்கேற்க என்பது இதனுடைய கொச்சை. உனக்குத் தகுதியாக உனக்கே திருப்தியாக என்று பொருள். உனக்கேற — என்பதும் உனத்கேற்க என்ற பொருளில்.

உன கழல் 3319/3. ... ற்கே வரும் பரிசு *.

உனபாதம் 3550/4. ... கூடுமாறு *. உனை 1424/3. ... வேண் யடி குறை முடித்து *. உன்னை.

ஊ

ஊக்கம் 1932/2. ... அதனை நினைந்தோ *. மிடுக்கு.

ஊசல் 420/3. செங்கமல மலரேறி ... ஆடி *. ஊஞ்சல்.

ஊசி வேரோடே பறித்து விழவிட்டு 788/1. சிறிய வேர்.

ஊட்டம் 512/4. ... மின்றித் துரந்தால் *. ஜீவநம், தீனி.

ஊட்டிச் சதித்து - வளர்த்துக் கொன்று. (தனி சுலோ. த்வம ப்ர மேய:) சதித்து - சேதித்து. "ருஷபங்களேழையும் ஊட்டியாக ... ஒரு காலாலே தழுவினன்." 2943/4. ஊட்டி என்று கழுத்தாய் ஏழு கழுத்தையும் ஒன்றுகக் கூட்டித் தழுவினன். ஊட்டியாக ஒன்றுக. அல்லது — ஊட்டி – கழுத்து, ஆக – அகப்படும்படியாக. ஊட்டியாக - யோக்யமாக. ஊட்டியாக நெரித்து 3059/1. கழுத்தை நெரித்து, "...வளர்ந்த சரீரம்" 3069/3. ஆஹாரமாக வளர்ந்தது. ஆஹாரத்தால் வளர்ந்தது. " ... யிட்டு வளர்க்கும் 961/2. திண்டி. தீனியிட்டு. திண்டி - தெலுங்கு

ஊடல் 3455/1. உணர்த்தல் ... *. ப்ரணய ரோஷம். காதலால் உண்டான கோபம். விளையாட்டுக் கோபம். " ஸம்போக மத்யே பிறக்குமதிரே ஊடலாவது" 707/4. ஊடல் திறம் 1931/2. ஊடிய ... *. வெறுப்பு வார்த்தை விஷயம்.

ஊடறுத்து 554/2. தென்றலும் திங்களும் ... *. நடுவே விடுத்து.

ஊடாடி 1184/3. கைதைக் கழி ... *. இங்குமங்கும் ஸஞ்சரித்து.

ஊடாடுபனி 2940/4. ... வாடாய் *. ஊடு – உள். ஆடு – ஸஞ்ச ரிக்கை. உள்ளே அந்தரங்கமாக ஸஞ்சரிக்கை. நடுவே நடையாடித் திரிகிற பனி. உலாவித் திரிகிற பனி.

ஊடி 707/2. ஏமத்து ... *. பிணங்கி. ஊடி 1286/1. தாழ்வரையு மெங்கும் ... *. ஏறி. ஊடிய வூடல் திறம் *. 1931/2. ப்ரணய கலஹ மாகப் பேசின வெறுப்பு வார்த்தை.

ஊடுபுக்கு 3449/3. ... எனதாவியை *. தோல்புரையே போகாதே மர்மத்திலே புக்கு, உள்ளே புக்கு.

ஊடுருவ 629/2. நெஞ்சு ... *. நடுவே உருவச் செல்ல. உள்ளே தைக்கும்படி. உள்ளுருவ. ஊடுற 3922/3. என்றென்று ... *. நடுவே. உள்ளே. ஊடேறு கஞ்சன் 1626/1. ... ஞெடு *. உயர்ந்த மஞ்சத்தில் ஏறியிருக்கிற கம்ஸன். ஊடு நடுவாய் கட்டிலின் நடுவாகிறது.

ஊணத்யாயம் படிக்கை 3143/ப்ர. போஜந வர்ணநம். ஊணுடை மல்லர் 3596/1. ... ததர்ந்த ஒலி *. மிகையாக உண்டு மிடுக்கரான மல்லர்.

ஊத்தூதி (வாமா. 161) "விறகை மடுத்து ... ." ஊது குழாய்.

ஊத்தை 385/1. மலமுடை *. ... மலவூத்தை *. சரீரம்.

ஊத்தைக் குழி * 389/1. ஊத்தைவாய் *. 362/4.

ஊதப் பறக்கும் 3315/4. "எதிரிகளை ... ... ம் படி பண்ணியிரே யிருப்பது." ஊதினால் பறந்து போம்படி. ஊதியம் 950/1. (?) வ்ருத்தி.

ஊதீர் 3530/1. ஒளிமாமலர் ... *. ஊதுங்கோள். ஊதை 1789/2 ... திரிதந் துமறி *. குளிர் காற்று. ஊதையும் கூதையும் குளிர் பனிக் காற்று.

ஊமத்தங்காய் 3517/ப்ர. "இருவரும் இருவர்க்கும்... ." ஊமத்தங் காய் ப்ராந்தி ஜநகமாமாப் போலே அத்யோந்ய வைலக்ஷண்யங்க ளாலே ஒருவர்க் கொருவர் ப்ராந்தி ஜநகர் என்றபடி. "... இன்று பிர மித்தார்" 3033/2. கசப்பும் பொருளாகும்.

ஊமனார் கண்ட கனவு *. 950/2. ஊமைகள். "ஊமைக் கூறனு கக் கூப்பிடுவதாகிறபடி" 3011/அவ. மூக ஜல்பிதம், ஊமையின் உளறல். "... கூறன்" 3464/4. அநக்ஷரமாகச் சொல்லுகை. கூறன் - கூற்று, சொல், பேச்சு. ஊமையரோடு செகுடர் வார்த்தை *. 617/2. செகு டரோடு ஊமையர் வார்த்தை என்று மாற்றிப் பொருளாக்க வேண்டும்.

ஊர் 883/3. அவனது ... அரங்கமென்னுது *.

ஊர்கின்றது 2489/2. ... கங்குலூழிகளே *. பரவுகின்றது. புகுந் கின்றது. ஊர்கொள் திண் பாகன் *. 3704/2. நடத்திக் கொண்டு வரவல்லனுய் சிக்ஷயில் திண்மையுடைய பாகன் - யானைப் பாகன்.

ஊர் சகடம் 3481/2 ... இறச்சாடி *. ஊர்ந்து வருகிற சகடம்.

ஊர்தி - வாஹநம். ஊர்தி பண்ணி 3230/3. நலனிடை....*. நடத்தி. ஊர்தியவன் 274/1. அரவப் பகை ... *. வாஹநமாக நடத்துகிறவன். ஊர்தும் 3371/4 குதிரியாய் மடல் ... மே *. ஊரக்கடவேன். ஊர்ந் தோடக்கடவேன். ஊர்ந்தவன் 111/4. மணித் திண்டேர் ... *. ஸாரதி யாய் நின்று நடத்தியவன்.

ஊர்ந்தியங்கும் வெண்மதி *. 2356/1. மெள்ள ஸஞ்சரியா நின்ற.

ஊர்ப்பகை 3914/1. "குயில் மயில் தொடக்கமானவை தானே ... யாயிற்று." ஊரிலுள்ள பேரெல்லாம் பகை. ஊர்ப்பூசல் 3366/3. ஊரார் சொல்லும்பழி. ஊர்ப்பொது 3249/4. "க்ருஷ்ணனைப் போல ... ..."

அன்றிக்கே (ராமன்) ஏகதார வ்ரதன்.” **ஊர்வளம் 3762/1.** ... கிளர் சோலை*. ஊரில் ஸம்பத்து. **ஊர்வன் 2897/1.** உலகறிய ... *. மட லூர்வேன். **ஊர்வான் 2277/1.** புள்ளை ... *. நடத்துவான்.

ஊரகஞ்சாலவும் சேய்த்து *. **530/2.** ஊர் சேய்த்து – தூரம். ஊரில் அகம் – ஊரை விட, வீடு சாலவும் சேய்த்து – அதிக தூரம். **ஊரகம் 814/3.** பாடகத்தும் ... த்தும் *. ஊரகம் என்னும் திவ்ய தேசம்.

ஊரவர் கவ்வை 3363/4. ஏசறும் ... *. ஊரார் சொல்லும் பழி. 3366/1. ... எருவிட்டு *. **ஊரழி பூசல் 935/அவ. 3462/ப்ர.** ஊர் அழியும்படியான போர்.

ஊராதொழியேன் 2749/2. ...நான்*. மடலூருகை தவிரேன். **ஊரா நிறை 2699/2.** ... மேய்த்து *. ஊரிலுள்ள பசுக் கூட்டம். **ஊரா மிலேக்கக் குருட்டாமிலேக்கும் *. 2571/3.** ஊரில் பசுக்கள் வந்து புகுந்து ஒன்றை ஒன்று கண்டு ஸந்தோஷிக்கையில், அதன் காரணம் அறிய மாட்டாத குருட்டா - குருட்டுப் பசுவும், மிலேக்கும் - களிக்கும். **ஊரா யுனக் காட் படும் *. 3427/4.** ஊரெல்லாம். **ஊராய வெல்லாம் *. 2747/1.** ... ஒழியாமே *. எல்லாரும். **ஊரான் 991/1.** குடந்தையுத்த மன் *. ஊரிலுள்ளவன், ஊர்க்காரன். **ஊரிலேன் 900/1.** ... காணி யில்லை *. தேவரீருக்குப் பற்றாசாக பிடிக்கலாவதொரு தேசத்திலே பிறக்கப் பெற்றிலேன்.

ஊரு 68/2. ... கரத்திணுேடும் *. துடை. **ஊரும் புள் 3904/1.** ... கொடியு மஃதே *. வாஹநமான புள், கருடன். **ஊரும் வரியரவம் 2119/1.** ... ஒண் குரவர் *. ஒரு காரியப்பாடற ஸ்வைர ஸஞ்சாரம் பண்ணும் ஸர்ப்பம். காரியப் பாடற – காரிய மில்லாமல்.

ஊழ் 2005/2. உலகமேழினையும் ... ழில் வாங்கி *. முறை.

ஊழ் கண்டிருந்தே *. 3423/2. முறைமையை அறிந்து கொண்டி ருந்தே, முறைமை கண்டு வைத்தே, பழைமையைக் கண்டிருந்தே.

ஊழ்த்து விழ்ந்தன 1343/2. ...உண்டு*. இற்று பேர்ந்துவிழ்ந்தவை.

ஊழ்மை 3294/4. ... யில் கண்ணபிரான் *, பழமை முறைமை. **ஊழ்வினை 2663/1.** ...யை அஞ்சுமே *. அநாதியான பாபம்.

ஊழிகள் 2490/4. எனே ... ஈர்வனவே *. காலங்கள். **ஊழிப் பிரான் 3701/3.** ... என்னை *. காலத்துக்குள் ளகப்பட்ட யாவற்றுக் கும் ஸ்வாமி. **ஊழிபடைத்தான் 3931/2.** ... ஊழியான் *. காலத்தை உண்டாக்கினவன். **ஊழிபெயர்த்தான்* 2276/3.** பெயர்க்கை திரும்பு கையாய் அழிந்த காலத்தை மீண்டும் உண்டாக்கினுன். **ஊழி முதல் வன் 477/1.** ... உருவம் போல் *. ஜகத்காரணபூதன். **ஊழி** – காலம்,

அதற்கும் முற்பட்டவன். ஊழியங் கங்குல் 2536/1. அளப்பருந் தன்மையை ... *. கல்பங்களைக் காட்டில் அழகிய கங்குல். கங்குலுக்கு அழகாவது - கல்பத்திலும் காட்டில் நெடிதாயிருக்கை.

ஊழியான் 3931/2. ... ஊழி படைத்தான் *. ஊழியான் 2276/3. ... ஊழி பெயர்த்தான்*.

ஊழியில் பெரிதால் நாழிகை 1111/1. ஊழி பெருத்து நாழிகை சிறுத்திருக்கும் மரியாதை குலைந்தது. ஊழியை விட நாழிகையே அதிக மாயிற்று. ஊழி யெழ 3594/4. ... வுலகங் கொண்டவாறே *. பொல்லாக் காலம் போய் நல்லடிக் காலம் கிளரும்படியாக. [இலை.

ஊழிலை 2761/2. வீழ் கனியும் ... யும் *. முற்றிப் பழுத்து சருகான

ஊழி வெள்ளம் 1286/2. ஆழி மிகும் ... *. ப்ரளய கால வெள்ளம்.

ஊளி 3597/4. ... யெழ வுலகமுண்ட வூணே *. பசி. உறிஞ்சின ஓசை, ஆரவாரம்.

ஊளையிட்டு 3623/2. ... அன்று *. கதறிக் கொண்டு.

ஊற்றங்கோல் 3265/1, (36, 24.) ஊன்று கோல்.

ஊற்றமுடையாய்/ன் 494/4. ... பெரியாய் *. த்ருட ப்ரமாண ஸித்தன். ஊற்றம் ஊன்றுதல். சுருதியின் ஊன்றுதலை யுடையவன் என்று சப்தார்த்தம்.

ஊற்றிடை நின்ற வாழை *. 1343/3. ஊற்று - நீர் நிலம்.

ஊற்றிருந்து 3627/ப்ர. "அவ்வழகுதானும் நெஞ்சிலே ... ." ஊறிக் கொண்டிருந்து.

ஊறல் 58/1. அழகிய வாயில் அமுத ... *. ஊற்று. 605/3. ... அறுத்தவன் *. பசை, ப்ராணன்.

ஊறிய கூன் 100/2. ... வினை *. முதுகில் வேர் விழுந்ததோ என்னும்படி உறைத்துப் புறப்பட்டுக் கிடக்கிற கூன்.

ஊறு 753/4. ... வெரு டோசை *. ஸ்பர்சம். ஊறு 3595/2. அற ... சுலாய் *. உடம்பு.

ஊறெண்ணெய் 490/5. இருந்ததே குடியாக எல்லார் தலையிலும் ...... வார்த்தாப் போலே திருவடிகளைக் குளிர வைத்தபடி. உச்சி யெண்ணெய் பார்.

ஊன் கொண்ட வள்ளுகிர் *. 581/3. தசைந்து கூரிதான உகிர் = நகம். ஊன் - மாம்ஸம். ஊன் திகழுநேமி 2262/1. ... யொளி *. வடிவிலே திகழா நின்றுள்ள திருவாழி. ஊன் பருகுநேமி 2659/4. ... ... யான் *. சத்ரு சரீரங்களைப் பருகுகிற திருவாழி. ஊன் பொதி நரம்பு *.

1813/1. மாம்ஸத்தைப் பொதிந்து கொண்டிருக்கிற நரம்பு. ஊன் முகமார் தலையோடு *. 1179/2. மாம்ஸ ப்ரசுரமான தலையோடு, ஊனூர் முகன் தலையோடு. மாம்ஸளமான பிரம்மாவின் கபாலம்.

ஊன்றிப் பொருது 2099/2. ... உடைவு *. உறைக்க நின்று, தரித்து நின்று பொருது

ஊன்று கோல் 3650/1. "தான் தரிக்கைக்கு ஒரு ... காண்கிறிலன்" ஊன்று வெம் பரற்கள் *. 242/2. ஊன்று காலிலே குத்துவதாயுள்ள வெம் பரல்கள் – கொடிய கூழாங்கற்கள்.

ஊனக்குரம்பை 2172/1. ... யினுட்புக்கு *. மாம்ஸம் செறிந்து மேலே மினுக்கித் தோற்றுகிற சரீரம். [விக்குமவர்கள்.

ஊனகாரகர்கள் 912/3. ... ளேலும்*. பிறரை யிடுவித்துக் கொல்லு

ஊன நோய் 853/2. ... ஒழிக்குமா *. ஊனத்தை விளைக்கிற சரீரம். நோயும் சரீரமும் பர்யாயம்.

ஊனம் 857/3. ... அஃதுதொழிக்க *. ஆபத்து. ஊனமாயினகள் 912/3. ... செய்யும் *. ஹிம்ஸை. இல்லையோருனம் *. 3030/4. குறை.

ஊனமர் தலை 1431/1. ... ... ஒன்றேந்தி *. மாம்ஸ ப்ரசுரமாயிருக்கும் தலை. ஊனமர் வேல் 1177/3. ... மருவார் *. சரீரமே உறையாக வுடைய வேல். ஊனமாயினகள் செய்யும் *. 912/3. பரஹிம்ஸை. ஊனமில் சுவர்க்கம் *. 3160/3. சிலநாள் இருந்து பின்னை த்வம்ஸ என்று தள்ளும்படியான தன்றிக்கே அழிவில்லாத ஸ்வர்க்கம். ஊனமில் செல்வம் *. 3160/3. சிலநாள் நின்று வற்று மதன்றிக்கே ஒரு நாளும் அழியாத ஸம்பத்து. ஊனமில் பாடல் 1277/3. லக்ஷணங்களில் குறையறப் பாடின பாடல். ஊனமில் மோக்கம் 3160/4. அஸங்குசிதமான மோக்ஷம். ஊனூர் வேல் 1467/3. மருவார் ... *. சத்ரு சரீரங்களிலே குளித்த வேல்.

ஊனூரகலம் 994/1. ... விளவெடுத்த *. மாம்ஸ ப்ரசுரமாயிருக்கிற மார்பு. ஊனிடைக் குரம்பை 2039/4. மாம்ஸளமான சரீரம்.

ஊனிடைச் சுவர் 1006/1. ... வைத்து *. ஊன் – மாம்ஸம். அத்தாலே இடை - நிறையை வுடைய சரீரம். ஊனிறத் துகிர்த் தலம் *. 774/2. சரீரத்தில் மர்ம ஸ்தலம் .... ஊனின் மேய ஆவி *. 845/1. சரீரத்திலே தாரகமாக வர்த்திக்கிற பஞ்ச வ்ருத்தி ப்ராணன். ஊனிடையாழி 508/3. ... சங்குத்தமர்க்கு *. திருமேனியிலுள்ள திருவாழி. ஊனுடை யகலம் *. 979/2. தசைந்து அகன்றிருந்துள்ள மார்பு.

ஊனேய் கண் வாளி 1470/2. மாம்ஸ ப்ரசுரமான கண்ணுகிற அம்பு. ஊனேய் குரம்பை *. 3972/2. மாம்ஸ மயமான சரீரம். ஊனேயா(ரா)க்கை *. 1460/2. ஏய் – ஏய்ந்த, ஏர் – அழகு. ஊனேறு செல்வம் 677/1. ... த்துடற்பிறவி*, மாம்ஸத்தை வளர்க்கும் ஐசுவரியம்,

ஏ

எஃகிக் கரை கண்டவர்கள் 3662/3. (?) அநுபந்தம் பார்.

எஃகு 1778/2. ... கில் கொடிதாலோ *. உருக்கு இரும்பு; வேல்.

எஃகுவது 3635/1. சுகிர்தலின் பொருள், பண்ணுவது. எஃகிடப் பட்டது 3735/1 (12).

எக்கடிகள் 566/அவ. அரு. குறளர். எக்கம் 925/1. தன்னுமை ... மத்தளி *. தாளம் எக்கம், ஏகமாய் ஒருதலைப் பறை, ஏக தந்த்ரி. எக்கல் 1363/3. ... லிடு நுண்மணல் *. வண்டல். எக்கல் 3457/2. "... இள மணல்களிலே விழுந்த பூ".

எக்கால்/லே 3105/4. ... எனக் கென்றும் *. எல்லா அவஸ்தை யிலும், எல்லாப் போதிலும்.

எக்கே 1929/4. ... இது வென் *. இது என்ன கஷ்டமோ !

எங்கணும் 3135/2. ... நிறைந்த வெந்தாய்*. எல்லா இடத்திலும். கண் – இடம்.

எங்கள் செல் சார்வு 3704/4. 3705/1. எங்கள் புகல், ப்ராப்யம், ஆச்ரயணிய ஸ்தலம். எங்களெம் மிறை யெம்பிரான் *. 1838/1. எங் களிலே விரிந்த சொல்லு எம் என்று. எங்கள் ஸ்வாமியாய் உபகார கனுயிருப்பவன். எங்களிலே விரிந்த சொல்லாவது - எங்கள் என்ற பதத்தின் அர்த்தத்தைத் தானே விவரிக்கிற சொல் என்றபடி.

எங்கார் முகில் 3782/2. ஏழ்மரமு மெய்த ... *. என்னுடைய பரமோதாரன். "எங்களின காண் இவை, நீ நினைக்கிறவர்களின அல்ல." 3466/4 (24).

எங்கானல் 3847/1. ... அகங்கழிவாய் *. எங்கள் உத்யாநம், கடற்கரைச் சோலை. எங்கானும் 1898/1. ... ஈ தொப்பதோர் மாயம். எங்கேனு மோரிடத்தில்.

எங்கும் 275/3. ... ... காவலுங் கடந்து *. எங்குத்து 3266/4. " இதுக்கெல்லாம் ஆசிரயம் ..." எங்கே ? எங்குலக்க ஓதுவன் *. 3125/4. எங்கே முடிய நான் பேசுவேன் ? எங்கேமுடியச் சொல்லு வது ? எங்குற்று யெம் பெருமான் 2060/4. எங்கேபுக்காய் ?

எங்குற்றுன் 14/2. நம்பிரான் ... *. எங்கே இருக்கிறுன். எங் கெங்கும் 3733/1. ... தலை சிறந்து*. கண்டவிடமெல்லாம். எங்கெய்

தக் கூவுவன் *. 3139/4. எங்ஙனே வந்து கேட்கக் கூப்பிடுகிறேன் ? எங்கே காணக் கூப்பிடுவது ?

எங் கோக்கள் 3779/3. அடியாரடியார் ... *. என் ஸ்வாமிகள். எங்கோமான் 1860/1. எனக்கு ஸ்வாமி. எங்கோலம் 1480/2. ... ... ஐயா *. எங்களுடைய ஒப்பனை.

எங்ஙனம் தேறுவ ருமரே *. 3673/4. உன்னுடையார் எங்ஙனே தரிக்கும்படி. எங்ஙனும் 1123/1. ... நாமிவர் வண்ணம்*. எந்த யத்நத் தாலும். எங்ஙனே 1005/1. ... வாழுமாறு *.

எச்சம் பொலிந்தீர்காள் *. 383/2. பிள்ளை பெற்று அபிவிருத்தரான வர்களே. எச்சம் - பிள்ளை.

எச்சில் தேவர் 2003/3. எம்பெருமா னுண்டுமிழ்ந்த ... *.

எசுர் 438/3. இருக்கு ... ச் சாம வேதம் *. யஜுர் வேதம்.

எஞ்சலி லமரர் 3184/2. ... குல முதல்*. அநுபவ ஸங்கோச ரஹித ரான நித்ய ஸூரிகள். எஞ்சலி லிலங்கை. 1861/1. ...க்கிறை*. (நெருக்கம்) இல்லாமல் பரந்த இலங்கை. எஞ்சாப் பிறவி 2575/2. குன்றுத சரீர ஸம்பந்தம். ஒருக்காலும் சுருங்கக் கடவதன்றிக்கே முடிவுகாண வொண்ணாதபடியாய் அநாதியாய் வருகிற ஜன்ம பரம்பரை. எஞ்சா விணையடி *. 2299/3. எஞ்சுதல் - சுருங்குதல். சுருக்கமின்றி என்கை யால் கல்யாண குணபூர்ணமான திருவடிகள்.

எஞ்சா வெந்நரகம் 1733/1. ... த்தழுந்தி *. ஒருகாலும் குறைவில் லாதே யிருக்கிற ஸம்ஸாரம். யமன் தண்டலாலுல் பண்ணின பாபத்தை அநுபவிப்பித்து பின்னை விட்டடிப்பார்கள். அங்ஙனன்றிக்கே, ஸம் ஸாரத்துக்கு ஓரவதி யில்லாமையாலே, ஒருகாலும் குறைந்து காட்டா தாயிற்று.

எஞ்ஞான்று 2566/4. ... தலைப் பெய்வனே *. எஞ்ஞான்றும் *. 422/4. எக்காலத்திலும்

எட்டணைப் பொழுதாகிலும் *. 1573/1. எள் தனை, எள்ளத்தனை காலமும். எட்டா நிலம் 3330/ப்ர. துஷ்ப்ராப ஸ்தலம். கிட்டமுடியாத இடம். எட்டாப்பூ 2080/4. "எனக்கு ... வாயிருக்கிறுன்." கண்ணால் காண்பதொழிய கைக்கு எட்டாத பூ.

எட்டிற்று எட்டாதாக நாற்றி 530/4. எட்டினதும் எட்டாததுமா கத் தொங்கவிட்டு.

எட்டினோ டிரண்டெனும் கயிறு 834/3. எட்டு மிரண்டும் பத்து, பத்தி, பக்தியாகிறது. கயிறு - பந்தம். பக்தியென்னும் பந்தம். எட்டுக் கதிரும் விட்டெறிகிற (?) (அழ). " ... பெரு மதிப்பு தானும்." ஒருவ னுடைய மதிப்பைச் சொல்லும்போது எட்டுக் கதிரும் அவனுக்கு விட் டெறிகிறது என்று சொல்லுவதுண்டு. எட்டுக் கண் விட்டெறிகிறது —

என்பதும் உண்டு. எட்டுத் திக்கிலும் ஆட்சி, பெருமை — சொல்லுகிற தென்று பொருள். எட்டுக் கண்ணுவது எட்டுத் திக்கு. எட்டுக் கதிர் என்பதற்குப் பொருள் அறிய வேண்டும்.

எட்டுணைப் போதும் 2062/2. ...என் குடங்கால் *. ஸர்வ காலமும். எட்டுப் புரியும் கட்டினேன் 904/2. " விரைக் கோட்டைக்கு ... " எல்லா வேலையையும் நானே செய்தேன் — என்று பொருள். விரைக் கோட்டைக்கு எட்டுப் புரி கட்டுவார்கள்.

எட்டெழுத்து 828/4. ... ம் ஓதுவார்கள் *. அஷ்டாக்ஷர மந்த்ரம். எட்டோடொரு நால்வர் *. 2594/1. பன்னிருவர், துவாதசாதித்யர்.

எடுக்கலெழாத எந்தை *. 3035/1. பேர்க்கப் பெராத என்பது போல. எடுக்கப் பார்த்தால் எடுக்க முடியாத. அதாவது - அறியப் பார்த்தால் அறிய முடியாத என்று பொருள். எடுத்திணுப் போலே 3420/1 (24). " ஒரு துர்ப்பலன் தலையிலே மலையை ... " எடுக்கச் செய்தாற்போல, அல்லது எடுத்து வைத்தாற் போல. எடுத்துக் கை நீட்டுகை (?). பரிசர்யை பண்ணுகை. யஜமானனுக்குத் தேவையானதை எடுத்து மரியாதையாக கை நீட்டுகை என்று பொருள். 3907/1. எடுத்துக் கை நீட்டுவார் என்று காண்க.

எடுத்துப் போன இந்திரியங்கள் 1463/1. "கார்ஹஸ்த்யத்துக்கு ... " படையெடுத்துப் போன, எடுத்துவிடும் ராஜாக்கள் 1/அவ. சேனையைத் திரட்டிக்கொண்டு போகும். "எடுத்து விட்டு வந்து போரக் கணிசியாத வூரைப் பூசலாம்படி பண்ணி" 519/4. "அநிருத்தாழ்வானைப் பற்ற கிருஷ்ணன் எடுத்துவிட்ட வளவிலே." 3223/1. " ராஜாக்கள் எடுத்துவிட்ட இடத்தே பரிகரமும் புகுமித்தனை " 3407/3. எடுத்தேனுக்கு 261/2. இட்டமாக வளர்த்து ... *. எடுத்த எனக்கு.

எடுப்பு 2956/1. ஈடும் ... மிலீசன்*. எடுத்துக் கொள்கை. அங்கீகரித்தல், பற்றுதல். "பகவத் குணங்களினுடைய ... இருந்தபடி கண்டோம்" 2899/1. அதிசயம். "தம்முடைய குணங்களாலே எடுப்பும் சாய்ப்புமாக யுத்தம் பண்ணி" 2665/2. ஓங்கியும் தளர்ந்தும். எடுவிய நெடியவர் 1710/2. வரை குடை ... *. எடுத்த மேன்மையன்.

எண் கடந்த யோகு 778/3. ... கினோடு *. எண்ணி முடியாத கணக்கில்லாத கல்யாண குணயோகம். எண் கண்ணன் 2454/3. ... காணன் *. எட்டுக் கண்ணனை பிரம்மா. எண்கு 1543/1. கான வெண்கும் குரங்கும் *. கரடி. எண்கையான் 1022/3. ... இமயத்துள்ளான் *. அஷ்ட புஜன். எட்டுக் கையன்.

எண்கொண்டு 2217/2. ... என் னெஞ்சே யிரு *. நினைத்துக் கொண்டு. எண்கொள் சிந்தை 3446/3. ... யுள் நைகின்றேன் *. மனோரதம் பண்ணுகிற மனஸ்ஸு. எண்டிக்கு 990/1. ஊழி முதலா ... ம் *. எட்டுத் திக்கு. எண்டிசை 1131/1. அண்டமும் ... யும் *.

எட்டுத் திக்கு, எண்டோ ளீசன் *. 1505/3. எட்டுத் தோள்களை யுடைய தேவர் - சிவன்.

எண்ணத்தானுமோ 2112/4. ...இமை * நினைக்கத்தான் முடியுமோ. எண்ணந் துழாவு மிடத்து 2505/4. ... உளவோ *. மநஸ்ஸு கலங்கு மிடத்து. எண்ணப் பெறுவர் 1066/4. ... பிள்ளையைப் பிள்ளையென்று*. நினைக்கப் பெறவர். எண்ணம் 387/2. ... ஒன்றெண்ணியிருக்கும் *. விசாரம், மநஸ்ஸு, மநோரதம், நினைவு, நெஞ்சு.

எண்ணருஞ் சீர் 2749/1. ... பேராயிரம் *. எண்ண முடியாத கல்யாண குணங்கள். [பிள்ளைகள்

எண்ணரும் பிள்ளைகள் *. 195/2. கணக்கிட அரிதான அநேகம்

எண்ணற் கரியதோ ரேனம் * 336/3. இன்ன விதமென்று நினைக்க முடியாத மஹா வராஹம்.

எண்ணன் 1326/2. ... என்று மின்ப னென்றும் *. மநோரதத் தில் நிற்கிறவன். எண்ணூராத்துயர் 3319/2. ... விளைக்கும் *. எண் ணிறந்த துக்கங்கள். எண்ணில் சோர்விலாத அந்தாதி *. 3074/3. மநோரதத்தில் குறையாத அந்தாதி. எண்ணில்தொல் புகழ் *. 3145/4. எண்ணில் பல் கலன்கள் *. 3257/2. எண்ணிலா வரக்கர் *. 842/2. எண்ணின் மீதியன் 3020/2. ... எம்பெருமான் *. நினைவுக்கு அவ் வருகானவன். எண்ணு 864/4. நண்ணும் வண்ணம் ... *. புத்தி பண்ணி யிரு, நினை. எண்ணுமிடத்ததுவோ *. 2520/4. மநோரதத் துக்கு நிலமோ! எண்ணெய் 13/3. ... ... கண்ணம் *. எண்ணே கொண்ட சிந்தை *. 3815/2. பல பல சிந்தை. அதிக எண்ணிக்கை யுள்ள சிந்தை.

எண்திசை 3895/3. ... யு மீன் கரும்பொடு *. எண் தோளன் *. 1653/2. எண்பகர் பூ 191/2. ... வுங் கொணர்ந்தேன் *. பொறுக்கி எடுத்ததாய், சாஸ்த்ரங்களில் பகரப் பட்டதான பூ. எண்பெரிய சிந்தை நோய் 3377/4. ... தீர்ப்பாரார் *. எண்ண முடியாத பெரிய சிந்தை நோய். எண்பெருக்கு 2919/1. ... அந்நலம் *. அஸங்க்யாதம், கணக்கற்றது. எண் மதியம் 2056/2. ... கடந்து *. நினைக்கிற நினைவு. எண்மர் 2133/1. ... பதினொருவர் *. அஷ்ட வஸுக்கள் எண்மீதி யன்ற புறவண்டம் *. 3543/3. எண்ணிக்கையில்லாத அண்டாந்தரம், வெளி அண்டம். வேறு அண்டம்.

எத்தவங்கள் செய்தார் *. 366/4. எத்தனை அல்லது என்ன தவங் கள் செய்தார். எத்தனை காலம் 3794/1. ... கிடத்தி *.

எத்தனை குளிக்கு நிற்கும் 3034/2. 3100/1. குளி என்று ஸ்நாந மாய் காலாறு குளி பர்யந்தம் புஷ்பாங்கராகாதி பரிமளம் இருக்குமாப் போலே இதுவும் எத்தனை காலம் இருக்குமென்றபடி.

எத்தனை நாளையம் 3363/3. அறிவிழந்து ... *. எத்தனையோர் காலத்தோம். எத்தனை காலத்தோம். எத்தனையும் செய்யப் பெற்ருய். 129/3. உனக்கு வேண்டினதை யெல்லாம் செய்யக் கடவை. எத்தனை யோர் போதுமாய் 2701/2. நெடு நேரமாக. எத்தனையோருகம் *. 3640/2. எத்தனையோ யுகம். இவற்றில் ர் ஏன் என்று ஆராய்க. எத்தனைவர் 3786/2. தொல்லையார்கள் ... *. எத்தனை பேர்.

எத்தாப்பு 248/1. (?) பரியட்டம். (திருவிரு. அப்பு அரும்பதம்).

எத்தி 289/1. என் பெண்களை ... *. ஸ்பர்சித்து, வஞ்சித்து, எத்தன் - ஸமர்த்தன், வஞ்சகன்.

எத்திசையும் 20/2. ... சய மரம் *. எல்லா திக்கிலும். 550/1. ... அமரர் பணிந்தேத்தும் *. [எதுக்காகவும்.

எத்திறத்திலும் 674/1. ... யாரோடும் *. எந்த விஷயத்திலும்,

எத்திறத்தும் 819/3. ... உய்வதோருபாயமில்லை *. எவ்வழியாலும். எத்திறம் 2921/4. ... உரலினோடு *. இது என்ன ப்ரகாரம்! இது என்ன படி! இது என்னே!

எத்தினுல் 866/4. ... இடர்க் கடல் கடத்தி *. எத்தால், எதனுல், எத்தை 3994/2. ... யந்தோ *. எதை.

எதிர்காலம் 1269/2. இறப்பு ... *. எதிர்கொளாள் 3785/4. ... ளாயுய்யல் *. ஆபி முக்யம் பண்ணும். எதிர்கொண்டும் ஏற்கும் ஆள் - அடியார்.

எதிர்ச்செக்க வொண்ணுதபடி 2771/1 (?) "... ஆழங்காலாய்." "எதிர்ச் செறிக்கமாட்டாது" 2072 (?) "கிண்ணகத்தை எதிர்ச் செறிக்க வொண்ணுது" (அர்ச்சி) "பெருக்காற்றை எதிர்ச் சரிக்கப் பார்" 3463/4. எதிர்சூழல்புக்கு 3080/3. ... கெனைத்தோர்*. எதிரான சூழலிலே - இடத்திலே, ஸந்தர்ப்பத்திலே, அவஸரத்திலே வந்து பிறந்து. எதிர்சூழல்புக்குத் திரிகிறவன், 523/அவ. வசிகரணுர்த்தமாக எதிர்க்கச் சுற்றித் திரிகிறவன். அந்தர்யாமி யாயிருக்கிறவன். 3064/ப்ர. அவதரித்தது, "எதிர்த் தட்டாயிருக்கை" (முமு. சரம. 31.) 1939/4 (அரு.)

எதிர்த்த பூங்குருந்தம் *. 788/4, எதிர்ப்பட்ட, எதிர்த்து நின்ற எதிர்த்தலை 596/4. "... பாராதே வந்து" 958/அவ. "ஸ்நேஹமும் அதற்கு ... யான த்வேஷமும் 3781/2.

எதிர்ந்த தாடகை *. 742/1. போரிட்ட தாடகை. எதிர்ந்தது 2546/2. போரேற்று ... *. எதிரிட்டது. எதிர்ந்தது. 3677/1. இறந்தது நீயே, ... ம் நீயே *, எதிர்ந்தார் 1145/2. ... சேனை செருக்களத்து *. எதிரிட்டாள். எதிர்ந்து பொரும் கோவர்த்தனம் *. 265/4. எதிர்ந்து பொராநிற்கிற ...; எதிர்ந்து வந்த மல்லர் *, 343/1.

எதிர் நிகழ் கழிவு *. 2900/3. பூத வர்த்தமாந பவிஷ்யத். எதிர் நின்ற கஞ்சன் *. 174/1. சத்ருவாய் எதிரிட்டு நின்ற கம்ஸன். எதிர் முகவசுரர் 393/2. ... தலை மகளை *. யுத்தத்துக்காக வந்து எதிர்ந்த முகத்தையுடையரான அஸுரர்கள். எதிர்வந்த மல்லை * 69/3. எதிர்ந்து வந்த மல்லனை. எதிர்வழிபெறுகை (வா. மா. 16). எதிர்வன் 2465/2. ... அவனெனக்கு * ஒப்பன்.

எதிர்வும் நிகழ்வும் கழிவும் * 3756/3. பவிஷ்யத்து. எதிரம்பு கோக்கும் அஸத்துக்கள் (வா. மா. 27). எதிராய நிரை மணித் தேர் வாணன்* 2361/1. எதிரிட்ட. எதிராள் 1959/1. [னதாக.

எதிரிதா 2599/1. பார்த்தோர் ... நெஞ்சே * முன்னிட்டு, முன்

எதிரில் பெருமை யிராமன் *. 328/2. சத்ருக்களில்லாத பெருமையை, ஒப்பில்லாத பெருமையை யுடைய ராமன்.

எதிரெதிர் 3989/1. ... இமையவ ரிருப்பிடம் *. எதிரில். எதிரெதிர் தூவிட* 13/3. எதிர்த்துத் தூவிட. எதிரே போந்ததோ 3618/4. இது உனக்குத் தோங்கிற்றே. எதிர்த்ததோ, ஸந்நிக்தமாயிருந்ததோ.

எது 2902/2. அது விது வுது ... *. வினவப்படுவதான நபும்ஸக பதார்த்தம். அஃறிணைப் பொருள். எதுவானும் செய்து 3288/2. ... அங்கோர் *. ஏதேனும், ஏதாவது செய்து, "எதுவேதானும் பற்றின்றி" 3754/2. எல்லா வற்றிலும். முழுச் சொல்லு, எது வேது 2955/3. ... என்பணி *. எதுவேயாக 3723/3. ... க் கருதுங்கொல்* எதுவாக, ஏதாக,

எந்தம்மை 369/4. ... விற்கவும் பெறுவார்களே *. எங்களை.

எந்தாதை தாதை 1563/1. ... யப்பால் *. நான், என் தந்தை, அவருடைய தாதை, பாட்டன். எந்தாய் 995/3. ... சாபம் தீர *. எந்தைக்கு விளி. [மானவர்.

எந்திடர் 2904/1. நின்ற ... ரே *. த்ருட ப்ரமாண ஸித்தர், திட

எந்தை தந்தை தந்தைக்குத் தம்பிரான் *. 3000/1. என் குல நாயகன்.

எந்தை தந்தை தந்தை தந்தை தந்தைக்கு முந்தை *. 3144/1. ஏழு தலைமுறை. எந்தை தந்தை தம்பெருமான் *. 1061/4.

எந்தை தந்தை தம்மான் *. 1072/4, 1336/1. என்குல நாயகன்.

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ஏழ்படிகால்*. 6/1.

எந்தை தந்தை யம்மான் *. 1570/4. குல நாதன்.

எந்தை பிரான் *. 3189/2. எந்தை பெம்மான் *. 1156/2.

எந்தை யெம்பெருமான்*. 1065/4. எந்தை யெம்மடிகள் *. 984/2,

ஐவகை வேள்வி 1846/3. ... பாறங்கம் *. பஞ்ச மஹா யஜ்ஞம். தேவ பித்ரு பூத மநுஷ்ய ப்ரம்ம யஜ்ஞங்கள்.

ஐவர் 3197/2. ... க்கருள் செய்த *. பஞ்ச பாண்டவர்கள்.

ஐவர் தூதன் 1961/1. அன்று பாரதத்து ...*. பாண்டவ தூதனான க்ருஷ்ணன். ஐவர் வன் கையர் 3967/1. ... மங்க *. பெரு மிடுக்க *ரான ஐவர்*. ஐந்து இந்திரியங்கள்.

ஐவாய்ப் பாம்பு 2028/3. ... *பிணை*ணை*. ஐவா யரவணை* 1635/4. ஐவா யரவு * 2672/20. ஐவேள்வி 1221/3. ... யாறங்கம் *. பஞ்ச மஹா யஜ்ஞங்கள்.

ஒ

ஒக்க 181/3. ... ... உரைத்த தமிழ்ப் பத்து *. 1569/1. தாயை நினைந்த கன்றே ... *. போல; 2990/3. ... விழுங்கி * பிரி கதிர் படாதபடி. (கதிர் பிரியாதபடி), ஒரு காலே. ஒன்றும் தப்பாதபடி, ஏகோத் யோகத்திலே. "எப்போதும் ... ஒரப்படுவது". 2920/அவ.

ஒக்கலித்திட்டு 1168/1. ... ஆடல் நன்மா *. ஆவாலங் கொட்டி.

ஒக்கலை 57/2. ... மேலிருந் துன்னை *. மருங்கு, இடுப்பு, விலா. ஒக்கலையான் 2990/4. என் ... *. மருங்கி லிருப்பவன்.

ஒக்கவே விழுங்கி *. 3065/2. ஒரு காலே விழுங்கி. ஒக்கி 3451/ப்ர. " தன்னை ... " அநுபந்தம் பார்.

ஒசழக்காக 904/1. " ...மயிரை விரித்துப் பொகட்டபடி யென்! — என்று அதிலே வித்தனாயிருக்கும்". "தாய்மார் பிள்ளையை ... எடுக்குமாப் போலே ". (?) ஒசழக்கு - செவ்வை, அநாயாஸேந, அலகூியமாக, சொகுசாக. ஒசழக்கும் உண்டு.

ஒசி கை யாளி பிளிறி *. 2352/2. முறிந்த கை. ஒசி செய் நுண்ணிடை * 3920/4. துவண்ட இடை. ஒசித்தது 3489/2. உயர் கொள் சோலைக் குருந்து ... *. முறித்தது. ஒசிந்த நுண்ணிடை *. 3524/1. தளர்ந்த. ஒசிந்த வொண் மலர் * 3524/3. ஒசிய 2243/3. பெருத் தெருத் தங்கோடு ... *. முறியும்படி.

ஒசிவு 2515/3. (நம்). "வல்லாராடின ...போலே". அநுபந்தம் பார். ஒட்டாது 3689/2. ஒன்று மொழிய ... *. ஒழிய விடாமல். ஒட்டாய் காண் *. 492/3. துயி லெழ ... *. ஸம்மதிக்கிறிலை.

ஒட்டி 2971/1. யான் ...என்னுள்*. இசைந்து. 3972/1. "எனக்கா என்னோடு...*." பிரதிஜ்ஞை பண்ணி, பூணித்து. பூணித்தல் பிரதிஜ்ஞை பண்ணுதல்.

ஒட்டி நின்று 2971/3. ஊன் ... *. பற்றி, பொருந்தி நின்று. ஒட்டிய கச்சங்கம் *. 552/2. பண்ணின ஸங்கேதம். ஒட்டி லெடுக்க (ஸம். ஸா. அ. ஸ்ம்ருதி) அநுபந்தம் பார்.

ஒட்டி வந்து 2971/2. தான் ... *. பிரதிஜ்ஞை பண்ணி வந்து. ஒட்டுரைத்து 3122/3. ... இவ் வுலகுன்னை *. ஒட்டாவது கூடுகை.

ஸத்ருச மாயிருக்கை. "ஸத்ருசமாகச் சொல்லி, ஒப்புச் சொல்லி, உவமை செறிவைச் சொல்லி கூடுவன உரைத்து." ஒட்டு விடுவித் தெடுக்கை" 409/2. இடந்ததுக்குப் பொருள். பெயர்த் தெடுக்கை.

ஒடியா இன்பம் 3749/4. ... ப் பெருமையோன் *. ஒடியாத நித்ய மான இன்பம். ஒடியெறிந்து 485/6. "பெண்களை ... துடிக் விட்டு வைத்து". காட்டு வழியே வேடர் மரத்தைத் தள்ளுகையாதல், பாதி மரத்தை அர்த்த ஜீவனாக்கி விடுகை யாதல். கிருஷ்ணன் பெண்களை வசிகரித்து ஸம்ச்லேஷியாமல் துடிக்க விடுவானென்று கருத்து. "தன் கண்ணழகாலே ... தான்". 3772/3 (24). "நிம்பாலே பெண்களை..." (?). "கண்ணழகாலே யாயிற்று இவரை ... தது". 3155/4. கால் கட்டிற்று. அப்பாற் போகவொட்டாதே பண்ணிற்று என்றபடி. "தன் கண்ணழகாலே அவனை ... நமக்காக்கித் தரு மவளிறே நப்பின்னைப் பிராட்டி." 3859/3 (24).

ஒடி விடை 2923/2. ... யற நிலமதுவாம் *. இடையிலே ஒடிவு. முறிவு, ஸம்ஹாரம், இடை யொடிவு – அவாந்தர ஸம்ஹாரம்.

ஒடு 2597/1. வழக் கொடு மாறு கொளன்று *. ஸம்ஸாரிகளின் முன் நிற்கை. ஒடு ஸம்பந்தம்; ஸம்ஸாரிகள் என்று அத்யாஹரித்துக் கொள்வது. வருவித்துக் கொள்வது.

ஒடுக்கிப் புல்கில் 21/3. ... உதரத்தே பாய்ந்திடும் *. நெருக்கி அணைந்தால். ஒடுக்குண்டு போனல் 2073/2. "அகம் ... ". அநுபந்தம் பார். "இத்தலையில் ஒடுக்கு மாட்டால் உண்டான ஐசுவரியம் 2933/1. ... உண்டாகையாலே இரட்டித் திருக்குமிறே". மாடு – தநம். மாட்டை ஒடுக்கி என்றால் முட்டுக் கோல் கொள்கையாய், ஸர்வஸ்வாப ஹாரத்தால். "ஒடுக்கு மாட்டைப் பாரித்துக் கொண்டு" 3371/2. முட்டுக் கோல் கொண்டு, அபஹரித்த தநத்தைக் கொண்டு.

ஒடுங்கல் 2918/2. ... லு மெல்லாம் *. ஸங்கோசம், பிரதிபந்தகம், நெருக்குதல், இடையூறு செய்தல். ஒடுங்கி 1000/3. நமன் தமர் செய்யும் வேதனைக்கு ... *. அஞ்சி.

ஒடு நாழிகை 1426/2. அங்கு ... ஏழுடன் *. ஒடு என்பது குறுக்கிக் கிடக்கிறது. ஒடுகிற நாழிகை – வியர்த்தமே கழிகிற நாழிகை.

ஒண்கண் 3926/3. கெண்டை ... *. அழகிய கண். ஒண் கண்ணாடி 924/1. ... முதலா *. ஒளியுடைய கண்ணாடி. ஒண் கயிறு 1511/1. உர லோடாய்ச்சி ...*. நேரிதான கயிறு. ஒண் கழல் 3263/1. கண்ணன் ...*. அழகிய, பரம போக்கியமான திருவடிகள். ஒண் கழனி 1749/3. கொய் மலர் நெய்தல் ... *. அழகிதான வயல். ஒண் குறவர் 2119/1. வாரும் வரி யரவம் ... *. விலக்ஷணமான குறவர்கள்.

ஒண் கேழ் விலகு கருங்கடல்* 2142/2. அழகிய நிறத்தை யுடைத் தாய், அலையுள்ள கடல். விலகு-அலை. ஒண் சாந்து 72/1. ... தொடு செண்பகமும் *. நிற மழகிதான சந்தனம்.

ஒண் சுடர் 141/3. ... ஆயர் கொழுந்தே *. மிக்க தேஜஸ். ஒண் சுடர்க் கொழு மலர் *. 870/3. தேஜோ மயமாய் கொழுமிய மலர். ஒண்சுட ரடிப்போது * 2582/2. அழகிய சுடரை யுடைய செவ்விப் பூவாகிற திருவடி. ஒண்சுட ராயர் கொழுந்து *. 141/3. மிக்க தேஜஸ் ஸையும் பெற்று ஆயர்க்குக் கொழுந்து மானவன். ஒண்சுட ரேய்ந்த வும்பர் * 986/2. சந்திர ஸூர்யர்களையுடைத்தான மேலுலகம்.

ஒண்டாநிரைப் பொற் பூ * 51/2. ஒள்ளிய தாரை யுடைத்தாய் திரு முடியிலே சாத்துகைக் கிடான பொற் பூ. ஒண்டார் 1951/3. ... வேல் கலியன் *. அழகிய தார் - மாலை.

ஒண்டிறல் தென்னன் * 1293/3. ஒள்ளிய திறலையுடைய பாண் டியன். ஒண்டிறல் பொன் பெயரோன் * 1264/1. ஒரு நாளும் அச்ச மிருக்கும்படி புதிய துண்டறியாதானாய் மிக்க மிடுக்கையுடைத்தா யிருக்கிற ஹிரண்யன்.

ஒண்டொடியாள் *. 3328/3. தொடி என்று முன் கை வளை. வில க்ஷணமான முன் கைச் சரிவளையையுடையவள்.

ஒண்டொளி 1142/1. மண்டபம் ... *. தோளி என்பதைக் குறைத்து, தொளி ப்ரதோளி நாற்சந்தி என்றபடி. ஒளி - ஒழுங்கை, ஊரோடு அணைந்திருக்கை. ஒண்டு ஒளி என்றுக்கி ஒழுங்கைச் சாவடி. ஒண்டு - ஊரைக் கிட்டின, ஒளி - சாவடி.

ஒண்ணாத 2988/2. "என்னிலும் ... படி". கூடாத.

ஒண்ணிறத் தாமரை * 305/3. ஒள்ளிய நிறத்தையுடைய, அன்ற லர்ந்த தாமரை.

ஒண்ணுதல் 2527/1. மாமை *. அழகிய நுதல் - முகம். ஒண் தடம் 3898/2. ... அணி *. அழகிய தடாகம், குளம். ஒண் தமிழ் கள் * 3351/3. அழகிய தமிழ். அர்த்த ப்ரகாசக மாகையாலே நல்ல திராவிடம்.

ஒண்தாரை 2160/2. ... நீரங்கை தோய *. அழகிய உதக தாரை.

ஒண் துறை நீர் வெஃகா * 2059/2. அல்லாத துறைகளைப் போலன்றியே ஆழ்வார் திருமழிசைப் பிரான் இழிந்து தீர்த்த மாடின துறை.

ஒண் மிதி 2056/1. ...யில் புனலுருவி*. மிதி - அடி. ஒண்மிதியில்-ஓரடியிட்ட மாத்திரத்தில். ஒண்ணு 767/3. நினைக் கொணு *. மாட்டாத.

ஒத்த புகழ் வானரக் கோன் *. 325/2. பெருமாளோடு சோக ஹர்ஷங்கள் ஒத்துப் போந்தார் என்னும் படி புகழையுடைய ஸுக்ரீவ மஹாராஜர். " ஒத்த போர் " 3594/1. ஸமாந யுத்தம்.

ஒத்த வொண் பல் பொருள்கள்*. 3640/3. ஒரோ வகையாலே பலவாய் ப்ரதி வ்யக்தி அஸங்க்யாதமான (ஒவ்வொன்றுமே கணக்கிலடங்காத) பதார்த்தங்கள். ஒண்மை – அழகு. [போன்றவை.

ஒத்தன 63/2. இவை ... சொல்லி *. தகுந்தவை, சேர்ந்தவை,

ஒத்தார் 3032/1. ... மிக்காரை யிலேயாய் *. சம மானவர். ஒத்திட்டிருந்தவா *. 24/4. சேர்ந்திருந்தபடி. ஒத் திலக 73/3. சுட்டியும் ... *. தகுதியாக ப்ரகாசிக்க. ஒத்துண்டு 1790/i. காலையும் மாலையும் ... ... *. [பொருந்தி.

ஒத்துப் பொருந்தி 110/2. ... ... க் கொண்டு *. பிணங்காமல்

ஒத்து மஞ்சள் 1643/2. " பிராட்டியும் தானுமான சேர்த்தியிலே யுண்டான ... ளும் செம்பஞ்சிக் குழம்பும் ". ஒத்தப்பட்ட மஞ்சள்.

ஒத்துளது 3696/3. காரிருள் ஊழி ... தால் *. ஒவ்வா நின்றது.

ஒத்தொவ்வாத பல்பிறப்பு * 866/2. ஒன்றுக்கொன்று நெடுவாசி பட்டு அஸங்க்யாதமான ஜந்மம்.

ஒப்ப 508/2. மோப்பதும் செய்வது ... *. போலே. ஒப்பது 2078/2. இது ... எமக்கு இன்பமில்லை*. ஒத்தது. ஒப்பம் 1926/அரு. "இவ் வொப்பனைக்கு அவர் ஒப்பமிட்டா லிறே உள்ளே புகுதலாவது". ஸம்மதி. ஒப்பர் 1761/4. அம்பவளத் திரளேயும் ... *. ஒப்பவரில்லா மாதர்கள் * 1069/3. ஒப்பன் 1643/3. திகழும் பவளத் தொளி ...*. ஒப்பனை 602/1. க்ருஷ்ணனுடைய ... போலே இருந்தநி. அலங்காரம். ஒப்பாய் 195/4. வண்ணமே வேலையது ... *. ஒக்குமவனே. ஒப்பார் 15/3. ஆண் ... *. போலே யிருப்பவர்.

ஒப்பித்துக் கொண்டு நிற்நிறள் 787/1. " முலையை ... ". "ஒப்பித்துப் பார்த்திருந்தாள் " (?) அலங்கரித்துக் கொண்டு.

ஒப்பில்லாத் தீவினையேன் * 3652/3. ஒப்பற்றிருப்பதாய் க்ரூரமான பாபத்தை யுடையேனான நான். ஒப்பிலேன் 423/2. ... னாகிலு நின்னடைந்தேன் *. யோக்யதை யில்லாதவன்.

ஒப்பூண் (?) "அவர்களோடே ... ணாய்". ...ணு உண்ணலாயிற்று. 2481/3. (பெரி.) " ஸ்வயம் பாகத்திலே வயிற்றைப் பெருக்கின படியாலே ... உண்ணமாட்டா. (ஸ்ரீ வ. பூ. 84). " பகவத் கைங்கர்யம் ... உண்கையும் மூப்புக்குச் சோறிடுகையும் " (வா. மா. 221).

ஒப்பூண் கூட இருந்து உண்கை. ஒரீஇ 1190/3. செந் நெற் கூழை வரம்பு ... *. ஒருக்கி, உறுக்கி, சேர்த்து. ஒரு எரி வளிபான வாறே முன்னே வந்து" (?) அநுபந்தம் பார்.

ஒருக்கடுத்து 3727/1. ... உள்ளே உறையும் பிரான் *. ஒருங்க அடுத்து. அதாகிறது ஒக்க நினைத்து, ஒக்க விரும்பி. ஒருக்காலைக் கொருகால் 531/1. எப்போதாவது. ஒருக்கா வினை 2541/3, ... யொடும் *. ஒருங்க விடாத பாபம், ஒருங்கப் பண்ண வொட்டாத பாபம். ஒரு கதி 2989/4. ... யின் சுவைத்திட்டு *. ஒருவழி, ஒருவகை.

ஒரு கன்னி 224/3. ... யை வேற்றுருவம் செய்து *. உபமாந ரஹிதையாய் நவ யௌவநையா யிருப்பா ளொருத்தி.

ஒருகால் முன்னம் 1130/1. ... மா வுருவாய்க் கடலுள்*. முன்பொருகால். ஒரு காலல்லா ஒரு காலாகிலும் ஆகிறது. 3092/2. ஒரு சமயமில்லாத போறல் ஒரு சமயம். ஒருகாலும் பிரிகிலேன் 1656/2. ... என்கின்ருளால்*. க்ஷண காலமும். "ஒருகாலைக் கொருகால் 658/1. "ஒரு கிடையிலே ..." 599/4. ஒரு உபாத்யாயரிடத்திலே. ஒருகிரால் 1985/3. மதியாது சென்று ... *. ஒரு நகத்தால். உகிர் - நகம்.
ஒரு குடியிலே பிறந்த உனக்கு 3363/2. அத்விதீயமான ஒப்பற்ற குடி.

ஒருங்க 3425/4. ... ப் பிடித்துப் போத இசை *. ஒரு படிப்பட்ட விச்சேத மில்லாதபடி. ஒருங்கப் பிடித்து 3585/அவ. ஒருபடிப் படப் பிடித்து. "ஒருங்க விடா நிற்க" 3463/4. ஒருக்க விடுகை. ஒரு தலைப் பட விடுகை. ஒருங்காக 3125/4. ...அளிப்பாய் சிர் *. ஒருபடிப்பட, ஒரு மடைப்பட, ஒரு படியே, ஏக ப்ரகாரமாக. ஒருங்காக 3289/3. ...வேயுல கேழும் விழுங்கி *. ஏக காலத்திலே. ஒரு காலே. ஒருங்கி 380/4. சித்தம் நன்கு ... *. ஒரு படிப் பட. ஒருங்கிருந்த நல் வினையும் தீவினையும் *. 2438/1. அவசியம் அநுபோக்தவ்யமென்கிற புண்ய பாபங்கள். கூடவே இருந்து அநுபவிக்க வேண்டிய ... . ஒருங்கிற்று 2638/2. கானே ... *. சேர்ந்தது.

ஒருங்கு 2437/4. ... உடனின்று தோற்ருன்*. கூடவே யிருந்து வாசி யற. ஒருங்கு வித்த தாழி 2252/1. அடங்கார் ...*. ஆழி முடங்கப் பண்ணிற்று. ஒருங்குற வுண்ட 2[illegible]6 /2. ... பெரு வயிற்ருன் *. ஒரு பிரதேசத்திலே அடங்கும்படி பிரிகதிர் படாதே, ஒரு காலே, நி[illegible]சேஷமாக, ஒரு காலே உறும்படியாக.

ஒருங்கே மறந்து 2519/1. ... கிடந் தலர்ந்து *. ஓரிடத்திலே சேரப் புரிந்து. **ஒருச் சரித்து** 3970/ . " எம்பார் கதவை ... " ஒரு பக்கமாய் சாய்த்து. ஒருக்களித்து என்பது இதன் கொச்சை; ஒருக் கடித்து என்பதும் இதுவே.

ஒருத்தரும் 458/2. ... இப் பிறவியென்னும் நோய்க்கு *. ஒருவரும், யாரும். **ஒருத்தி** 211/3. ... க் கவளே கொடுத்து *. **ஒருத்தினில் நிற்கிலாத** * 3567/1. ஒரு வழி நில்லாத, ஒரர்த்தத்தில் நில்லாத, ஓரிடத்திலே இல்லாத. ஒருத்து - ஒருமைப்பாடு. **ஒருத்து** - ஒருத்தினில் பார். **ஒருதலைக் காமமாய்** விழாதோ 1713/அவ. அரு. **ஒரு தலை சேர்த்து விடுகை** 3190/2. ஒரு கரை சேர்த்து விடுகை. " ஒரு நூலைப் பற்றி நின்றவர்களை அதுதானே ... விடுகை நிச்சித மிறே ". " **ஒரு தலைத்து** முழுக்கப் பண்ணின நிருபாதிக பந்து ". 1569/2. ஒரே தடவையிலேயே. "**ஒருதலை மாற்றமான** சுருதி ஸம்ருதிகள்." பக்ஷபாதிகளான ... (தனி சுலோ. த்வ மப்ரமேய :). **ஒரு தனி நாயகன்** 3222/1. முட்டில் போகத்து ...*. அத்விதீயனான ப்ரதானனான நாயகன். **ஒரு தனி முதல்வன்** 3895/1. நம் சுடரொளி ... *. த்ரிவித காரணமும். தானேயானவன். நிமித்த ஸம்யோக ஸமவாய காரணங்கள் — மூன்றும் ஈசுவரனே.

ஒருதானாகி 2581/5. ... த் தெய்வ நான் முகக் கொழு முளை *. எல்லாம் தானே யாகி.

ஒரு நடையிலே ஒன்பது நடை நடந்து சித்ர கூடத்திலே சென்று (வா. மா. 33). ஒரு நடைக்கு ஒன்பது நடை, ஒரு நடைக்கு நூறு நடை — என்று சொல்லுகிறோம்.

ஒரு நாடாக 690/2. "பரம பதமாகிற ... நீ நோக்குகிற நோக்கை என்னொரு வனையுமே நோக்கி வந்து". ஒரு நாடாக - முழுதையும். ஒரு நாடாக உடையவன். 2899/3. " தான் அருளாத வன்று ஸத்தை யின்றிக்கே யிருப்பாரை ... ". பஹுவசந தாத்பர்யம் ஒரு நாடாக என்று சி. அரு. எல்லாம் என்று பொருள்.

ஒரு நாயகம் 3230/4. மூவுலகுக்கும் தரும் ... ... மே *. 3231/1. ... மா யோட *. ஏகாதிபத்யம்.

ஒரு நாள் வரையிலே கர்ம க்ஷயம் பிறந்தவாறே. 3070/2. ஒரு நாளளவிலே; 3468/4. "ஒருநாளல்லா ஒரு நாளாகிலும்" 3218/3.

• **ஒருநாளாக** 3218/3. ஒரு நான்று பார்.

ஒரு நாளைக் கொரு நாள் திருமேனி பெருத்து (வா. மா. 209). ஒரு நாளுக் கொருநாள். **ஒருநாளை விடுதியிலே** (வா. மா. 416).

“ காட்டிலே ... நீராட எழுந்தருளா நிற்க.” ஒருநாள் அவகாசத்திலே என்று போலும்.

ஒரு நாளொழியாமை 2658/1. ... யா னிரந்தால்*. ஒருநாளும் தப்பாமே, காலமெல்லாம்.

ஒரு நான்று 635/3. சேர்த்தானேனும் ...*. ஒரு நாள். ஒருநான்று தடி பிணக்கே *. 3468/4. ஒரு நாள் வரையிலே தடியை எடுத்துப் பிணங்கும் படியாம். ஒரு நாளாக பின்னைக் குத்தும் பூசலுமாய்த் தலைக் கட்டும். பின்னைக் குத்து - முதுகிலே குத்துவது.

ஒரு நீராக 3330/ப்ர; 3070/2. ஏக ரூபமாக.

ஒருப்பட்டு 2899/4. “ வைலக்ஷண்யம் சொல்ல ...” உத்யோகித்து. “ மன்ருடிக் கூடப் போக ...” (தனி சுலோ . ராமம் தசரதம்) போக்கிலே ஒருப்பட்டார் 3891/ப்ர. உத்யோகித்தார்.

ஒருப்பட 3583/ப்ர. “ போகவேணு மென்று ...”. உத்யோகிக்க.

ஒருப்படுத்த அடிசில் 3444/1. ஆயர் ... *. ஒருப் படுத்திடுமின் 295/4. ... இவளை *. சேர்த்து விடுங்கோள். ஒருப் படுத்தி மீள 3583/ப்ர. “ திரு வணுக்கன் திருவாசலளவும் ... ... ” அனுப்புவித்து, வழிவிட்டு.

ஒருப்படுத்தேன் 245/3. சிறுகாலே யூட்டி ... *. ஒருப் படுத்தல் போக்குதலாய், போக விட்டேன். ஒருப்பாடு 3826/4. “ இவற்றின் ... இருந்தபடியால்.” உத்யோகம்.

ஒருபக்கம் வாங்கி வலிப்ப * 379/1. ஒருக் கடித்து வலிக்க - ஒரு பார்சுவமாக இழுக்க. ஒரு பகல் 3913/3. ... ஆயிர மூழி *. ஒருபடி 3593/4. “ அல்லாத அழகுகள் ... யும் இது ... யுமாயிருக்கை ”. ஒரு தட்டு. ஒரு படி யாபரணம் 503/2. முத்துப் படி பவளப்படி என்ருப் போல சில ஆபரணங்கள். படி களைவது என்று கோயில் பேச்சு.

ஒருபது 1822/1. மணி முடி ... ம் புரள *. இருபது போலே ஒருபது. ஒருபத்து என்று பொருள். ஒரு பயணம் எழ வாங்கி 924/4. ஒரு பயண தூரம் போய். ஒரு பரிசு 3756/3. விட்டைப் பண்ணி ... சே *. ஒரு படி, ஒரு ப்ரகாரம். ஒரு பவனுன ஆலிலை 2990/3. பவதீதி பவ :, உத்பவியா நின்ற ஆலிலை.

ஒரு பாடுழல்வான் 3699/4. உம்மோடு ... *. ஒரு பார்சுவத்தைப் பற்றித் திரிவான். ஒரு பால் 1509/3. பானல் ... கண்காட்ட *. ஒரருகு. ஒரு புகலிட மிலம் 3893/1. அன்றி யாம் ... *. ஒரு புள்ளுவன் 223/2. ... பொய்யே தவழும் *. களவுக்கு அத்விதீயன்.

ஒரு பேரை யிட்டுத் துகைக்கிறுர் 872/2. நலிந்து போந்த யம படரை ...” அநுபந்தம் பார். ஒரு போகி யாக்கி 3253/ப்ர. நடுத் தடையில்லாத வெளியாக்கி, ஏகமாக்கி என்றபடி; ஏக காலத்தில் ப்ரபலமாக்கி என்னுதல். ஏக போகமாக அனுபவிக்கும்படி பண்ணி என்றும் பொருளாகலாம். ஒரு போகி யாக அநுபவித்துக் கொண்டு (?).

ஒரு போழ்து 3224/1. ஒரு நாள் ... தில் *. ஒருமடை செய்து 630/1. “ அஞ்சு லக்ஷம் குடியில் பெண்கள் பக்கல் பண்ணும் வ்யா மோஹத்தை யெல்லாம் ... ஒருத்தி பக்கலிலே பண்ணிஞல் பிழைக்கப் போமோ ”. " ஒருமடை செய்து புஜிக்கை ” 484/8. ஏக முகமாக்கி. "ஸ்நேஹத்தை என்னெருத்தி பக்கலிலும் ஒரு மடை செய்து போந் தார்.” 2935/3.

ஒரு மா தெய்வம் 2584/9. ... மற்றுடையமோ *. ஒரு - க்ஷுத்ர மாய் மா - அல்பமாய், அத்யந்தம் க்ஷுத்ர தேவதை.

ஒரு மா நொடியும் பிரியாள் *. 3964/4. ஒரு க்ஷணத்தில் ஏக தேசமும், ஒரு மாப் பொழுது.

ஒரு மார் வெழுத்தாக்கிக் கொண்டிருப்பார்கள் 3440/ப்ர. எல்லாரையும் அடிமையாக்கிக் கொண்டிருப்பார்க ளென்றபடி. ஒரு மார்வெழுத்தாக்கி என்றது மார்வெல்லாம் ஒரே எழுத்தாக்கி. எல்லா ருடைய மார்விலும் ஒரே எழுத்தாம்படி ஒருவனுக்கே அடிமை என்று எழுதியிருக்கும்படி செய்து. பத்ய மங்குளி விச்சேத: உரோ விந்யஸ்த – மக்ஷரம், தப்தாம க்ரஹணஞ் சைவ தாஸ்ய மேதச் சதுஷ்டயம் : அடி மைப் பட்டவர் இன்னுருக்கு அடிமை என்று தன் மார்விலே எழுதிக் கொள்வது.

ஒரு மாலை 2133/1. ... யாற் பரவி *. புருஷ ஸூக்தாதி ஸந்தர்ப் பம் ஒரு ஸந்தர்ப்பம்.

ஒருமிக்க (?). ஒரு அடியாக, ஒரே தட்டவையாக. [தயம்.

ஒரு மிடறு 3001/2. “ நீ என்றேடு ... ருன பின்பு.” ஏக ஹ்ரு

ஒரு முகம் செய்து 3165/ப்ர. "சாஸ்த்ரங்க ளெல்லாம் ... நிஷேதிக் கிறவையாய் ”. “ ஒரு முதலே ஒரு செய்யை விளாக்குலை கொண்டு ”. 476/4. முதலிலேயே. [யம்.

ஒருமுறை 2672/2. ... யயனை யின்றனை*. ஒரு கால், ஒரு பார்யா

ஒரு மூவராகிய மூர்த்தி * 3176/4. அத்விதீயமான, பிரம்ம விஷ்ணு சிவாத்மக மூர்த்தி த்ரயத்தை யுடையவன்.

ஒருமை மனம் 3174/3. ... த்தினுள் வைத்து*. ஒருபடிப் பட்ட மனம். ஒருமையான் 2038/3. திருமலை ... னே *. ஒரு படிப்பட எல்லாருக்கும் ஏக ரூபமா யிருக்கிறவன்.

ஒரு வடிவத் தோருரு 2054/3. ... என் றுணரலாகாது *. ஒரு வடிவு, ஓ ருரு. அத்து அசை. வடிவு - விக்ரஹம், உரு - நிறம்.

ஒரு வண்ணம் 3456/4. மையல் தீர்வது ... *. ஒரு ப்ரகாரத்தாலே, வகையாலே.

ஒருவர் கூறை எழுவர் உடாதபடி நோக்குகிறேன் 3400/1. ஒருவன் கையில் புடவையை ஒருவன் பறிக்க, அவன் கையிலத்தை வேறொருவன் பறிக்க, இப்படி எழு பேராகப் பறித்து உடுக்கை. இது எளியாரை வலியார் பாதிக்கைக்கு திருஷ்டாந்தம். "... லாம் படி பண்ணி." "... கும் ஸம்ஸாரம்" (?). எளியாரை வலியார் பாதிக்கையின்றிக்கே, ஏழைக் குடும்பத்தில் ஒருவனுக்குள்ள துணியை மற்றவர்களும் உடுத்துகைக்குக் கூட திருஷ்டாந்தமாகலாம்.

ஒருவர்தம் திறத்தோமன்றி வாழ்ந்தோம்*. 1859/3. ஒருவ ரிடையாட்டத்தோ மல்லோ மாகையாலே கெட்டோம், வாழ்ந்தோம் என்று க்ஷேப பரம், நிந்தைச் சொல்.

ஒருவ ரல்லா ஒருவர்க்காகிலும் ருசி பிறக்குமே (?). ஒருவனுக்கில்லாவிடில் வேறொருவனுக்காவது — என்று பொருள்.

ஒருவரை யானிலேன் 3181/4. ... எழுமைக்குமே *. ஒருவரை உத்தேசியமாக உடையே னல்லேன்.

ஒரு வாய் சொல் 2938/3. தகவினுக் கென்று ... ... *. வாய் - வார்த்தை. ஒரு வார்த்தை சொல்லு.

ஒருவாய்ப் போம் (பர. ர. த்வய) "நாராயணத்வமும் ..." விகலமாய்ப் போம், இல்லாமற் போம். வல்லினமும் பார்.

ஒருவாறு 2640/2. ... ஒருவன் புகாவாறு *. ஒரு வழியில்.

ஒரு விசை 3136/அவ. "... நூருண்டு இருந்தோம்." ஒருக் கால். "ஒருவிசை போகா நிற்க" 2487/3. (நம்). ஒரு தடவை. இந்த விசை இல்லை. அடுத்த விசை ஆகட்டும் — என்று அடுத்த வருஷத்தை அடுத்த தடவையாகச் சொல்லுவதுண்டு.

ஒருவிடம் 3054/3. ... மும் எந்தை பெருமாற்கு*. 3054/4. ... ஒன்றின்றி என்னுள் கலந்தான் *. ஒரிடம் என்னுதே ஒருவிடம் என்கிறது ஒருவுதல் நீங்குதலாய் நீங்கின விடம், சேஷித்த இடம் என்றபடி.

. " ஒரு விழுந்தான் கிடக்கை " 3605/3. எங்கேனும் ஓரிடத்தே பிறந்தவள், அப்ரஸித்தையாய்க் கிடப்பவள்.

ஒரு வெளுப்பாயிற்று (?). வெள்ளமாயிற்றென்று சாடு. வெளுத்த தென்று ஸஹஜமான அர்த்தம்.

ஒரோ வொன்றே 3198/ப்ர. (9). ஒவ் வொன்றே.

ஒல் 1016/4. சில்லி சில்லென்று ஒல்லறுத த்வநி, ஓசை. ஒல்கி 276/4. ... ஒடரிக் கண் *. ஒடுங்கி. ஒல்கி 2071/1. தென்னிலங்கை முன் மலங்கச் செந்தி ... *. கொளுத்தி.

ஒல்கி யொல்கி நடந்து * 3523/4. ஒருங்கி, அசைந்து நடந்து. ஒல்குதல் ஒருக்கமாய் அசைதல். ஒல்கும் வல்லி 2483/2. ... ... யிதே னும் *. ஸஞ்சரிக்கிற கொடி, ஒடுங்குகிற கொடி.

ஒல்லை 4/2. வந்து ... க் கூடுமினோ *. சடக்கென, சீக்ரமாக, கடுக, பதறிக் கொண்டு.

ஒலிக்கும் 137/1. கிண்கிணிகள் ... *. த்வனிக்கும். ஒலி கடல் 157/3. ... ஒத நீர் போல *. கோஷிக்கிற கடல். ஒலி கள் 1347/4. கலியன் வாய் ... *. சொற்கள். ஒலி கெழு பாடல் * 1991/4. சொற்கள் நிறைந்த பாடல். ஒலி செய்த தமிழ் மாலை *. 1087/2. ஒலி யுடைத் தாம்படி செய்த தமிழ்த் தொடை. ஒலி சேரும் மாருதம் 1604/2. ஸ்பர்சம் சப்தம் இரண்டையும் உடைத்தாயிருக்கிற காற்று. ஒலி சொலு மடியவர் 1717/4. ... உறு துயரிலமே *. அப்யஸிக்குமவர்கள். ஒலி திரை 1388/3. ... நீர்ப் பௌவம் *. கோஷிக்கிற அலை.

ஒலி நீர் 1600/1. ... உலகங்கள் *. ஒலி பாடி 352/4. பா ... நடம் பயில் *. ஒலி பெறப் பாடி.

ஒலி புக ழாயிரம் 3362/3. ... த் திப் பத்தும் *. புகழை ஒலிக்கிற ஆயிரம். ஒலிக்கிற புகழை யுடைய ஆயிரம், ஒலி மாலைகள் 1951/3. கலியன் ... *. ஒலிமாந் தேர் 989/1. ... ரும் காலாளும் *. மாந்தேர் என்பது வல்லொற்றுய், குந்தம் குன்றம், வன் தாள் வன்றாள் ஆனைப்போல், மால் பெருமை, மாலான தேர், ஒலிக்கிற பெரிய தேர்.

ஒவ்வாது 3122/2. உன் திருமேனி யொளி ... *. ஒப்பாகாது. ஒவ்வார் 744/4. இமையவர் நேர் ... தாமே *.

ஒவ்வோக் குழி 3397/3. "பகவத் விஷயத்தில் ... யிடாதே யிருக்கிறவர்கள்." பிள்ளைகள் எழுதுகிற வரிக் குழி. அரிக்குழி என்றும் சொல்லுவதுண்டு. அரிக் குழியாவது ஹரி : ஓம் — என்று முதன்

முதலில் எழுதக் கற்றுக் கொடுப்பது. ஒவ்வோக் குழியாவது, ஓ ஓ என்று மணலில் குழி குழியாக எழுதி, அதில் பிள்ளைகள் விரலால் எழுதப் பழகுவது.

ஒழி 704/2. என் சேரி வர ... நீ *. தவிர். ஒழி 1418/3. தோழ நீ யெனக் கிங்கு ... *. இரு. ஒழிக்க வொழியாது * 501/5. இங்கு ... *. விட வொண்ணாது. ஒழிக்கும் 853/2. உள்ளுவேன தூன நோய் ... மா *. போக்கும்.

ஒழிச்சின வன்றாகிலும் 1001/2. "அவர்கள் ... அநுதாபம் பிறக் கிறதில்லை." அநுபந்தம் பார். ஒழிச்சுவான் 840/1. பாரம் முன் ...*. தவிர்ப்பிக்கைக்காக. ஒழித்து 653/1. மனம் ... வஞ்சமாற்றி *. கழித்து. ஒழிந்த 3932/2. ... வினையாயின வெல்லாம் *. ஒழிந்தன, போய்த்தின.

ஒழிந்தில 2545/1. மலர்ந்தே ... *.

ஒழிப்பான் 3923/4. பசு நிறை மேய்ப்பு ... *. ஒழிக்கைக்காக.

ஒழியகில்லேன் 1333/1. சொல்லாது ... *. ஒழியவும் 2474/2. ஆப்பங்கு ...*. இழந்தால். ஒழிய வொட்டாது 3689/2. ஒன்றும் ... *. சேஷியாதபடி, மிச்சமாகாதபடி. ஒழியாது 501/3. ஒழிக்க ... *. ஒண்ணாது. ஒழியாமை 1439/1. உலகேழும் ... முன நாள் *. ஒன்றும் பிரிகதிர் படாதபடி. ஒழிவற 2908/2. நில விசும்பு ... *. ஒன் றொழி யாமே, குறைவற, தப்பிப் போகாமே.

ஒழிவிக்கும் 3142/4. ஊனிடை ... மே *. போக்குவிக்கும், போக் கும், கழியும்படி பண்ணும்.

ஒழிவில் காலமெல்லாம் * 3143/1. அநந்த காலம், ஸர்வ காலமும்.

ஒழிவிலன் 2907/4. ... பரந்தே*. ஒழிவின்றியே நிற்குமவன். ஒழிவு தோமோ 1200/2. "அவனுடைய க்ருபைக்கு விஷயமாகாது ...".

ஒழுக்கம் 3712/3. கூறிய விச்சையோடு ...*. அநுஷ்டாநம், ஆசா ரம், (சுத்தி), சரித்ரம். ஒழுக்கு 2478/1. பொல்லா ... ம் *. ப்ரவ் ருத்தி, வ்ருத்தம், கர்மாநுஷ்டாநம்.

ஒழுக்கு விட்டு 398/3. ... நிரந்தரம் ... *, நெடுகச் சென்று.

ஒழுக 1235/3. மது வெள்ளம் ... *. பாய. ஒழுக லாறு 913/1. பழுதிலா ... ற்றால். ஒழுகல் - நெடுமை. ஆறு - வழி. நெடுகப் போரு இற ப்ரவாஹம்.

ஒழுக லோடம்: "ஓட்டை யோடத்தோடு ... த் தோடு வாசியில்லை" ஓட்டை யோடம் பார்.

ஒழுகு : கோயிலொழுகு திருமலை யொழுகு என்ற புஸ்தகங்கள். ஒழுகு - வரலாறு. ஒழுகு நீட்சியாலே கொடி என்னவுமாம் 3628/2. சாஸ்த்ர ஸித்தமான ஆகார தைர்க்யம். இடையில் கோணல் வளைவு இல்லாமல் ஒழுங்காக நீண்டிருப்பதைச் சொல்லுகிறது.

ஒழுகு நுண் பனி 1695/3. ... க் கொடுங்கிப் பேடை *. பாயா நின்றுள்ள நுண்ணிய பனி. ஒழுகு பேரெழில் 714/2. ... இளஞ் சிறு தளிர் *. படிந்தோடும் படியான அழகு வெள்ளம்.

ஒழுகும்படி 3584/2. தன் வழியாய் நாள் ... யாயிற்று *. போம்படி, நடக்கும்படி. ஒழுகு மாறாதே வந்து புகுந்து 1529/1. வரிசை, தொடர்ச்சி மாறாதே.

ஒழுகுவுதியால் 3371/3. " நீ என் கருத்திலே ... " புகுவுதியால்.

ஒழுங்கை : இடை கழி பார். ஒழுங்கை 1142/3. சாவடி.

ஒள் வாள் 657/3. கொற்ற ... *. பிடித்த பிடியிலே அழகியதா யிருக்கிற வாள். ஒள்ளிய மார்பு 419/1. ... உறைக்க வூன்றி *. ஆப ரணங்களாலே அலங்கரித்த அழகிய மார்பு.

ஒள்ளியான் 1840/2. எமக்கு ... உயர்ந்தான் *. வைத்த கண் வாங்க வொண்ணாதபடியான அழகுடையவன்.

ஒள் ளெயிறு 1023/3. ... ற் றெடு *. அழகிய எயிறு - பல். ஒள் ளெரி 1751/1. வெள்ளெயிற்று ... த் தறு கண் * 1932/2. இலங்கை ... மண்டி *. ஜ்வலிக்கிற நெருப்பு.

ஒளிக்கும் 1425/2. கடியதோர் தெய்வம் கொண்டு ... *. மறைக் கும். ... 1490/4. நானப் புதலி லாமை ...*. மறைக்கும். ஒளிக் கொண்ட சோதியம் 3040/2. ... மாய் *. ஒளி மிக்க தேஜஸ்ஸை யுடையோம்.

ஒளி களவு 534/2. " இரவும் இருட்டும் தேடி ... விலே " நேர் களவு; பகற் களவு அல்லாதது, ஒளிந்து செய்யும் களவு. ஒளி கெட 1415/3. பகலவன் ... *. ஒளி மழுங்கும்படி.

ஒளி கொள் விளக்கு 2375/1. உணர் வென்னும் ... *. அழுக் கின்றிக்கே திலுங்கின விளக்கு. ஒளி திகழுஞ் சேவடி *. 2262/3. ஒளி நிறங் கொள் கொங்கை * 2189/1. புகருடைத்தான கொங்கை.

ஒளிப்ப 1699/3. எழிலார் பிலத்துப் புக்கு ... *. மறைய.

ஒளி பயவாமை 2527/1. ஒண்ணுதல் மாமை ... *. ஒளி பயலை யாவதற்கு விவர்ணமாவதற்கு முன்பே.

ஒளிபுத்தூர் * 63/2. ... வித்தகன் *. நிலமிதி தானே ஞான ப்ரேமங்களை விளக்கும் தேஜஸ்ஸையுடைய ஸ்ரீ வில்லி புத்தூர். நில மிதி பூ ஸ்வபாவம், மண் வாசி.

ஒளி மணிப் பூண் 1282/2. முலை யிலங்கும் ...*. ஒளியுடைத்தான மாணிக்கங்களாலே சமைந்த ஹாரம். ஒளி மணி வண்ணன் *. 39/3. சிலாக்யமான மாணிக்கம் போலே யிருக்கிற திருநிறத்தையுடையவன், விலக்ஷணமான அழகையுடையவன்.

ஒளி மதி சேர் திரு முகம் * 652/4. புகரையுடைய சந்திரனை ஒப்புச் சொல்லலான திருமுகம். ஒளி மலர்ச் சேவடி 1179/2. ... யணை வீர் *, புகரை யுடைய திருவடிகள்.

ஒளி மன்னும் 1973/4. அன்னே *. நிறம் பெற்று வாரா நின்றது.

ஒளி மாடங்கள் 1131/2. ... ... சூழ்ந்தழகாய கச்சி *. ரத்நங்களினுடைய ஒளியை யுடைத்தான மாடங்கள். ஒளி மா மலர் 1776/1. குளித்துச்சி தன்னுல் ... *. ஒளியையுடைத்தாய் பெருத்திருக்கிற மலர். ஒளி முகில் 3851/2. ... காள் திரு மூழிக் களத்துறையும் *. மின்னுெளி வீசும் மேகம்.

ஒளி முத்திஞரம் 49/1. ஓதக் கடலில் ... *. ஒளியை யுடைத்தான முத்துக்களாலே சேர்க்கப்பட்ட மாலே. [நல்ல மொட்டு.

ஒளி மொட்டு (வா. மா. 160) " ... எறித்துக் கட்டின மாலே ".

ஒளியம்பு 2552/1. உலாகின்ற கெண்டை ... *. ஒளியுடைத்தான அம்பு. பார்த்த போது வாராதே வாராத போது பார்க்கையாலே வரவு தெரியாதபடி காணுக் கோலாய்த் தைக்கிற அம்பு. ஒளித்தே படுகிற அம்பு. "ஒளியம்பு விடுவாரைப் போலே ... ... அன்றில்கள் த்வநிக்க". 3826/1. மறைந்திருந்து எய்யும் அம்பு. [திருவரங்கம்.

ஒளியரங்கம் 412/4. ஓசலிக்கும் ... மே *, ஒளியை யுடைத்தான

ஒளியவன் 1689/3. ... விசும்பியங்கும் *. ஆதித்தியன். ஒளியன் 3227/1. எங்கு மழகமர் சூழ் ...*. ஒளி யனல் 1408/2. பிறங்கு ...* ஒளியையுடைய அனல்.

ஒளியா வெண்ணெய் 1511/1. ... உண்டான்*. மறைக்க வரிதான வெண்ணெய். நிறந்தாலும் மணத்தாலும் மறைக்க முடியாதபடியிருக்கை. ஒளியான் 3314/4. மணி நீல வளர்...*, ஒளியையுடையவன்.

ஒளி யிழை 317/2. ... யார்கள் சொல் *. அழகிய ஆபரணம்.

ஒளியுடை வெள்ளறை 198/3. ... நின்றாய் *. அதி ப்ரகாசமான திரு வெள்ளறை திவ்ய தேசம்.

ஒளி யுருவம் 2241/1. ... நின்னுருவம். நிரவதிக தேஜோ ரூபம். ஒளியுளார் 908/2. ... தாமேயன்றே *. தேஜஸ்ஸை யுடையவர்.

ஒளியூட்டி யிருக்கை 3556/2. " உள்ளு மண் பற்றாய் புறம்பு ...".

ஒளி வட்டம் 56/1. சுற்றும் ... சூழ்ந்து *. ஒளியை யுடைத்தான மண்டலம்.

ஒளி வளர் மதியம் 1751/3. உயர் கொடி ... *. சந்திர மண்டலம். ஒளி விசும்பு 2061/4. ... ஆள்வர் தாமே *. பரமபதம்.

ஒளி வெண்டரளங்கள்* 1045/2. ஒளியையும் நீர்மையையுமுடைய முத்துக்கள். [மருப்பு – கொம்பு.

ஒளிறு மருப்பு 2352/2. ... ... ஒசிகை யாளி *. ஒளிவிடா நின்ற

ஒற்கம் 2979/1. ... இன்றியே *. 3498/4. ... ... ஒன்று மிலள் *. இளைப்பு, ஒடுக்கம், வருத்தம், லஜ்ஜை, மிடி, ஒருக்கை.

ஒற்றி 444/1. தென்புலக் கோன் பொறி ... *,

ஒற்றுண்டு 7/2. கோயில் பொறியாலே ... ... *. ஒற்றப்பட்டு. 1790/1. காலையும் மாலை ... *.

ஒற்றுமைக் கொண்டது 3636/4. உள்ளம், ஒருமைப் பட்டது. ஒருப் பட்டது, விலை செய்து கொடுத்தது, அகப்பட்டது, ஒற்றுமை விலையும் ஒருமையும்.

ஒற்றைக் குழை 1725/1. ... யும் நாஞ்சிலும் *. ஒரு காதுக் குழை. ஒற்றைக் கை வெண் பகடு *. 2004/2. ஒரு கையையுடைய வெள்ளை யானை. பகடு – ஆண் யானை.

ஒற்றைப் பிறை 2996/3. ... யணிந்தானும் *. ஒரு கலா மாத்ர மான சந்திரன். ஒற்றை யெழுத்து 374/3. மூலமாகிய ... தை *. ப்ரணவம். ஒற்றை விடையன் 426/1. ... னும் நான் முகனும் *. ருஷப வாஹநத்தை அஸாதாரணமாக உடையவன்.

ஒறுத்து 3032/3. " சரீரத்தை ... ப் பெற்ற தாய் ". " வாநப்ரஸ் தாச்ரமிகளோபாதி சரீரத்தை ... ". 500/1; " சரீரத்தை ... த் தபஸ் பண்ணி" 1422/ . ஒறுவாய்ப் போகாமே 2936/ப்ர. " தம்முடைய நாராயணத்வம் ... நோக்கிக் கொள்ளச் சொல்லும்." விகலமாய்ப் போகாமே, விளுய்ப் போகாமே. ஒருவாய் என்ற இடையின மும் உண்டு.

ஒன்பதின் கால் 3056/அவ. ஒன்பது தரம். 908/ப்ர.

ஒன்பது வாசல் தானுடைக் குரம்பை *. 1006/1. [ஒக்க.
ஒன்றும் மனம் 2927/3. ... ... த்து வைத்து *. ஒருபடிப் பட்ட,
ஒன்றல்லா வொரு ஜந்மத்திலாகிலும் 3218/3.

ஒன்றலா வுருக்கள் 756/1. ... தோறும் *. நாநா வான, அநேக மான உருக்கள். ஒன்றுலொரு குறையின்றிக்கே 1/அவ. [அசுரர்.

ஒன்று(ரு)வசுரர் 2861/1. ... துளங்கச் செல நீட்டி *. எதிரிட்ட

ஒன்றி 3604/1. ... நின்ற சடகோபன் *. ஏகீபவித்து, கூடி. ... மேகத்திலே புக்கு ... 1710/1. ஒன்றி நில்லாது 2040/1. உள் ளமோ ... *. ஓரிடத்தே பொருந்தி நில்லாது. ஒன்றி நின்ற திரு 2442/4. சென்று ... *. பொருந்தி யிருந்த ஸம்பத்து. ஒன்றி நின்று வாழ்தல் 817/2. ... இன்மை கண்டும் *. ஒருப்பட ஜீவிக்குமது. ஒன் றிய திங்கள் 3267/1. ... ளைக் காட்டி *. எல்லாக் கலைகளாலும் ஒன்றப் பட்ட சந்திரன். [ஒருப்பட்டு.

ஒன்றி யொன்றி 3218/3. ... யுலகம் படைத்தான் *. மிகவும்
ஒன்றில்லவன் 1269/1. பிறப் பொடு மூப்பு ...* ஒன்றில்லாதவன்.
ஒன்றினர் 803/3. மூன்று தண்டர் ... *. ஒருமன முடையவர்கள்.
ஒன்றினோம் 3834/1. நம் வான நாடனோடு ... *. இடைந்தோம். ஒரு மிடறுனோம், ஏக ஹ்ருதயராய் விட்டோம்.

ஒன்றுக் கொன்று 2410/3. ... ஒசனே யான் விழ *. ஒன்றுந் தேவு 3330/1. முலகு முயிரும் *. ஒன்று படும்படியான தேவ ஜாதி *. ஒன்று பத்தாக்கி (ஸ்ரீ வ. பூ. 383) ஒன்றைப் பத்தாகப் பெருக்கி. பத்தும் பத்தாக்கி, ... பத்தாக — என்பதற்கு எதிரிடை.

ஒன்று மறிவு 296/1. ... வொன்றில்லாத *. பொருந்தின அறிவு. ஒன்றுமின் 3329/4· திருவடி சேர்ந்து ... *. அந்வயிக்க, சேரப் பாருங் கோள். ஒன்றுமோ வாற்றுன் 2619/2. ... என் நெஞ்சகலான்*. எல் லாம் செய்தும் ஒன்றும் செய்யாதானுயிருக்கும். ஒன்றும் ஒ ஆற்றுன்.

ஒன்றுவர் 43/4. வைகுந்தத்து ... தாமே *. பிரிவின்றிக்கே இருக் கப் பெறுவர்.

ஒன்னலர் 1427/1. ... தங்களை வெல்லும் ஆடல் மா வலவன்*. எதிரிகள். ஒன்னுதார் 2731/2. ஆரானும் ... *. உகவாதார்.

ஒ

ஒ ஓ 2583/1. ... உலகினதியல்வே*. செவிப் படும்படி கூப்பிடுகிருர்.

ஒக்கம் 3434/3. "... த்தை தயுடைத்தான மரம்." உயரம்.

ஒக்காதார் 3167/4. (24). "அவன் தன்னைத் தங்களுக்காக ஒக்கிறுல் அவனுக்காகத் தங்களை ... அவஸ்துக்க ளென்கை".

ஒக்கி வைத்த 3525/1. "தன்னை எனக்காக ... கிருஷ்ணனுக்கு" ஆக்கி வைத்த. 3649/ப்ர. "நீர் தாம் உம்மை நமக்காக ... த்திராகச் சொன்னீரே" ஆக்கி வைக்க. 3660/1. "அவன் தன்னை இவர் பக்கலிலே ... த படி சொல்லுகிறது". ஆக்கினபடி. 1566/2. "தன்னை எனக்காக ...". ஆக்கி.

ஒகரி 2481/1. (நம்). "ஸஜாதியர்க்கும் ... யிடாதே க்ரஹித்தது." பாகம். ஒகோரை என்று அத்யாபகர்கள் தங்களுக்கு வரவேண்டிய பாகத்தைச் சொல்லுவர்.

ஓங்கசுரர் 2518/2. ... பொன்றும் வகை *. நம்முடைய ஸர்வேசுவரன் என்கிற அறிவு இல்லாமையாலே ஓங்கு - வளர்ந்திருந்துள்ள அஸுர வர்க்கம். ஓங்க வோங்க 1159/4. ... புகழோங்கு*. வளர வளர.

ஓங்காண் 1776/1. (தனி சுலோ. தருணென) ஓம் கொடுத்து, அங்கிகரித்து, ஓ என்று சொல்லுவது. இது விளிச் சொல்லாகும்.

ஓங்கி யுலகளந்த உத்தமன் * 476/1. திரிவிக்கிரமன். ஓங்கி விளைகழனி 337/2. ... ப்புதுவை *. உயர வளர்ந்து விளைகிற வயல்.

ஓங்கு செந்தாமரை * 3500/1. செந்நெல் ... ...*. ஓங்கு செறி பொழில் *. 1428/3 ஒக்கத்தையும், செறிவு நெருக்கம் அடர்த்தியையுமுடைய பொழில். ஓங்கு தண் பைம் பொழில் *. 1775/3. ஆகாசாவகாசம் அடையும்படியாய் சிரமஹரமாய் பரந்திருந்துள்ள பொழில். பை - பரம்பு. ஓங்கு பிண்டி 1376/3. ... யின் செம்மலர் *. ஆகாசாவகாசம் வெளியடையும் படி வளர்ந்த அசோகம்.

ஓங்கு பெருஞ் செந்நெல் *. 476/4. விடிவோறே நட்டு ஞாயிறுபோது வந்து பார்த்தால் கை கவித்துப் பார்க்க வேண்டும்படியிருக்கை. ஒரு முதலே ஒரு செய்யை விளாக்குலை கொண்டு, அங்ஙனொரு வரம்பில்லாமையாலே ஆகாசாவகாச முள்ளளவும் வளர்ந்திருக்கை. ஞாயிறு போது - ஸூர்யன் உச்சிப்படும் போது.

ஓங்கு பைந்தாள் கன்னல் கரும்பு * 1223/2. உயர்த்தி பசுமை களை யுடைத்தாய் கண் குறுகின கரும்பு. ஓங்கு மரம் 3434/3. ... ... சேண் சினை *. ஒக்கத்தை யுடைத்தான மரம்.

ஓங்கு முந்நீர் 882/1. ஒரு வில்லால் ... *. கடல். கீழ் மண்ணீர் கொண்டு மேல் மண்ணீரெறிந்து கொந்தளித்தபடியைச் சொல்லுகிறது. முந்நீர் பார். கீழ் மண்ணீர் கொண்டு மேல் மண்ணீர் எறிவதாவது அடியிலுள்ள மண்ணையும் நீரையும் கிளப்பி மேலே உள்ள மண்ணீ ரோடு உயர எறிவது. ஓங்கு முந்நீர் 2536/2. ... வளப் பெருநாடன்*.

ஓங்குவித்து 1430/1. ஒருவனை யுந்திப் பூ மேல் ... *. உண்டாக்கி. ஓங்கோதம் 1888/4. ... வண்ணனே *. 3105/4. ... வண்ணா வுரை*. ஓதம் – நீர், ஓங்கின கிளர்ந்த கடல்.

ஓச்ச 26/3. பழந் தாம்பால் ... *. ஓங்க. ஓச்சல் 1937/4. எறி மழுவு ... *. ஓங்குதல் வீசுதல்.

ஓச்சி 479/4. கள்ளச் சகடம் கலக் கழியக் கால் ... *. ஓங்கி. 1434/1. மத்தாய்ச்சி ... *. ஓங்கி.

ஓசழக்காகத் தூக்கி யெடுத்து 1383/2 " பரிவெல்லாம் தோற்ற ... ". அன்பாக, சுற்றே மெதுவாகத் தூக்கி.

ஓசழக்காகச் சொல்லுகிறாள் 2064/1. " ஒரு சிலா மாத்ரத்தை எடுத்தாற் போலே ... ".

ஓசனையான் 2410/3. ஒன்றுக் கொன்று ... வீழ *. யோஜனை நீளமுடையவன் (கும்பகர்ணன்).

ஓசை கேட்டான் 414/2. உடைய வீட்டு ... *. ஸ்தோத்ரம் பண் ணுகிற பிரஸித்தியைக் கேட்டான். ஓசை - பிரஸித்தி.

ஓசை படுத்த தயிரரவம் * 480/5. ... கேட்டிலையோ *. ஓசைப் படுத்தின தயிரரவம்.

ஓசைப் பாணி 137/1. ஓட வோடக் கிண்கிணிகள் ஒலிக்கும் ...*. பாணி – சப்தம், ஓசைப் பாணி – த்வனிக்கிற சப்தம்.

ஓசையிலெரி 2040/1. ... நின்றுண்ணும்*. ஓசையுடைத்தான எரி– நெருப்பு. "ஓசையு மொளியு முடையவன்" 3315/4. வார்த்தை சொல்ல வல்லனென்றும் தேஜஸ்வி என்றும் கண்டு கொள்வது.

ஓட்டந்து 1470/2. ... உன்னடைந்தேன் *. ஓடி வந்து. 1880/3, 1883/3. ... பாய்ந்திடுகின்ற *. ஓட்டம் கண்ட 1293/3. வடவரசு ... *. தோற்கடித்த. ஓட்டரா 97/4. என்னிடைக்கு ... *. ஓட்டத்தைத் தாராய், ஓடி வந்து, பதறி வந்து. ஓட்டருந் தண் சிலம்பாறு *. 357/4. ஓடிவரும், விரைந்து வரும்.

ஒட்டிக் கொண்டிட்டு 849/2. உருப்பனை ... ... *. தோற்பித்துக் கொண்டு. ஒட்டினான் 2442/3. உலகை யேழாணை ... *. நடத்தினான். ஒட்டுக் கொடுத்த 2570/1. முன் ... *. ஏலக் கோலி ஓடிப் போன.

ஒட்டுவித்து 2248/3. உறு நோய் வினை யிரண்டும் ... *. போக்கி.

ஒட்டை 2/ . " அவர்கள் ... சேர்த்திக்கு," 3660/1. ஒடு ; மூன்றனுருபு. ஒட்டை மாடம் 877/2. ... புரளும் போது *. ஓடும் பூட்டும் கொண்டு ஸமாதாநம் பண்ணி நிற்க வேண்டும் படியா யிருக்கை. ஒடு - தட்டோடு. பூட்டுக்குப் பொருள் காண்க. சேர்க்கை என்னலாம்.

ஒட்டை யோடம் 3333/4. ... ... " த் தோடு ஒழுக லோடமான இதர தேவதை." 3333/1. ஒட்டை யோடம் - பெரிய ஓட்டையுள்ளது. ஒழுக லோடம் - சிறு துவாரமாயுள்ளது. 3187/ப்ர. ஒரு சேதநனுக்கு ஒரு சேதநன் உத்தேசிய மாகையாவது ஒட்டை ... ".

ஓடம் 2912/4. "இக்கரையும் அக்கரையும் ஒன்றாய் நின்று அவ்வருகு கடத்தும்". 3088/4. "ஏக தேசத்தைப் பற்றி நிற்கை யன்றிக்கே அக்கரையு மிக்கரையுமாய் நிற்குமாய்த்து ஓடம்". " ஓடமேற்றிக் கூலி கொள்ளும் தசை 3670/4. ஓடத்திலேற்றிப் போய் நட்டாற்றிலே கூலி கொள்ளும் போது கொடா திருக்க வொண்ணாத தசை.

ஓடரிக் கண் 276/4. ... ளோடை நின்றனரே *. பிறட்சியையும் ரேகைகளையுமுடைய கண். ஓடுதல் - பிறட்சி. செவ்வரி கருவரியோடு கூடின கண். அரி யோடு கண், அரி - ரேகை. கோடுகள் ஓடியுள்ள கண். ஓட வுலகுட னாண்டவர் 3231/1. ஒரு நாயகமாய் ... *. நெடுங் காலம் உல காண்டவர்.

ஓட வைக்கிறார் 1048/ப்ர. (அரு.) " அப் புருஷார்த்தத்தை ... " நிர்ணயிக்கிறார்; நிஷ்கர்ஷிக்கிறார். ஓடவைக்குமாப் போல (?). "பொன் ... ". ஓட வைத்தார் 2899/2 வது ஸ்ரீ. " இப் புருஷார்த்தத்தை ... " நிஷ்கர்ஷித்தார். " ஓடவைத் துரைத்த நன்றான பொன்" 3123/2. உருக்கி வார்த்து மெருகிட்ட பொன்.

ஓட வொழுகிச் செல்லுகிற காலத்திலே 584/4. வார்தல் போதல் ஒழுகல் இவை நெடுமையாகும் — என்னக் கடவதிறே. ஓட வொழுகி - மிகவும் ஒழுகி. [ஓட ஓட.

ஓட வோட 137/1. ... க் கிண் கிணிகள் *. செருக்காலே பதறி

ஓடாத தோள் வலியன் * 491/1. பிற்காலியாத. ஓடாத படையாளன் * 421/2. வளையாத. ஓடுதல் - கெடுதல். அன்றியே நாட்டில் நடையாடாத. யுத்தத்தில் பிற்காலியாத, லோகத்தில் வழங்காத.

ஓடாத வாளரி * 1559/1. நாட்டில் நடையாடாத விலக்ஷணமான நரஸிம்ஹம், ஹிரண்யனுடைய முருட்டுடலைக் கண்டு பிற்காலியாத நரஸிம்ஹம். ஆளரி - நர ஸிம்ஹம்.

ஓடா வடலரி * 2015/2. ... யை உம்பரார் கோமானை *. பிற்காலி யாத யுத்த ஸாமர்த்ய முள்ள அரி - சிங்கம், அதுவான விஷ்ணு. ஓடா வரி 1521/1. ... யா யிரணியனை *.

ஓடிட 822/3. வெப்பு மோடியங்கி ... *. முதுகிட்டுப் போக.

ஓடித் திரியும் யோகிகள் 3756/4. ... உளர் *. வ்யர்த்தமே தட் டித் திரிவார், ஸ்வ மதி கல்ப்பித நிர்மூலா த்வைத வாதிகள்.

ஓடினே னோடி 948/3. ... உய்வதோர் பொருளால் *. ஓடினேன் என்று முற்று வினை. ஓடி என்று வருந்தினேனுக்குச் சேர்வது.

ஓடுகால் 1157/3. " ... லை யுடைய நீர் நிலங்கள் ".

ஓடுஞ் சகடம் 1916/4. ... த் தைச் சாடி *. ஊருகிற சகடம்.

ஓடும் புள்ளேறி * 2976/1. புள்ளேறி ஓடும். ஓடும் புள் என்று தனியாக வந்தால் பறக்கும் பறவை.

ஓடும் பூட்டும்: ஓட்டை மாடம் பார். ஓடுவிக்கும் 2975/4. உடைந்து நோய்களை ... ... *. போக்குவிக்கும். ஓடெடுப்பான்: சிவன் 1935/1. அரு. " தோளும் தோலுமாயிருக்கிற ஓடெடுப்பானுக்கும் உடம்பு கொடுத்திருக்கும் குணவான் ". மல்கிய தோளும் மானுரி யதளும் - தோளும் தோலும்.

ஓடை *437/1*. ... துடவையுங் கிணறும் *. குளம். ஓடை மா மத யானை *. *538/3*. முக பட முடைய மத யானை ; முகப்பட்டமுமாம், முக படம் - முகத்தை மறைக்கும் சோடு.

ஓண விழவு *2422/2*. ... ஒளி அதிர*. திருவோணத் திருநாள்.

ஓத்தின் சுருக்கு *2220/4*. மாதவன் பேர் சொல்லுவதே ... ... *. ஓத்தின் பொருள் முடிவு *2220/1*. ... மித்தனையே *. வேதார்த்தம். ஓத்து வல்லார்கள் * *509/1*. வேதம் வல்லார்கள்.

ஓதக் கடல் *49/1*. ... வில் ஒளி முத்து *. திரைக் கிளர்த்தியை யுடைய கடல்.

ஓத நீர் வண்ணன் *623/2*. ...என்பானொருவன் *. ஓதம் கிளர்ந்த கடல் போலே சிரமஹரமான வடிவை யுடையவன்.

ஓத நெடுந் தடம் *3435/2*. ... த்துள் *. கடல் போலே பெருத் திருந்துள்ள பொய்கை. ஓதம் - கடல்.

ஓதம் போல் கிளர் வேதம் 2985/3. ... நீரனை *. ஓத மா கடல் 520/3. ... வண்ணா *. அலையெறிகிற பெருங் கடல். ஓதம் - திரை. மா - பெருமை. ஓதமும் நானும் உறங்காதிருந்தேனே *. 1786/1. ஓதம் - கடல். ஓத மேறினபடி 873/1. "ஆசிரித முக சந்த்ர தர்சநத் தாலே வந்த அழகு ...". அநுபந்தம் பார்.

ஓதல் செய் நான் மறை * 1456/2. அத்யயநம் செய்யும் நாலு வேதங்கள். அத்யயநமாவது சந்தை சொல்லுவது கேட்டுச் சொல்லி உரு ஏற்றி, சொல்லப் பழகுவது.

ஓத வண்ணன் 930/2. ஓர் வெங்கணை யுய்த்தவன் ...*. கடல் வண்ணன். ஓத வல்ல பிராக்கள் 3791/4. ... நம்மையா ளுடையார் கள் *. அப்யஸிக்க வல்ல உபகாரகர். ஓத வல்லாா 2192/4. ... நின் னடியையார் ... *. அறிய வல்லார். 2964/4. ... பிறவாரே *. கற்க வல்லார். ஓதாள் 1122/1. உன் பேரனறி மற்று ... *. ஓதுகை - சொல்லுகை, அது தானும் வார்த்தை கற்கை; அதுவும் செய்யாள்.

ஓதி 2672/33. ஐம்பாலோதி *. மயிர் முடி. ஓதிநல்லள் 3463/3. "இவள் தான் ... யிருக்குமே" ஓதி - குழலும் அத்யயநமும். கற்று நல்லவளாயிருக்கும். நல்ல மயிரையுடையவள். ஓதிப் பணிவ துறும் *. 2257/4. ஏத்திப் பணிவது யுக்தம். ஓதிய பட்டன் 1573/3. மறை நான்கு முன் ... *. அப்யஸித்த பிராம்மணன். ஓதிய வாக்கு 2452/3. அன்று ... அதனை *. அருளிச் செய்த வாக்கு. சொன்ன வார்த்தை.

ஓதி யுணர்ந்தவர் 3169/1. ... முன்னு என் சலிப்பர் மனிசரே *. பர பரக் கற்று அறிவுடையார். கற்றுக் கேட்டு ஸர்வஜ்ஞரா யிருக் கிறவர்கள். "ஓதியுணர்ந்தவன்" 3463/4. ஓதி - மயிர். அதன் வைலக்ஷண்யம் அறிந்தவன். "ஓதி யுணராமலிறே நங்குழலைக் கொண்டாடுகிறது."

ஓது 2359/4. ... கதி மாயனையே *. சொல்லு. ஓதுகின்ற கள்ள நூல் 1816/1. ... தன்னையும் *. கதறிக் கொடு திரிகிற. ஓதும் பிறப்பு 3189/4. ... பிடைதோறு*. பிறந்தான் செத்தான் என்கிற வ்யபதேச மாத்ரமான, என்னு மளவான ஜந்மம். அன்றிக்கே சாஸ்த்ரங்களிலே நிஷித்ததயா (இழிவாக) ஓதிப் போருகிற ஜந்மம். ஓது மாலெய்தி னள் * 3247/4. சொல்லும்படி பிச்சேறினள்.

ஓது வாய்மை 1424/1. ... யு முவனியப் பிறப்பும் *. புஸ்தகம் பார்த்துப் படித்தல் செவியேறுக வருதலன்றிக்கே, ஆசார்யோச் சார ணாநந்தரமாக அநூச்சாரணம் பண்ணிப் போருகை.

ஓதுவார் 3126/1. ... ஓத்தெல்லாம் *. அத்யேதாக்கள். 828/4 எட்டெழுத்தும் ... கள் *. வாயாலே உச்சரிக்குமவர்கள்.

ஓதுவித்த தக்கணை 402/2. ... யார் ஊரு உருவே *. ஓதுவித்ததற்கு குரு தக்ஷிணை. ஓபாதி பல இடங்களிலும் காணலாம். "ஸ்வரூபம் அவனதீநமான ...". போலோ என்று பொருள்.

ஓம்பியிருந்து 2239/2. ... எம்மை ஓதுவித்து *. ஓம்புகை - வளர்க்கை. ஓம்புவார் 360/1. நாடோறும் விருந்து ... *. பேணுமவர்கள், ஆதரிப்பவர்கள்.

ஓமத்துச்சி 1415/1. ஊழியாய் ... ... யாய் *. அஹம் ஹி ஸர்வ யஜ்ஞாநாம் போக்தா, போக்தாரம் யஜ்ஞ தபஸாம் — என்கிறபடியே ஸர்வ கர்ம ஸமாராத்யன். ஓமம் - ஹோமம். அதன் உச்சி சிகரம். உச்சியாயிருப்பவன், பிரதாந தேவதையாயிருப்பவன். ஓமம் 1702/2. அந்தணர் தம் ... மாகி *. ஹவிஸ்ஸு. [சொல் ...".

ஓய்கிறபடி 3575/3. "வெண்கல த்வநி போலே சொல்லுக்குச்

ஓய்ந்த மா 1010/3. ... வு முடைந்த குன்றும் *. ஓய்ந்திருக்கும் பிராணி. மிருகம், பக்ஷி. ஓயும் 3150/4. ஒன்றுமே தொழ நம் வினை ... *. நீங்கும், கழலும், போம். ஓயும் பொழுது 3376/2. ... இன்றியூழியா நீண்டதால் *. ஓயுங் காலம். ஓயுகை - முடிகை.

ஓர்: ... பல இடத்திலும் காண்க. ஒரு, புத்தி பண்ணு. அசைச் சொல்லுமாம். ஓர்க்கும் 3202/4. திண் கொள்ள ... *. புத்தி பண்ணுநின்றது, குறிக் கொள்ளா நின்றது. ஓர்த்த மனத்தர் 2360/1. ... ராயைக் தடக்கி *. அநுஸந்தித்த மனத்தை யுடையவர். ஓர்த்த விப்பத்து 2920/4. ... தே *. ஆராய்ந்து சொன்னது. ஓர்த்து 2359/4. ஓது கதி மாயனையே ... *. அநுஸந்தித்து. ஓர்தல் 2986/4. ... இவையே *. ஓரப்படுவது, அநுஸந்தேயம்.

ஓர் துற்றுற்று 3095/2. ... எல்லா வுலகும் *. ஒருபிடிக்கும் போதா.

ஓர்ந்து 2240/4. என்னையு மங்கு ... *. ஆராய்ந்து பார்த்து.

ஓர்ப்பன 2147/3. ஓதுவதும் ... வும் *. மநநம் பண்ணுவது. ஆநந்தத்துக்கு விஷயமாவது. ஓர்ப்பால் 3286/2. ... இவ் வொண்ணுதல் *. ஆராய்ந்து பார்த்தால், நிருபிக்கையால். ஓர்ப்பிலர் 2558/1. மேலனை ... ராய் *. ஆராயாதவர், விசாரியாதவர். ஓர்ப்பு 3363/ப்ர. நாயக லக்ஷணம், நிருபண ஸாமர்த்தியம், அறிவு நிறைவு, கடைப்பிடி.

ஓர் மானிடம் 3211/4. ... பாட லென்னுவதே *. ஒரு க்ஷுத்ரன், ஓர் பற்று சில்லாத மநுஷ்ய ஜாதி. [பெறுவர்கள்.

ஓர்வார் 3802/4. அடியிணை யுள்ளத்து ... ரே *. அநுஸந்திக்கப்

ஓரடிப் பாடர் 3467/3. " ... அல்லீரே நீர்". ஸங்குசிதர். ஓரடிப் பாடு 3469/அவ. " உத்யாகமாகையாலே வழி ... டா யிருக்குமிறே". ஓரடி யிடாத நான்(?). " உன் பக்கல் பெற்றலன்றி ... ". அநுபந்தம் பார். ஓரடி யுண்டு 2940/அவ. " இதுக்கு ... " ஓர் அவஷ்டம்பம், ஆதாரம்.

ஓரம் 685/2. "ஆசிரித விஷயத்தில் ... எல்லை காண வொண்ணு தவன்". பக்ஷ பாதம். 545/2. "என் ஆர்த்தியைக் கண்டு ... பண்ணச் சொல்லுகிறேனல்லேன்". 1021/1. " அவர்கள் விஷயத்தில் பண் ணின ... ". ஒருவரிடத்தில் மட்டுமுண்டான ப்ரீதி. ஓர வஞ்சனை என்பதில் வஞ்சனையில்லாத ப்ரீதி. 3075/4. "ஸ்ரீ விபீஷணுழ்வான் பக்கல் ... ராவணனளவும் சென்றதிறே".

ஓரளவும் குறையாமே 3309/3. ஓரல்ப்பமும் குறையாமே,

ஓரரசு 2557/4. ... சே அருளாய் *. தனி முடி சூடியிருக்கிறவன், அத்விதிய நாயகன்.

ஓரா 899/3. நாய்களோம் சிறுமை ... *. பார்க்கக் கண்ணில்லாத வர்களாய். ஓராதவன் போல் கிடந்தான் *. 2706/1. அறியாதவன். ஓராதார் 2435/3. நெடுமாலென்று ... *. அறியாதவர்கள். ஓராதான் 316/2. ... பொன் முடி *.

ஓரார் 2443/1. திறவிதென்று ... *. அறியார். 3324/2. அறப் பொருளை யறிந்து ... *. நீங்கார், ஆராயார், ஓர்தல் ஒருவுதலாய், நீங்குதலாய், நீங்கார் - நிவ்ருத்த ராகார்.

ஓராழி வெய்யோன் * 2286/3. ஒற்றைச் சக்கர முள்ள ரதத்தில் ஸஞ்சரிக்கிற ஸூர்யன். ஓராழி சூழ்ந்த வுலகு * 2141/4. கடல் சூழ்ந்த உலகம். ஓராழி நெஞ்சே யுகந்து * 2188/4. ஆழி நெஞ்சே - அள வுடைய நெஞ்சே, உகந்து ஓர் - ஆசிரயி, அல்லது ஆராய்ச்சி செய்ய.

ஓராளும் ஒரு நோக்கும் நேராம்படி இதொரு கூர்மையே. 3918/3. ஒரு நோக்குக்கு ஒரு ஆள் தப்பாதபடியான கண்களின் கூர்மை. 2544/1, 3859/2. " ... கும் நேராய்". ஓராளுக்கு ஒரு அம்பு போலே ஒரு நோக்காலே அகப்படுத்திக் கொள்ளுகை — என்றபடி.

ஓரிடத்தை யல்லை 763/2. ... யால் *. ஒரு ஸ்தலத்தை உடைய னென்று நிர்ணயிக்க வொண்ணுதவன். 798/3. ... எல்லை யில்லை *. ஓரிடத்தில் வர்த்திருக்கிறு யல்லை,

ஓரிட வகை 319/3. இருந்தது ... யில் *. ஓரிடம், ஒரு ஸ்தலம்.

ஓரிர வேழுழி 3381/1. ... யாய் மெய் வந்து *. ஒரு ராத்ரி அநேகம் யுகம். ஓரிருவர் 2594/2. ... அல்லால் *. அசுவிநீ குமாரர்கள். ஓரீர் 2002/2. நெடுங்காலங் கிடந்தது ... *. அறிகிறீர். ஓரீற்றுப் பிடி ஈற்றுப் பிடி பார். ஒரு குட்டி மட்டுமே ஈன்ற பெண் ணூனை.

ஓரும் பொருள் 2383/2. ... முடிவு மித்தனையே*. ஆராயு மர்த்தம். ஓருரு 1452/2. ஓரெழுத்து ... *. முக்யார்த்தம்.

ஓருருவு மொழி வில்லை* 3712/2. இடைப் புக்கு ...*. ஒரு பதார்த்தமும் ஸ்வதந்த்ரமா யிருப்பதில்லை.

ஓரெயிற்று ஏனம் * 865/3 அத்விதீயமான (ஒப்பற்ற) எயிற்றை யுடைய வராஹம். (எயிறு - பல்). வராஹ நாயனர் பூமியைத் தம் முடைய ஒற்றைப் பல்லால் இடந்தெடுத்தார்.

ஓரெழுத் தோருரு வானவன் * 1452/4. வாசகத்துக் கெல்லாம் பிரதாநம் அகாரம், அது வாயிருக்கிறவன். அதுக்கு முக்கியார்த்தமா யிருப்பவன்.

ஓரைவர் 2635/1. மனமாறும் ... *. ஐந்து இந்திரியங்கள். 3410/1. ... க்கா யன்று *. பாண்டவர்கள்.

ஓரொன்று 1767/3. ஏழு மிரண்டும் ... ம் வல்லார். ஒன்று. ஒரோ ஞென்று என்று வாய்ப்பாடு சொல்லுவது போல ஒரு ஒன்று என்பது ஓரொன்று ஆயிற்று. ஓரொருத்தர் 3363/ப்ர. ஓரொன்றே (?).

ஓரோர் தடா 26/1. நறு நெய் ... *. ஒவ்வொரு.

ஓலக்கம் 925/4. நாள் ... அருள *. ஓலக்கம் 3146/2. " ... ... கொடுக்க நிற்கிறவன்." ஸபை. ஓலக்க வார்த்தை யாக நினையாதே 3807/அவ. அஹ்ருதய மல்ல, ஸஹ்ருதயமென்று கருத்து.

ஓலை 159/1. வால் ... கட்டி *. ஓலை சயனத்தர் 17/2. தண்டினர் பறி ... *. ஓலைப் பாயைப் படுக்கையாக உடையவர்.

ஓலைப் புறத்திற் செல்லாத தேசத்திலே எடுத்து விடும் ராஜாக்களைப் போலே ராம கிருஷ்ணாதி ரூபேண வந்து அவதரித்து 1872/அவ. ஓலைப் புறம் - ஓலையில் எழுதின ராஜாஜ்ஞை.

ஓவாத் துயர் பிறவி 3092/1. ... உட்பட *. ஸம்ஸார சக்ரம், நிரந்தர துக்காவஹமான ஜந்மம், உச்சி வீடு விடாதே துயரை விளைக்கக் கடவதான ஜந்மம். ஓவாத் தொழில் 2662/3. கணை நாணில் ... ... *. மாறாதே இடைவிடாமல் செய்கை. ஓவாத பாவங்கள் 1585/1. ... *.

சேரா ... *. ஒரு க்ஷண காலமும் இடைவிடாதே நெருங்கப் பண்ணின பாபங்கள். ஓவாத வூண் 2662/4. ... ஞைக வுண் *. விச்சேதியாத போகம், இடைவிடாத போகம். ஓவா துரைக்கு முரை 2176/2. ... யுண்டே*. நடு இளைப்பாறுதே ஒரு மூச்சிலே சொல்லும் சொல். ஓவாப் புகழ் 90/3. ... பல தேவன்*. முடிவு காண வொண்ணாத புகழ். ஓவாமல் 940/1. (அழ). "ராக்ஷஸ வர்க்கம் ... லிருந்து". விச்சேதி யாமல், ஒழியாமல்.

ஓவி நின்ற நிலை 3165/1. "முதலையின் வியாபாரமேயாய், ஆனை யின் வியாபாரம் ...". வியாபாரம் - செயல். ஓவிற்றிலள் 3297/ப்ர. "கூப்பிடுகிற கூப்பீட்டில் நின்றும் ...". ஓய்ந்தாளில்லை. ஓவிற்று 3575/3. (24). "மயங்கும் வல்நிடாய் — என்கிற இது தானும் ...". ஓவுதல் 3139/2. ... லின்றி உன் கழல் *. விச்சேதம் இடை.

ஓளி : 1531/1. ... துன்றேளித் துகில் படலம் *. ஒழுங்கு வரிசை.

க

கருத்தம் 662/1. திமிள். எருத்தமுக்குப் பொருள். [கும் பேர்.

கங்கணம் 109/2. கையினில் ... மிட்டு*. தோள் வளை; கை வளைக்

கங்கிருள் 3380/1. ... ளின் நுண்துளி *. ராத்திரியிருள். மருங்குலை மருங்கு என்றாற் போல் கங்குலைக் கங்கு என்கிறது. கங்கு - எல்லை நிலமாய் செறிந்த இருள், தடித்த இருள். கங்கு - இரவு, எல்லை; கங்குல் - இரவு.

கங்கும் கரையும் அறப் பெருகுகிற க்ருஷ்ணநுபவ ப்ரீதி. 481/5. சங்கு - அணை. கரை - இரு கரை.

கங்குல் குறும்பர் 2570/1. முன்னோட்டுக் கொடுத்த ... *. கங்குல் களாகிற குறும்பர். கங்குல் வயல் 1440/3. ... சூழ் நம்பன் *. கரு வடைந்த வயலா யிருக்கையாலே இருண் டிருந்துள்ள வயல்.

கங்கை 978/4. ... யின் கரைமேல் வதரி யாச்சிராமம்*. கங்கைக் கண்டமென்னும் கடி நகர் *. 392/4. கங்கை நீர் பயந்த பாத பங்கயம்*. 775/1. விஷ்ணு பாதம். கங்கையான் 2155/4. ... நீள் கழலான்*. கங்கையை தரித்துக் கொண்டிருக்கு மவன். கங்கையென்னும் பெயர்ப் பொன்*. 2178/4. கங்கையென்று பெயருடைய விலக்ஷணையான ஸ்த்ரீ.

கச்சங்கம் 552/2. ... இருந் தொட்டிய *. ஸமயம், பிரதிஜ்ஞை, வியவஸ்தை. கச்சி 1102/3. ... க் கிடந்தானூர் *. திரு வெஃகா. கச்சி நகர் 1541/1. கல்லார் மதிள் சூழ் ...*. கச்சி மேய களிறு 2066/1. கல்லுயர்ந்த நெடு மதிள் சூழ் ...*. திருப் பாடகத் துளாயனார், நித்ய ஸ்ப்ருஹணீயதையாலும் நிவாரகரில்லாத ஸ்வாதந்த்ரியத்தாலும் ஒரு மத ஹஸ்தி படிந்தாற் போலே யாயிற்று எழுந்தருளியிருப்பது.

கச்சி யூரகம் 2059/1. நிறைந்த ... *. காஞ்சீபுரம் திருவூரகம். கச்சி யூரான் 2060/1. மதிட் ... *.

கச்சு 51/1. ... சொடு பொற்சுரிகை *. கச்சு 244/1. கோலப் பணைக் ... *. பரியட்டத்துக்கு மேலே முசிவற விரித்து நெருங்கச் சாத்தினது; அழுங்கச் சாத்தின கச்சு. வேஷ்டிக்கு மேலே இடுப்பில் இறுகக் கட்டின துண்டு. கச்சு 620/2. செங்கச்சுக் கொண்டு*. கச்சு 84/2. ... சொடு பட்டை கிழித்து*. முலைக் கச்சு, வார், ரவிக்கை,

கசிகை 3920/2. ... யும் வேட்கையும் *. ஸ்நேஹம், ஈடுபாடு.

கசிந்த நெஞ்சினள் 3524/2. ... ளாய் *. நெஞ்சில் ஈரப்பாடே துணையாக வுடையவள். கசிந் திழிந்த கண்ணீர் *. 664/3.

கஞ்சன் 197/1. ... கருக் கொண்டு *. கம்ஸன். 717/3. ... நாள் கவர் கரு முகில் *. கம்ஸனுடைய ஆயுஸ்ஸை அபஹரித்து அத்தாலே வந்த புகரான வடிவை யுடையவன். ... னைக் காய்ந்த காளை 1274/3.

கஞ்சி மருவிப் பிரிந்தவர்* 1629/2. கஞ்சியை புஜித்து அவைதிகா நுஷ்டாநத்தை யுடையரா்ய் அகன்று திரிகிறவர்கள்.

கஞ்சு 629/1. ... சைக் காய்ந்த கருவில்லி *. 1104/3. ... சைக் கடந்தவன் *. 2315/3. முன் ... சைக் கடந்தான்*. கம்ஸன்.

கட் கண்ணால் காணாத வவ்வுரு * 2612/3 பீலிக் கண் என்ற வோபாதி கண்ணென்று பேரான கண். பீலி போலேயான புறக்கண்: மிமிசையாலே கண்ணென்று பேராயிருக்கிற கண். " ... ணாலும் உட் கண்ணாலு மநுபவிக்கிறபடி". 3387/4. கட்கண் - புறக் கண். கட்கரிய கண்ணன் *. 3637/2. கண்ணால் காண அரிய கண்ணன். ... பிரமன் 3632/1. மநுஷ்யருடைய கண்ணுக்கு அரியனை பிரம்மா கட்கிலி/லீ 3574/3. ... உன்னைக் காணுமாறு *. கண்ணுக்கு இலி. புறக் கண் ணுக்குக் காண அரியன்.

கட்ட 318/3. அரசுகளை ...*. நிரஸித்த. 1723/2. அரசுகளை ...*. கட்டக் குடியன் - கஷ்டப்படுகிற குடும்பி. 880/1, 2434/3.

கட்டடங்கச் சொல்லி 2899/முஸ்ரீ. 2072/(பட்). " சத்ருக்களைக் ... க் கொன்று " பூர்ணமாக. கட்டணம் 627/அவ. " இவளை ஒரு ... த்திலே கிடக்கலாம்படி பண்ணிக் கொடு போகவும் வேணுமே ". கோயில் கட்டணம் புடவைக் கட்டணம் பார். இவரைக் ... த்திலே கொடு போக (வா. மா. 209). அநுபந்தம் பார்.

கட்டமே காதல் 3575/2. ... என்று மூர்ச்சிக்கும் *. காதல் கட் டமா யிருந்தது. கட்டழித்த தனிக் காளை 352/2. காவலைக் ... ... *. ... காகுத்தன் *. 2434/1. அரணழித்த. கட்டவிழ் தாமரை 1224/1. அலர்ந்த தாமரை.

கட்டளை (ஸ்ரீ வ. பூ. 391). ரீதி, க்ரமம். " பத்தியுழவன் பழம் புனத்தை ஸ்ருஷ்டித்த ... ", " லோகங்களை ... ப் பட உண்டாக்கி னான் ". (?) மரியாதைப் படும்படி.

கட்டி 521/4. ... யுங் கைத்தாலின்னமை யறிதியே *. கற்கண்டு, கருப்புக் கட்டி. 1208/1. (அரு). " பதங்களுக்குப் பொருள் ... ".

கட்டிக் கொண்டு: பேணிக் கொண்டு 3316/4. “ உடம்பை ... ... ”. கண்டது வில் பார். “ ... பூசிக் கடுதிற்றுவார் ” (?) மருந்து.

கட்டி 3222/2. ... யைத் தேனை யமுதை *. கருப்புக் கட்டி, ரஸ கநம். கட்டிப் பொன் (?) “ ... னுக்கும் பணிப் பொன்னுக்கு முள்ள வாசி.” சுத்தம் செய்யாத பொன். பணிப் பொன் சுத்தமாக்கி ஒரு ஆபரணமாகச் செய்தது, உடனே உபயோகிக்கத் தக்கது.

கட்டில் 248/3. ... லின் மேல் வைத்து *. கோட்டுக்கால் ... *. 492/3. கட்டிற்றிலையே 147/2. என்னைக் காணவே ... *. கட்டாதிருந் தாயோ. கட்டினவன் 532/2. “விஷம் பாதகமாவது அம்ருதம் தாரக மாவது — என்னும் மரியாதைகள் அது ... பக்கல் கார்யம் செய்ய மாட்டாதே.

கட்டு (?) மர்யாதை, செறிவு. கட்டுண்ட பெற்றிமை 2888/2. பெருமை. கட்டுண்ணப் பண்ணிய * 937/1. கட்டும்படி பண்ணின. கட்டுப் படுத்திரேல் 2691/2. பாரோர் சொலப்படும் ... *. கட்டுரை 433/4. நற் சொல்லு . காக்கை வாயிலும் ... கொள்வர்*.

கட்டுரை 2054/4. ... ... யே யாரொருவர் காண்கிற்பாரே *. வெறும் பேச்சு. கட்டுரைக்கில் 3122/1. ... தாமரை நின் கண் *. மெய் சொல்லில், நிர்ணயித்துச் சொல்லில். கட்டுரை என்று முழுச் சொல்லாய் (கட்டுக்குப் பொருளில்லாமல்) சொல்லில் — என்ற படி.

கட்டுரைகள் 488/3. வல்லை உன் ... *. கட்டு வார்த்தைகள்.

கட்டுரையா 2695/2. சொல்லி, சொன்ன பிறகு, கட்டுரைத் தாள் ...*. கட்டுரையே 3121/4. ... திருமாலே. சொல்ல வேணும். முழுச் சொல்லு. உரை என்றபடி. கட்டுக்கு அர்த்த மில்லை.

கட்டுரையே யாரொருவர் காண்கிற் பாரே *. 2054/1. நான் கண்டு பேசினாற் போலே எவர் தாம் கண்டு பேச வல்லார்; கட்டு ரையே - கட்டுரை மாத்திரமே, காணவல்லாரில்லை யென்னுதல்.

கட்டுவிச்சி - குறி சொல்லுகிறவள். 2062/4, 2692/2, 3288/1.

கட்டெழில் சோலை 3516/4. ... வேங்கட வாணனை *. கடி கட் டாய், பரிமளமுள்ள சோலை. செறிவினுடைய அழகை யுடைத்தான சோலை. கட்டு - செறிவு, நெருக்கம்.

கட்டெழில் தென் குருகூர்* 3516/2. அரணழகுள்ளதாய் தர்சநீய மான திருநகரி, காவலுடைய திருநகரி. கட்டெழில் வானவர் 3516/4. ... போக முண்பாரே. ஸ்வச்சந்தாயத்தமான வகுப்பழகை யுடைய

நித்ய ஸூரிகள். கட்டெழிலாயிரம் * 3516/3. தொடை யழகை யுடைய, பெருமையை யுடைய ஆயிரம் பாட்டு.

கட்டெறும்பு 153/1. ... பிடித்தால் *. முறியக் கடிக்கும் எறும்பு. முறியக் கடிக்கையாவது – துண்டிக்கை.

கட்டேறி 2692/2. கட்டுவிச்சி ... *. தைவாவிஷ்டையாகி. அதாவது கோட்டாவி கொள்ளாதே மூரி நிமிராதே கட்டி வைத்தாற்போலே அஞ்சயாதிருந்து. [சோலே.

கட்டேறு நீள் சோலே * 1524/1. காவல், அரண் மிக்க பெரிய

கடக்கப் பாய்ந்து 872/1. கலி தன்னே ... ... *. வாஸநையோடே போக்கி. அநாயாஸேந நிரஸித்து, கடக்க வர்த்தி 2899/ மு. ஸ்ரீ. தூரத்தில் இரு. கடக் களிறு 2491/1. " காடு பாய்ந்து திரிகிற ... " மத யானே. கடக்கிட்டு 2576/அவ. அநுபந்தம் பார்.

கடகாகப் பற்றி 1/அவ. "ஈசுவரனே ...". பரிசையாக ரக்ஷகமாக. " மார்பில் நூலே கடகாக விட்டு ரக்ஷித்து" (தனி சுலோ. தருணெள). மார்பில் பூணூலே காரணமாக பிராம்மணன் என்று ர்க்ஷித்து. "கட கிட்டு நோக்குவோம்" 3444/2. பரிசை யிட்டு.

கடங் கலந்த வன் கரி * 789/1. மதம் கலந்த யானே. கடங்கள் 3148/1. வேங் ... மெய்மேல் *. ருணங்கள், கடன்கள். கடஞ்சூழ் கரி 989/1. ... யும் பரிமாவும் *. மத ஜலம் சூழ்ந்திருக்கும் யானே.

கடத்த 744/2. பத்தியுடைக் குகன் ... *. செலுத்த. கடத்தல் – ஆக்ரமித்தல். 2287/2. அண்டம் ... அழகன்றே *. கடத்து – காட்டிடத்து. 1475/1. முளிந் தீந்த வெங் ... *. கடம் – காடு.

கடத்தும் படை 2162/4. தொல் நரகைப் பற்றிக் ... *. போக்கும் ஸாதநம், கருவி. கடத்தும் தன்மையான் 2415/4. தான் ... *. போக்கும் தன்மையை யுடையவன்.

கட தடக் களிறு * 1825/3. மத முதிதமாய் பெரிய வடிவையுடைத்தான ஆனே. கடம் – மதம். தடம் – பெரிது.

கடந்த 20/1. பத்து நாளும் ... இரண்டா நாள் *. கழிந்த. 778/3. எண் ... யோகி *. அதிக்ரமித்த. 2161/2. செற்றூர்படி ... செங் கண் மால் *. அளந்த. கடந்தது 2120/2. கஞ்சனே ... ... *. அழித்தது முடித்தது. 3752/4. நன்றுப் ஞானம் ... தே *. எட்டாதது, அப்பாலது.

கடந்த நம்பி 1538/4. எறிஞர் அரணழிய ... ... *. அழியச் செய்த நம்பி; அழியச் செய்தவனும் அத்தால் வந்த வீரஸ்ரீயால் பூர்ணனவன். நம்பி – நிறைந்தவன். கடந்தவன் 1104/2. முன் நண்ணாத கஞ்சைக் ... *. கொன்றவன்.

கடப்ப 2098/1. அடியும் படி ... *. அளப்ப. கடம் 1087/2. ... மா களி யானை *. மதம் 2433/4. ... உண்டார் கல்லாதவர் *. பாபம்.

கடம்பு 120/1. நீர் புக்குக் ... பேறி *. கடம்ப மரம்.

கடமா யினகள் கழித்து * 2515/1. குண த்ரயத்தையும் பாபங்களையும் போக்கி.

கடமை 910/2. குடிமையில் ... ப் பட்ட *. கீழ்ப்பட்ட 3148/4. என்னலாம் ... *. ப்ராப்தம், வ்யாபாரம். 3359/1. செய்த பயிருக்குக் ... யிருக்கும்". ருணமும் வரியும் கொடுக்கும்.

கடல் கிடந்த கனி 2066/1. ... யே யென்னும் *. பிரதி கூலர்க்கு துஷ் ப்ராபமான க்ஷீராப்தியிலே பக்வ பலம் போலே கண் வளருகிற நிரதிசய போக்ய பூதன். கனியானது கண்டபோதே நுகரலாயிருக்கையும் புஜிப்பாரைப் பெருத போது தான் அழிய மாறும்படியுமிறே யிருப்பது. அப்படியே தன்னை அநுபவிப்பார் தேட்டமாய் அவர்களைப் பெருத போது தான் அழியும்படியா யிருக்கை.

கடல் பெரும் படை 1757/1. ... யொடும் *. கடலிற் காட்டில் பெரிய படை வெள்ளம். கடல் மண் 2537/1. ... எல்லாம் *. கடல் சூழ்ந்த பூமி. கடல் மல்லைக் கிடந்த கரும்பு *. 1551/3. கடல் வட்டம் * 3165/4. தண் ... *. கடலுக் குட்பட்ட பூமி.

கட லமுதம் 2054/2. ... கொண்ட காலம் *. கடலைக் கடைந்து வாங்கிய அம்ருதம். கட லரக்கர் 1343/1. ... தம் சேனை *. ஓதம் கிளர்ந்த கடல் போலே மிகைத்து வந்து தோற்றின ராக்ஷஸர். கட லரையன் 2004/3. வெற்றிப் போர் ... *. கடலுக்கு அபிமாநியான வருணன். கடலாழி 2236/4. ... நீ யருளி *. கடல்.

கடவது 1663/4. இவர்க் கிவள் ...*. "கடவ நீயே போக்காவிட்டால் அதுக்கு வேறுசிலர் கடவாருண்டோ". 1548/4. கடவனுகிக் காலந்தோறும் *. 3305/2. யோக்யன், நியதன்.

கடவாதே 3793/2. உன் பொன்னடிக் ... *.

கடவார் 2307/4. தாம் ... தண் டுழாயார்*. அதிக்ரமியார். "கடவார்க்குக் கடவாரைச் சேர்க்க முறையுண்டு." 554/2. கடவான் 869/அவ. "ப்ராப்ய ஸித்திக்கு ஈசுவரனே ...".

கடவி 70/3. தனி யொரு தேர் ... *. நடத்தி. கடவிய 3185/4. ... பெருமாள் *. கடவுள் 3161/2. நான் முகக் ... *. தைவம்.

கடற் கிடந்த கரு மணி * 1398/1. கடலில் பாழ் திரும்படி ஒரு நீல ரத்னம் போலே சாய்ந்திருப்பவன்.

கடற் படா வமுது * 3035/2. கடலில் உண்டாகாமல் அயத்ந ஸித்த போக்யம். கடற் பயன் * 845/3. வளங் ... *. ரத்நாதிகள்.

கடன் 434/2. பொறுப்பது பெரியோர் ... அன்றே *. உசிதம். கோடைக் கடன் பூண்டிருந்து *. 3238/1. ஸ்வபாவம். கடனாடு 2476/3. மண்ணாடும் ... ம்*. ஸ்வர்க்கம். கொடுத்தகடனுக்குப் போலே அவசியம் அநு போக்தவ்யமான நாடு.

கடாக் களிறு: கவளக் கடாக் களிறு பார். கடாகின்றவாறு 3583/2. புள்ளைக் ... *. நடத்துகிற விதம்.

கடாம் 3290/3. கவளக் கடாக் களிறு *. கடாம் - மதம் அல்லது கதுப்பு. கடாய் 3492/1. உலகேழுங் கழியக் ... *. நடத்தி. கடாய 2526/4. உண்டுமிழ்ந்தும் ... *. நடத்துகை, நிர்வஹிக்கை, ரக்ஷிக்கை. கடாய கடத்தலாய் அளக்கை.

கடாய(யி)ன கொண்டொல்கும் * 2483/2. தக்க, அநுருபமான ஸாதநங்களைக் கொண்டு வர்த்திக்கும்.

கூமாறு 3320/4. ... றே விறை கண்டாய்*. அழைக்கும்படி. கூய் 2496/3. இறை ... யருளார்*. கூவி. கூய்ப் பணி கொள்ளே* 3321/4. கூவி, ஏவி, பணி கொள்ள வேணும். கூவுதல் - ஏவுதல்.

கூயே கொள்ளடியேனை * 3324/4. கூவிக் கொள்.

கூர்க்கப் பார்த்து 2697/1. " ... க் கொண்டு நின்றவர்களை ". க்ரூரமாகப் பார்த்து. கூர்கொள் நல்ல வேல் 1327/3. ... கலியன் *. கூரான நல்ல வேல்.

கூர்த்த வாயலகு* 3010/1. வாயலகுக்குக் கூர்மையாவது க்ரூர மான த்வநி. கூர் தண் வாடை 3875/1. இக் ... *. மிக்கிருந்துள்ள குளிர்ந்த தண் வாடை. கூர்மை - மிகுதி.

கூர்ந்தது 918/1. ... குணதிசை மாருதம் *. விஞ்சிற்று, மிகுந்தது, கூர்ந்து 965/1. இரவு ... இருள் பெருகியே *. விஞ்சி. கூர் மழை 698/3. ... போய்ப் பனிக் கூதல் *. மிக்க மழை, அடை மழை.

கூர 734/2. வெம்பசி நோய் ... *. மிக. கூரணிந்த வேல் 321/3 ... ... வலவன் குகனோடும் *. மிக்க கூர்மையை யுடைத்தான வேல். அணிந்த – பிராபித்த, அடைவித்த. வேலானபோதே கூர்மை ஸித்தமா யிருக்க, விசேஷித்ததுக்குக் கருத்து மிக்க கூர்மை என்றது.

கூரம்பன் 2389/4. ... அல்லால் குறை *. அம்பின் கூர்மையை யுடையவன். கூரான அம்பையுடையவன்.

கூரா 3330/ப்ர. "சேம்புக்குக் ... ச் சிற்றறிவாளுண்டோ." கூர்மை போராத. கூரிய மெய்ஞ் ஞானம் 2128/3. ஸூக்ஷ்மமாய் பரமார்த்தமா யிருக்கிற பக்தி ரூபாபந்நமான ஞானம்.

கூரியர் 3315/4. " அல்லாத ஆழ்வார்கள் ... ரே யாகிலும் " ஸூக்ஷ்ம புத்திகள், தீக்ஷ்ணர். கூரிய விச்சை 3712/3. ... ... யோ டொழுக்கம்*. ஸம்யஜ் ஜ்ஞாநம், ஸூக்ஷ்மாவகாஹியான வித்யை,

கூரிருள் 1967/4. ... ஆயிற்றே *. காடாந்தகாரம், மிக்கிருள். கூருகிர் 65/1. ... ரால் குடைவாய் *. முழுக் கூரான நகம்.

கூரும் 1141/2. அன்பு ... அடியவர் *. மிக்க. கூரை 2024/3. பாம்போடொரு ... யிலே. கூவிக் கொடுப்பார் 3825/4. என்னுயிர் ... *. அபஹரித்துக் கொடுப்பார் (24). கூவில் 551/4. வரக் ... *. கூவுதியாகில். கூவிளை 2017/1. கணவலரும் ... யும் *. பில்வம்.

கூவுகிலீர் 3825/3. வரக் ... *. அழைக்கிறிலிகோள்.

கூவுவன் 3139/4. எங்கெய்தக் ... னே *. கூப்பிடுகிறேன்.

கூழ் 3/2. ... ழாட்பட்டு *. சோறு. கூழ்கள் 694/1. வான்மறந்த காலத்தும் பைங் ... *. பயிர்கள். கூழ்ப்பு 3687/2. எல்லையில்லா தன ... செய்யும் *. ஸம்சயம். கூழாட்கள் (வா. மா). 319. ஒட்டோமென் கைக்கே யோக்யர்.

கூழாட்பட்டு 3/2. ... நின்றீர் *. சோற்றுக்காக ஆரேனுக்கும் தன்னை யெழுதிக் கொடுத்து அகப்பட்டு.

கூழேன்மின் 3184/4. அவனிவனென்று *. ஸம்சயப் படாதே கொள்ளுங்கள். கூழை 1104/1. பஞ்சிச் சிறு ... உருவாகி *. மயிர், கூந்தல். 3463/3. "இவள் ... யாகையாலே மயிரைக் கொண்டாடுமே." கூழை - மயிரில் வைலக்ஷண்ய மறிந்தவனும் சபலனும்.

கூழைப் பார்வை 1800/4. ... க் கார் வயல் மேய்ும் *. க்ருத்ரிமமான பார்வை. கூழைமை 238/2. கனி வாய் கொடுத்துக் ... செய்யாமே*. க்ருத்ரிம வ்யாபாரங்கள். கூழைவால் 3816/1. நாய் ... குழைக்கின்றது *. கூழையான குட்டையான வால். கூழைப் பாம்பு போலே. கூளம் 2693/1. "தேவதாந்தரங்களாகிற ... த் தையும் பதரையும் அறுத்து." குப்பை. 2478/1. "மஹாபாரத மெல்லாம் ... மும் பலாப் பிசினும் போலே ப்ரக்ருதி புருஷ விவேகம் பண்ண மாட்டிற்றில்லை. கூற்றம் 466/3. ... மும் கொடுமை செய்யும் *. ம்ருத்யு.

கூற்ற மன்னர் 1874/1. ... காண வாரீர் *. ம்ருத்யு போன்றவர்கள். கூற்றியல் கஞ்சன் * 3625/3. ம்ருத்யு போன்ற கம்ஸன்.

கூற்றுத்தாய் 810/3. ... சொல்ல *. கூற்றம் ம்ருத்யு போன்ற தாய், கைகேயி. கூற்றே ருருவில் குறள் * 1361/4. கூறுகைக்கு - தேஹி என்று கேட்கைக்கு, ஏர் - தகுதியான, உரு - பிரம்மசாரி வேஷத்தையுடைய, குறள் - வாமனன்.

கூறன் 823/3. மாது தங்கு ... *. கூறு - பாகம். பாகத்தையுடையவன். கூறுளும் தனியுடம்பன் 3308/2. திருமகளும் ... *. கூறிவிட்டு ஆளும்படி. தனி - அத்விதியமான உடம்பு படைத்தவன்.

கூறிய அறுசுவை 2672/22. ... ப் பயனுமாயினை *. சாஸ்த்ரங்களிலே சொல்லப்படுகிற ஷட் ரஸம்.

கூறு செய்த வூரிலே கையும் கைத்தளையுமாய்த் திரிவார் 995/2. 1528/3. பங்காண்ட. கூறு செய்வார்கள் 3359/1. ராஜாக்கள் ஊர் தோறும் ... ளை வைக்குமாப் போலே." தாங்யாதிகளை விபஜிக்கும் (பங்கு போடும்) அதிகாரிகள். மணியக்காரர் என்றபடி.

கூறு செய்வானும் அம்பலத்திலே யிருந்தால் ஈசுவரனும் நம் பக்கல் வரத் தட்டென் ?. 3610/1. மணியம் பண்ணுமவன்.

கூறு தேற வேறிதே * 772/4. இதே - இத்தை, வேறு தேற - விசேஷமாய் அறியும்படி, கூறு - சொல்லு.

கூறுமின் வேறு கொண்டே * 3459/4. ஓலக்கத்திலே விண்ணப்பம் செய்யாதே, வேறு கொண்டே - ஏகாந்தத்திலே, அறிவியுங்கோள். கூறுவித்தேன் 252/2. பல்லாண்டு ... *. கூறி வைத்தேன்.

கூறை யுடை 244/2. ... யும் குளிர் முத்தின் கோடாலமும் *. கூறையாகிற உடை, கூறை - சிரை. கூறைப் பை 3232/2. "தானே ... யும் சுமந்து கொண்டுபோய் விட்டுப் போரும்." கூறை யிருக்கிற பை - புடவை வைக்கும் பை. [யாட்டி.

கூன் தொழுத்தை 405/1. ... சித குரைப்ப*, கூனியாகிற அடி

கூனகம் 781/4. ... புகத் தெறித்த *. கூனியின் கூனிலே. கூனர் 2057/1. " ... குறளர் ஸஞ்சரிக்குமா போலே" வ்ருத்தர் - கிழவர். கூனல் சங்கம் 654/1. ... கொலையாழி *. வளைந்த சங்கம். பகவதநுபவத்தால் வந்த செருக்காலே கூனியாய்த்து ஸ்ரீ பாஞ்சஜந்ய மிருப்பது.

கூனல் பிறை 268/4. ... வேண்டி அண்ணுந்து *. வளைந்த பிறை, சந்திர கலை. கூனி 125/1. கொங்கை வன் ... *. கூனையுடையவள், மந்தரை. கூனியதோர் கொற்ற வில் * 1927/2. நரம்பு படைத்து வளைந்து இசுவர்ய ஸூசகமான வில். கொற்றம் - இசுவர்யம். [சங்கம்.

கூனேறு சங்கம் 677/3. ... இடத்தான் * கூனல் சங்கம், வளைந்த

கெடலில் வீடு 3109/4. ... செய்யும் *. வீடு - மோக்ஷம். கெடுதலில்லாத ஆநந்தம். அவித்யாத் யநர்த்த கந்த மில்லாத ஆநந்தம்.

கெடலில் ஆயிரம் * 3109/3. அநர்த்தம் வாராதபடியான ஆயிரம் பாட்டு. கெடுத்து 2069/4. "ஆற்றிலே ... க் குளத்திலே தேடுகிருள்" கெட்டுப் போக்கி, காணுமற் போக்கி. கெடு மரக்கலம் 2912/3. வழி தப்பின ஓடம். " ... கரை சேர்ந்தாற் போலே."

கெடுமிடராய வெல்லாம் * 3902/1. இடராய வெல்லாம் கெடும்.

கெடுவாய் 3047/அவ. "... ஆகரத்தில் தகவு மறுக்குமோ". வார்த்தைப்பாடு. சீ, கெட்டே. சீ, கெட்டான் அவன் — என்பது போல கெடுவாயும், கெடுவிகாள் (?). துஷ்டர்களே என்று அர்த்தம்.

கெருடர்கள் 925/2, 3983/3. இன்னரர் ... கருட தேசத்தவர்கள். கருடன் போலே சிறகுடையவர்க ளாகையாலே கந்தர்வர்கள் என்றும் சொல்லலாம். கெழுமிய கதிர்ச் சோதி *3182/2. கலந்து அத்தாலே பிரகாசிதமான தேஜஸ். கெழுமீர் 3847/4. என் தலை மேல் ... ரோ *. சேரிகோள். கெழு விசும்பு 1438/1. எரி காலினோடு நீர் ... ... *. (நெருப்பு காற்று) ஜலம் நிறைந்த ஆகாசம்.

கேகயர் கோன்மகள் * 734/3. கைகேயி. கேசம் 43/2. திருப் பாத ... *. கூந்தல். கேசரம் 1128/3. எரியன ...*. கேஸரம் - உளை மயிர், பிடரி மயிர்.

கேசி 858/2. மாலி ... தேனுகன்*. ஸ்வர்க்க வாஸிகளான தேவதைகளுக்கு பாதகனான கேசி ராக்ஷஸன்.

கேட்கலாவார் (?) வினவப்படுவதற்கு உரியர். கேட்கத்தக்கவர். கேட்கின்றனகள் 2485/1. காண்கின்றனகளும் ... ளும் *. கேட்கிறவை. கேட்குறுள் 3501/2. என்ன வார்த்தையும் ... *. கேட்க உறுள், கேட்கிறிலள்.

கேட்ட மனு 2457/3. ... வும் சுருதி மறை நான்கும் *. ஆப்த மனுகச் செல்லக் கேட்ட மனு, ஸ்ம்ருதிகாரர். கேட்டார் வாய் கேட்டார் 1074/1. "கண்டநுபவித்தவர்களோடு ... ... ரோடு வாசியற." நேரில் கண்டவர்க ளன்றிக்கே கேட்டவர்களு மன்றிக்கே கேட்டவர்கள் வாயிலிருந்து கர்ண பரம்பரையாகக் கேட்டவர்கள்.

கேட்டிருந்தேயும் 1225/3. கேட்டிருக்கச் செய்தேயும்.

கேட்டியேல் 499/2. மேலையார் செய்வனகள் ... *. கேட்புதியாகில். கேட்டிரே 881/3. ... நம்பிமீர்காள்*. கேட்டிகோளோ, கேட்டீரோ. கேட்கும் 601/4. கூவி நும் பாட்டுக்கள் ... மே*. கேட்கிறோம்.

கேட்டே கிடத்தியோ 480/7. கேசவனைப் பாடவும் நீ ... *. கேட்டும் உறங்குகிறியோ. கேட்டேயும் 2618/1. பாலாழி நீ கிடக்கும் பண்பை யாம் *. கேட்டும், கேட்கும் போது.

கேட்பது சிந்தை 3504/4. அவ்வூர்த் திருநாமம் ... யே *. கேட்பதில் மநோரதம். கேடகம் 1120/2. ... மோண் மலர் *.

கேடகம் கோப்பவன் 271/2. நலிவானுறக் ... *. கடகம் கோத்துப் பிடிக்குமவன். கடகு - பரிசை. கடகு பிடிப்பவன். கேடிலன் 3229/4. யானென்றும் ... *. கேடிலேன்.

கேடிலா வான் குடை * 2646/2. நித்யமாய் பெருத்த ஆகாசமாகிற குடை. கேணி 1068/4. திருவல்லிக் ... *. கேதகை 1375/4. மன்னு ... *. தாழை. கேதம் 2442/1. மனக் ... சாரா *. சிரமம்.

கேயத் தீங் குழல் 3485/1. ... ... ஊதிற்றும் *. கானத்தோடே கூடின இனிய குழல். கேவலம் 1795/1. ... அன்று கடலினுசை *. 1893/1. ... அன்று உன் வயிறு*. ஸாதாரணம், மட்டம்.

கேழ் 710/3. நின் செங் ... விரலினும் *. நிறம். 2325/1. ஒண் ... அலர் கதிரும் *. அழகு. 3051/2. ... றி லொண் கண் *; 3153/3. ... றி லாயிரம் *. ஒப்பு.

கேழ்த்த சீரான் 3127/3. ... முதலாக் கிளர் தெய்வம் *. கேழ் - கிளர்த்தியாய் பெருமை, சீர் - ஞாநாதிகள். கேழ்த்த அடித் தாமரை * 2377/3. நிறமுடைத் தாமரை.

கேழ்பவர் 2522/3. வருங் ... உளரே *. நன்மையை யுடையவர். கேழ்பு - நன்மை, கேழ் - அழகாய் அத்தாலே நன்மை.

கேழல் திருவுரு 3609/4. ... வாயிற்று *. வராஹமான திருவுரு. கேழலர் கதிர் 2325/3. ஒண் ... *. அழகியதாய் அலரா நின்றுள்ள ஆதித்யன்.

கேள்வர் 1987/3. புல மங்கை ... *. வல்லபர், பர்த்தா. கேள்வனார் 2421/3. நூலாட்டி ... *.

கேள்வி 807/3. நீதியான ... *. 1096/3. ... யோடங்கமாறும் *. ஆசார்யோபதேசம். கேள்வி கொள்ள வேண்டாதபடி 2995/3. "ஸர்வேசுவரனைக் ... ... நிரபேக்ஷனன சதுர்முகன்". கேட்க வேண்டாதபடி, கேட்டறிய வேண்டாதபடி ஸ்வதந்த்ரன்.

கேள்விப் பதங்கள் 1408/1. ... ளும் பதங்களின் பொருளும் *. கேள்விக்கே யோக்யமாய் பத ஸமூஹாத்மகமான வ்யாகரண சாஸ்த்ரம். கேள்வியர் 2366/2. செவியினர் ... *. கேள்வியை உடையர். கேள்வியார் 760/3. நீதியான ... *. கேட்டறிந்த ஞானிகள்.

கேளவன் 2144/2. ... னது இன் மொழியும்*. உறவாளன், நிருபாதிக பந்து. கேளா 3237/2. "எங்களை நோக்க என்பார்கள்; அத்தைக் ...". கேட்டு. கேளாச் செவிகள் 2013/4. ... செவியல்ல *, கேளாத

காதுகள். கேளா செவி 2092/4. காணு கண் ... *. காது கேளாது, கேட்க விரும்பாது. கேளிணை யொன்று மிலாதான் * 2998/2. கேளா கெழாக்கி ஒப்பாய், இணையும் ஒப்பாய், திரளவும் தனித் தனியும் ஒப் பில்லாதான் என்னுதல், அன்றிக்கே — கேள் என்று உறவாய், சேர்ந்த ஒப்பில்லாதான் என்னுதல். கேள் - பொருத்தம்.

கை 3550/ப்ர. காலைக் ... யைக் காட்டா நின்றார். கால் - வீற் கால். கை - விரல் சரடு. கை புடை கோதை கைகட்டி யாகும் என்று நிகண்டு. கை, புடை, கோதை என்று கைகட்டிக்குப் பேர். மேள காரர் போல வில்லாளிகளும் விரலில் காயம் உண்டாகாதபடி சரடு கட்டுவர்.

கைக் கட்டி 3550/ப்ர. விரல் சரடு. கைக் கடங்கினதையும் கொண்டு மடிச் சரக்கையும் கொண்டு போனன் 3853/1.

கைக் கிளைத் தலைவி 3914/4. "... பொறை யழிந்தால் எல்லாம் சொல்லப் பெறுமிறே" கைக்கிளை - ஒருதலைக் காமம். ஒரு தலைக் காம முடைய நாயகி என்றபடி.

கைக்கு மெய்தான் 3588/2. ... முன்னே வந்ததென் *. கைக்கும் எட்டான். கைக்குறி யகப்பைக் குறி: அகப்பைக் குறி பார்.

கைக் கூட்ட மிட்டாற் போலே: கைக் கொண்டு பார்.

கைக் கூட்டன் 2672/11. "ராஜபுத்ரனோடே வினையுண்ட ... ... னுக்கும் பால் திரளை யிடக் கடவது காண்." 3667/2; "ராஜ புத்ரனை சிறையிலே இட்டு வைத்தால் கைக் கூட்டனுக்கும் பாலுஞ் சோறு மிடு வார்" 1520/2. காவற்காரன்.

கைக் கூலி (ஸ்ரீ வ. பூ. 285). "கொண்டதுக்குக் ... ... கொடுக்க வேணும்" கை மேல் கூலி.

கைக் கொடுத்த மாமேனி 2161/3. ரக்ஷகன் கையிலே காட்டிக் கொடுத்த மஹாநுபாவன்.

கைக் கொண்டு 443/2. எங்கும் ... நிற்கின்ற நோய் காண் *. உடன் வந்தி போலே. (உடன் வந்தி - வந்தேறியன்றிக்கே ஸஹஜம்) கைக் கூட்டமிட்டாற் போலே என்னவுமாம். அணி வகுத்தாற் போலே.

கைக் கொள்ளாண்டிகளைப் போலே: 3308/1. கைக் கொளாண்டி 3022/1. "... களைப் போலே இருமாந்திருக்கும். கைக் கோளாண்டி 2086/1. அரும் பதங்கள் மௌகம். கங்கேத்து வாடு என்று தெலுங்கு வியாக்கியாகம். அதாவது — பெருமாள் மாட்டுக் காரன். எருதைக் கைக் கொண்ட ஆண்டி.

கை கண்ட யோகம் 621/2. ... தடவத் திரும்*. கை கண்ட பலன் என்பது போல. கை கண்ட உபாயம், பிரயோகம்.

கை கண்டிருக்கிறது 3165/1. " நம்மைக் கைமிஞ்சி வாராதென்று கை கண்டிருக்கிற இது." ; " எல்லார்க்கும் ... தெரியலாம்படி" 409/2. பிரத்யக்ஷித்து. சிலேடையில் பார்.

கை கமலம் 3054/1. செந்தாமரைக் கண் ...*. கை கமலம் போலே. கை கரவேல் 477/1. ஒன்று நீ ... *. ஔதார்யம் மாற வேண்டா. கை - கொடை. கரக்கை - மாறுகை

கை கலந்துண்டான் 2980/2. வெண்ணெய் ... ... *. இரண்டு கையாலும் உண்டான். கை கவியாய் 459/2. அஞ்சேலென்று ... *. கையை கவித்து அபய முத்திரை காட்டு.

கை கழியப் போக வல்லீரோ 3216/1. கை விட்டுப் போக. கை கழுவி என்றாலும் இதுவே பொருள். கை கழியேல் 3920/2. கலவியும் நலியும் என் ... *. என் கைக்குள் நின் றகலாதொழிய வேணும்; என் கைக் குள்ளேயே இரு.

கைகளை யார 3695/3. ... த் தொழக் காணீர் *. கைகளார ஐ அசை. கைகாட்டி 475/7. ஆந்தனையும் ... *. கொடுத்து. கை காட்டும் 3264/2. வைகுந்த மென்று ... *. கையாலே காட்டும்.

கை கூடும் 2124/2. தனமாய தானே ... *. கை புகுரும். கை கூப்பி 126/2. ... என் கண்ணு கண்ணு என்ன*. கையெடுத்து அஞ்சலி பண்ணி. கை கூப்பு 3254/3. ... ச் செய்கை *. அஞ்சலி.

கைகேசி 320/1. ... வரம் வேண்ட*. கைகேயி. "கைகேயி யாகிற காள ராத்ரியினுடைய பாபப் பட்டோலை." (வா. மா. 33). கை கோலி 2228/2. காலை தொழுதெழுமின் ... *. கைகூப்பி. ஏற்கவே கோலி என்றுமாம். முன்பே கோலி - விரும்பி. [யுடைய ஸர்வேசுவரன்.

கைச் சக்கரத் தண்ணல் * 3928/2. கையிலே திருவாழியை

கைச்சதும் புளிச்சதும் 1992/3 (?) கசந்ததும் புளிச்சதும். பித்தளையில் வைத்த மோர் முதலியவை கச்சது என்பது கசந்தது கைச்சது என்றே பொருள். கைச் சரிவளை 47/2. அம் ... *. முன் கை வளை. கையிலே சரிவதா யிருப்பதாகையால் முன் கைவளை என்றபடி.

கைச் சிறை யாயிருக்க வல்லள் 561/4. அரும்பதம் மௌகம். கையைச் சிறையாகக் கொண்டவள், கையில் அகப்பட்டவள், கை வசமா யிருப்பவள், மீறிப் போகமாட்டாதவள்.

கைச் செந் தீ 2121/1. குறவர் ... *. சுளிலே கொளுத்திக் கையிலே கோடு போகிற நெருப்பு. சுளி - சூளுந்து. சூழ்ந்து கொளுத்திக் கொண்டு வர வேண்டுமென்று சொல்லுவதுண்டு. சுளி - வெலுதுரு கர்ர என்று தெலுங்கு வியாக்கியாநம். சுள் - நெருப்பு, அல்லது கொள்ளிக் கட்டை. கையிலே யுள்ள சிவப்பான நெருப்பு, கையில் பிடித்த சூழ்ந்துத் தீ. [சிருங்கை. 2573/3 ; 1648/1.

கைசு 3547/2 (24). " பைதல் ... நோய் முக் கைசு". கால்பலம்.

கை செய்ப்பாலது 3690/1. ... தோர் மாயம் *. கைத் தொழிலுக்கு அப்பாலதான (கோலம்). செய்கை என்பது செய்யாகக் குறைந்து கிடக்கிறது. அக்ருத்ரிமம் அன்றிக்கே கருவி (சித்திரம்) உயிர் பெற எழுதினாற் போலே யுள்ளது. கை செய்கையை - சித்திரமாக எழுதுகையை, பாலது - ஸ்வபாவமாக வுடையது.

கை செய்த கண்ணி 50/1. கானூர் நறுந்துழாய் ...*. கையாலே கட்டின, கைத் தொழில் தோன்றும்படி அழகாகக் கட்டின கண்ணி - மாலை. கை செய்து : சிலேடையில் பார்.

கைடவன் 2347/3. வாய்ந்த மது ... வரும் *. ஒரு ராக்ஷஸன்.

கைத் தண்டு 1935/4. தொண்டர் ... *. கையி லாயுதம்.

கைத் தலத்தது 1649/1. ... என்கின்றுளால் *. கையிலது. **கைத் தலத்திடரில்** * 568/3. கைத்தலமாகிற உயர்ந்த இடத்தில்.

கைத் தலத் துள்ள மாடு * 294/1. கையிலுள்ள அர்த்தங்களும் தலத்து - பூகதமாக்கி வைத்த அர்த்தங்களும் — என்னுதல். மாடு — என்று கன்று காலிகளுக்குப் பேர். கோதநராகையாலே கற்றுக்கஙளயும் வறட்டாக்களையும் சொல்லிற்றாகவுமாம். கையிலுள்ள தநம்.

கைத்தால் 521/4. கட்டியும் ... *. கசந்தால். **கை தாமரை** 1977/4. ... குவிக்கும் *. கையாகிற தாமரை.

கைத்து 3078/3. பாவந்தன்னையும் பாறக் ... *. ஒட்டி, துரத்தி.

கைதலை பூசலிட்டால் * 3297/3. பூசல் பொருந்துதலாய் தலையிலே பொருந்தினால், அஞ்சலி பண்ணினால், தலையிலே கை வைத்துப் பூசலிட்டால் - கூப்பிட்டால். **கைதலை பூசலிட்டு** 3347/3. தலையிலே கை கட்டி - அஞ்சலி பண்ணிக் கூப்பிட்டு.

கைத் தளை 995/2, 1431/1. "கையும் ... யுமாய்த் திரிவார்கள்" கை விலங்கு. **கைத் தொடர்** 946/1. " தாமே ... ... ராய் நின்று

இவ் வவஸ்தாபங்க மாக்கினர்." தாமே ஏறிட்டுக் கொண்டு செய் தார் என்றபடி.

கைதவங்கள் 3411/2. ... செய்யும் கருமேனியம்மானே *. க்ருத்ரி மங்கள். 3479/2. ... செய்தும் விண்ணோர் *.

கைதவம் செம்மை 3477/1. ... கருமை வெளுமையுமாய் *. ஆர் ஜவா நார்ஜவங்கள்.

கைதெளிந்து காட்டி * 2475/2. தெளிந்து கை காட்டி. **கைதைக் கழி** 1184/3. ... யூடாடி * தாழையை யுடைய கழி.

கைதர 3031/1. நெடுநாள் ப்ராக்ருத போகங்களை புஜித்துப் போந்த நீ அப்ராக்ருத போகத்துக்குக் கைதர நிற்பதே. உதவிசெய்ய(?).

கை தொடர் 3594/2. "தூசித் தலையிலே அவர்களே ... ராய்த் தரம் பெற்றுப் போக வொண்ணாது." கை விடாதவராய். ஸஹாய பூதராய் என்றுமாம், " ஆசிரித விரோதிகளை அழியச் செய்யு மிடத்துக் ... ராய்ச் செய்யாதவன்று சிற்றம் மாற மாட்டா." 899/2. கை விடாதவராய். **கை தொடன்** என்றும் பல இடங்களில் காண்கிறது. அதற்கும் ஸஹா யன் என்றே அர்த்தம்.

கை தொடு மானம் 3557/2. " தன் வெறுமையைக் ... ... மாய்க் கொண்டு" ஸஹாயம். "கை தொடுமானமான அர்த்தமும் மாண்டா லும்" (?). " கூட ஒன்றைத் தொட்டுக் கொண்டிருக்கைக்குக் ... ... கொண்ட தொன்றன்றோ". 1198/2.

கை தொழுதும் 2159/3. பைங்நாகப் பள்ளியான் பாதமே ... *. ஆசிரயிப்போம். **கைங் நாகம்** 422/1. ... த் திடர் கடிந்த *. கையை யுடைய நாகம் - யானை.

கைங் நிரை 3291/3. " திருக் கொட்டாரத்தி னருகே ... கட்டிக் கொண்டிருக்கிற நாளிலே" நிரைச்சல் – மறைவு.

கைங் நிரை காட்டினர் 3982/2. இங்ஙனே எழுந்தருள என்று கைகளை நிரையாக – வரிசையாகக் காட்டினார்கள்.

கை நோக்கி 3870/4 (24). " அவனுடைய சரக்கு என்று ஆந் தனையும் ... க் கொண்டிருந்தேன். நோக்குகை - ரக்ஷிக்கை. கை நோக் குகை – கையில் வைத்துப் பாதுகாக்கை.

கைப் பட்டவர்கள் 809/3. "வேதார்த்த தாத்பர்யம் ...". கைவந்த வர்கள். **கைப் பட்டார்** 752/4. " வேதாந்த ப்ரமேயம் ... ரொழிய ஆர் மினைக்க வல்லர்". **கைப் படுகை** 760/3. "வேதாந்த தாத்பர்யம் ... க்கும்". **கைப்படுத்த வல்ல சக்தி** 1/அவ. " ப்ர தத்வத்தைக் ...

யுடைத்தாகையாலே". கைப் படுத்து 1349/1. மாவலியை வஞ்சித்து உலகம் ...*. தன்னதாக்கிக் கொண்டு. ஸ்வாதீநம் செய்து கொண்டு.

கைப் பற்று 3872/4. "தான் தோன்றியான ... றடியாக வந்த தல்ல." ஸ்வயத்ந மூலமான ஸாதநம். கைப்பற்று - ஸாதநம், கருவி.

கைப் பறி பறிக்கையன்றிக்கே பொருளை ஆசார்யர்களோடே கற்றறியும் 1397/3. ஸ்ரீ கோசத்தைப் பற்றி பலாத்காரமாகத் தன் புத்தி பலத்தாலே. ஸ்வரஸமான அர்த்தம் கிடக்க அதி லர்த்தத்தை அறிகை யன்றிக்கே என்றபடி.

கைப் பறி பறித்தும் கிடந்தானை கண்டேறியும் (வா. மா. 441).

கைப் பாணி 3345/4 (24) "... ப் புறத்தால் வந்த வழு மூட்சி." கைப் பாணியிட்டு 3345/4 (36). கைப் பாணி - மணியாசநம். மணி யாசிப் பலகை. கைப் புடை 3987/2. "கையைக் கொடுத்துக்கொண்டு புக்குத் தங்கள் ... களிலே இருத்தி." வாசல் காப்பா ரிருக்கு மிடம். 3709/2 (?). திருக் கோபுர வாசல் அறை. "பிராட்டி ... யிலே நின்று கவி பாடுகிறவர்." 3216/1. கைப் பக்கம், குடவறை, மத்ய ஸ்தலம்.

கைப் பொருள் 611/4. இல்லாதோம் ... ... ளும் *. கைம் முதல். கைப்போது 1565/2. தங்கள் ... *. கைகளாகிற புஷ்பங்கள். அஞ்சலி.

கை புகுந்தது 2926/4. "அவ் வஸ்துவை ச்ரவண மந நாதிக ளாலே ... என்று விச்வஸிக்கலா மளவும் ஆசிரயிக்கப் பாருங்கோள்." கை புகுருகை பலோந் முகமாகை.

கை புனைந்து 2366/1. கவியினுர் ... *. கை கூப்பி.

கைம் பெண்டாட்டி 930/1. (அழ). "ஒரு ... ... க்கும் அடைத் துக் கொண்டிருக்கலாம்படியிறே ஊரும் அரணும் இருப்பது." கைம் பெண். கைம் மறித்து 280/4. நைந்து சோர்ந்து ... நின்றனரே *. ஒன்றும் செய்ய சக்தியில்லாமல் கையை மறித்துக் கொண்டு, திருப்பிக் கொண்டு. கைம்மா 785/3. ... வின் நடையன்ன *. 3099/3. ... துன் பம் கடிந்த பிரானே *. கையுள்ள மா - யானை. பாயும் மா பாய் மா குதிரை. கைம் மாறிலேன் 550/4. தலையல்லால் ... னே *. ப்ரத்யுப கார மிலேன். கை - கொடுக்கை. மாறு - பிரதியாகக் கொடுக்கை.

கைம்மான மத யானை 1728/1. முன் கை மிடுக்காலே எல்லாவற் றையும் தூக்கி அடித்துப் போகடுகிறேனென்றிருக்கிற பெருந் தன்மை யையுடைய யானை. மானம் - பேரளவு. கைம் மிக்கு 2237/1. ... க் காட்டினல்*. விஞ்சி மிகுதியாக.

கைம் மிஞ்சி வாராது 3165/1. "ஏதேனு மொன்று வந்தாலும் நம்மைக் ... ...".

கை முதல், கைம் மேலே: சிலேடை பார். கைம்மை 3341/2. பொய்யே ... சொல்லி *. பெரும் பொய்.

கை மோதிரம் 325/4. ஈதவன் ... மே*. விரலில் இடும் அறுகாழி. கை மோவா 2693/2. மெய் சிலிராக் ...*. கையை மோந்து பார்த்து. கை யடைக்காய் 8/2. ... ... யும் கழுத்துக்கு *. கையிலே யுள்ள அடைக்காய், தாம்பூலம்.

கையடி யுண்டு 636/1. "திருவாய்ப் பாடியிலுள்ளார் கிருஷ்ணன் திம்பிலே ... டார்களாயிருக்கும்படி." ஈடுபட்டு. "இங்கு இவன் நீர்மை யிலே ... டாயிருக்கையாலே". 3869/ப்ர. வித்தராயிருக்கை.

கையடைப் பாக்கி 3565/2. "இந்திரியங்களைக் ...". வசமாக்கி "... பாகக் காரியம் செய்யுமிடத்தில்." 2086/1. ஸ்வாதீநமாக.

கையற்ருன் 1095/1. அசக்தனுனன். கையறவு 3011/1. காமுற்ற பார். கையறவுடையள் 1112/2. கைப்பொருளிழந்து வருந்துகிருள்.

கையறை போழ்து 3595/4. காணுடைப் பாரதம் ... *. கை தட்டி விட்டபோது, கை குவித்துப் பொருத போழ்து, கையும் அணியும் வகுத்துத் திரிகிற ஸமயம், தொடங்கின போது என்றுமாம்.

கையாளா 1389/1. கனவளையும் ... *. கைகளை ஆள்கிறதில்லை, தங்குகிறதில்லை. கையில் சங்கு 2075/1. இரு ... *. கையில் வளை.

கையிலான் 1095/1. கை முதலில்லாதவன், அசக்தன்.

கையுகிராண்ட எங் கடல் * 3673/3. படை யாண்டா னென்னு மாப்போலே கையுகிர் – கை நகம், அத்தை ஆயுதமாக ஆண்டான். எங் கடலே - பெரிய கிளர்த்தியோடே பிரஹ்லாதனுக்கு உதவின அது தம் பேருயிருக்கிற படி.

கை யெறிந்து 1842/1. பாரதம் ... *. கையும் அணியும் வகுத்து, சேனை வகுத்து. கை யெறிந்துவுக்கு சொற் பொருள் என்ன ?. படையில் வியூஹம் பண்ணி என்றே எல்லா இடத்திலும் அரும்பதம்.

கை யேற்ருர் 2072/3. (பட்). "பிக்ஷையிட வேணு மென்று ...". கை யேந்தினர். கையேறும் பழி 2496/4. சேரி ... *. கைகளை மேலே தூக்கிச் சொல்லும் பழி.

கையொடு கால் செய்ய கண்ணபிரான் * 3512/3. கையும் காலும் சிவப்பாயிருக்கிற கண்ணபிரான். **கையொத்துச் சொல்லுங்கோள் 3455/4.** அஞ்சலி பண்ணிக் கொண்டு சொல்லுங்கோள்.

கையொழிந்த அநந்தரம் **3946**/ப்ர. " ஸ்வருபத்தை யுபதேசித்துக் ... ". முடிந்த பிறகு. கையொழிந்த போது என்பது தன் வேலை முடிந்த பிறகு என்று அர்த்தம். **கையோலை 477**/அவ. " செய்யக் கடவ படியைக் ... செய்து கொடுக்கிறர்." ஞாபகச் சீட்டு.

கை வகுத்து 3440/1. " கையும் அணியுமாக வகுக்கை. கை வகுக்கையாவது - வ்யூஹம் பிரிக்கை.

கை வண்ணம் தாமரை * 2072/3. வண்ணம் - நிறம். ஆகார ஸாம்யமாகவுமாம். அல்லி போலே உள்ளங்கை, இதழ்கள் போலே விரல்கள், தாது போலே ரேகைகள், விலக்ஷணமான கந்தம், ம்ருதுவான ஸ்பர்சம், புற விதழ் போலே சியாமமான புறங் கையில் பசுமை — ஏவமாதியான லக்ஷணங்களை யுடைத்தா யிருக்கை.

கை வந்த சக்கரத் தென் கண்ணன் * 3381/3. நினைத்தபடி விதேயமான சக்கரம். கருதுமிடம் பொருது, கையிலே வந்து நின்ற சக்கரம். **கை வந்த உபகரணங்களைக் கொண்டு 3955/1.** கிடைத்த உபகரணங்களைக் கொண்டு. **கை வந்தபடி** செய்யவிறே இவர்கள் ஆசைப் படுவது ". (?). ஸ்வேச்சையாக.

கை வலத்தாது மில்லை 1917/3. என் ...*. கைம் முதலன்றிக்கே, கையில் பலம் யாதுமில்லை.

கை வலிந்து 3501/1. சிறுமானிவள் நம்மைக் ... *. கை விஞ்சி, கை கடந்து. **கைவழி மண்ணுன அடியார் 940**/அம. க்ரய விக்ர யார்ஹமான க்ஷேத்ரம் போலே அத்யந்த பரதந்த்ரரான அடியார்.

கை வளர்க்கு மழலாளர் **1654/1.** ... கண்ண புரம் *. தக்ஷிணை கொடுத்து ஹோமம் பண்ணுவியாமல் தன் கையால் வளர்த்த அக்நியை யுடையர். **கை வளர்ந்த 1128/1.** " தீம்பிலே ... ... ப்ரஜையை காலிலும் கழுத்திலும் விலங்கிட்டு வைக்கும்" கைதேறின. " தீம்பிலே கை வளருகிறவன் " **582/3.**

கைவாங்கி யிருக்க வல்லா ரல்லர் இவர் **3020**/ப்ர. " ஒரு கால் சொன்னோ மென்று ... " ஒழிந்திருக்க வல்லா ரல்லர்.

கை வாய்க்கால் 596/4, 2062/ப்ர. " ஆறு பெருகி யோடா நின்றால் வாய்த்தலைகளாலும் ... களாலும் பிரியுண்டு போகா நின்றாலும் கடலிலே புகு மம்சம் குறைவற்றுப் புகுமிறே ". சிறு வாய்க்கால்.

கை வாரம் கொள்ளத் தொடங்கினர் 2072/பட். மேல் வாரம் குடி வாரம் போலே கைவாரமும் ஒன்று, ஒரு பாகம்.

கை வாளையில் தீர்த்த எம்பெருமான் 3537/4. வெற்றிலைப் பையி லுள்ள ஸாவஷ்ராமம். (சி. அரு).

கை விளிக் கின்றது 702/3. கண்ணாலிட்டுக் ... *. கையாலே அழைக்கிறது. **கை வைத்த வன்** கபால் 793/2. ... மிசை *. கையில் வைத்த வலிய கபாலம். **கை வைத் திவள் வருமே** *. 286/4. இவள் ஸங்கேதம் வைத்து வரவல்லள்.

கொக்கலர் தடந் தாழை * 3337/3. கொக்குப் போலே வெளுத்த அலரையுடைய பெரிய தாழை. **கொக்கின் பழம்** * 1363/4. ... ... வீழ் கூடலூர் *. மாம் பழம். கொக்கு என்று மாவுக்கும் பேர்.

கொக்கு வாயும் படு கண்ணியும் போலே உன் திருவடிகளும் என் தலையும் சேர வேணும் 3099/2. ஆபரணங்களின் பூட்டு வாய். "கொக் கினுடைய வாயும் குளச்சான கண்ணியும்". 1300/1 (?).

கொங்கலர் தண்ணந் துழாய் 3507/3. ... முடியாய் *. பரிமள விகாஸியாய் சிரமஹரமாய் தர்சநீயமான திருத்துழாய்.

கொங்கலர் தண் பணை* 1794/4. தேனைப் புறப்பட விடா நின்று குளிர்ந்து சிரமஹரமான கிளை.

கொங்கன் 1503/4. தென்னுடன் குட ... *. கொங்க நாட்டை யுடையவன். **கொங்குங் குடந்தையும்** 173/1. ... ... கோட்டியூரும் *. கொங்கு மாருத சோலைக் குடந்தை. கொங்கு என்று மேலைத் திக்காய் அது ஸ்வாமி ஸ்தானமாய் அத்தால் வந்த பரத்வத்தை யுடைய திருக் குடந்தை.

கொங்கைச் சிறுவரை 449/1. ... என்னும் பொதும்பு *. முலையா கிற சிறுவரை. முலை மலை. அன்றிக்கே, கொங்கை - முலை, சிறு வரை - சிறு அரை, சிற்றிடை.

கொங்கை தங்கலுற்றவன் * 808/1. கொங்கையிலே தங்க விரும் பினவன். **கொசுகு** 1300/1. (?) "இக் ... நம்மை என் செய்யப் புகுகி றதே". கொசு. **கொட்ட** 14/3. பல் பறை ...*. மத்தளம் ...*. 561/1. முழங்க. **கொட்டாரம்** 3291/3. " ... த்தினருகே கை நிரை கட்டிக் கொண்டிருக்கிற நாளிலே." ஸ்ரீரங்கம் கோயிலில் நெல் முதலிய தாங் யங்கள் வைக்கும் இடம். கோஷ்டா காரம் - மாட்டுக் கொட்டம் என்று

பொருளாகும். கொட்டாவி 59/2. ... கொள்கின்றான் *. நித்ரைக்கு ஸூசகம். கொட்டு 3979/1. " காந்தப்பர் ஒப்பித்து நின்று பெரிய மண்டபங்களிலே ... மாப் போலே." மேளம் கொட்டுவது, கொட்டு முழக்கு. கொட்டோசை 3982/4.

கொட்டுத் தழும்பு 1/அவ. " ... ம்பக் காட்டிக் கிழியறுக்க வல்லேனே" மண் கொட்டு, மண் வெட்டி, களைக் கொட்டு. மண் வெட்டி பிடித்து வெட்டி கையில் ஏறின தழும்பு.

கொட்டைத் தலைப் பால் 264/4. ... கொடுத்து *. கொட்டை - பஞ்சச் சுருள். அதைப் பாலிலே தோய்த்து அதனுடைய தலையை - நுனியைத் தாய் முலை போலே உண்ணக் கொடுப்பது. இப்போது கண்ணாடிப் புட்டியில் ரப்பர் வைத்துக் குழந்தைகளுக்கு வாயில் கொடுப்பது அக்காலத்தில் பால் தோய்த்த பஞ்சை உருட்டிக் கொடுப்பதாயிருந்தது.

கொடிக் கொள் பொன் மதிள் * 3793/4. கொடிகளாலே அலங்க்ருதமாய் கநக மயமான மதிள்.

கொடிக் கோழி கொண்டான் 3601/3. மயிலைக் கொடியாகக் கொண்ட ஸுப்ரம்மண்யன். கோழி - மயில்.

கொடிப் புள் 1039/2. ... திரித்தாய்*. த்வஜமாகிற புள், கருடன். கொடி புல்கு தடவரை 1715/2. கொடி வளரும் தடாகமும் பெரிய மலையும். கொடி மூக்கு 1585/2, 2712/1, 3390/3. கொடி போலே யிருக்கிற மூக்கு. விலஸதி நாஸா கல்பக வல்லீ — என்று பட்டர்.

கொடி யிடையார் 410/3. ... முலை யணவி *. மென்மைக்கும் நுடங்குதலுக்கும் கொடிபோலே யிருக்கும் இடையை யுடையரான ஸ்த்ரீகள். நுடங்குதல் - சலிக்கை.

கொடியேறு செந்தாமரைக் கை 278/1. ஸாமுத்ரிகா லக்ஷணத்தாலே மங்களாவஹமாக த்வஜம் அங்குசம் சங்கு தாமரை என்றுப் போலே சொல்லுகிறவை அலங்காரங்களாக வுள்ள கை விரல்கள்.

கொடீர் 3046/3. தண்ணந் துழாய் ... *. கொடுக்கிறிலீர்.

கொடீராகில் கோழம்பமே * 258/4. கொடிகோளாகில் குழம்பினிகோளா மித்தனை. கோழம்பம் - குழப்பம்.

கொடுக்கும் கொய்சகமும் 2673/1, 2578/1. கொடுக்கு - முன்றானை, நுனி, தலைப்பு. கொய்சகம் - கொசுவம், கொசாம்.

கொடுக்கேன் 3685/1. இனியென் ... *. கொடுங்காற் சிலையர் 2514/1. ... நிரைகோளுழவர்*. கொடிதான காலுள்ள சிலையை யுடை.

யவர்கள். கொடுமை - வளைவு, கோணின காலையுடைய சிலையர். எப்போதும் நாணி யேறிட்டிருப்பதால் வளைவு.

கொடுங் கோளால் நிலங் கொண்ட கிறியம்மான் * 3313/3. வெட்டிய கோள் அல்லது வஞ்சனை. கோடு என்றத்தைக் குறுக்கி கொடு என்றுக்கி, அதாவது விலங்குகையாய் செவ்வைக் கேட்டை நினைக்கிறது. கொடு - வெட்டிமை. கோள் - விகரிக்கை, பலாத்காரத்தாலே கிரஹிக்கை. கொடுஞ் சிலை 2080/2. ... வாய்ச் சரந் துறந்து *. கண்ட போதே எதிரிகள் மண்ணுண்ணும் படியான வில், ஸ்ரீ சார்ங்கம்.

கொடுத்தல் கொள்ளுதல் 956/1. கொடுப்பனை கொள்வனை. கொள்வன கொடுப்பன என்று நாம் சொல்வது கொச்சை.

கொடுந் தொழுத்தை 739/2. ... சொற் கேட்ட *. கொடியளான வேலைக்காரி, கூனி.

கொடு பாடி வந்து 1925/3. மருளை ... *. பாடிக் கொடு வந்து.

கொடு மழு 17/1. கொண்ட தாளுறி கோலக் ... ... *. கூரிய கோடாலி. கொடுமா கடல் 1087/4. ... வையகம்*. வளைந் திருத்துள்ள கடல். கொடு மிறை 1002/3. ... க் கஞ்சி*. கொடிய மிறுக்கு, ஹிம்ஸை. கொடுமை செய்யுங் கூற்றம் *. 466/3. பாபம் செய்கிறவர்களைக் கண்ணுற்று நலிகிற மிருத்யு. கண்ணற்று - நிர்தயமாக.

கொடுமையை மடித்தேன்* 1005/2. க்ரூரமான செயல்களைத் திரிய விடுவித்தேன். கொடு வன் குழி 3569/1. குல முதலடுந் தீவினை ... *. துராரோஹமாய் அகாதமான கர்த்தம், பேராழமாய் வெளியேற முடியாத படுகுழி. கொடுவினைக் கூற்று * 3902/1. க்ரூர யாதனைகளைச் செய்யும் யமன். கொடு வினைத் தூறு 3140/1. ... ற்றுள் நின்று *. க்ருரமான பாபங்களுக்கு ஆகரமாய் புக்கால் புறப்பட வொண்ணாத ஸம்ஸாரம்.

கொடுவினைப் படைகள் வல்லன் * 3801/1. கொடுந் தொழிலான ஆயுதங்களை எடுக்க வல்லன். கொடு வினையுஞ் சாரா 2431/1. கூற்றமும் சாரா ... *. மஹா பாபமும் அணையாது, அணுகாது.

கொடுவைப் பசு 3311/3. " ... க்களை நியமித்துக் கறக்கைக்காக" பொல்லாத பசு. கொடைக் கடன் 3238/1. ... ... பூண்டிருந்து *, கொடுக்கையாகிற ஸ்வபாவம். கொடுக்கையே கடனென்று அநதிலங்கனீயத்வ குண யோகத்தாலே ஸ்வபாவத்தைச் சொல்லுகிறது. அநதிலங்க னீயத்வ குண யோகம் - மறுக்கமாட்டாத தன்மை,

கொடைக் குலசேகரன் 657/3. கூடலர் கோன் ... *. கொடை மாறுதே கொடுக்கும் (குலசேகரப்) பெருமாள்.

கொண்டக் கோல் 1663/1. "அர்ச்சாவதாரத்துக்குக் ... நாட்டின தேசமிறே திருமலை". கொண்டைக் கோல் பார்.

கொண்ட குதை மாறகிறிலன் * 3350/4. குதை பார்.

கொண்ட சீர்த் தொண்டன் கலியன்* 1747/2. தொண்ட னென்று எல்லாரும் நெஞ்சிலே கொள்ளும் படியான நன்மையை யுடைய கலியன், திருமங்கை யாழ்வார்.

கொண்ட சீற்றம் 1420/3. ... ஒன்றுளது *. ஏறிட்டுக் கொண்ட சீற்றம். **கொண்ட தாளுறி** 17/1. ... கோலக் கொடுமழு *. தாள் கொண்ட உறி, நீண்ட உறி, கால் நெருக்கத்தை யுடைய உறி.

கொண்ட பெண்டிர் 3781/1. நிருபாதிகமாக வந்த தன்றிக்கே, த்ரவ்யாத்யுபாதிகளாலே பரிக்ரஹித்த ஸ்த்ரீகள். மாதா பிதாக்களை செங்கற் சீரை கட்டவிட்டு தான் ஆர்ஜித்த தநத்தை யடையக் கொடுக்கும்படி தஞ்சமாக நெஞ்சிலே கொண்ட பெண்டிர். ஆசார்யனும் பர தேவதையும் ஐசுவர்யாதிகளும் — எல்லாம் இவளேயாகக் கொண்ட பெண்டிர். இவளுண்டாகையிறே எல்லாம் என்றிருக்கை. செங்கற் சீரை கட்டவிட்டு - காஷாய முடுத்துப் பிச்சை புகுர விட்டு. செங்கல் பொடிக் கூறை*.

கொண்டலார் முழவு* 1260/3. மேகங்களினுடைய மிக்க கோஷம். **கொண்ட லுந் துயர் வேங்கடம்** * 1051/3. மேகங்களைச் சென்று தள்ளும்படி அவ்வளவும் வளர்ந்த சிகரங்களை யுடைய திருமலை.

கொண்டாட்டு 3321/1. ... ம் குலம் புனைவும் * கொண்டாட்டம். ச்லாகை. பிள்ளை முதலியார் என்ற சொற்கள். வேட்டை ... டு அம்பார் களிறு * 2499/1. கொண்டாடுகை.

கொண்டி 661/1. "வாயது கையது வாகக் ... யோடே கண்டு பிடித்தாளாயிற்று", களவு.

கொண்டித் திரியும் பசு 999/2. பட்டி மேயும் பசு. "கொண்டிப் பசுவுக்குத் தடி கட்டி விடுவார்". (முமு. சரம. 82). முறட்டுப் பசு.

கொண்டு : "அவர் இப்படி வரக் ..." 3376/4. "அங்கே போகக் ...". 3366/4. போனல், போனதால்.

கொண்டு குடிவாழ்க்கை * 303/3. பாணிக்ரஹணம் செய்து கொண்டு குடும்பமான வாழ்க்கை.

கொண்டு கொடுத்தவன் 3224/4. உடலினோடும் ... *. கொண்டு வந்து கொடுத்தவன். கொண்டு போதி 231/2. நேர்படவே ... ... *. கொண்டு போகா நின்றாய், கொண்டு போகிறாய்.

கொண்டுவளாய் நின்றாள் 52/3. வெய்ய கலைப் பாகி ... ... *. கொண்டு வந்து உவளாய் அதூர விப்ர க்ருஷ்டையாய், கிட்டத்திலு மில்லாமல் எட்டத்திலுமில்லாமல் சற்று அப்பால் நின்றாள்.

கொண்டைக் கோல் நாட்டுவார் (அர்ச்சி. ப்ர. 2). " அளக்கும் பிரதேசத்துக்கு ... நாட்டுகிறார்" 2056/2. மடுக்களிலே பள்ளங்களுக்கு அடையாளமாக நடுகிற கோல்.

கொண்டை கொண்ட கோதை * 800/1. மயிர் முடியிலுள்ள மாலை. கொண்டை - மயிர் முடி. கொண்டை மேல் காற்றடிக்கத் திரியப் பெறாதே 3200/1. தலைமேலே காற்றடிக்க என்றதாய் ஸூகத்திலே என்றபடி. கொண் டொளிக்கும் 1425/2. கடியதோர் தெய்வம் ... ... *. கொண்டுபோய் ஒளிக்கும்.

கொண் மாட்டாது * 217/3. கொள் மாட்டாது பார்.

கொத்துத் தலைவன் 110/3. ... குடி கெட *. துர்யோதநன், இக்கொத்துக்கெல்லாம் நானே தலைவன் என்று பாரித்தவன்.

கொத்தை 2921/3. "பசியரா யிருக்குமவர்கள் சோறு சமையப் பற்றாமல் வெந்தது ... யாக வாயிலிடுமாப் போலே". வெந்ததும் வேகாததுமாக. கொத்தை - வேகாதது, தோஷமுள்ளது.

கொதுகலம் 2523/2. " பள்ளியோதும் பருவத்திலே சொல்லிலும் ... மாயிறே இருப்பது. மழலைக் கொஞ்சுதல். கொதுகலம் - குதூஹலம்.

கொந்தளித்து 3595/1. " கடல் ... " பொங்கி.

கொந்தலர் நறுந்துழாய் 1139/1. ... சாந்தம் தூபம் *. கொத்துக் கொத்தாக அலராநின்றுள்ள செவ்வித் திருத்துழாய். கொந்தளம் 619/3. ... மாக்கிப் பரக் கழித்து *. கொந்தளம் - சிலுகிடுகை.

கொப்பளிப்ப 282/1. செங்கண் கோடச் செய்ய வாய் ... *. குமிழ்க்க. குமிழி போலேயாக, முகுளிக்க, குவிய. கொப்பூழ் 3714/2. நான்முகனை மலர்ந்த தண் ... *. நாபி.

" கொம்பது பருத்தியாக அங்காடி பார்த்து " 3851/3. அங்காடி பாரித்து பார்.

கொம்பரர்வு நுண்ணேரிடை 3000/3. கொம்பு போலவும் அரவு போலவும் இருப்பதாய் அதுதானும் நுண்ணிதாய் நேரிதான இடை.

அரவு அராவு என்று நீட்டிக் கிடக்கிறது. அராவுகை லக்ஷிக்கைபாய் கொம்பை லக்ஷிக்கிற சிறிதாக்குகிற இடையென்னுமாம். வஞ்சிக் கொம்பிலும் அரவின் பணத்திலும் நுண்ணிதாய் நேரிதான இடை.

கொம்மை முலை 301/3. ... யுமிடையும்*. பெரிய முலை. 3429/ப்ர. அநுபவாலாபத்தாலே வீங்கின முலை.

கொய் கொள் பூம் பொழில் * 3417/2. கொய்து கொள்ளும்படி ஸம்ருத்தமான பூ. எப்போதும் கொய்கைக்குப் பக்வமாயிருக்கை.

கொய்ச்சகம் : கொய்யார் பூந்துகில் பார்.

கொய்சகம் 2673/1. கொடுக்கு பார். "தன் ... முட்படப் பாரா நின்றுள்." 3042/3. கொய் நாகப் பூம் போது * 2159/4. கொய்து கொள்ளும்படி ஸம்ருத்தமான பூ, போக்யமான நாகப் போது - நாக புஷ்பம். கொய்யடி நாரை 3849/2. நாரை யினத்தில் ஒன்று. மெத் தென்ற அடியையுடைய நாரை.

கொய்யார் குவளை 2016/2. ... யும் காயாவும் *. பறிக்கையிலே பொருந்தின குவளை. தர்சநீயமா யிருக்கை.

கொய்யார் பூந் துகில் 226/2. கொய்தல் ஆர்ந்திருந்துள்ள பூந் துகில். அழகிய பரியட்டங்கள். கொய் - கொய்தல், கொசுவுதல், கொய்ச்சகம். கொயல்வாய் மலர் 2501/4. ... மேல் *. கொய்கை வாய்ந்த மலர். வட்டமாய் செவ்வியை யுடைத்தான மாலை, குயல் என்று பாடமாகில் குவிந்த வாயையுடைய மலர் என்று அர்த்தம்.

கொர்க்கு 3961/3. "தொக்குக் கழிந்த சுளை போலே கவி தானே இனிதாயிருக்கும்" என்பதில் தொக்குக்கு பாடாந்தரம். பொருள் யாதோ ?. தொக்கு - த்வக், மேல் தோல், சக்கை.

கொல்லணை வேல் 732/1. ... வரி நெடுங் கண் *. கொலையிலே அணைந்த வேல். கொல்லா மாக் கோல் கொலை செய்து * 3134/1. அஹிம்ஸா ஸாதநமான உழவு கோல். கொல்லுகைக்குக் கருவியன்றிக்கே குதிரையை நடத்துவதான முட்கோல். அத்தாலேயே யாவரையும் கொன்று. கொல்லி காவலன் 667/3. ... கூடல் நாயகன்*. கொல்லிக்கு நாயகன். கொல்லி மலையிலே எழுதின பாவை 3435/1. கொல்லியம் பாவை * 1108/3. கொல்லி மலையிலே ஒரு பாவை யுண்டு, உரு வகுப்புக்குத் தமிழர் சொல்லுவ தொன்று. பாவை - ஸ்த்ரீ ப்ரதிமை எழுதியிருக்கு மென்றபடி. இது சித்திரமே யன்றி விக்ரஹ மல்ல.

கொல்லியலும் படை 751/3. ... த்தானை *. கொலையை முயலா நின்றுள்ள படை - வேல்.

கொல்லைமை 3243/2. ... செய்து *. வரம்பழிந்த செயல்.

கொல்லையரக்கி 600/3. ... யை மூக்கரிந்து*. வரம்பழிந்த செயலை யுடையவள், மரியாதை தப்பி நின்றவள்.

கொல்லையாளுள் 1321/2. ... பரிசழிந்தாள் *. வரம்பழிந்த செயலைச் செய்தாள். கொல்லை வல்லேறு 1964/4. ... ற்றின் மணி*. வெளி நிலத்திலே நாகைத் தொடர்ந்து அது கைபுகுந்தா லல்லது மீளாதபடி யிருக்கிற வ்ருஷபம்.

கொல்லை விலங்கு 1701/2. ... பணி செய்ய *. ஒரு காலும் பூசல் கண்டறியாதே என்று மொக்கப் பணையிலே திரியக் கடவ குரங்கு. பணை - சாகை, கிளை.

கொலாம் 2482/3. மாமை நிறத்துக் ... *. வாக்கியத்தி னீற்றில் ஸம்சயம் சொல்லுகை. கொலைக்க வொண்ணுத படி 1399/3. " ஒரு வரால் ... *. அழிக்க வொண்ணுத. குலைக்க என்றே பல இடங்களிலும். இங்கு கொலையாயிருக்கிறது.

கொலைப் புண் டலைக் குன்றம் * 1220/1. கொலைத் தொழிலையும் புண்ணுராத் தலையையு முடைய குன்றம் போலே யிருக்கிற ஆனை. துரோட்டியிட்டுக் குத்துகையாலே புண்ணும். காட்டானை யாகையாலே ஆனைகளோடே பொருது புண்ணுயிருத்தல். ஜாதிப் பண்பாகச் சொல் லிற்று. கொலை மலி பெய்து வித்த கொடியோன் * 1988/3. பர ஹிம் ஸையே யாத்ரையாகத் திரியும் அதி க்ரூரமான பையல்.

கொலையம்பு 1624/2. கொலை செய்தே தீரும் அம்பு.

கொலையவன் 1864/3. எங்களை யொழியக் ... *. கொலை பண்ண ப்ராப்தனுனவன், தகுந்தவன்.

கொலையில் வெய்ய கடுங்கா லிளைஞர்* 2514/1. கொலைத் தொழி லில் வெவ்வியராய், கடிய காலையும், பருவத்தி லிளமையையு முடை யவர்கள். கொலை வாய்ச் சின வேங்கை* 271/4. கொல்லுகிற வாயை யும் சினத்தையு முடைய புலி.

கொவ்வைக் கனிவாய்க் கிள்ளை * 1802/4. கொவ்வை வாய் மக ளிர் * 1289/3. கோவைப் பழம் போலே யிருக்கிற வாயை யுடையரான ஸ்திரீகள். கொழிக்கும் 396/4. கலப்பைகள் ... கங்கை *. கிளப்பும், தள்ளிக் கொடுவரும், அலை யெறியும். அரிசியை முறத்தி லிட்டுக் கொழிப்பது, கல் முதலியவற்றைக் கிளப்புவது.

கொழுங் கயல் 1499/1. ... லாய் நெடு வெள்ளம் கொண்ட காலம் *. கொழுவிதான, திருடமான, கொழுத்த கயல்.

கொழுங் கனி 599/1. உன் ... கொண்டு *. கொழுமை - அழகு. கொழுஞ் சுடர் சுழன்ற விலங்கல் * 930/2. ஆதித்யனுனவன் சுழன்று வாரா நின்றுள்ள மலை, மேரு.

கொழுஞ் சுருள் 3635/1. சுகிர்ந்திட்ட ... *. கொழுவிய, செறிந்த சுருள். கொழுஞ் சோதி வட்டம் * 3634/3. பூர்ணமான ஜ்யோதிர் மண்டலம். கொழுந்து 172/2. தாலிக் ... தை *. வெண் குருத்து.

கொழுநன் 1513/1. வள்ளி ... *. வல்லபன் நாயகன். 1025/2. மட மங்கை தன் ... *.

கொள்க 2039/4. மதிக்கிலர் ... *. நிச்சயிங்கோள். கொள்கலம் 2957/4 (6). "கல்யாண குணங்கள் சேருகைக்கு ... லமான ஸர்வேச்வரன்". பாத்ரம். கொள்கின்ற கோளிருள் * 3635/1. வியாபிக்கின்ற மிக்கிருள். வியாபிக்கின்ற கோட்பாட்டை யுடைய பேரிருள். கோட்பாடு - ஸ்வபாவம், இயற்கை, தன்மை.

கொள்கை 2957/4. குணங்கெழு ... *. பாத்ரம், கொள்கலம். ஆச்ரயம். கொள்கை கொளாமை 2958/1. ... யிலாதான் *. அங்கிகரிக்கையும் கை விடுகையும்.

கொள் கொடையற்று 1664/1. கொள்வனை கொடுப்பனை, கொடுக்கல் வாங்கல் இல்லாமல். கொள் கொம்பு 3992/2. "கொடி ... யையொழிய நிற்க வற்றே" பற்றுக் கொம்பு, சுள்ளிக் கால்.

கொள்கைத்தே 2385/2. கூறுடையன் என்பதுவும் ... *. நம்பலாமோ! கொள்கை யுடைத்தோ! கொள்ளத் தக்கதோ!

கொ(ண்)ள் மாட்டாது 217/3. வெண்ணெய் ... *. கொள்ள மாட்டாமல். கொள்வது 3100/1. ஈதே யானுன்னைக் ...*. கொள்ளும் பிரயோஜநம். கொள்வ தெண்ணுமோ * 2579/9. ... ... தெள்ளியார் குறிப்பே *. பெற விரும்புமோ.

கொள் பாட்டன் 1563/1 (வி. அரு). "இவர்களுக் கவ் வருகான ... லைச் சொல்லுகிறது" கொள்வனை கொடுப்பனை 956/1. கொள் கொடை பார். கொள்வாய் 570 2. "அவன் செவியில் மந்திரம் ...யே போலும் *. கொள்ளுகையாவது கொடுக்கை,

கொள்ள: கொண்டு போலவே பொருள். "அவர் வரக் கொள்ள" 3748/ப்ர. (?). "அவனைக் கிட்டக் கொள்ள" 3001/3. வந்ததால், கிட்

டினதால். **கொள்ளக் குறையாத** இடும்பைக் குழி * 2026/1. காலமெல்லாம் அநுபவியா நின்ருலும் முதலில் குறையாதபடி யிருக்கிற கிலேசத்தை விளைப்பதான கர்ப்ப ஸ்தாநம்.

கொள்ளக் கொண்டு 874/3. கொள்ளுவதால். "வியாதி வந்து கைக் கொள்ளும், அத்தை வேரும் விறகும் தேடி ஒருபடி பரிஹரித்துக் ... பசி தலை யெடுக்கும்". **கொள்ளி**: கொள்ளைக் கொள்ளி பார்.

கொள்ளி வட்டம் 3857/1. அலாத சக்ரம். **கொள்ளைக் கொழுமீன்* 1495/2.** பெரிய வளர்த்தியை யுடைய மீன். கொள்ளை - பெரிது, அதிகம். கொள்ளையாகக் கிடைக்கிறது - அதிகமாகக் கிடைக்கிறது. **கொள்ளைக் கொள்ளி 634/2.** ... க் குரம்பனை *. கொள்ளை கொள்பவன், ஸர்வ ஸ்வாபஹாரம் பண்ணுபவன்.

கொள்ளைச் சரக்கு 1220/4. கொள்ளையடித்த, திருடின சரக்கு. **கொள்ளை யூட்டிக் கொள்கிறது 2521/1,** "வெறும் புறத்தி லழகைக் ... தென்". நிரம்ப உண்பது (?).

கொளீஇ ஞானச் சுடர்* 2172/2. கொடுத்து. **கொளுவி 2293/1** அறிவென்னும் தாள் ... *. தொடுத்து, மூட்டி.

கொற்றக் குடை 264/74. கோவர்த்தன மென்னும் ... *. ஜயசிலமான குடை. கொற்றம்-வெற்றி, ஜயம். **கொற்றத் தொழில் 1725/3.** ... லரணைச் செந்தீ மூண்டு*. வெற்றித் தொழில். **கொற்றப் புள் 1655/1.** ... ளொன்றேறி *. ஜயசிலமான புள், கருடன். இவருடைய தர்சநமே பிறர்க்கு சுப சகுநமாய் ஜய ஸூசகமா யிருக்கையில் இவர் ஜய சிலமா யிருக்கக் குறையில்லை.

கொற்றப் போராழியான் * 2004/3. கொற்றம் 3261/1 (24). "வல்ல ... பேசினுலோ". **கொற்றவன் 980/2.** கொடுந் தொழில் புரிந்த ... *. **கொற்ற வில்லி 781/4.** ... யும் வில்லி யல்லையே *. கொற்றம் - வெற்றியும் வலியும். **கொறட்டு 3696/1.** கொறுட்டு பார்.

கொறுக் கோல் 3311/3. "முன்னணைக் கன்று பசுக்களோடே போனல் முலையுண்ணுமைக்கு ... என்று அதன் மூஞ்சியிலே கட்டி விடுவர்." முள் குத்தின கோல்.

கொறுட்டிலே தெறித்தால் பால் பாயும் பருவமாயிற்று 3696/1. கொறுடு - கன்னம். "பெரிய பெருமாள் ... டை மோந்து பார்த்தால் இப்போதும் வெண்ணெய் நாருகிற்கும்." 936/1.

கொன்றைச் சடையன் 3581/2. கடி கமழ் ... *. கொன்றைப் பூவைச் சடையிலே தரித்த சிவன்,

கொன்னவில் கூர் வேல் * 344/2. கோல் - கோலே. அத்தை நவிலுகிற - பரிசயம் பண்ணுகிற கூரான வேல். **கொன்னவிலுங் கூத்தன்** 2892/1. ... ஞப் பெயர்த்தும் குடமாடி *. அணியாத பெண்களுக்கு பாதகமான கூத்தை யுடையன், கண்டார் பிழையாதபடி, (பிழைக்க மாட்டாமல்) ஈடுபட்டுக் கிடக்கும் அழகான கூத்தை யுடையவன். **கொன்னவிலும் பூங் கணைகள்** * 2835/2. இலக்கானவர்கள் முடிந்தாரென்று சொல்லுகிற புஷ்ப பாணங்கள்.

கொன்னவிலும் வெங்கானம் * 2799/2. அவர் பட்டார் இவர் பட்டார் — என்ற கோலே சொல்லும் கூப்பிடே யாயிருக்கிற காடு.

கோக்கள் 3779/3. அடியா ரடியா ரடியாரெங் ... *. ஸ்வாமிகள்.

கோகனதத்தவள் 3859/1 ... கேள்வன் *. புஷ்பத்துக்குப் பரிமளம் உபாதாநமாகப் பிறந்த பிராட்டி. கோகனதம் - தாமரை.

கோகு கட்டுண்டு 3168/3. ... உழலாதார் *. அக்ரமமான ஆரவாரம் செய்து, உகட்டு - தலே மண்டையிட்டு. கோகு கொட்டு என்று பாடாந்தரம். **கோகுள்** 3572/1. வ்ருக்ஷ விசேஷம். “ ... இலேயைக் கொண்டு கடலே வற்ற இறைப்பதாக நினைப்பான் ”.

கோங் கரும்பு 1141/3. ... சுர புன்னை *. கோங் கம்பூ. **கோங்கு** 351/3. புன வேங்கையும் ... ம் *. கொங்க மரம்.

கோச் சோழன் 1506/4. ... ... பரிமாவுய்த்த தேராளன்*. சோழ [ராஜன்.

கோசரம் 2992/3. சிந்தைக்கும் ... அல்லன் *. விஷயம்.

கோட் குறை பட்டது 3842/4. ... என்னுருயிர் *, சிறிது சேஷித்தது, தொங்கிற்று. கோள் - போகம், அவசேஷிக்கப்பட்டது. கொள்ளுகையில் குறைபட்டது.

கோட்டங்கை 2244/3. ... யொண் குருதி *. குவிந்த அழகான கை. கோடு - கொட்டு வாய். அடிச் சோடின கை. அநுபந்தம் பார். ... வாமனன் *. 3610/3. ஏற்றுக் குவிந்து வளர்ந்த கை. **கோட்டம்** 356/2. எயிற் ... தவிர்க் துகந்த *. செவ்வைக் கேடாகச் சொல்லுகிற வார்த்தைகள். கோடுதல் விலங்குதல் - ஸ்வாதந்த்ரியம். **கோட்டி** 285/4. சாது ... புள்*. கோட்டி - திரள். 2268/3. அன்று கருக் ... புள் இடந்து*. ஸ்தாகம். கருக்கோட்டி - கர்ப்ப ஸ்தாநம். 2303/1. வடிவார் முடி ... *. வணங்கி.

கோட்டிடை 3609/1. தன் பாலொரு ... *. எயிற்றிலே. **கோட்டியா கோன்** 11/1. அணி ... அபிமான துங்கன் *. திருக் கோட்டியூருக்கு ராஜா. **கோட்டிய வில்** 383/3. ..., லொடு மின்னும் *. வளைந்த

வில். **கோட்டியூர் 178/1.** கொங்கும் குடந்தையும் ... *. திருக் கோட்டியூர். **கோட்டுக் கால் கட்டில் 492/1.** ... மேல் *. கோடு - கொம்பு. யானைக் கொம்பால் செய்த கால்களை யுடைய கட்டில்.

கோட்டுச்சி 2356/1. தடாவிய - வாய் *. சிகரத்தின் நுனி. **கோட்டு மண் கொண்டிடந்து * 357/1.** மண்ணிடந்து கோட்டுக் கொண்டு என்று அந்வயம். கோட்டிலே கொண்டு.

கோட்டு மாமலர் 2208/4. தண் ... *. ரோடு - கரை. அதிலே யுள்ள மா மலர். தோடு என்று பாடமான போது இதழை யுடைய பெரிய புஷ்பம். **கோட்டு முத்து 2326/3.** விரிந்த சீர் வெண் ...... *. கோடு - கொம்பு, யானையின் கொம்பிலிருந்த முத்து.

கோட்டை 3326/3. ... யினில் கழித்து *. ப்ராகாரம். கோட்டையாவது - புறம்புள்ளாரால் புகுர வொண்ணுததுமாய் உள்ளுள்ளாரால் புறப்படவு மொண்ணுதே புக்க விடமும் புறப்பட்ட விடமும் தெரியா திருக்குமிறே. " ஒரு ... கொண்டு போனுலாகாதோ — என்று எடுத்து விட" 3148/1. கோட்டை நெல். விரைக் கோட்டை. **கோட்டை கட்ட 1667/3.** " பொதிய வைக்கோல் இல்லாதபடி" என்பதில் பொதியவுக்கு அர்த்தம் " எதிரிகளுடைய அநவதாநம் பார்த்திருந்து அவர்கள் ... கொள்ளுவாரைப் போலே." கோட்டையைப் பிடிப்பாரைப் போலே.

கோட்பட்ட சிந்தை 3010/1. ... யையாய்*. அபஹ்ருதமான, பறியுண்ட நெஞ்சு. **கோட் பட்டு 2721/1.** ... நின்றலறி *. அகப்பட்டு, சிறைப் பட்டு. **கோட்பாட் டுலகம் 3780/1.** நல்ல ... *. இடமுடைய விசாலமான உலகம். கட்டளைப் பாடுடைய லோகம். கட்டளைப் படுகை திருந்துகை, திருத்தமா யமைத்த உலகம்.

கோட்பாடு 1782/2. தென்றலோடே கூட பெரிய ... டோடே கூட வருகிற மாலை (ஸந்த்யை). கட்டளைப் பாடு. " தான் கொண்ட ... விடாதிருக்க" 518/3. உத்யோகம், முயற்சி. " தான் கொண்ட ... மாறுதே 1083/1. முயற்சி. 3779/4. " அவர்க்கே குடிகளாய்ச் சொல்லும் நல்ல ... ". கட்டளைப் பாடு. ஸ்வீகாரம், பரிக்ரஹம்.

கோட்புக்கால் 3442/3. " வெறும் புறத்திலே ஆலத்தி வழிக்க வேண்டும்படி யிருக்கிற நீ, அதுக்கு மேலே கண்களும் கோட் புக்கால் பொறுக்கப் போமோ". கோட் புகுகையாவது - பால சூதாதிகள் பலவத்துக்களாகை, நூதனமாக புஷ்பிதமாகை. மரம் பூக்க ஆரம்பிப்பதைச் சொல்லுகிறது. வருஷந் தோறும் பூப்பதைச் சொல்லுவதில் கருத்தில்லை,

2068/1. "கற்பகக் கன்று ... காப் போலே." "புது மரம் புது சாகப் பூக்கை." (அரு). "கண்கள் ... படி" 3479/2 (?). நூதனமானபடி.

கோட 282/1. செங்கண் ... ச் செய்யவாய் கொப்பளிப்ப *. வக்ரிக்க. கோடல் 246/1. கார்க் ... பூக்காள் சூடி வருகின்ற தாமோதரா*. சிவனுர் பூ, காந்தள் பூ. கோடற்கு 3474/3. கண்டு ... *. கொள்வதற்கு. கொள்தற்கு என்றும் பாடாந்தரம்.

கோடார(ல)ம் 244/2. ஒரு முத்தின் ...*. பிறை போலே வளைந்திருக்கிற ஹாரம். முத்தின் கோள் போலே யிருக்கிற ஆரம். கோள் - கிரஹம். அத்தால் பிறைச் சந்திரன் போலே வளைந்திருக்கிற குறுகின ஹாரம். ஆரம். ஆலம் - ரலயோ ரபேதத்தால் ஆரம் ஆலயாகும்.

கோடாலி 1928/1. " எருக்கிலைக்குக் ... வேணுமோ" (அரு).

கோடி 1/2. பல் கோடி நூருயிரம்* 378/3. ... மூடி கொடுப்பதன் முன்னம் *. புதிது. நூதன வஸ்திரம். 558/3. மந்திரக் ... யுடுத்து *.

கோடிக்க 2952/அவ. "ஒரு புதுமை செய்ய வேண்டாத படியான பரம பதத்தைக் ... த் தொடங்கினுன்". அலங்கரிக்க.

கோடித்து 20/2. சயமரம் ... *. அலங்கரித்து 615/1. கண்ணுலம் ... *. அலங்கரித்து அல்லது மநோரதித்து. கோடி நூறு 1/2. பல் ... நூருயிரம் *. நூறு கோடி தான். கோடிய மனம் 1003/1. ... த்தால் *. கோடுதல் விலங்குதலாய் ஸர்வ விஷயத்திலும் விலங்கிய மனம். ஒரு காலும் ஈரமில்லாத நெஞ்சு.

கோடி யெடுக்கிறேன் 3913/4. "நீ தகவுடையை யல்லை யென்னுமிடத்துக்குக் ... ". அநேகம் இடம் சொல்லுகிறேன்.

கோடியைக் காணியாக்கினுற் போலே 611/1. கோடி த்ரவ்யத்தை யிட்டு ஒரு ரத்நம் வாங்கி மார்பிலே வைத்து அநுபவிக்கை. 3339/36. மஹா ஸங்க்க்யையை அல்ப ஸங்க்க்யையாக்குவது. 3540/1. " ... ... போலே முகந்து கொள்வதா யிருக்கை" முகந்து கொள்ளுகை - சிறும்பித்து, குறுகச் செய்து அநுபவிக்கை.

கோடு நீடு கைய/ன் 837/3. ... செய்ய பாத *. ஸர்வ காலமும் இருக் கைக்கு நிருபக மென்னும்படி அத்தைப் பிரியாத ஸ்ரீ பாஞ்சஜந்யத்தை யுடையவன். கோடு - வளைவு. அத்தால் சங்கம்,. நீடு - நீடுழி.

கோடை தட்டி உலருதல்: வெய்யில் (தனி சுலோ. விஷய தே).

கோணகணை * 1042/4, 2144/3. கோள் நாகணை. கோள் மிடுக்கு. கோணுகமே அணை, படுக்கை. கோணுகம் 2240/2. ... கொம்

பொசித்த கோ *. இங்கே நாகம் யானே. கோணை 3062/4. ... பெரிது டைத்து*. மிறுக்கு பிரயாஸம், அநுபபத்தி. " ஸம்ஸாரிகளின் ... யைப் போக்கி" 2117/அவ. (?).

கோத்த 3484/1. குரவை யாய்ச்சிய ரோடு ... வும் *. சேர்த்த. கோத்த வன் தளை * 436/4. காலில் பூட்டின வலிய விலங்கு. கோத்துக் குழைத்துக் குணலமாடி * 389/3. கூடிக் கூடிக் கலந்து கழித்துக் குணலமாடி.

கோத்ர ஸூத்ரப்பட 534/2. " ... செய்ய". வெறும் பெயர் மட்டுமல்லாமல் கோத்ர ஸூத்ரங்கள் தெரியும்படி. குலம் கோத்ரம் தெரியும்படி. கோத்ர ஸூத்ரப்பட சொல்லுங்கோள் — என்றும் வருவது காண்க. கோதவமி லென் கன்னற் கட்டி * 3077/4. கோதும் அவமுமில்லாத கன்னல் கட்டி.

கோதன் 1466/1. குலவானவர் தம் ... தா *. கௌதூஹலத்துக்கு விஷயமானவன். கோதுகலம் என்பது கோதனுயிற்று.

கோதாய் 319/1. அல்லியம் பூ மலர்க் ...*. மாலைபோன்றவளே*.

கோதி 546/3. பூ மலர் ... *. ருஜீஷமான அம்சத்தைக் கழித்து. கோது பகுதி, கோதி வினையெச்சம். " பூக்களைக் கோதி" 1439/3. பொறுக்கி. கோதில் செங்கோல் குடை மன்னர்* 1466/2. ஒருவரால் பிரதிஹதி (பங்கம்) பண்ண வெண்ணாத படியான ஆஜ்ஞையை யுடைய மன்னர். செங்கோல் - ஆஜ்ஞை.

கோதில் பட்டர் பிரான் 370/3. குற்றமில்லாத பெரியாழ்வார். கோதில் வாய்மை 1419/3. யினுயொடும் *. வாய்மை - வாகிந்திரிய வ்யாபாரமான வசனம். அதில் கோதின்மையாவது, ஸம்ச்ரவே மதுரம் வாக்யம் என்று பிராட்டி தரிக்கும்படி சொல்லுகையும், த்ருஷ்டா ஸீதா — என்று (ராமன்) இவர் தரிக்கும்படி சொல்லுகையும். இப்படி ஹநுமாந் பேசின பேச்சு இரு தலையும் தரிக்கும் படியாயிற்று.

கோதிலடியார் 3778/3. ஐங்கணை வேள் தாதை ... *. அநந்ய ப்ரயோஜநர். கோதில் வண் புகழ் 3245/1. ... கொண்டு சமயிகள் *. குற்ற மற்ற கல்யாண குணங்கள். குணத்துக்குக் கோதில்லாமையாவது — ஒரு குணத்தை அநுஸந்தித்தால் குணாந்தரத்தில் போகாதபடி காற் கட்டுகை, கோது கல முடைக் குட்டன் * 207/3. ... ... னேயோ *. கோதில்லாக் குலத்தில் பிறந்து கோது குலத்தானுவதே என்று துக்கிக்கிருள். கோதுகல முடைய பாவை/வாய் * 481/4. கௌதூஹலம் குதூ

ஹலம். கோதைக் குழலாள் 23/2. ... அசோதை. பூமாலையால் அலங்க்ருதமான குழலையுடையள். கோதை தமிழ் 576/3. ... ... ஈரைந்து *. ஆண்டாள் பாடின தமிழ்.

கோப் பின்னுமானுன் குறிப்பு * 2414/4. பின்னும் - பிறகும். குறிப்பு திருவுள்ளத்தில் கோவானுன் - ஸ்வாமியானுன். அவதாரம் முடிந்த பின்னும், குறிப்பு - ஸங்கல்பத்தாலே விரோதி நிரஸந சிலனுய் ஸ்வாமித்வம் தோற்ற இருந்தான்.

கோப்புக் குலைந்து 3352/2. கட்டுக் குலைந்து, சவரணை கெட்டு. "தனிக் கோப்பாயிருக்கும் கற்பகம்" 1146/2 அரு. சோலை செய்திருக்கும் கற்பகம். கொப்புடைய சீரிய சிங்காதனம் * 496/6. வகுப்புண்ட அழகான ஸிம்ஹாஸநம். கோப்பு – வகுப்பு, விசித்திரமான ஸந்நிவேசம். எம்பெருமானுடைய ஸிம்ஹாஸநத்தில் எட்டுக் கால்களும் சராசரங்கள் 2, உபய விபூதி 2. தர்ம ஜ்ஞாநங்கள் 2, அதர்ம அஜ்ஞானங்கள் 2. ஆக எட்டு.

கோபம் 1753/2. வெங் ... தவிர்த்தவன் *. கோபாலகன் 2313/4. குருந் தொசித்த ... *. கோபால கோளரி 124/3. கொத்தார் கருங்குழல் ... *. கோபாலர் கிழடங்காமல் மிடுக்கை யுடைத்தான ஸிம்ஹம் போலே செருக்கி மேனுணித்திருக்குமவன். கோள் - மிடுக்கு, அரி - ஸிம்ஹம். கோபாலனை ஸிம்ஹம், கோபால ஸிம்ஹம். 3021/4. கோபால கோளரி யேறு *. கோபால குலத்தில் பிறந்தார்க்குள் கோளரி யேறு மிடுக்குடைய ஸிம்ஹ சிரேஷ்டம்.

கோபால பிள்ளைகள் 142/2. குண நன்குடைய ரிக் ... *. இடைப் பிள்ளைகள். கோபுரம் 3920/3. கொடிக் ... மாடங்கள் *. தலை வாசல்.

கோமகன் 536/4. வசு தேவர்தம் ... *. கோவான மகன். கோமளக் கொழுந்து 3578/4. என்னுடை ... ... தே *. கோமளமான கொழுந்து. கோமளம் – மிருது. ம்ருது ஸ்வபாவமான லதாக்ரம் போலே மெல்லியள். கோமளப் பிள்ளை 714/1. என்றன் ... ளாய் *. ஸௌகுமார்யத்தை யுடையவன்.

கோமள வல்லி 1125/3. குலங் கெழு ... *. அநுகூலரும் அடுத்துப் பார்க்கவொண்ணுத ஸௌகுமார்யம்.

கோமிறை 603/3. கோவிந்தன் ... செய்து *. அரசர்கள் பண்ணக் கடவ மிறுக்கு. கோமின் 3237/4. ... துழாய் முடி *. அநுபவியுந்தோள், கோக்கை சேர்க்கையாய் அநுபவிக்கை.

கோமுத்தவன் : கோமுற்றவனுக்கு கொச்சை. **கோமுற்றவன் 1003/3.** " புதுக் ... " ராஜா, 3462/ப்ர.

கோயில் : ஸ்ரீரங்கம். **கோயில் காப்பான் 489/2. ...** னே கொடித் தோன்றும் *. க்ஷேத்ராதிபதி.

கோயில் கட்டணம் 3902/3. " ஊர்க் கணக்கனே ... திலே புக்கு படுக்கைப் பற்று ஆராய்வன்" ! அந்த:புரம். படுக்கைப் பற்று – பள்ளியறை. " ... அழிகிறது ". 3919/2. அந்த:புரம். பெரிய பிராட்டியாருக்குக் ... மாய் நித்யாநுபாவ்யமான திரு மார்வு" 3998/3. அந்த:புரம்.

கோயில் கூழையடிக்கிறது 2576/அவ. கட்டுப்பாடு இல்லாத செயல். நியதி யில்லாத வியாபாரம். கோ இல்லாமையால் வந்த கூழைத்தனம்.

கோயில் கொண்டான் * 3580/4. வாஸஸ்தானமாகக் கொண்டான். **கோயில் கொள் தெய்வமெல்லாம் * 3730/3.** திருவடி திருவநந்தாழ்வான் சேனை முதலியார் தொடக்கமான பரிவாரங்கள்.

கோயில் சாந்து 290/1. தேவார்ஹமான சாந்து, கோயில் சந்தனம், சிலாக்கியமான சாந்து. **கோயில் சீய்த்து 3792/2. ...** ப் பல்படி கால் *. கோயிலில் பரிசர்யை பண்ணி, திரு வலகிட்டுப் பெருக்கி சுத்தம் செய்தல் முதலான கைங்கர்யங்கள்.

கோயில் திருவாய் மொழி 1118/ப்ர. (?). கோயிலான ஸ்ரீரங்கத்தைப் பற்றி நம்மாழ்வார் பாடின கங்குலும் பகலும் பதிகம். நித்யமாகச் சொல்ல வேண்டிய பாசுரங்கள் அடங்கிய நித்யாநுஸந்தாநமென்ற தொகுப்புக்கும் பெயர்.

கோயில் பிள்ளை 205/1. ... ளாய் இங்கே போதராயே *. கோயிலில் வஸிக்கும் பிள்ளை.

கோயிலாழ்வார் 1659/2. " வட மதுரைப் பிறந்தான் மகன் ... ஸந்நிதியிலே கண்ணைச் செம்பளித்துக் கொண்டு ஜபித்தான். " ஸ்ரீரங்க விமாநம். கோயிலாகிற ஆழ்வார். வீடுகளிலுள்ள பூஜைப் பெட்டிக் [கும் பேர்.

கோயின்மை 436/3. அடிமை யென்னு மக் ... *. புருஷார்த்தம், பெருமை. கைங்கர்யமாகிற புருஷார்த்தம்.

கோயின்மை 1955/3. கொங்கை நஞ்சுண்ட ... *. ஆராட்சியில்லாத செயல். **கோயின்மை செய்து கன்ம மொன்றில்லை * 3467/1.** நீ

செய்கிற அடிக் கழிவால் உனக் கொரு பலமுமில்லை. **கோயின்மை செய்வது தக்கதே*** **1665/4.** அநீதி செய்வது தக்கதோ.

கோர்வை: கோவை **1847/1.** **கோ ர ம் பு** **701/4.** அதுவு முன் ...*. நிம்பு. **கோர மாதவம் 931/3.** ... செய்தனன் கொல் *. கோரமான தபஸ். "அத்தலைக்காகத் தம்மை யழிய மாறின பெரியவுடை யாரது (ஜடாயுவின்) கோர மாதவம் போலே."

கோல் கழிந்தான் முழை 292/2. கோல் கழிந்த மூழை. ஆன் சாரிபை. கோலில்லாக் கரண்டி, உபயோக மற்றது.

கோல் குத்து நிலமும் கொடுப்பதில்லை **3171/2.** கோல் - அம்பு. ஸூச்யக்ரமபி என்ற ஸம்ஸ்க்ருதத்துக்கு ஊசி குத்துமிடம் கூட என்று சொல்லுகிறோம்.

கோல் கொள் கைத் தலம் 1156/2. ... ... த் தெந்தை *. உழவு கோல் பிடித்த கைத்தலம். **கோல் துணை 968/1.** மு ற் ற மூ த் து க் ... யா *. துணைக் கோல், துணையான கைத் தடி. **கோல் துணையா யிருப்பார்** சிலர் **2041/4** தடி யூன்றி நடப்பார்.

கோல் தும்பி 1678/4. ... பி வந்தாதாய் *. கோல்களிலும் பணை களிலும் (கொம்பிலும் கிளையிலும்) வைத்த மதுவைப் பானம் பண்ணக் கடவ தும்பி. **கோல் நோக்கி வாழுங் குடி * 690/4.** ஆஜ்ஞாநு வர்த் தநம் பண்ணும் குடி. **கோல் வளை 261/4.** மழுங்கல் வளை. **கோல் வளைக்கை 2353/1.** குறமகளிர் ...*. அழகிய கை. **கோல் விழுக் காடு:** தைவ கத்யா, யத்ருச்சயா.

கோலக் கண்ணன் 3075/8. என் செங் ... *. அழகிய க ண் ணை யுடையவன். **கோலங் கரிய பிரான் 2516/4.** நல்லோர் பிரான் ... *. கோலம் விக்ரஹமாய், கரிய கோலம் - கருத் திருந்துள்ள விக்ரஹம். திருமேனியில் கருமையாலே உபகாரகன்.

கோலங் காரெழில் * 3696/4. கறுத்த எ ழி ல ா ன கோ ல ம். கோலத்தினுடைய எழில் போலே இருந்துள்ள அழகு, கார் - கறுப்பு, எழில் - தேஜஸ், கோலம் - விக்ரஹம், கறுத்த தேஜஸ்ஸை யு டை ய விக்ரஹம். கார் - மேகம், எழில் - அழகு, கோலம் - அழகு, மேகத்தி னுடைய அழகு போலே இருந்துள்ள அழகு.

கோலங் கொள் சுவர்க்கம் * 3405/1. கோலம் - ஸுகம். கலப் பற்ற ஸுகரூபமான ஸ்வர்க்கம்.

கோலங் கொள் தனி முதல் 3405/8. ... யானே*. விசித்ர ஜ்ஞாந சக்தி யுக்தையான ப்ரக்ருதி. ஸமஸ்த கல்யாண குணாத்மகனும் எல்லா வற்றுக்கும் அடியா யிருக்கிற ஸர்வேசுவரன் — என்றுமாம்.

கோலங் கொள் முகில் வண்ணன் * 3405/3. வில்லிட்டு மின்னும் தர்சநீயமான மேகம் போலே இருக்கிற திரு நிறத்தையுடையவன்.

கோலங் கொளுயிர்கள் * 3405/3. நாடகங் காட்டி ஆடுவாரைப் போலே தேவனுக மநுஷ்யனுக இப்படி நாநாவான சரீர பரிக்ரஹம் பண்ணுகிற ஆத்மாக்கள். ஜ்ஞாநாநந்த லக்ஷணமான ஆத்மாக்கள்.

கோலங் கொளுலகத்தீர் * 3405/1. மயிரும் உகிரும் பேணி உடம்பு பேணி வந்து அலங்கரித்து நிற்கிற உலகத்தீர்.

கோலத் திருமா மகள் * 3541/3 அவனுக் கீடான ஆபிருப்யத் தோடே அவதரிக்கும் லக்ஷ்மி.

கோலந் திகழ் கோதை * 3405/2. அழகிய மாலை. **கோலந் திகழ் மோக்கம்** 3405/2. நிரதிசயாநந்த லக்ஷணத்தால் விளங்குவதான மோக்ஷம். **கோல நீலம்** 1354/3. மட்டுகக்கும் அழகான நீலப் பூ.

கோலப் பகல் களிறு 2517/1. தர்சநீயமான ஆதித்யனுகிற களிறு. **கோலப் பணைக் கச்சு** 244/2. ... ம் கூறையுடையும்*. திருப்பரியட்டம் நழுவாதபடி மேலே கட்டின அழகான பெரிய கச்சு.

கோலமாக ஆடுகின்றோம் * 1870/4. அழகாக ஆடுகின்றோம். **கோலமில் நரகம்** * 3405/1. ஸுக கந்த மின்றிக்கே துக்க மயமான நரகம். கோலங் கொள் ஸ்வர்க்கத்துக்கு மாறுபாடு.

கோல வராகம் 3996/3. ... மொன்ருய்*. விலக்ஷணமான வடிவை யுடைத்தான வராஹம். த்ரை லோக்யத்தையும் கண் செறியிட்டாற் போலே (மறைத்தாற் போலே) விம்ம வளர்ந்த படியாலே அத்விதீயம்.

கோலாடி குறுகப் பெரு 466/3. என் ... *. ஆஜ்ஞை நடக்கு மிட மெல்லாம் புகுரப் பெருது. கோலாடி – செங்கோல் செல்லுமிடம் என்று பொருளாகிறது. **கோலார்ந்த நெடுஞ் சார்ங்கம்** * 654/1. திருச் சரங்கள் தொடுத்தபடியே யுள்ள ஸ்ரீ சார்ங்கம்.

கோலி 1695/3. பேடையை அடங்க அஞ்சிறை ... *. (சிறகின்) கீழ்ப்பாகத்தில் என்று பதவுரை. விரித்து என்று வியாக்யாநம். 2263/2. அடிக் ... ஞாலத்தாள் *. அதிகமாக. உத்யோகிக்கை. " அநுபவிக்கக் ... ". 3009/ப்ர.

கோலின காரியம் 3188/2 (?). யத்தனித்த கார்யம். **கோலுமாப் போலே** 3092/2. சோம்பிக் கை வாங்காதே மேலே மேலே ... ' கோலுகை – உத்யோகிக்கை.

கோவம் 1296/2. ... மருளும்*. கோபம். கோவர்த்தன மென்னும் கொற்றக் குடை* 264/4. புல்லாலும் தண்ணீராலும் நிலவாசியாலும் கோக்களை வர்த்திப்பிக்கிற ப்ரஸித்தியை யுடையதாய், வர்ஷத்தைத் தகைகைக் குடலாய் கொற்றக் குடையான பர்வதம்.

கோவல் நகர் 1078/3. தடந் திகழ் ... *. திருக் கோவலூர்.

கோவலப் பட்டம் 303/3. ... கவித்து *. இடைய ரென்னும் பட்டம். கோவலர் குட்டன் * 35/2. ராஜபுத்ரன். 277/2. இடைப்பிள்ளை கோவலூர் 2068/4 தண் ... *. திருக் கோவலூர்.

கோவிந்த ஸ்வாமி 1422/1. திருமலையில் ஒரு பக்தர். திருமங்கையாழ்வாருக்கு முற்பட்டவர்.

கோவி நாயகன் 1051/3. கொண்டலுக் துயர் ... ...*. கோபீ ஜந வல்லபன். கோவின மன்னர் 1302/4. கோ - பூமி. பூமியிலுள்ள இள மன்னர் - யுவ ராஜாக்கள். கோவினர் 1005/2. ஐவர் ...*. அரசர்கள்.

கோவை 1/2. " நித்ய ஸூரிகளோடே ஒரு ... யாக்கி " வரிசை, சேர்த்தி. கோவைச் செவ்வாய் * 293/2. கோவைப் பழம் போலே சிவந்த அதரம்.

கோவைத் தமிழ் 1367/3. ... மால் கலியன்*. அடைவான தமிழ். கோவை - கோர்வை. லக்ஷண க்ரமத்திலான தமிழ்.

கோவை மணாட்டி 599/1. ... ... நீ கொழுங் கனி கொண்டு *. கோவைக் கொடியாகிய பெண்.

கோழம்பம் 258/4. கொடிராகில் ... மே *. குழப்பம். கோழி 491/4. ... அழைத்தன காண் *. கோழி 3601/1. கொடிக் ... *. மயில். கோழிக் கோன் 667/3. ... குலசேகரன்*. உறையூருக்கு ராஜா.

கோழை 3101/3. "... ப் பையலார் வந்து மிடறு பிடிக்க," சிலேஷ்மமும் க்ஷுத்ரனும்.

கோழை 937/ (?). அசதுரன். 3808/4. " கோழைகளா யிருப்பாரை த்ரவ்யம் வாங்க நினைத்தால் ". ம்ருது ஸ்வபாவர்.

கோழைப் படும் 2085/2. " நீரை யடைக்கப் புக்கால், ஓரிடமடைக்க ஓரிடம் ... மா போலே". நெகிழ்ந்து கரையும்.

கோள் பட்டாய் 3009/4. திருமாலால் நெஞ்சம் ... *. பறியுண்டாய், கொள்ளப் பட்டாய். கோள் மன்னி 3633/4. ... யாவி யடும் *. மிடுக்கை யவலம்பித்து, கொள்கையிலே விருப்பைப் பண்ணி.

கோள் முதலை 1140/1. ... ... வாளெயிற்று *. ம்ருத்யு போன்ற முதலை. **1620/1.** கொடிதான முதலை. **2880/3.** மிடுக்கையுடைய முதலை.

கோள் வாய் 3462/ப்ர. " அவன் வந்து கலந்து பிரிந்த ... ... பொறுக்க அரிதாயிருக்கும்". புதுப் புண்.

கோள் வா யரவணை * 3938/2. மிடுக்கான முகத்தை யுடைய திருவநந்தாழ்வான். கோள் ஒளியாய் உஜ்ஜ்வலமான முகத்தையுடைய திருவநந் தாழ்வான்.

கோள் விடுக்கும் 2353/3. விளங்கு மதி ... ... *. வ்யஸநத்தைப் போக்கும். **கோள் வினை யாட்டியேன் 3244/3.** கோளான வினையை உடையேன், கோள் க்ரஸிக்கையாய் முடிக்கை. மிடுக்காதல் முடித் தல்லது விடாத பாபத்தைப் பண்ணின நான். மிடுக்காகில் அநுபவைக விநாசியமான பாபம்.

கோளரவு 3221/1. குறைவில் தடங்கடல் ... *. ஒளியும் மிடுக்கு முடைய திருவநந்தாழ்வான். **கோளரிமா 2769/2.** கொன்னவிலும் ... *. மிடுக்குடைத்தான ஸிம்ஹம். பர்ய்மா குதிரை, கைமா யானை - என்னுமாப் போலே அரிமா ஸிம்ஹம்.

கோளரி மாதவன் 557/3. ... கோவிந்தன் *. ஸிம்ஹம் போலே மேனாணிப்போடு கூடிய பரம ரஸிகன்.

கோளரி யேறு 3021/4. கோபால ... *. ஸிம்ஹ சிரேஷ்டம்.

கோளியார் 3246/2. ... கோவலனார் குடக் கூத்தனார் *. கொள்ளு மவர், கொள்ளுகையையே இயல்பாக வுடையவர்கள்.

கோளிருள் 3635/1. கொள்கின்ற ... ளை *. மிக்க இருள். மிடுக் குடைய இருள். கோட் பாடு - அழகு, அழகான இருள்.

கோளிழைத் தண் முத்தம்* 3634/2. இழை கோள் தண் முத்தம். இழை - நூல், கோள்கை - கோப்புண்கை. இழையிலே கோப்புண்ட குளிர்ந்த முத்து. அல்லது, கோள் - ஒளியைத் தனக்கு இழையாக ஆபரணமாக வுடைய குளிர்ந்த முத்து.

கோளிழைத் தாமரை * 3634/1. நூற்கால் தாமரை, இழை நூல் கொண்ட தாமரை. கொள்கையிலே, மநஸ்ஸை அபஹரிக்கையிலே துணிந்திருக்கிற தாமரை. கோள் - அழகு. தன்னழகே தனக்கு ஆப ரணமா யிருக்கிற தாமரை. தேஜஸ்ஸே ஆபரணமாயிருக்கிற தாமரை.

கோளிழைத்து 3633/4. கொடியேனுயிர் ...*. அழகைப் போக்கி. **கோளுண்டானன்றி வந்து * 3843/1.** ஒரு உபகாரம் கொண்

டன்றிக்கே நிர்ஹேதுகமாக வந்து. **கோருண்டு 3842/4.** என்னுருயிர் ... டே *. மாள புஜித்து. நிச்சேஷமாக புஜித்து.

கோற் கீழே வர்த்திக்க வேணும் 3873/2. " ஐயர் ... ... மென்று நினைத்திருந்தோம்." கோல் - ஆஜ்ஞை.

கோற்றேன் 1035/3. ... பாய்க் தொழுகும்*. கோல்களிலே வைத்த தேன். **கோற்றேன் 1361/4.** ... முரலும் கூடலூரே *. சோலை களிலே படிந்த வண்டு. **கோறம்பு 259/1.** திருநெற்றிமேல் திருத்திய ... *. குறம்பு, நெற்றிப் பட்டம். கோரம்பு வேறு.

கோன் 338/1. குலவிளக்காய் நின்ற ... *. **கோனூர் 341/2.** அமரர் தம் ... *. ஸ்வாமி. **கோனேரி 677/4.** ... வாழுங் குருகு *.

கௌசலை 719/1. மன்னு புகழ் ... *. **கௌத்துவம் 378/3.** ... முடை கோவிந்தன் *. கௌஸ்துபம். கௌத்துவமாய் செய்தான், கபடமாய் — என்ற பொருளில் பேசுகிறோம். அதல்ல இது. **கௌவைக் களிறு* 1164/3.** ஆரவாரமாய்ப் பிளிறுகிற ஆனை. கவ்வை - பழி வேறு.

ச

சக்ரவத்து 3217/1. சக்ரவர்த்தி. '' நடைச் ... ப் பிடிக்கலாம்படி.'' நடைச் சக்ரவர்த்தி என்று விருது பிடிக்கலாம் படியுள்ள நடை யழகுடையவன்.

சக்கரச் செல்வன் 1432/4. கிளர்ந் திடர்ந் துகந்த ...*. சக்கரத் தால் அழகா யிருப்பவன். அழகுக்குப் பத்திரம் கட்டுவாரைப் போலே யாயிற்று திருவாழி. பத்திரம் - கத்தி.

சக்கர நல் வலத்தன் / தையாய் 3129/1. திருவாழியை அழகான வலவருகே யுடையவன். **சக்கரப் பொறி 463/2.** ... ... யொத்திக் கொண்டு *. திருவாழி முத்ரை. சக்ராங்கநமான திருவிலச்சினை.

சக்ரபாணி 765/4. ... யல்லேயே *. சக்கரத்தைப் பாணியில் - கையில் உள்ளவன். **சக்கரம் பரிதி 3079/3.** சீர் சங்கு ... *. சக்கர மாகிற சூரியன். சக்கரம் சூரியனைப் போன்றது.

சகடர் 414/2. உருளுடைய ... ரையும் *. சகடாசுரன். **சகடு 131/1.** கள்ளச் சகடு *. சகடம். **சகலங்கள் 2495/1.** "தேர்ச் சகலங் கள்." தேரின் மேல்குப்பிகள், பாகங்கள்.

சங்கணித் துறைவன் 3923/2. பொருநல் ... *. சங்குகளாலே அணியப் பட்ட துறையை யுடையவன். தாம்ர பர்ணி நதியிலுள்ள இத் துறையில் வாழும் சடகோபன், நம்மாழ்வார்.

சங்கத் தமிழ் மாலை 503/5. ... முப்பதும் தப்பாமே *. திரளாக அநுபவிக்க வேண்டிய தமிழ் மாலை.

சங்கதை 3748/4. ஒண் ... வாளாழியான் *. சங்கு கதை என் பதில் கடைக் குறைத்தல். **சங்கம் சரிந்தன 3682/3.** ... சாயிழந் தேன் *. சங்கம் - வளை. வளைகள் கழன்றன.

சங்கம் விட்டு 876/2. ... டவர் கையை மறித்து *. இனி பிழைக் குமென்கிற ஆசையை விட்டு, சுற்றுமிருக்கிற திரள் குலைந்து.

சங்க(ம)மெடுத்து 1080/1. அடல் சுரி ... *. சங்கம் சேர்த்து.

சங்கமலி தமிழ் மாலை 1237/4. ... பத்திவை *. சங்கப் புலவர்கள் திரள இருந்து தமிழ் கொண்டாடப் புக்கால் இத்தையே கொண்டாடும்

படியான தமிழ்த் தொடை. சங்கப் புலவர்கள் - கவி ஸங்கத்தையுடைத் தான சங்கப் பலகை வித்வாங்கள்.

சங்க மிருப்பார் 495/3. ... போல் வந்து *. அனு கோலக்கமாக இருக்குமவர்கள். அனு கோலக்கம் - நெருங்கியிருக்கும் அந்தரங்கமான ஸபை. **சங்கமுகத் தமிழ் மாலை** * 1187/4. தமிழுக்குக் கடவார் திரள இருந்தால் இத்தையே எப்போது மொக்கக் கொண்டாட வேண்டும் படியிருக்கிற தமிழ்த் தொடை. சங்கத்தாரின் முகத்திலுள்ள, சங்கத் தாருக்கு எதிரிலுள்ள தமிழ் மாலை.

சங்கரன் 393/3. ... சடையினில் தங்கி *. சிவன். **சங்கரையன்** 573/4. ... யா, உன் செல்வம் *. சங்குகளுக்கு ராஜாபோல் சிரேஷ்ட மான பாஞ்ச ஜந்யம்.

சங்க வண்ணன் 766/4. ... அன்ன மேனி *. கிருத யுகத்திலே சேதநர் விரும்புகைக்காக சங்கம் போலே வெளுப்பாயிருக்கிற திரு மேனியை யுடையவன். **சங்கற்பித்து** 507/4. ... த் தொழுது வைத் தேன் *. ஸங்கல்பித்துக் கொண்டு.

சங்காயம் 3242/ப்ர. ஆனைப் புல். நல்ல மரத்தில் புல்லுருவி போலே பயிர்களி னிடையே முளைக்கும் களை. “சங்காயம் வாரின பயிர் சத சாகமாகப் பணைத்துப் பலிக்குமாப் போலே”. பயிர் தன்னிலே யுண்டாய் அறியாதார்க்குப் பயிர் போலே பிரதிபாஸித்து, வாரிப் பொகடாத போது நெல் பதர்க்கும் படியா யிருப்பதொன்று.

சங்கிடுவான் போத்தந்தார்* 487/4. சங்கிடுகை. சங்காபிஷேகம், அல்லது சங்கு ஊதல். பூஜை செய்வதற்காக போகின்றூர்கள்.

சங்கிப்பன் 3674/2. அறிவொன்றும் ... *. ஸந்தேஹிப்பான்.

சங்கிலிகை 86/1. தொடர் ... *. சங்கிலி. **சங்கின் வலம்புரி** 47/1. ... யும் சேவடிக் கிண்கிணியும் *. வலம்புரி சங்கு. சங்குகளுக் குள் வலம்புரியா யுள்ளது — என்று சொல்லடைவில் பொருள்.

சங்கையாகி 288/4. ... யென்னுள்ளம் *. சங்கித்து, ஸந்தே ஹித்து. **சங்கையும் துணிவும்** 1295/1. ... பொய்யும் மெய்யும் *. ஸம் சயமும் நிச்சயமும்.

சங்கோதப் பாற் கடலான் 2292/1. சங்குகளோடே கூடின திரையை யுடைத்தான திருப்பாற் கடல். **சசி பதி** 3622/3. நின்ற ... யை *. இந்திரன். சசி என்னும் இந்திராணிக்குப் பதி, பர்த்தா.

சஞ்சலம் செய்யும் சலவர் 340/1. கலங்கப் பண்ணும் விஷமிகள், கபடிகள். ச்சலம் - கபடம்,

சட்டம் 3577/1. "புழுகூற்றிச் ... பொகடுவாரைப் போலே." புழுகு சட்டம், அல்லது புனுகு சட்டம். சட்டம் என்று புனுகுப் பூனையின் பீஜத்துக்குப் பெயர். ஊற்றிச் சட்டமிடுகை எப்படி என்று அறியவேண்டும்.

சட்டைப் புரை 895/2. "... க்குள்ளே யிட்டுக் கொள்வார்". சட்டை, அங்கி, சொக்காய். புரைக்குச் சொல் சேர்த்தி தவிர பொருளில்லை. சடகோபன் 2931/2. ... குற்றேவல்கள் *. நம்மாழ்வாருக்குத் திருநாமம். சரீரத்திலுள்ள சட வாயுவை வென்றவன்.

சடக்கு 621/1. "உனக்கு நோயென் — என்று கேட்கும்படியாய்த்து இவன் மோஹித்த ...". "சடக்கெனச் சென்று சேருங்கோள்". 1157/ப்ர. சீக்கிரமாக. சடார் என்று போனான் — என்பது சடக்கின் கொச்சை. "மாறி மாறி வருகிற சடக்கு" 2684/2. "சாரிகை வந்த சடக்கு". 3600/1. வேகம்.

சடங்கு 1193/3. சந்தி வேள்வி ... *. காம்ய கர்ம, வைதிகக் கிரியை. சடா பாரம் 2816/2. தன்னுடைய கூழைச் ...*. ஜடா பாரம்.

சடாயு 746/1. ... வை வைகுந்தத் தேற்றி *. ஜடாயு, பெரிய வுடையார். சடை முடி யண்ணல் 3179/3. நான் முகனும் ... லும் *. ஸாதக வேஷத் தோடே கூடின சிவன்.

சண்ட மண்டலம் 818/1. ... த் தினூடு சென்று *. கடிதான ஸூர்ய மண்டலம். சண்டம் - கடிது. சண்டாள சண்டாளர்கள் * 3195/2. சண்டாளர்களுக்குள் மிக மிக நீசர்கள்.

சண்ணம் 95/4. சிறுச் ... *. மூத்திரம். சண்பகம் 546/3. கள்ள விழ் ... *. சம்பகப் பூ. செண்பகம் என்று எகரமும் உண்டு.

சத்தியம் 878/3. ... காண்மினேயா *. ஸத்யம், நிச்சயம், பிரதிஜ்ஞை, பிரத்யக்ஷம். சத்திரம் 118/1. ... ஏந்தித் தனியொரு மாணியாய் *. குடை, ச்சத்ரம். சத்ருக்கனன் 1074/1. பரதனும் தம்பி ... னும் *. சத்துருக்கன் என்றும் காண்கிறது.

சதங்கை 42/2. ... கலந்தெங்கு மார்ப்ப *. சலங்கை. சங்கிலி வேறு, அது ஒலிக்காது; சலங்கை ஒலிக்கும்.

சதித்து - கொன்று "ஊட்டிச் சதித்து". (தனி சுலோ. விஷயே தே). சதிர் 3770·3. முற்றுக் தவிர்ந்த ... நினைந்தால் *. சாதுர்யம். இல்லை

கண்டீர் ... ரே *. 3784/4. நெற்றி அல்ப்பமாய் பலம் கனக்கப்பெறு மதிறே சதிராவது. நெற்றி – பிரயாஸம், சதிர்பாடு. அநாயாஸேந பஹுபலம் பெறலாம் ப்ரவ்ருத்தி. சாதுர்யம், வாய்ப்பு, நல் விரகு.

சதிர் கேடன் 1034/2. "ஸ்த்ரீ பரதந்த்ரனாய் அவர்களுக்கே ஆவன தேடி துக்கப்பட்டு ... னாய், இளிம்பனானேன்". கௌரவம் குலைந்தவன். சதிர்த்தேன் 941/4 அடியேன் ... இன்றே *. சதிரானேன், வென்றேன், சதுரனானேன்.

சதுர் கண் டொழிந்தேன் 3328/4. கண்ட ... *. நேர்ப்பாடு, சாதுர்யம். சதிர் நினைந்தால் 3770/2. முற்றும் தவிர்ந்த ... *. (முற்றும் தளர்ந்தன) இனி உறவது பார்க்கில்.

சதிர் மூர்த்தி 3778/1. வினையை நாசஞ் செய்யும் ... *. ஸாமர்த்தியத்தையுடைய ஸ்வாமி, சது மூர்த்தி யென்று பாடமானால் நாலு வடிவு, பல வடிவு, அநேக விக்ரஹங்களை யுடையவன்.

சதி ரடிப்பார் 3165/ப்ர. (9). "பகவத் ஸம்பந்திகளன்றிக்கே சிஷ்டாபிமாநிகளா யிருப்பாரையும் சதிரடிப்பாரையும் அபஹ்ருதரையும் பெருமையடிக்கும் அல்ப்ப சந்தோஷிகள்.

சதிரன்/ரா 463/2. தாமோதரா ... *. விரகன். ஸமர்த்தன்.

சதிராக நடந்து 109/3. தன் கணத்தாலே ... வந்து *. அழகாக நடந்து. சதிரிள மங்கையர் 560/2. ... தாம் வந்தெதிர் கொள்ள *. வடிவழகும் பருவமுமுள்ள பெண்கள். சதிர் - அழகு. இளமை - பருவம். சதிரிளமடவார் * 3111/1.

சதுகு 1200/1. "... கையும் மண்ணையும் கூட்டித் துகைத்து". காளம். சேதுகு என்றும் சில இடங்களில்.

சதுப் புயன் 893/1. ... தாளின் *. சதுர் புஜன். சதுப்பேதிமார்கள் 910/1. அயல் ... *. சதுர்வேதிகள். நாலு வேதமும் கற்றவர்கள். சதுமுகன் 169/2. சந்தச் ... தன்னை *. சதுர்முகன் நான்முகனான பிரம்மா. சது மூர்த்தி சதிர் மூர்த்தி பார்.

சதுர மாமதிள் 930/1. ... சூழிலங்கை *. சதுரச்ரமாய் கட்டனைப் பட்டிருக்கிற துர்க்கம். சதுர மென்று தம்மைத்தாமே* 3785/1. சதுரம்– சதிரை யுடையோம். சதுரர்கள் 192/3. ... வெள்ளறை நின்றாய் *. ஜ்ஞாதாக்கள், அறிவாளர்.

சதுரன் 348/2 சாந்தணி தோள் ... *. சதிரையுடையவன்.

சந்தங்களாயிரம் 3989/4. சடகோபன் சொல் ... *. ச்சந்தோ ரூபமான வேத ரூபமான ஆயிரம் பாட்டுக்கள்.

சந்தச் சதுமுகன் 169/2. ... தன்னைப் படைத்தவன் *. சந்தம் - அழகு. அழகான சதுர் முகன், சந்தம் - வேதம். வேதத்தைதயுடைய பிரம்மா. **சந்தச் சரிவளை 49/2.** சாதிப் பவளமும் ... யும் *. அழகான சரிகளும் வளைகளும். **சந்தணிந்த** மென் முலை * **1139/2.** ... ... மலராள்*. சந்து - சந்தனம். **சந்ததி 404/1.** மருமகள் தன் ... *. புத்திரன், **சந்தப் பூ 1582/3.** ... மலர்ச் சோலை *. சந்தன மரத்துப் பூ.

சந்த மர்(ல்) குழலாள் 1073/3 சந்தனப் பூ மாறுதே யிருந்துள்ள குழலை யுடையவள். சந்தம் - நிறம், அல் - இருள், நிற மிருண்ட குழலையுடையவள்.

சந்த மலர்ச் சதுமுகன் * 1251/2. சந்தஸ்ஸையும் தாமரை மலரையு முடைய சதுமுகன். **சந்தனக் குழம்பு 1110/1. சந்தனங்கள் 408/3.** தழுப்பரிய ... *. சந்தன மரங்கள்.

சந்தார் தலை 995/2. கையகத்தோர் ... கொண்டு *. சந்துகள் - நரம்புகள் வந்து கூடுகிற தலை. **சந்தானச் சாபம் 931/2.** " ... வைத்தான்". சாபம் - குட்டி. " விரோதிகளை அறுக்கு மன்று ஸந்தானத்துக்கு ஒரு குட்டி வைக்குமாப் போலே". ஸந்தாநம் - வம்சம். அத்தை யழிக்காமல் விருத்தி செய்வதற்காக ஒரு குட்டியை - குழந்தையை உயிரோடு வைப்பது 2489/3 (நம்). 2512/2 (பெரி).

சந்தி 929/2. வானவர்கள் ... செய்ய *. ஆராதநம். தருக்கேல் நம்பி ... நின்று *. 200/2. நாற் சந்தியில் நின்று ... கண்டீர் *. 261/4. ஊர்ப் பொதுவான ஸ்தலம்.

சந்திக் காக்கை 1932/1. " ... ... கள் மேலே ஸஞ்சரிக்க பிள்ளைகள் அனுங்குவர்". ஸாயங்காலத்தில் பறக்கும் காக்கைகள். **சந்தித்து 3576.4.** ... உன் சரணம் சார்வதே *. கிட்டி.

சந்தி மாட வீதி 1282/3. மலையிலங்கு நிரைச் ... ... *. ஒன்றோடொன்று சந்தித்துச் செறிந்திருந்துள்ள மாடம்.

சந்தியின் வாய் 1454/2. இருக்குறு மந்தணர் ... *. ஸந்த்யைகள் தோறும் பிராமணர்கள். **சந்திர மண்டலம் 95/1.** திரை நீர்ச் ... *. பூர்ண சந்திரன். **சந்தி வேள்வி சடங்கு 1193/3.** ... நான் மறை *. சந்தியும், வேள்வியும், சடங்கும்.

சந்தை 715/2. " தென்னிலங்கைக் கோன் என்கிற சந்தை", (அரு). வார்த்தை, சொல்,

சந்தோகன் 1896/3. ... பவுழியன்*. ச்சுந்தஸ் ஸாமம் அறிந்தவன், வேதத்தாலே அறியத் தக்கவன்.

சப்பரை: புரணிக்கு அர்த்தம் 888/3 ல் "சப்பரையான முடி" (சி. அரு). 3198/1. **சப்பாணி** 75/4. காணி கொண்ட கைகளால் ... *. சப்பாணி கொட்டுகை, குழந்தை இரு கையும் சேர்த்துக் தட்டுகை.

சம்படவர்கள் 1270/2 (அரு). செம் இல்லாமல் சம் உண்டு போலும். **சம்பத்து** 2916/1. அடங்கெழில் ... *. ஐசுவரியம்.

சம்பறுத்தார் கைக்குப் போக வேண்டுமோ 3294/4. அரும்பதம் மௌனம். சம்பறுத்தார்க் கைக்கு என்று பாடாந்தரமாகக் குறிப்பு காண்கிறது. அநுபந்தம் பார்.

சம்பான் 3183/4. ஓடம். **சம்பான் மரம்** 692/4 (அரு). ஓடம்.

சம்பிரதம் 273/1. மணி வண்ணன் மலையு மோர் ... *. இந்திர ஜாலம், கண்கட்டு வித்தை. பாஹ்ய காரணங்களும் அந்த:கரணமும் கூடாமல் சக்ஷுரிந்த்ரிய ப்ரதாநயாகச் சிலர் காட்டும் வித்யா விசேஷம்.

சம்புகன் 749/1. செறிதவச் ... *. தவம் செய்ய அதிகாரம் இல்லாத இவன் தபஸ் செய்ததாய் ராம ராஜ்யத்தில் பிராம்மணச் சிறுவன் இறந்தது காரணமாக ராமன் இவனை வாள் வீசிக் கொன்றான்.

சம்மட்டி 1205/3. "விடு நகமும் ... யு மிட்டு நலியா மிற்க".

சம்மதித்து 3785/1. தம்மைத் தாமே ...*. இசைந்து. **சம்மானம்** 500/2. யாம் பெற ... *. கொண்டாட்டம்.

சமைந்து 3445/1. "பாடிச் ..." முடிந்து. **சமைந்தேன்** 1784/1 "அதெல்லாம் செய்து ...". செய்து தலைக் கட்டினேன்.

சமண் 1054/1. தருக்கினால் ... செய்து *. அவைதிக ஸித்தாந்தம், க்ஷபணக ஸித்தாந்தம், அமண தர்சநம், சமண மதம், ஜைந மதம்.

சமண் குண்டர் 1102/1. ... முதலாயோர் *. சமண தர்சநத்தை தர்சித்துக் கொண்டு நிற்கிற நீசர். குண்டு - ஆழம். அத்தால் தாழ்ச்சியாய் நீசர் — என்றபடி. **சமணத் தொண்டர்கள்** 1053/1. துவரியாடையர் மட்டையர் ... *. சமணர். **சமணம்** 878/1. புத்தொடு ... *. ஜைந மதம். **சமணர்** 3334/1. இலிங்கத்திட்ட புராணத் தீரும் ... ரும் *. ஆர்ஹதர், பிரம்ம ஸம் ஹ்ருதி சிஷ்டரான சமணர்.

சமணர் முண்டர் 879/1. வெறுப் பொடு ... *. சமணரும் சைவரும். **சமத்து** 1581/1. தென்னிலங்கை வெஞ் ... *. யுத்தத்தில், பூசலில் சமம் - பூசல். ஸமரம் என்பதில் இடைக் குறைத்தல்.

சமய நீதி நூல் 3159/1. ... என்கோ *. வைதிக மதத்துக்கு உபகாரமாயுள்ள இதிஹாஸ புராணாதிகள். வேதார்த்தத்தை விளக்கும் நூல்கள். **சமயங்கள் காப்பான்** 2468/4. ... ... அவை கண்டானவை காப்பான் *. வைதிக மதங்கள்.

சமய விருந்து 2468/2. இந்திரனார்க் கிட்ட ... *. சமயத்தாலே, ஸங்கேதத்தாலே, கட்டுப்பாட்டாலே ஏற்பட்ட விருந்து.

சமயிகள் 2521/2. அறமுதல் ஞானச் ... *. ஸித்தாந்திகள், நிஷ்டர், வ்யவஸ்கிதர்.

சமர்த்து 1023/1 (அரு). " சிறு பிள்ளையாயுண்ட ... ம், மதிகெட்டுப் போகாதபடியான ... ம் " சமத்து, சாமர்த்தியம்.

சமன் 3777/2. ... னிலாத பல பரப்பி *. ஒப்பு, உபமானம்.

சமன் கொள் வீடு 3149/1. ... தருந்தடங் குன்றம் *. ஸாம்யாபத்தி ரூபமான மோக்ஷம்.

சமிதை பாதி ஸாவித்ரி பாதியாக வன்றிக்கே அவனுடைய நிர்ஹேதுக க்ருபையாலே 3075/4. உபா கர்மத்தின் மற்றைநாள் பிரம்மசாரிகளுக்கு ஆயிரம் ஸமிதை யிடுதல் இல்லாவிட்டால் ஆயிரம் காயத்ரீ ஜபம் பண்ணுதல் செய்யாதே ஐநூறு ஸமிதையும் ஐநூறு காயத்ரியுமாகப் பண்ணலாகாது. 3790/2, 474/7, 911/1.

சமிதையிடா மாணியைப் போலே தானே சூழ்த்துக் கொண்டு கிடக்கிற படி 875/1. சுப்பிலாலே தன்னை வளைத்துச் சூழ்த்துக் கொண்டு கிடக்குமொரு ஜந்து விசேஷம். சிலந்தியாகலாம். ஸமிதை என்று ஸகாரமா யிருப்பதை சகாரமாக்கி இங்கே சேர்த்திருக்கிறது. சுப்பிலுக்கும் ஸமிதைக்கும் பொருள் அநுபந்தம் காண்க. 2140/2. சுப்பலே மேலே சூழ்த்துக் கொள்ளுகிற பூச்சி.

சமைய வைம் பூதம் 1306/1. சந்தமாய்ச் சமயமாக்கி ... *. வ்யவஸ்தித ஸ்வபாவமான பிருதி வ்யாதி பஞ்ச பூதம்.

சமைய வளர்ந்த முலை 620/2. "... களானவை உள்ளே குடிபுகும்". நன்றாக வளர்ந்தது. **சமைய விட்டுக் கொண்டு** 3598/3. " ஸர்வேசுவரனோடொக்க இன்னா ரின்னா ரென்னும்படி தந்தாமைச் ... ". ஸுக்ருத விசேஷத்தாலே யாக்கிக் கொண்டு. அதாவது உத்க்ருஷ்டாம்படி பண்ணிக்கொண்டு என்றபடி.

சயத்திரதன் 335/3. ... தலையைப் பாழிலுருள *. **சயப் புகழார்** 3131/2. ... பலர் வாழும் *. ஜயிக்கையால் வந்த புகழையுடையவர்கள்,

சய மரம் 20/2. ... கோடித்து*. தோரணம் நாட்டி அலங்கரித்து. சயமே தேமலர்ப் பொழில்* 1272/2. ஸமூஹமான தேமலர்ப் பொழில் சய: - ஸமூஹம், திரள். சயமே யடிமை தலை நின்றார்* 3771/3. ஸ்வய மாகவே தாங்களாகவே எல்லா அடிமைகளையும் செய்பவர்கள். அடி மையின் தலையில் எல்லையிலே நின்றவர்கள்.

சயனத்தர் 17/2. தண்டினர் பறியோலை ... *. படுக்கையை யுடை யவர்கள். சயனம் 492/2. பஞ்ச சயனத்தின் மேலேறி *. படுக்கை.

சரங்களாண்ட தண்டாமரைக் கண்ணன் 1571/4. அம்புகளை நடத்தின புண்டரீகாக்ஷன். சரண் 1425/1. எந்தை நின் ... என் னுடை மனைவி *. உபாயம்.

சரணங்கள் 3927/1. தலைமேல் புனைந்தேன் ... *. திருவடிகள். சரணம் 3693/4. சங்கு சக்கரக் கையவ னென்பர் ... மே *. புகலிடம்.

சரக்காள் (ப்ர. பரி). "ஈசுவரன் தானே ··· ளாய் வந்து" ஸ்வாமி யாய் உடையவனாய், சொந்தக்காரனாய் வந்து.

சரக்கிலே வாங்கி 494/3. "கைப் பட்ட பெண்களைச் ... க் கைப் படாதவர்களைக் கைப் படுத்துகைக்காக வுண்டான உபாயம்" வஸ்த் துக்களோடே சேர்த்து, தன் சரக்காக்கி.

சர கூறல் 572/1. "ஆயிரக் காதம் நூற்றுக் காதம் போய்ச் ... ... லிலே முழ்கித் திரியாதே". செத்தை விழ்ந்து ஊறிக் கிடக்கும் புராண புண்ய தீர்த்தங்கள்.

சரணம் சார்வது 3576/4. ... தே வலித்த *. திருவடிகளில் சேர் வது. சரணமே சரணம் 1006/2. உன் தன் ... மென்று *. திருவடி களே சரணம். சரணல்லால் சரணில்லை * 688/1. திருவடிகளைல் லாது வேறு உபாயமில்லை.

சரணும் 1636/4. உனதடியே ... மே *. சரணமாகும். சரணு மறை 2141/1. ... பயந்த தாமரையான் *. உபாயங்களை அறிகைக்கு ஸாதனமான வேதம். சரதம் - அமோகர். "பகவத் சமாச்ரயணம் நதி மாத்ருகம் போலே சரதம்." நிச்சயம் என்னுமாம். "சரதமாக பிக்ஷக் கைக் கிட்டின துர் வியாதி நசிக்கும்" 3665/1.

சரற்காலம் 569/1. ... ல சந்திரன்*. சரத்ருது ஐப்பிசி கார்த்திகை மாஸங்கள். சரா சரங்கள் 750/1. அன்று ... *. ஸ்தாவர ஜங்கமங்க ளான ஸகல ஜந்துக்களும்.

சராவம் - மடக்கு 1200/1. "கட சராவாதி காரியங்களாக நிர்மிக்கும்". சருவம் என்பது சராவத்தின் திரிபு.

சரித்து 2952/1. இரு வினைகளும் ... *. போக்கி. **சரிதை** 248/3 தன் ... கேட்டான் *. **சரிவளை** 261/4. ... கழல்கின்றது *. சரியும் வளை. முன் கை வளை. 581/4. தான் கொண்ட ... *.

சலகு 3345/2. " ... கில் கிடந்த முத்துக்கும் பொன்னுக்கும் அழுக்கேறின நாள் அறிவாரில்லை." முத்துச் சிப்பி.

சலங் கலந்த செஞ் சடை * 864/1. கங்கா ஜலத்தை ஸாகல்யேந தன்னுள் அடக்கினதாய் சிவந்த ஜடை. **சலங் கலந்த பொய்கை** 387/1. விஷமே ப்ரகாரமாய் அத்தோடே யமுநா ஜலமும் கலந்த பொய்கை. **சலங் கொண்ட சொல்லார்** * 1482/1. கபடோக்திகளைச் சொல்லக் கடவ ஸ்த்ரீகள்.

சலங் கொண்ட இரணியன் * 1228/1. சிற்றத்தையுடைய இரணியன். **சலங் கொண்டு மலர்** சொரியும் மல்லிகை * 1228/3. இசலி இசலி (போட்டி யிட்டுக் கொண்டு) மலர் சொரியும். **சல சயனம்** 1628/3. சிறு புலியூர் ... த்துள்ளும் *. ஜல சயநப் பெருமாள் வர்ந்திக்கும் இடம் சல சயனம். சலம் - ஜலம்.

சல சல பொழிந்திட 396/1. சல சல என்று பொழிந்திட. சல சலப்பு. **சலஞ் சூழ்ந் தழகாய** சாளக்கிராமம் * 990/4. ஜல ஸம்ருத்தியை யுடைத்தாய் அழகான ஸாளக்ராம க்ஷேத்ரம்.

சலஞ் செய்யாதே 57/3. சந்திரா ! ... *, வெறுப்புச் செய்யாதே. **சலமிலாவணில்** * 898/2. சலம் – வியாஜம், சலிப்பு, கபடம்.

சலவர் 340/1. வஞ்சகம் செய்யும் ... *. க்ருத்ரிமமாய் அநுகூலரைப் போலிருந்து பிரதிகூலம் பண்ணுமவர்கள்.

சலவன் 990/4. அரக்கர்க் கெஞ்ஞான்றும் ... *. சத்ரு. **சலன் சலனென்றிட** 97/2. தன்னிய லோசை ... *. சல சலப்பிட. **சலார் பிலார்** 86/1. துடர் சங்கிலிகை ... *. சலார் பிலார் என்னுமோசை.

சலிக்கும் 412/4. ஒ ... ஒளியரங்கம் *. அசையா நிற்கும். **சலிப்பின்றி யாண்டு** * 3192/4. ... சலந மில்லாமல் ஆண்டு.

சவடிப் பூணூல் 3224/4. இட்ட ... லும்" பொன் யஜ்ஞோப வீதம் சவடியும் பூணூலும். சவடி – அரை நாண், உடை நாண்.

சவர் கழியும்படி 3608/2. உவர். " விளை நிலம் உவர் கழியும்படி நீரைத் தேக்கி வைக்குமாப் போலே " உவர் - சவர், சவரணை 579/1. 1522/1, 3352/2. கட்டுக் கோப்பு, ஆனைப் பண் தூர்க்கச் ச வ ர ணை பார். நன்று யிருப்பாரை, " உன் சவரணை குலைய" — என்று பெண்டு கள் திட்டுவதுண்டு.

சவி 948/ப்ர. " வயிறு நோவா நின்றது ... என் பார்." வை.

சவி கொள் பொன் முத்தம் * 3157/1. சவி யென்று பொன்னிலே வந்தால் புகராகக் கடவது; முத்திலே வந்தால் நீர்மையாகக் கடவது. புகரை யுடைத்தான பொன். நீர்மையை யுடைத்தான முத்து. முத்துக்கு நீர்மையாவது அழகாதல் குளிர்த்தியாதல்.

சவிப்பார் 3169/4. என் ... மனிசரே *. ஜயிப்பார், ஜபிப்பார், சபிப்பார். சவை 326/2. மிக்க பெருஞ் ... *. சபை, திரள், ஓலக்கம்.

சழக்கு நாக்கு 434/2. ... கொடு புன் கவி சொன்னேன் *. அசுத்தமான நாக்கு, பொல்லாங்குள்ள நாக்கு.

சனைத்து 3528/2 (?). " பிரிவுக்கு ... தூது விட ". சறும் புகை : சறை பார். சறை (கை சறை) 3311/4. ... கவராத தளிர் நிறத்தான்*. சறை கைமணி யென்று ஒரு மணி உண்டாயிற்று, இடையர் அரையிலே கோத்துக் கட்டி முன்னே போகா நின்றால் அந்த த்வநி வழியே பசுக்க ளெல்லாம் ஓடிவரும்படியா யிருப்பதொன்று. சறை யென்று தாழ்வாய் பிரதாந வர்ணங்களில் ஒக்க எண்ண வொண்ணாத தாழ்ந்த இடைக் குலத்திலே பிறந்தவர்கள். சறை யென்று சறும் புகையாய் அல்லாத இடையர் விஷ்வயாந ஸங்க்ரமங்களுக்கு உடம்பிருக்கத் தலை குளித்தல், உடம்பிலே துளி நீரேறிட்டுக் கொள்ளுதல் செய்வார்களாகில், அதுக் கும் அவஸர மற்றிருக்கு மாயிற்று, பசுக்களின் பின்னே திரிகையாலே. சறை கை மணி - மர மணி. சறும்புகை – பேணாமை. சறும் புகையை – அழுக்கூருகையை யுடையவர், அழுக் கூர்ந்த வுடம்புடையவர்.

சன்ம சன்மாந்தரம் 3192/4. ... காப்பாரே *. இந்த ஜந்மமும் மறு ஜந்மமும். சனக ராசன் 329/4. ... தன் வேள்வி *.

சனங்கள் 3168/4. சாது ... ளிடையே *.

சாக்கியர் 3334/1. சமணரும் ... ரும் *. பௌத்தர். சாகேன் 878/3. தலையறுப்புண்டும் ... *. சாவேன். சாங்கம் 3376/3. " அவனுடைய ... என்னளவில் கண்டிலேன் ". வில் லும் பக்ஷபாதமும். " பெருமாள் பக்கல் ... மிறே இப்படிச் சொல்லுவித்தது" 3387/3. " சப ஸ்ருதயை யானுள் அவர் பக்கல் ... த்தாலே". 3445/4.

சாடி 33/2. சகடத்தைச் ... *. உதைத்து. சாடிறப் பாய்ந்த தலை வன் * 386/3. சாடு - சகடம், சகடாஸுரன். அவன் இரும்படியாக, முடியும்படியாகப் பாய்ந்த தலைவன்.

சாடு சாடுபாதன் 837/1. ... னே *. சாடு - சகடாஸுரன் முடியும்படி சாடின - உயரத் தூக்கின பாதத்தை யுடையவன்.

சாண் சந்தை 1003/2. " இந்தச் ... யும் நெஞ்சில் படாத போது செய்யாத துண்டோ ". சிறு வாக்கியம்.

சாண் சாணரைப் புல்லாய் பசுகு பசுகென்று அறுக்க அறுக்கத் தொலையாதே கிடந்ததிறே 2478/அவ. (நம்). நீளமான புல் மாட்டுத் தீனிக்குப் பயன் படாது. சாண் சாணரை நீளமுள்ள புல் பசுமையாய் முளைத்திருப்பதையும் அறுக்க அறுக்க உடனே முளைப்பதையும் சொல்லுகிறது. சாணகச் சாறு 3240/1. பஞ்ச கவ்யம். பசுஞ் சாணம், பால், தயிர், நெய், பசு மூத்திரம் — இவ் வைந்தையும் மந்திரம் சொல்லிச் சேர்ப்பது. சாணம் 2072/ (பட்). " இறுக்கின ... " அரைக் கச்சை. இடுப்பில் கட்டும் பட்டை.

சாணரைப் புல் 2478/அவ. (நம்). சாணிச் சாறு 2965/3. "அந்தணன் ... ற்றேருபாதி சுத்தன்."

சாத்த 200/3. திருக்காப்பு நானுன்னைச் ... *. இட. சாத்தன் 2689/1. தாரார் நறு மாலைச் ... ற்கு *. சாஸ்தா, அய்யனுர்.

சாத்தாக 3780/4. " திருவநந்தபுரத்துக் குச் ... ப் போகாநிற்சச் செய்தே ". திரளாக. சாத்தினாற் போலே 2057/1. பெரிய திருவடியை மேற் கொண்டால் திருப் பரியட்டத்தைக் கொய்து ... அங்குத்தைக்கு அலங்காரமாயிருக்கை.' உடுத்தினாற் போலே.

சாத்துப்படி 3254/1 (12). "கூனியிட்ட சாந்து போலே தகுதியான சாந்து ..." சாத்துப்படி - சந்தனம் 3360/3 (12). "மாநாஸாநுஸந்தாநத்தாலே ... சாத்தி " (வா. மா. 434). ஸ்ரீரங்கத்தில் திருமஞ்சன காலத்தில் சந்தனம் எடுத்துக் கை நீட்டுகைக்கு சாத்துப்படி என்றே அருள்பாடு; சாத்துப்படி என்றே எப்போதும். அலங்காரம் செய்வதற்கும் சாத்துப்படி என்றே சொல். சாதிக்கலுற்று 3998/4. எம்பரம் ... *. சாதிப்பதாக, செய்வதாக ஏறிட்டுக் கொண்டு.

சாதிக்கின்றது 3589/4. ஆரை இனிக் கொண்டு ... *. காரியம் சாதிப்பது. சாதித்து 3217/3. சாய் கொண்ட இம்மையும் ...,*. தந்து,

பண்ணித் தந்து, உண்டாக்கித் தந்து. "தீர்த்தம் சடகோபம் சாதி" — என்னும் வைஷ்ணவ பரிபாஷை இந்தத் தமிழிலிருந்து உண்டாயிற்று.

சாதி நல் வயிரம் * 3157/2. நல்ல ஆகரத்திலே பிறந்த நல்ல வயிரம். ஆகரம் - உத்பத்தி ஸ்தாநம். சாதி - பிறவி. ஜாதி - ஜந்ம.

சாதி நாலு 3194/1. குலந்தாங்கு ...*. பிராம்மணாதி ஜாதிகள் நாலு. சாதிப்பதற்கு 3169/1. கஞ்சனைச் ... *. நிரஸிப்பதற்கு, முடிப்பதற்கு. சாதிப் பவளம் 49/2. ... மும் சந்தச் சரிவளையும் *. ஆக்க ளன்றிக்கே ஜாதியான பவளம். ஆக்கள் - ஆக்கினவை, க்ருத்ரிமங்கள். பிறவியிலேயே பவளமா யுள்ளவை.

சாதி மாணிக்கம் 3156/4. சங்கு சக்கரத்த னென்கோ ... ... த்தையே *. போலி யல்லாத நல்ல மாணிக்கம், ஆகரஜமாய் பெரு விலையுள்ள இரத்தினம்.

சாதி யந்தணர்கள் 914/2. தமர்களில் தலைவராய ... *. பிறவியினால் பிராம்மணர்கள், பிராம்மணராய்ப் பிறந்தவர்கள். சாதியாவகை 3563/2. உன் திருவடி ... . தடுத் தென்னெபறுதி *. பெறுதபடி, கிட்டாதபடி, பிராபியாதபடி.

சாதிலிங்கப் பொடி 261/1. சிந்தூரப் பொடி.

சாது கோட்டி 285/4. ... யுள் கொள்ளப் படுவார் *. ஸ்ரீ வைஷ்ணவர் திரள். சாது சனங்கள் 3168/4. ... இடையே*. சாதுவாய் 3126/2. ... மின் புகழ் தழைதலல்லால் *. நன்ருய். சாந்தம் 8/3. மெய்யிட நல்லதோர் ... *. சந்தநம். சாந்து 72/1. நெய் தயிர் ஒண் ... *. சந்தனம். சாந்துப் பரணி (?). சந்தனக் கிண்ணி.

சாபம் 494/8. எங்கள் மேல் ... இழிந்தேல் *. துக்கம்.

சாம்பவான் 1865/2. ... உடன் நிற்கத் தொழுதோம் *. வ்ருத்தராய் நன்மை தீமைக்குக் கடவ ஜாம்பவான்.

சாமம் 438/3. ... ம வேத நாண்மலர் *. ஸாம வேதம். சாமத்து நிறம் 578/1. ... கொண்ட *. சியாமமான நிறம், கறுத்த நிறம்.

சாம நிறத்தன் 3830/4. பசுஞ் ... *.

சாம மா மேனி 1748/2. ... யென் தலைவன் *. கண்டார் கண் குளிரும்படியான கருப்பு மாமேனி.

சாமரை 1220/3. வெண் ... யோடு பொன்னரி *. சாமரம். சாமரைக் கற்றை 1840/3. ... சந்தனமுந்தி * சாமரத் திரள்.

சாமாறு 189/2 ... அவனை நீ யெண்ணி*. சாகும்படி. சாமாறும் கெடுமாறும் 3320/1. ... தமருற்றார் *. உயிர் போகையும், பொருள் அழிகையும்.

சாமியப்பன் 1064/2. திசை முகனார் தங்களப்பன் ... *. ஸாம வேத ப்ரதிபாத்யனான காரண பூதன். அப்பன் - காரணன்.

சாய்க்கும் 415/4. இருமாந்து பொன் ... புனலரங்கமே *. தள்ளி விடும். சாய் கரகம் 582/2. "... த்தை உயர வைத்துத் தண்ணீர் வார்ப்பாரைப் போலே, காணவே விடாய் கெடும்படி உயரவேறி வர் ஷிக்கிறிகோளிறே". "விடாயர் இருந்த விடங்களிலே ... சாய் கரம் போலே உயர வைத்துக் கொண்டு வந்து காட்டும்". 3045/2. தண் ணீர்ப் பந்தலிலே உயர வைத்து சாய்க்கிற கரகம்.

"சாய்கரம் போலே அம்ருதத்தைக் கொண்டு வந்து கொடுக் கைக்குத் திருவடி (யின்) முதுகிலே வந்து தோன்றின படி". 3198/2. விடாய்த்தவன் முகத்திலே நீர் விழும்படியாக தண்ணீர்ப் பந்தலிலே உயர வைத்த கரகம். (1655/1, 3556/3). தண்ணீர்ப் பந்தலில் வெளியே நீட்டி வைத்திருக்கும் குழாய். நம் பெருமாளுக்கு திருமஞ்ஜன காலங்களில் தீர்த்த பாத்திரமான கிண்டியை எடுத்துக் கொடுக்க "திருக் கரகக் கையேல்" என்று அருள்பாடு. கரகம் - சரித்து எடுக்க வேண்டிய பாத்திரம், மூக்குள்ளது, கிண்டி. கும்பம் கரகம் என்பதில் கும்பம் பிரதாந தேவதையை அவாஹிக்க. கரகம் சில்லரை தேவதை களை ஆவாஹிக்க. காளி முனியப்பன் முதலானோர் சில்லரை தெய்வங் களாகையாலே அவர்களுக்குக் கரகம் எடுப்பது என்றும், பகவானுக்கு கும்பாபிஷேகம் செய்வது என்றும் சொல்லுகிறோம்.

சாய் கொண்ட இம்மை * 3217/3. ஒளியுடைத்தான ஐஹிக ஸுகம். சாய்விலாத குறுந் தலை 287/2. ... சில பிள்ளைகளோடு *. சாய்வு - ஒடுக்கம். குறுந்தலை - தண்மையில் தலைமை. சாய்விலாமை, துர் வியாபாரம், அதுவாகிய தண்மையில் தலை நிற்பவர்.

சாயல் சாமத் திருமேனி * 3715/3. சாய் - சாயல், ஒளி. ஒளி யுடைத்தாய் சியாமமரன திருமேனி. சாயால் கரியான் 2598/1. நிறத் தால் கரியனாயுள்ளவன். சாயிழந்தேன்* 3682/3.

சாயை 455/2. நீ ... அழிவு கண்டாய் *. தேஜஸ், நிழல்.

சார்கின்ற நன்னெஞ்சினார் * 2489/4. அபிநிவேசித்துப் போரு கிற, பற்றுடைய நல்ல மனது. சார் கொடான் 3003/2. நோயும் ...* அணுகக் கொடான், அணுக விடான்.

சார்ங்கத்தான் 2302/3. சக்கரத்தான் சங்கினன் ... *. சார்ங்க வில்லை யுடையவன். சார்ங்கத் துன பாதம் * 3554/4. சார்ங்கத்தை யுடைய உன் திருவடி. சார்ங்க நாண் 2104/1. தழும்பிருந்த ... ... *. சார்ங்க வில்லில் பூட்டிய நாண் - கயிறு.

சார்ந்தவர் 2464/2. ... க்குத் தன்றுற்றுன்*. ந்யஸ்த பர ரானவர்கள். சார்ந் தொழிந்தார் 2591/2. தானே அணுக்கராய் ... *. கிட்டி விட்டார். சார்வது சதிரே * 3110/4. சார்வதே சதிர். தெற்குத் திருமலையைக் கிட்டுவதே பாக்யம். சதிர் - சாதுர்யம்.

சார்வதே வலித்த தையல் * 3576/4. சாரவேணுமென்ற உறுதியோடிருப்பவன். சேர்ந்தநுபவிக்க வேணுமென்கிற சிக்கெனவை யுடையவள். சார்வம் 2219/2. தமக்கென்றும் ... *. ஆச்ரயம், ஆதாரம். சார்வரியர் 2593/2. அவர்தாம் ... ரானர் *. கிட்ட அரியர். சார்விலாத தனிப் பெரு மூர்த்தி* 2575/3. தனக்கொரு ரக்ஷகன் தேவையில்லாத தனிப் பெரு மூர்த்தி.

சார்விலா மூர்த்தி 2655/2. தனி நின்ற ... *. சார்வு 3923/4. உரைத்தன இவையும் பத்தவற்றின் ... வே *. ஒப்பு, சேர்த்தி.

சார்வு நமக்கென்றும் சக்கரத்தான்* 2381/1. ரக்ஷகன். சார்வே தவநெறிக்குத் தாமோதரன் தாள்கள் * 3924/1. நிச்சயம்.

சாரகில்லாவே 2031/4. என்றும் வினையாயின ... *. அணுக மாட்டா. சாரணர் 925/3 மாதவர் வானவர் ... இயக்கர்*. தேவஜாதியிலே உலாவித் திரிந்துகொண்டே யிருக்கும் சிலர். சாரதி 1145/2. தேரேறு ... யாய் *. ஸாரதி. சாரம் 3137/2. அற்ப ... ங்களவை *. ஸாரம், பசை. சாரல் 322/3 தேனமரும் பொழில் ... *. மலைச் சரிவு.

சாரா 1517/3. பாடு ... பழ வினைகள் *. அணுகா. சாரிகை 3583/2 சாரிகைப் புள்ளர் 2496/3 வாழியரோ ... *. மண்டலாகாரமாக வாரா நிற்கிற புள். சாரிகை - வட்டமாக ஸஞ்சரிக்கை, வையாளி.

சாரேன் 3970/1. பிறவி கொடுத்தேன், பிணி ... *. கிட்டேன்.

சால் 2370/2. படிந்துழ ... *. பூமி, உழுதீ பள்ளம். சால்பு 2550/4. ... பின் தகைமை கோலாம் *. அமைவு, மர்யாதை. சால்பு சார்பாய் ரக்ஷகம். சாலக் கொடுமைகள் 428/1. ... செய்யா நிற்பர் *.

சாலக வாசல் 254/3. மங்கை ... பற்றி *. பலகணி த்வாரம். சாலகம் - பலகணி. சாலத் தருமம் 551/4. ... பெறுதி *. மிக்க தர்மம். சாலப் பணி யுண்டா யிராநின்றது 1808/ப்ர, மிக்க சிரமம்,

சாலப் பல நாள் 3541/2 ...உகந்தோறும்*. அநேக காலம். சாலப் பன்னிரை 260/1. மிகவும் பலவான பசு நிரை. சாலப் பெரும் பறை 499/6. ... யே பல்லாண் டிசைப்பாரே *. மிகப் பெரிய பறை. ஒரு மன்றிலே த்வநிக்கையன்றியே எங்கு மொக்க த்வநிப்ப தொரு பறை. மன்றில் – பொதுச் சாவடி.

சால முதலிகளா யிருந்தீர் 2499/நம்(?). பெரிய யஜமாநரானீர்.

சாலவும் சேய்த்து 503/2. ஊரிலகம் ... *. நெடுந் தூரம், மிக்க தூரம். சாலி 810/1. ... வேலி தண் வயல்*. நெல். சாலேகம் 2780/1. துன்னிய ... சூழ் கதவம் தாழ் திறப்ப *. ஜாலகம் – பலகணி, ஜன்னல். சாலேகள் 1245/3. துன்னு மணி மண்டபங்கள் ... *. யாக சாலைகள்.

சாவ 150/4. வஞ்சமகளைச் ... ப்பாலுண்டு. சாம்படியாக. சாவத் தகர்த்த 343/2. சாம்படி தகர்த்த, சாவடித்த, சாக அடித்த.

சாவது 3915/4. ... இவ் வாய்க் குலத்து *. நசிப்பது. சாவ முள்ளன நீக்குவான்*. 3177/2. சாபம் போலே அநுபாவ்யமான துக்கங்களை நீக்குவான். சாவி போமிறே 3210/3. அவிந்து போம். நெல் சாவி போம், பயிர் சாவி போம்.

சாழல்/லே 1992 — 2001. சென்னி மலர் கண்டாய் ... லே *. தோழி/யே. சாளக் கிராமத் தடிகள் * 997/1. ஸாள க்ராம க்ஷேத்திரத்திலுள்ள எம்பெருமான். சாற்றி 299/2. தாமோதரனுக் கென்று ... *. சொல்லி, பறை சாற்றி, பிரஸித்தமாக்கி.

சாற்றி 476/2. நம்பாவைக்கு ... நீராடினல் *. இட்டு. சாற்றிச் சொன்னேன் 132/3. ... போக வேண்டா *. குன்றுங் குறிச்சியாக (ஏகாந்தமாக) வன்றிக்கே பலரு மறியும்படி பிரஸித்தமாய்ச் சொன்னேன். சாற்றுமினே 581/4. சரிவளைகள் தருமாகில் ... *. அறிவித்துப் போருங்கள். சாற்று வெள்ளம் 3916/3. பழுத்த நல் லமுதின் ... *. ரஸ ப்ரவாஹம்.

சாறு 1151/3. ... கொண்ட மென் கரும்பு *. ரஸம். சாறு பட 3595/4. ... அமுதங் கொண்ட நான்றே *. உத்ஸவமாக, பசை பட, ஸாரம் உண்டாக.

சாறு பெறுத்துமவர் 605/1. "இடங் கொடுத்தார் நெஞ்சிலே கல்லையிட்டு நெருக்கிச் ... ... ரன்றே". சாறு பெறுத்துகை – ஸாரம் வாங்குகை, மூக்குச் சாரம் போடுகை என்றுமாம். மூக்குச் சாரம் போடுகை அநுபந்தம் பார்.

சான்ற 1874/3. ஆற்றல் ... தொல் பிறப்பு *. சார்ந்த. சான்று 1771/1. " சான்றும்படி வந்தான்." ஸாக்ஷி.

சிக்கம் 2569/1. (?). "சரீரமாகிற ... த்திலே." உறி. சிக்யம் ஸம்ஸ்க்ருதம். சிக்கனச் சுற்றம் 379/3. செங்கண் மாலுடன் ... ... மாம் *. கெட்டியான, சலிப்பிக்க முடியாத உறவு. சிக்கன நாடுதிரேல்* 330/2, 336/2. ஊற்றத் தோடே தேடுகிறீகோளாகில். சிக்கன நாமிது சொன்னேம் *. 531/1. இது ஸத்யமாகச் சொன்னேம்.

சிக்குத் தலை 659/4. "பல ... களிலே உபஹதிப்பட்ட கங்கை." பல சிக்குத் தலை - பல ஜடைகளையுடைய தலை.

சிகரமா களிறு 3486/2. ... அட்டதும் *. பர்வத சிகரம் போலே யாயிற்று பெருத்திருக்கிறபடி. ஆனைமா மலை யென்னக் கடவதிறே.

சிகலுண்டோ 3838/1 (6). சிகல் - குறைவு, கேடு.

சிகை 3324/1. வட்டி. "இவனிட்ட காசு தன்னை யடையத் தன் பேரிலே செலவு எழுதி சிகைக் கடிப்பிக்கும்." அடிப்பிக்கும்(?). கிழாண்டைச் சிகை பார். அங்கே சிகை - நிலுவை, பாக்கி என்று பொருள்.

சிங்கப் பிரான் 446/3. ... அவ னெம்மான் *. ந்ருஸிம்ஹ ரூபியாய் வந்து உதவினவன்.

சிங்க விளக் கெரித்துக் கொல்லாதே 3671/1. "தலையிலே சாணியை வைத்து விளக்கேற்றுகையும், வாலிலே பந்தங்கட்டி எரிக்கையும்". "சிங்க விளக்கெரித்தல் செய்யில் செய்வதென்." 2932/4. ஸிம்ஹா காரமாக ப்ரதிமை பண்ணி அத்தைத் தலையிலே வைத்து எரிக்கை.

சிங்க வேள் குன்றம் 1008—17. அஹோபிலம். நரஸிம்ம மூர்த்தி எழுந்தருளி யிருக்கும் மலை. சிங்காசனம் 334/4. ... த்தே யிருந்தானை *. ஸிம்ஹாஸநம். ஸிம்ஹங்களைக் காலாக வுடைய ஆஸநம். சிங்காமை 1898/2. அறநால் ... விரித்தான் *. சுருங்காமை.

சிசுபாலன் 353/1. பழித்த ... தன்னை*. சிட்டர்கள் 559/2. பார்ப்பனச் ...*. ஸிஷ்டர்கள். சிட்டன் 3575/4.... னே செழு நீர் திருவரங்கத்தாய் *. திருமால், ஸ்ரீக்கு இஷ்டன் ஸிஷ்டன். சிட்டன்.

சிணுங்கி 1888/3. ஏங்கி யிருந்து ... விளையாடும் *. சிராட்டி. சிராட்டப் பெற்று. சித்த மணையாள் 124/2. ... அசோதை *. மனதுக்கு உவந்து நடப்பவள். சித்தர் 925/3. ... ரும் மயங்கினர் *. ஸித்தர்கள்.

சித்திர குத்தன் 441/1. ... எழுத்தால் *. சித்ர குப்தன், யமனுக்குக் கணக்கு எழுதுகிறவன்.

சித்திரம் குத்துமோ என்றிருந்தார்கள் 3586/1. சித்திரம் தீங்கு செய்யுமோ. சித்திர கூடம் 178/1. பொற்றிகழ் ... *. இராம பிரான் எழுந்தருளியிருந்த சித்திர கூட பர்வதம். [மான தேர்.

சித்திரத் தேர் 3640/1. ... வலவா *. விசித்திரமான, ஆச்சரிய

சிதகு 405/1. ... உரைப்ப *. தோஷங்கள். சிதைந்து போம்படி யான துருக்திகள். சிதைக்கின்றது 2510/4. இவள் மாமை ... தே*. அழிக்கின்றது. சிதைகிய பானையர் 3231/2 கருநாய் கவர்ந்த காலர் ... *. பொளிந்த பாண்டத்தை யுடையவர். பொளிந்த - சில்லியான.

சிதைந்து 1185/4. தெட்ட பழம் ...*. நசுங்கி. சிதைந்து 2484/1. கால் ... *. விழுந்து. சிதையாரோ வுன்னோடு * 575/4. சண்டை யிடாரோ! சிதையேல் 514/4. சிற்றில் வந்து ... லே *. அழிக்காதே. சிதைவர் 2659/2. முகம் ... ராமன்றே*. வாடிப் போவர், கிழ்ப்படுவர்.

சிந்தப் புடைத்து 346/1. ... ... செங்குருதி கொண்டு*. சிதற அடித்து, கொன்று போகட்டு. சிந்தனை 928/4. சென்றதா மென ... யே *. மனம், நெஞ்சு.

சிந்தாமணி 1046/1. ... யே திருவேங்கடம் மேய *. சிந்தா விஷயமான பலன்களைக் கொடுக்கும் இரத்தினம். சிந்துதல் சிதறுதலாய் அழிவில்லாத மணி. சிந்தாமல் கொண்மின் * 2382/4. இதை மங்காமல் அறியுங்கோள். சிந்தி 1442/1. முள வெரி ... *. சிதறி.

சிந்திக்கில் 3609/1. சூழல்கள் ... *. ஆராய்ந்தால். சிந்தித்தி 2025/2. திரிவாயென்று ...*. நினைத்திருக்கிறாய். சிந்திப்பே யமையும் * 3787/2. ஸ்ம்ருதி மாத்ரமே, நினைப்பே போதும், நினைத்தாலே போதும்.

சிந்துக் காடுகை 930/3. (அழ). " ... வாரைப்போலே மயில்கள் ஆலித் தாடின. அநுபந்தம் பார்.

சிந்துக் கோன் 1495/2. ... விழ வூர்ந்த *. ஸிந்து தேசத் தரசனான ஜயத்ரதன். சிந்துரப் பொடி 261/1. ... க் கொண்டு *. சிந்தை நோய் 2690/1. திராதென் ...*. மனோ வியாதி. சிந்தையகம் 3795/2, தெளிந்த வென் ... *. சிந்தை. சிந்தையாளி 1636/4. ... யென் சிந்தையான் *. சிந்தையை ஆள்கிறவன்.

சிந்தையான் 1436/4. சிந்தையாளி யென் ... *. ஹ்ருதயத்திலே நித்ய வாஸம் பண்ணுகிறவன்.

சிமயம் 2508/3. ... மிசை மின் மிளிரிய *, மலை, சிகரம்.

சிரங்கள் 1339/1. அரக்கர்தம் ... ளா *. தலைகள். சிரத்தை 776/1. வரத்தினில் ... *. மிக்க ஆதரம். சிரமப் பட்டோம் 516/3. வலைக் கைகளால் ... கிலேசப் பட்டோம்.

சிரமம் செய்த 1340/3. "ஸ்த்ரீகள் ... கிற போதை நாடக த்வநி". பழகுகை. சிரமம் செய்விக்கை 882/4. "... க்கு வந்து கிடக்க, நீங்கள் அநந்ய பரராய்த்திரிகிறிகோளே." பழகுகைக்கு. [னேன்.

சிரமம் தீர்ந்தேன் * 470/4. நினைந்திருந்தே ... *. இளைப்பாறி

சிரீஇதரன் 3083/1. ... செய்ய தாமரைக் கண்ணன் *. ஸ்ரீதரன். சிரீவர மங்கல நகர் 3407/3. சேற்றுத் தாமரை செந்நெலூடு மலர் ... * வானமாமலை க்ஷேத்ரத்துக்குப் பேர்.

சிரைத்தல் 3214/1. "கோட்டை சுமத்தல், புற் சிரைத்தல் செய்ய மாட்டீர்களோ". புல் செதுக்குதல். சிரைத்திட்டான் 309/4. தலையைச் ... வன்மையைப் பாடி *. அழித்தான்.

சில் 1016/4. சில்லி ...... லென்று*. சில்லென்றும் ஓசை. சில்லி 1016/4. ... சில்லென்று சொல் *. சில் வீடு என்னும் பக்ஷி. சில்லியாய் 3231/1. "பொளிந்து ...". ஓட்டையாய். சில்லி - துவாரம்.

சில்லென் றழையேன்மின் 488/2. ... நங்கைமீர் *. சிள்ளென்று காது பொளியும்படி கூப்பிடாதீர்கள். சில்லைவாய்ப் பெண்டுகள் * 3520/2. சிலுகு சிலுகென்னும் ஸ்த்ரீகள், பஹுஜல்பநம் பண்ணும் ஸ்த்ரீகள், வாயாடிப் பெண்கள். சிலுகிடுகை - சண்டையிடுகை. சில் வானவர் (வா. மா. 154). "... ரைப் பற்றி சீர்கேடராகாநின்றார்கள்". அல்பர்கள். சிலம்படி 999/1. ... யுருவில் *. சிலம்பை யுடைய அடி. சிலம்பு - காலணி. சிலம்பார்க்க வந்து * 338/3. சிலம் பொழிந்தும் பஞ்சை யிட்டும் வருகையன்றிக்கே, சிலம்பு த்வநிக்க வந்து. பஞ்சையிட்டு - சிலம்பு த்வநியாதபடி பஞ்சை அதிலே அடைத்துக் கொண்டு என்றபடி. சிலம்பாறு 338/4. சீர் ... பாயும் *. நூபுர கங்கை என்னும் நதி. சிலம்பிய நற் செல்வம் * 1285/4. சப்திக்கிற, முழங்குகிற, புகழப்படுகிற நல்ல பெரிய ஐசுவர்யம்.

சிலம்பினிடைச் சிறு பரல் 1285/1. கால் சிலம்பு ஒலிப்பதற்காக அதில் வைத்த சிறு கல். சிலம்பியலாறு 1836/3. ... டைய திருமாலிருஞ் சோலை *. சிலம்பினுடைய ஸ்வபாவத்தையுடைய ஆறு, நூபுர கங்கை. சிலம்பின 479/1. புள்ளும் ... காண் *. சப்தித்தன, கூவின.

சிலம்பு 999/1. ... அடியுருவில் *. கால் சிலம்பு, பாத பூஷணம். சிலம்பு 2870/4. தீங்குழல் வாய் வைத்தான் ... *. மலை.

சிலம்பும்படி செய்வதே * 2564/4. கூப்பிடும்படி.

சிலர் 1055/1. ... பேசக் கேட்டிருந்தேன் *. சிலவர் 3314/3. "அவர்களிலே ... இவனோடே கை செய்து." சிலர். "நீ செய்கிறவை யெல்லாம் பொறுக்க வல்லார் வேறே சிலவர்கள்" 3467/2.

சிலாதலம் 2339/1. ... த்தின் மேலிருந்த மந்தி *. பாறை.

சிலிங்காரம் 262/1. ... த்தால் குழல் தாழ விட்டு *. சிருங்காரம், அழகு, அலங்காரம். சிலிடம் 2908/3. கரந்த ... *. அல்ப்பமான ஸ்தலம். சிலிர்ப்பவர் 662/4. மெய் ... *. அசைப்பவர், மயிர்க்கூச் செறிபவர். சிலிரா 2693/2. மெய் ... க்கை மோவா *. சிலிர்த்து.

சிலுகு சிலு கென்னும் ஸ்த்ரீகள் - சில்லை வாய்ப் பெண்டுகள் பார். சிலுகு - சண்டை, சிலுகிடுகை - சண்டையிடுகை. சிலுகு படுத்து வதே 10/3. "கம்ஸனுக்கு மறம் பிறக்கும்படி ...". சண்டை யுண்டாக்கு வதே. சிலுகு வாய்ச்சிகள் 3520/2. "... களான நம் சேரியிலுள்ளார்", சிலுகுவாரிகளான நம் சேரியிலுள்ளார் 3520/1 (9), (24). சில்லை வாய்ப் பெண்டுகள், சிலுகிடுகையே ஸ்வபாவமாக உடையவர்கள்.

சிலுப்பி 1923/1. ஒரு செண்டு ...*. சலிப்பித்து. தயிர் சிலுப்பி — என்ற வழக்குக் காண்க. சிலும்ப 2818/2. உம்பர் மேல் ... *. சப் திக்க, கோஷிக்க.

சிலேடைகள் : இரு பொருள் சொற்கள்

[அரும்பதக் காரர்கள் சிலேடைகளை சாடு என்ற சொல்லா லேயே விளக்குகிறார்கள். சாடு என்ற ஸம்ஸ்க்ருதத்துக்கு ஸாமர்த்தி யம் என்று பொருள். சாடு என்ற ஸம்ஸ்க்ருத வார்த்தையை தமிழில் சரியாக உச்சரிக்கும்படி எழுத்து இல்லை. சாடு என்பதை விட சிலேடை என்ற சொல் தமிழ் இலக்கணத்தில் அதிகமாக வழங்குவதால் இந் தச் சொல்லின் கீழ் அ முதல் வ வரையிலுள்ள எழுத்துக்களில் முத லெழுத்து வரும் சொற்களை மாதிரிக்காக சில காட்டுகின்றோம்.

சிலேடைச் சொற்கள் அகர முதல் சாங்கம் வரையுள்ள எழுத்து வரிசையில் முன்னே விவரித்தவற்றுக்கு சொற்களை மட்டும் காண்க. விவரிக்கப் படாதவற்றுக்கும் இனி வரப் போகிறவற்றுக்கும் சுருக்க மாகப் பொருள் காண்க.]

அச்சு : அச்சாயிறே இருப்பது — பார்.

அடிக்கழிவு, அடிப்பட, அடிப்பாடு, அடிபட, அடி பற்றின மருந்து, அடியற்ற பேச்சு, அடியற்றுல் வாடும், அடி யறியாதார், அடியிட்ட படி, அடியில் ஸுகம், அடியிலே தலையாக வாழ, அடியிடுகிருர், அடியிலே பிறந்துடைய கந்தம், அடியுடையார், அடி விடாதே கொள்ளுங்கோள், அடி விடார், அடுத்தூணாக வுடையவன், அடுத்தேருக, அரி மிதியான, அரு மிதியான, அல்லிலே கிடந்து நோவு படுகிருள், அறக் கை விஞ்சி ருன், அறற்றலையாய் 3285/1. இவை அந்தந்த எழுத்து வரிசையில் விளக்கி யிருப்பது காண்க.

ஆகாசவாயர் 3485/4. "... எனக்கு எதிரோ". வாய் - இடம். ஆகாசம் பரமாகாசம் அதுவாகிற இடத்திலே யுள்ளவர். ஆகாசத்தைப் பார்த்து வாய் திறந்திருக்கும் தரித்திரர். ஆகாச வாயன் (?). 3161/1. "... னுக்கோ இடுவது". பரமாகாசத்திலுள்ள பரம புருஷன் ஸ்வபாவார்த்தம். ஆகாசத்திலிருப்பவன், இருக்க இட மில்லாதவன் என்று த்வநி. ஆசை யில்லாத ஜகத்து ஆசை - திக்கு. அது இல்லாதது, நாதன் இல்லாதது.

இடையிலே பிச்சேறி: இவளிடையிலே ஆசைப் பட்டாயிற்று கோட்டிடை ஆடிற்று" 690/1 (?). இடையிலே - இடுப்பழகிலே, கோட்டிடை - ஏழு எருதுகளின் கொம்புகளினிடையே. இறையிலி.

கடலோடத் தட்டில்லை 1768/3. "உத்தேசியம் கைபுகுந்தால் ...". கப்பல் வர்த்தகம் செய்கையும் திருப் புல்லாணியில் கிடக்கையும்.

கண் காணக் கைவிட்டுப் போயிற்று 3385/3. கண் காண - ப்ரத்யக்ஷமாக, அவளுடைய கண்ணழகு காண்கையில் கை நழுவிப் போயிற்று. கண்ணறையர் 3444/2. "கண்ணுடையனு யிருக்கச் செய்தேயும் ... செய்வதைச் செய்தான்". கண் - கண்ணும் தயையும். கண்ணறையர் - அந்தர், கிருபாஹீநர்.

கண்ணுடையார் செய்வதும் செய்திலை 3470/3. கண்ணுடையவர், தயை யுடையவர். கண் வட்டக் கள்ளன் 2994/4. கண் வட்டத்தில் வர பயப்படுகிறவனும் டங்கசாலையில் க்ருத்ரிமப் பணம் அடிக்கிறவனும்.

கரபாதை யிறே இவனை இப்படிக் கலங்கப் பண்ணிற்று — என்று அடுத்தேருக வந்த கரத்தைக் கழித்து ப்ராப்தமான கரத்திலே நிறுத்தினவனே (?). கரம் - கையும் கப்பமும், அடுத்தேருக - அதிகமாக, அடுத்தடுத் தேறின.

கழி சிறை 629/1. அம்பு. சிறகையுடைய கழி. க்ஷுத்ரன் என்று த்வநி. கழிசிறையானுன் என்று இகழ்கிருேம். சிறை - சிறகு. அதைக் கழிக்கவேண்டிய துஷ்டனுனன் என்று பொருள்.

கழுத்துக் கட்டி 3915/1 (?). "அல்லாதா ரடங்கலும் ... யாயிற்று இருப்பது". கழுத்துக் கட்டி போலே பாதக மென்று ஸ்வபாவார்த்தம், கழுத்திலே கட்டின லிங்கம் — என்று த்வநி.

கறையடி: கறை சேர் பருந்தாட் களிறு பார். கன்னமிட்டுங் காணவேண்டும் கன்னமிட்டுக் கொண்டும் பார்.

கால் கூறு 3196/1. "தன் படிக்குக் ... ம் போராதத்தை யிறே அமுது செய்தது." படி பூமியும் உடம்பும், கால் கூறு: கால் பாகமும் பாத ப்ரமாணமும்.

கைக்கு மேலேந்தும் காட்டிக் காணும் இவனுடைய ஆபரணம் வாங்கிற்று (?). திருக் கையிலிருக்கிற பஞ்சாயுதங்களைக் காட்டியென்று ஸ்வபாவார்த்தம். குறடு கிறி விளையாடுகிற வளவிலே அஞ்சுக் கையி லக்காய் ஒரு பருக்கை யிருந்தால் கைமேலே அஞ்சு போட்டு வெட்டு கிறேன் என்று ஓட்ட மோடி. அப்படியே போகட்டு அத்தை வாங்கு கிறேன் என்று சாடுவுக்கு அர்த்தம். குறடு கிறி ஆடுகை - பாண்டி ஆடுகை. கைகண்டு 3287/3. "நான் இது ... டன்றே சொல்லு கிறது". கையில் கண்டு, பிரத்யக்ஷமாகக் கண்டு.

கை செய் திருக்கையாலே 3583/2. கை செய்கை - அலங்கரிக்கை யும், ஸஹாயம் செய்கையும், யுத்தம் பண்ணுகையும்.

கைப் பற்று 3207/4 (?). "வாணனுடைய ... றையும் கழித்து இறையிலியாக்கினுய்". கைப் பற்றையும் - கைவசமானத்தையும், கைகளைப் பற்றி உடையவனு யிருந்தமையையும். இறையிலியாக்கி - இறை யில்லாதவனுக்கி. இறை - தேவதையும் கரமும். கரம் - கப்பம்.

கை பார்த் திருப்பார் 3314/3. "ஒருவன் ... ... அநேகருண்டா கில்" ஒருவனுக்குப் பர தந்தரரா யிருப்பா ரென்றும் கையிலே இருப்பா ரென்றும். திருச் சங்கு பற்றி வார்த்தை இது.

கைம் முதல் 3132/4. "நீ தந்த ...". இஷ்ட ஸாதந பூர்த்தி த்ரவ் யம் — என்று த்வநி. "வாணனைக் ... லறுத்து தலே யழியாமே வைத்த தலைமை" தலைமை - சிரைஷ்ட்யம்.

கைம் மேலே 3314/3 "... இலக்கை பெருதார்க்கு அன்ருடு படி விட வேணுமிறே". கை மேலே - ஸத்ய:, உடனே. இலக்கை - மாஸச்

சம்பளமும் லக்ஷ்யமும். கை(ம்) மேலே தான் அகப்பட்ட படியைச் சொல்லுகிறாள். 3385/3. திருக் கையிலே யிருக்கிற ஆயுதங்களின் சேர்த்தி யழகிலே என்றும் பிரத்யக்ஷமாக என்றும். " கைமேலே தீர்த்துக் கொண்டு வருகைக்கும் பரிகர முண்டோ" 3204/2. ஸத்ய: உடனே என்றும் கையில் திருவாழியாலே என்றும்.

கைமேலே முடிவார் 3349/4. கையாலே குத்திக் கொண்டு முடிவார், யுத்தத்திலே முடிவார் — என்று இரண்டு பொருள். கை - யுத்தம். பாரதம் கை செய்து, யுத்தம் செய்து. " வாணனுடைய நெஞ்சு வலி கைமேலே போம்படியாக அவன் தோளைத் துணித்தான் "3207/3. (?) நெஞ்சு வலி - உள் வன்மை, கைமேலே - உடனே, கையோடே. "கைமேலே காணலா யிருக்கிறது காணுமிவள் மெலிவு" 3913/1. பிரத்யக்ஷமாக என்றும் தோளிலே என்றும்.

கை வந்த படி 3491/2. " ஈசுவரன் ... செய்யாதவர்களைக் கைமேலே தண்டிக்கை பிரஸித்தம் ". கை வந்தபடி - சொன்ன படி. கைமேலே பிரத்யக்ஷமாக, ஸத்ய:

கை விஞ்சினான் 3316/2. " இவன் அறக் ... என்று கரத்தைக் கழித்து விட்டார் ". கைகளை அதிகமாக வுடையவன் என்றும் கைக்கு அடங்காமலிருந்தான் என்றும்.

கைகழிய 3207/3 (?). "வாணன் கைவிஞ்சினா னென்று அவனைக் ... விட்டான் ". கைகளைக் கழித்தான், ரக்ஷியாமல் நழுவ விட்டான்.

கொம்பு 960/1. "ஒரு கொம்புக்காக இரண்டு கொம்பிலே விழுந்தான் ". கொம்பு - ஸ்த்ரீ. ஆயர்தம் கொம்பான நப்பின்னைக்காக எருதுகளின் கொம்பில் விழுந்து பொருதான்.

சங்கை யற்றிருந்தேன் ; நீங்கள் சங்கை யுடையீ கோளா யிருந்தீகோள் 3682/1. சங்கு - வளையும் ஸந்தேஹமும். நான் வளையில்லாமலிருந்தேன் - ஸந்தேஹமில்லாம லிருந்தேன் ; நீங்கள் வளையுள்ளவர்களாய் ஸந்தேஹிகளா யிருந்தீர்கள்.

சாங்கம் 3376/3. " அவனுடைய ... என்னளவில் கண்டிலேன்." வில்லும் பக்ஷபாதமும். "பெருமாள் பக்கல் ... மிறே இப்படி சொல்லுவித்தது." 3387/3. சிவிட்கு: சொல் வரிசை பார்.

சுரம் 872/2. " வாலி பேர் கேட்க வஞ்சி ... மடைந்தார் மஹாராஜர் (ஸுக்ரீவன்)". சுரம் - மலையும் ஜ்வரமும். ரிசியமுக பர்வதத்தில் ஒளிந்தவன் சுரமடைந்தான் - மலையி லிருந்தான். ஜ்வரம் அடைந்தான் என்பது த்வநி.

தலை 3190/3. " ஒரு ... சேர்ந்தால் பின்னை யெல்லாம் வேண்டின படி அநுபவிக்கலாமிறே". ஸமுத்ரத்துக் குள்ளே ஓடத்திலே யிருக்கிற வன் ஒரு சாஸ்திரத்தைக் கொண்டு கரையேறினால் அநந்தரம் வேண் டினபடி மௌக்த்யாதிகளை (முத்து முதலியவற்றை) அநுபவிக்கலாம் என்றபடி. தலை - கரை, சாஸ்திரம். " ஒரு நூலைப் பற்றி நிற்கிறவர்களை அது தானே ஒரு தலை சேர்த்து விடுகை நிச்சிதமிறே." 3190/3. நூல் - யஜ்ஞோப வீதமும் சாஸ்த்ரமும். நூலென்றது ஸமுத்ர யானம் பண்ணு கிறவர்கள் கடலிலே சம்பான் மேலே மேல் தட்டிலே யிருந்து படிக்கிற நக்ஷத்ர சாஸ்திரம். ஒரு தலை சேர்த்து விடுகை - ஒரு கரை சேர்த்து விடு கை. தலையாக ஜீவித்து 3207/3. "அத் திருவடிகள் பெறில் ... அதில்லை யாகில் இல்லையாம் நான்". தலையிலே வைத்துக் கொண்டு ஜீவித்து. நன்றாக ஜீவித்து.

தலையான மதியை யுடையவன் 3161/2. தலையிலே யான மதியை சந்திரனை யுடையவன். தலையான - சிலாக்கியமான, மதி - ஞானத்தை யுடையவன். திருமுகம் மறுத்துப் போனவர்க்கு எத்தைச் சொல்லுவது (?). பிராட்டி முகமும் ராஜ சாஸநமும். ஸ்ரீ முகம்.

தாரை : சிவிட்கென்று வில் பார்.

நிறம் 3308/4 " நிறத்திலே அவன் ஆதரிக்கு மென்றன்றோ இத் தால் காரியமுள்ளது ; அல்லது நிறக்கேடா மித்தனையிறே". நிறத்திலே முறையிலே, நிறக் கேடு - காந்தி ஹீநம்.

நுனியாடிகள் 3314/3. ஹஸ்தாக்ரவர்த்திகளும் ஸேகாக்ரவர்த்தி களும். "இவர்கள்தாம் (சங்கு சக்கரங்கள்) ...".

நூல் : ஒரு தலை சேர்த்துவிடுகை பார்.

படி 1345/அரு. "ஸ்ரீ வாமநன் படி யநுஸந்திக்க, அது ஒரு படியன் றிக்கே, இரு படியாலே படி யெல்லா மளக்க, இப்படி இன்னமொரு படி யுண்டோ என்றாராய், ஒரு படி இரு படியான (இரண்டு விதமான நரங்கலந்த சிங்கமான) நரஸிம்ஹத்தின் படியை அநுபவிக்கிறார்."

படி : பல படியாலும் அடிமை செய்யப் பெறுவர் 3318/4. படி - சரீ ரமும் ப்ரகாரமும். படி விட 2966/1. " அவன் தன்னையே பற்றி அவன் ... ... ஜீவித்திருப்பர்." படி - அரிசி. படி விடும் 476/3 (?). " புண்ய பாபாநு ரூபமாகப் ... ஸர்வேசுவரன்". படி - திருமேனி. ஸாக்ஷாத் கார மாக்குவன், பலன் கொடுப்பான்.

படியும் நடையும் கிடைக்கும் 3285/4. படி - அநுபவமும் ஜீவநமும், நடை - கைங்கர்யமும் விருத்தியும்.

படியெடுத்துக் காட்டுகிருள் 3535/1. தேஹத்தைக் காட்டுகிருள், ஆபரண ஜாலத்தைக் காட்டுகிருள் — என்று த்வநி. படி களைவது - (ஆபரணம் களைவது) என்று கோயில் பேச்சு.

ஒரு கைக்குப் படையாயிருக்கும் 3341/1. படை, ஆபரணம், சேனை, ஆயுதம். கை - ஹஸ்தமும் யுத்தமும். "இதுதான் ஆபரணமுமாய் வினைத் தலையில் ஆயுதமுமா யிருப்பது; ஒரு கைக்குப் படையா யிருக்கு மிறே." படைத் தடைத்து விடுகை 3491/2. "... ... த்து விட்டான்". படை - ஆயுதமும் சேனையும். படைக்கு செலவிட்டான், திருவாழிக்கு செலவிட்டான். அடைத்து விடுகை - செலவிடுகை.

பா 3254/2. "இவருடைய பா நல்ல நூலாகையாலே வான் பட்டாடையாயிற்றுக் காணும். நல்ல நூலாக வேணுமென்று அடியிலே நோற்று நூற்றவரிறே." பா - ச்சந்தஸும் நூலும். நூல் - சாஸ்திரமும் தந்துவும். நோற்கை - ஸாதநாநுஷ்டாநம் பண்ணுகை. நூற்கை - பண்ணுகையும் நூல் நூற்கையும். அடி - ஆதி, ஆரம்பம், முதல், திருவடி. அடியிலே நோற்கை - திருவடியிலே நோன்பு நோற்கை, விரதம் கிடக்கை.

பாகிலே பிடி பட்டவள் 3286/4. ஸாரத்ய வேஷத்திலே, பிரகாசத்திலே ஈடுபட்டவள். பா - ப்ரகாசம். (எப்படி ?)

பொடி பட்டுக் கிடக்கிறது 3270/2. "அது ... என்று அறிகிறிலள். தூளியா யென்றும், பராஹதமாய் என்றும்.

பொய்ம் முடி (?). "அல்லாதார் முடிகளைப் ... யாக்கும்படி தலையான முடி". பொய்ம் முடியாக்கும் - அஸத் ஸமமாக்கும், சப்பரையான முடி. தலையான முடி - தலையிலே இருக்கிற முடி, சிரேஷ்டமான முடி.

மால் 3244/4. "மார்பத்து மாலைக்கு அவன், அம்மாலுக்கு மால் இவள்" மால் - வியாமோஹமும், பரத்வமும்.

மாலைக் கண் 3020/1. "மாலைக் கண்ணனென் றிருப்பார்க்கு அல்லாத தெல்லாம் மாலைக் கண்ணாய்த் தோன்றும்". மாலை - ஸர்வேசுவரனை, கண் - ரக்ஷகம் என்றிருப்பார்க்கு, மற்றை வஸ்துக்களெல்லாம் மாலைக் கண் ராத்ரியில் பதார்த்த அதர்சந சக்ஷுஸ்ஸா யிருக்கும், ராத்ரியில் காணமுடியாத கண்ணுயிருக்கும்.

முடி: "உபய விபூதிக்கும் ஒரு ... யிலே கட்டுண்ணும்படி கவித்த முடியிறே". ஒரு முடியிலே - முடிச்சிலே, கவித்த முடி - வைத்த கிரீடம்.

மெய் 3210/2. " தன்னை ... யாக அறியாதவன். அசித் ப்ராயன், தன்னை பகவச் சரீரமாக, ஸத்யமாக அறியாதவன்." மெய் - உடம்பும் ஸத்யமும். " மெய்யான குடல் துடக்கிறே. இவனுடைய பொய்யோடு மெய்யோடு வாசியற இவனுக்கு இரண்டும் உடலாயிருக்கும் ரக்ஷிக் கைக்கு" (?). குடல் துடக்கு சரீர சரீரி ஸம்பந்தம்.

வ்ருத்தம் : " இவனுடைய ... கைமேலே காணலாம்படி யிருக்கும்" வ்ருத்தம் - ஆசாரம், வ்ருத்தம் - சக்கரம், திருவாழி. கைமேலே பிரத் யக்ஷமாக, கையின் மேல்.

வலக்குறி 3195/2. " இவர்கள் உத்தேசிய ராகைக்கு என்ன ... உண்டு". வலக்குறி பலமான அடையாளம். வலது கையில் திருவாழியும் வல மார்பினில் ஸ்ரீவத்ஸ மென்னும் மரு - மச்சமும்.

வாய்க் கரை 3457/4. கை கழியப் போய் நின்று ரக்ஷிப்பதும் கை விடாதே ... ... யிலே நின்று ரக்ஷிப்பதுமான திவ்யாயுதம். சங்கு சக் ரம் இரண்டில் சக்கரம் கைவிட்டுப் போய் சத்ருவைக் கிட்டிக் கொன்று ஆசிரிதரை ரக்ஷிக்கும். சங்கு ஸர்வேசுவரனுடைய கையை விட்டக லாதே வாய்க் கரையிலே (மேலெழ), வாயருகே இருந்து கொண்டே முழங்கி சத்ருவை முடிக்கும். வாய்க் கரை – மேலெழ என்றும் வாய ருகே என்றும் அர்த்த த்வயம்.

வாயாடி : வாய்க் கரைப் பற்றை அடுத்தூணுக வுடையவன் **3315/4.** வாயிலே ஸஞ்சரிப்பவன், வாயால் முழங்குகிறவன். திருச் சங்கு. வாய்க் கரைப் பற்றை – ஸர்வேசுவர னுடைய அதரத்தை, அடுத்தூணுக வுடையவன் – கிட்டின ஜீவநமாக வுடையவன்.

விடை 3311/2. " நப்பின்னைப் பிராட்டியை விடை கொண்டு வந்து காணும் கைப் பிடித்தது ". விடை கொண்டு – ஸம்மதி பெற்று. " விடை கொண்டு வந்து காணும் நப்பின்னைப் பிராட்டியைக் கைப் பிடித்தது ". ஏழு விடைகளைக் கொண்டு வந்து – கொன்று வந்து.

விலங்கு : " ஆனையின் காலில் ... கை யிறே வெட்டி விட்டது." விலங்கை - கட்டை, ஸம்ஸார பந்தத்தை, விலங்கை - கொடிவாய் விலங் கான முதலையை. விலங்கான ஸம்ஸார பந்தத்தையும் வெட்டிவிட்டான்.

சிலேடைச் சொற்கள் முடிந்தன.

சிலைக் கருமேகம் 662/3. மெய் ... ஒன்று *. மின்னுகிற வில்லை யுடைய மேகம். சிலைக் குரல் 662/1. ... ஏற்றெருத்தம் *. சிலை - கோபம். கோபத்துடன் கூடிய முழக்கம்.

சிலை கால் 1701/1. வரி வெஞ் ... வளைவித்து *. வில், விற்கால். சிலை குனிக்கும் 266/4. கொம்மைப் புயக் குன்றர் ... *. வில் வளைக் கும். சிலை மலி செஞ்சரங்கள் * 1988/4. வில்லில் நிறைந்த செவ்விய அம்புகள். ஆயிரம் இரண்டாயிரமாக ஒரு தொடையிலே தொடை யுண்ணும் செவ்விய அம்புகள். தொடையிலே தொடை கொள்கை - எடுப்பிலே அகப்படுகை.

சிலையர் 2514/1. கொடுங் காற் ... *. வில்லாளிகள்.

சிலை யிலங்கு பொன்னாழி * 1648/1. சார்ங்க வில்லோடு கூடின பொன்னாழி. ஆபரணத்துக்கும் அழகுக்கும் இவை முதல் விரலா யிருக்கும். முதல் விரல் - எண்ணிக்கையில் முதல் ஸ்தாநம்.

சிலை யிலங்கு மணி மாடம் * 1281/3. சிலை - வில். அத்தால் மின்னல். அது ஒளி. ஒளி விளங்கு மணி மாடம். சிலை வலவன் 722/4. ஏமரு ... *. வில்லன். சிவட்கு: சிவிட்கு பார்.

சிவப் பட்டார் 2887/2. சிறியார் ... *. சைவர்கள்.

சிவளிகைக் கச்சு 1654/1. செவ்வரத்த உடையாடை யதன் மேலோர் ... *. கட்டும் கச்சு. பொன்னெழுதின கச்சு. ஆடைமேல் கச் சாகையால் இடுப்பில் கட்டும் பட்டை. பொன்னெழுதினது ஜரிகைப் பட்டையாகும். சிவளிதான் ஜவுளியாய் மருவிற்றோ!

சிவிட்கென்று 482/4. "பின்னையும் உணரக் காணாமையாலே ..." சீக்கிரமாய் சீற்றமுண்டாய். "... ட்குப் பிறந்து வார்த்தை சொல்லு கிறார்". 1328/ப்ர. "இளைய பெருமாள் திருவுள்ளத்தில் ... தாரையை விட்டு ஆற்றவேண்டிற்று". சிவிட்கு - கோபம், உஷ்ணம், சுளுக்கு. தாரை - வாலி பத்நியும் தைல தாரையும். எண்ணெய் தடவி சுளுக்கு வழிக்கை.

சிவியார் 2930/1. "வஹித்தேன் நானன்றோ — என்று ... ... சொல்லும் வார்த்தையைச் சொன்னானிறே", கை வர்த்தர், தண்டிகை முதலானவை சுமப்பர். தண்டிகை - பல்லாக்கு, சிவிகை - பல்லாக்கு சிவியர் - பல்லாக்குச் சுமப்பவர், போகிகள்.

சிவீலென் றிருப்பார்கள் 879/1. "பகவ துத்கர்ஷம் கேட்டால் ..." அஸஹ்யப் படுவார்கள். காதில் குச்சி பாய்ந்து சிவீல் என்றுமாய்

போலே துன்புறுவர்.'' "என் வைபவத்தைச் சொன்ன விடத்தில் சிவீ லென் றிருந்திலே. இன்னமும் எனக்கு வைப்பானவற்றைச் சொல்லு கிறேன். செவி தாழ்த்துக் கேட்டுக் காண் ''. 1403/1. சிவீலென்னு மாப் போலே - சுரீரென்று பாயுமாப் போலே.

சிழகிச் சிழகி 3138/1. " ... யழுதால் என்ன பிரயோஜநம்." விக்கி விக்கி - சிழ்கிச் சிழ்கி என்று பாடாந்தரம்.

சிளையாத 3374/4. " பிரிவுக்குச் ... இது இனி என்னுய் முடியப் புகுகிறதோ''. இளையாத. "பிரிவுக்குச் ... உடம்பு" 2728/1. "பிரிவுக் குச் ... என்னுடல்'' 2940/4. சலியாத சளையாத சளைக்காத என்றும் சொல்லலாம். சளையாத என்பதே சிளையாத என்ருயிற்று போலும்!

சிற்றஞ் சிறு காலே 502/1. ... வந்துன்னை *. பிராம்ம முஹூர்த் தத்திலே. ஜாதிப் பேச்சு. வெட்டி விடியாலே (என்பது போலே). சிறு காலே ப்ராத: காலத்திலே, சிற்றம் என்றத்தால் அத்யந்தம் ப்ராத: காலத்திலே. சிற்றடி 1279/4. ... மேல் சிலம் பொலியும் *. சிறு அடி-சிறு கால். சிற்ற வேண்டா 3787/2. ... சிந்திப்பே அமையும் *. ஆயா ஸிக்க வேண்டா, குறைவு பட வேண்டா, சிரமப் பட வேண்டா.

சிற்றவை 724/4. ... தன் சொற் கொண்ட சிராமா *. சிறிய தாயார், சிறு அவை, சிறியவள். அவ்வை அவையாயிற்று. 1068/4. ... பணியால் முடி துறந்தான்*.

செயற்பால வல்லவே * 2667/2. செய்யத் தக்கவல்லாதன. தப்பச் செய்கிறது. செய்யப் படாதவை. **செயிரில் சொல்லிசை மாலை * 3142/3.** **செயிர்** குற்றம். சப்தார்த்தங்களில் குறைவற்ற சொல்லிசை

மாலை. செருக் கடுத்தன்று 3727/3 ... திகைத்த வரக்கரை *. போர்த் தின வுண்டான போது. செரு - யுத்தம். செருக்களம் 988/2. வென்றிச் ... த்து *. போர்க் களம். செருக்கிளரும் பொன்னாழி * 2282/2. செருவிலே கிளருகிற பொன்னாழி. செருக்கு வாட்டி 3660/1. "ஸ்ரீ பரசு ராமாழ்வானைச் ..." கர்வ பங்கம் செய்து.

செருக்கு வாடிற்று-ஸம்ருத்தி குறைந்தது. (தனி சுலோ. விஷயே தே.) செருக்குவார்கள் 860/3 ... திக்குணங்கள் *. செருக்கு வர்த்திகிற மஹாபலி போல்வார்கள். செருகு 1678/2. அரு. "சூடினதும் ... காயிருக்கையிலே". சருகு.

செருந்தி 2076/4. நறுஞ் ... ப்பொழில் *. பிரிந்தார் இரங்கும் நிலத்திலுள்ள மரம், கோங்கு. செருந்து 1425/1. "சோலை தான் தளிரும் முறியும் ... மாய்". கொழுந்து.

செரு நீர் வேல் 1737/1 ... வலவன் *. செருச் செய்கையை ஸ்வ பாவமாக வுடைய வேல். செரு நுதல் 1987/2 ... லோடு போகியவர்*. பூசல் தலை. செருப்பு 242/1. குடையும் ... ம் கொடாது *. செருப்பு வைத்துத் திருவடி தொழுவர் 3065/1. செருப்புக் காலோடு கோயில் போனவர் செருப்பைக் கழற்றி கோட்டை வாசலிலே வைத்து உள்ளே பெருமாளிடம் போய், செருப்பு பத்திரமா யிருக்க வேண்டுமே, சீக்கிரத்தில் அதை எடுத்துக் கொள்ள வேண்டுமே — என்ற நினைவால், ஸ்வாமி! தீர்த்தம் ப்ரஸாதிக்க, என்பதற்கு பதிலாக செருப்பு ப்ரஸாதிக்க — என்றாராம்.

செருமிகு வாளெயிற்றரவு * 1983/1. செரு - வலி.வலி மிக்கிருப்பதாய் ஒளி விசும் எயிற்றை யுடைய அரவம். செருமின வண்டல் 3455/1. திணர்த்த வண்டல். கிபிடமான வண்டல். செருவர் 1649/1. ... ரை முன்னா சறுத்த *. விரோதிகள், செருச் செய்பவர்.

செருவழியாத மன்னர் 1936/1. பூசலில் அழியாத. முதுகு காட்டிப் போகாத மன்னர்கள். செருவார் 2504/1. ... ரும் நட்பாகுவார் *. சத்ருக்கள். செருவாள் 421/1 ... ளும் புள்ளானன் *. யுத்த சீலன்.

செருவுடைய திசை 412/1 ... க் கருமம் *. யுத்தம் நடக்கிற திக்கு.

செல் கதிக் கமைந்தேன் * 952/2. செல்லக் கடவ கதி யுண்டு. பரமபதம். அங்குத்தைக்கு ஆளாம்படி பூர்ணனானேன்.

செல் கதிர் மாலை 3869/1 ... யும் மயக்கு மாலோ *. செல் கதிர் - ஸூர்யன். அவனுடைய மாலை, ஸந்தியை. செல்கின்ற கங்குல் 3380/2 ... வாய்த்தூப் பால வெண் சங்த *. செல்லுகிற ராத்ரி. தமிழ் ஆசார்யனென்று தமிழர்க்கு அகஸத்யனோபாதியா யிருப்பானொருவன் செல்கின்ற நாள் என்று வியாக்கியானம் பண்ணி வைத்தான்.

செல்கைத்து 2525/2. செல்லிய ... *. செல்கையை யுடைத்து.

செல் சாத்து 1009/3. மலைத்த ... எறிந்த *. செல்லாநிற்கிற ஸமூஹம், திரள்.

செல் சார்வு 3704/4. எங்கள் ... *. செல்லுதல் – கிட்டுதல், அதற்கு சார்வு – ஆசிரயண ஸ்தலம், நிர்ப்பய ஸ்தாநம், புகும் புகல்.

செல்ல கிற்பீர் 1500/2 அண்டம் திருமுடியா நின்றான் பால் ... *. செல்ல வேண்டியிருப்பீர்.

செல்ல மேவினள் 3520/4. இளமான் ... *. போக ஒருப்பட்டாள், போகப் புக்காள். **செல்ல விட்டு [3093/4.** "... வரவிட்டு".

செல்ல வைத்தனள் 3526/4. மனைக்கு வான் டமியும் நினையாள் ... ளே *. போனாள். லோகோக்தி. கடுகச் சென்றாள் என்று கருத்து. செல்ல வொருப்பட்டாள், நாம் அங்கே செல்லும்படி வைத்தாள்.

செல்லா 2506/3. பெண் தூது ... *. செல்லாது, காரியகரமாகாது. காசு செல்லாது — என்பது போல. **செல்லாதன 3205/3.** சென்று ... முன்னிலாங் காலமே *. வருங்காலம்.

செல்லிய செல்கைத் துலகு *. 2525/1. செல்லுகிற செய்கையை உடையது. நடக்கிற வியாபாரத்தை யுடையது. **செல்வக் கண்ணன் 3765/4.** மல்லலஞ் ... *. ஸம்பத்தை யுடைய க்ருஷ்ணன்.

செல்வக் கிடப்பு 3235/அவ. (9). ஸம்பத் ஸம்ருத்தி. அங்கநா ஸம்ச்லேஷ ஸுகமும் ... ம் அஸ்திரத்வாதி தூஷிதம்.

செல்வக் கொழுந்து 201/1. போதமர் ... *. கொழுந்து விடும் செல்வம். ஸகல ஸம்பத் ஸமஷ்டியான பெரிய பிராட்டி.

செல்வச் சிறுமீர்காள் * 474/3. பகவத் ஸம்பந்தமாகிற ஸம்பத்தை யுடைய இளம் பெண்களே! **செல்வத்தர் 3406/4.** ஏந்து பெருஞ் ... *. ஸம்பத்தை யுடையர். **செல்வத்துக் கேலான் 570/4.** இந்திரனு முன்னோடு ... *. செல்வத்துக் கொப்பாகான். **செல்வத் தேர் 1145/2.** பார்த்தன் ... *. அழகான தேர்.

செல்வப் பிள்ளை 2063/4 "குடிவாழப் பிறந்த ..."

செல்வப் பெண்டாட்டி * 484/7. சிற்றாதே பேசாதே ... *. ஐசுவரியமான பெண்டாட்டி.

செல்வர் * 606/2 ... பெரியர் சிறு மானிடவர் *. ஸம்பத் ஸம்பந்நர். ஸ்ரீப: பதி. **செல்வர் 3235/3** பல்லேலமையர் தாமிழிப்பச் ... *. செல்லாநிற்பர்.

செல்வர் சொல்லுக் கஞ்சார் 614/1. ஐசுவரியவான்கள் வேண்டினதெல்லாம், நினைத்தபடி யெல்லாம் சொல்லுவர் என்றபடி.

செல்வன் நாரணன் 3005/1, என் ... *. ஸ்ரீமானான நாரணன்.

செல்வன 3569/3 நிற்பன ... *. ஜங்கமங்கள்.

செல்வனார் 614/3. திருவரங்கச் ... *. 2456/4. வைகுந்தச் ...*. ஐசுவர்யத்தை யுடையவர். **செல்வி** 748/2 மிதிலைச் ... *. **செல்வு** 3473/1 நல்குரவும் ... ம் *. ஐசுவர்யம்.

செல்வு பொலி மகரக் காது 64/3. ... திகழ்ந்து *. செல்வு ஐசுவரியம். அதன் ஸம்ருத்திக்கு ஸூசகமான மகரக்காது. **செலக்காணே** 3420/4. உன தாள் பிடித்தே ... *. செல்லும்படி காண். **செலத்தக்க வனம்** 736/3. இன்று ... *. போகத் தக்க வனம். **செலவினர்** 1714/2. இயல்வினர் ... *. நடத்திப் போகிறவர்.

செலவு 1198/2. "என்னையும் இப்படிப் புஜிப்பித்தாலன்றோ உங்கள் போகத்துக்குச் ... வுள்ளது." பிரயோஜநம்.

செல வுய்த்தான் 1502/2. விண்ணுலகில் ... *. செல்லும் படி நடத்தினவன். **செலிகை** 1413/3 (?). சலுகை. **செலீஇ** 2582/1. ஒன்று விண் ... *. செல்ல. **செலுந்து** (வா· மா. 160) "தளிரும் முறியும் செலுந்துமாய்". கொழுந்து. செருந்தும் இதுவே.

செலுவு 1519/3 "மத்ஸ்யமாய்த் தன்னுடைய ... ஏக தேசத்திலே அடக்கினான்." 1385/1 "பிரளயந் தன்னைத் தன்னுடைய ... விலே அடக்க வற்றான மத்ஸ்யம்." வயிறு

செவ்வடி 1/4 ... செவ்வி திருக்காப்பு * சேவடி பாட பேதம். செவ்விய சிவந்த அடி, திருவடி. 3710/2 செவ்வாயும் ... யும் *. கமல ஸத்ருசமான திருவடி. **செவ்வரத்த வுடையாடை** * 654/1. சிவப்பாலும் ரத்தத்தாலும் சிவப்பே சொல்லுகிறது. இது மீமிசையாய் அர்த்தத்தினுடைய அதிசயத்தைக் காட்டக் கடவது. சிவந்த, வரத்த சிரேஷ்டமான என்றுமாம். ஆக, அறச் சிவந்த ஆடை.

செவ்வரி 934/3. ... யோடி நீண்ட *. சிவப்பு, வரி - கோடு.

செவ்வரி கருவரி 1635/1. "... களையுடைத்தாய் நீலமலர் போலே யிருக்கிற கண்கள்." **செவ்வனே** 2303/3. ... நெஞ்சமே *. செவ்வே. **செவ்வாய்க் கிளி** 1163/4 ... நான்மறை பாடும் *. **செவ்வாயன்** 3156/1 பவளச் ... *.

செவ்வி 1/4. உன் சேவடி ... திருக்காப்பு *. அழகு.

செவ்வித் தோள் 1247/4. பின்னை ... * அழகிய தோள்.

செவ்விதழ் 3764/1. மெல்லியல் ... மே *. சிவந்த இதழ் போன்ற அதரம், உதடு. **செவ்விப் படிக் கோலம்** 2263/2. ... கண் டகலாள் *. செவ்விதாய், படி ஸ்வாபாவிகமான கோலம். **செவ்வி மாதிரம்** 160/2.

... எட்டு *. அழகிய திக்கு. செவ்வே யறிந்து 2187/2. நன்றாக அறிந்து.

செவ்வைக்கேடர் 556/2 குணமில்லாதவர், நேர்மை யில்லாதவர்

செவ்வை யில்லாது 2041/1. சித்தமும் ... *. தரித்து நிற்காது.

செவ்வைப் பூசல் 3594/1 (?). தர்ம யுத்தம்.

செவ்வையன் 2966/1 (?). நேர்மையை யுடையவன்.

செவிகண் 3217/1 ... "ளைக் கண்டு அடிமை செய்வாரிறே." திருவனந்தாழ்வானிறே. கட்செவி - பாம்பு. 3381/3 "செவி கண்ணாகக் கேட்டு." கண் செவியாக, பாம்பாக. லக்ஷ்மணன் சேஷாவதாரமாயாலே. செவி சீ பாய்ந்திருந்தார் 3624/3. "அவன் தானே வரப் பெறுவது காண் என்று செவி" ... ஆதரித்திருந்தார். 2511/1. "ஆர் செவி ... ந்து கிடக்கிறது." கேட்க ஆசைப்படுகிறது.

செவி தாழ்க்க 3209/1. "இது கேட்ட வநந்தரம் அஞ்சவேண்டா, ... அமையும்." கேட்க. செவி தெரியா நாகம் 2812/2. ... த்தான் *. பாம்பு. நாகத்துக்கு கண்ணுக்குள்ளேயே காது மறைந்து வெளித் தெரியாமலிருக்கும். செவி தெரியான் 2812/2 ... ஆகத்தான் * செவி யில்லாதவன். ஒரு இந்திரியத்தாலே எல்லாவற்றையும் (இந்திரிய வஸ்துக்களையும்) ரக்ஷிக்குமவன்.

செவிப்பறை பறைந்து 3169/4. "...ஜபிக்கிறதென்" ஏகாந்தமாக, ரஹஸ்யமாகச் சொல்லி. செவிப்பாடு (?). இசைக்கு எவ்வளவு ... உண்டு, அவ்வளவும் பாதகமாயித்தனையிறே." 1148/3. "செவிப்பாடு உடைத்தாக ஆளத்தி வையா நிற்கும்," செவிக் கினிதாகப் பாடுகை.

செவிப்பூ 500/4 தோடே ... வே. * கர்ணவதம்ஸம்.

செவி பட்டிருக்க 3632/அவ. கேட்டிருக்க. செவி புதைக்கும்படியாய்த் திருப்பது 875/2. அஸஹ்யமாம்படி. செவியாட்ட கில்லாவே *. செவியை ஆட்டவும் மாட்டாதே நின்றன. செவியை அசைச்சில் இசை கேட்க இயலாது.

செவியினார் கேள்வியர் * 2366/2. செவி நிறைந்த கேள்வியை யுடையவர். செவியுணவின் சுவை கொண்டு மகிழ்ந்து * 287/4. செவிக்கு உள்ளில் நாவாலே குழலில் பிறந்த இசையின் இனிய ரஸத்தை உண்டு மகிழ்ந்து. செவிக்கு நாவுண்டோ என்னில், — "செவியுணாவிட்ட என்னக் கடவதிறே, செவிக்கு உணவா யிருந்துள்ள இனியதான ரஸம்" செவிக்கு உண இன் - உணவு இல்லாத போது என்றானிறே தமிழன்.

செவியேற்றுலே சொல்லுகிருளிறே 3913/1. "அவன் சொல்லக் கேட்ட ...". செவியாலே கேட்கையாலே. "ஓத்துக் கேட்ட செவி யேற்றுலே" 1163/3. வேதம் கேட்ட செவி வழியாலே. ஒத்து - வேதம். "உபாத்யாயர் பெண்களுக்கு ... ஒத்துப் போயிருக்குமாப் போலே". 3553/2. வேதாத்யயநம் பண்ணக்கூடாத பெண்களாயினும், வேதம் படிக்கும் உபாத்யாயரின் பெண்களாகையால் செவியேற்றுலே காதாலே பலகால் கேட்டதால் வேதம் தெரிந்திருக்கும். "குயில்களும் ... இவர் பாசுரத்தைச் சொல்லும்." 946/3 (பெரி). செவி வழியாலே-கேட்ட பழக்கத்தால் சொல்லும். செவியேறு கேட்டு 3919/2. "தோழி சொல்லச் ... ச் சொல்லுகிருள்." செழுங் கமுகம் பாளை * 1241/3. அழகிய கமுகம் பாளை.

செழுங் கானல் * 3434/3. அழகிய சோலை. கானல் கடற்கரைச் சோலை. செழுங் கொடும் பெரும் பனி * 811/1. ஸ்தூல தாரை களாய் விழுகிற மூடு பனி. செழுங் கொழும் என்ற சொற்கள் பரும னைச் சொல்லுகிறவையாய் மீமிசையாய் அதிசயத்தைக் காட்டும்.

செழுங் கோதை 1215/2 ... தன்னைப் பெற்றிலேன் *. அழகிய மாலை போல் புஷ்டியாயிருப்பவள். செழுஞ் சந்து 2832/1 ... தின் தாதளைந்து *. அழகிய சந்தனம். செழுந்தெரு 2684/1. சீரார் குட மிரண்டேந்திச் ... வே. *. அகல நீளங்களாலே குறைவற்ற தெரு.

செழு நகர் 3850/2. திருமூழிக்கள மென்னும் ... *. அழகிய நகர், பிரஸித்தமான நகர்.

செழுநதி வயல் 1155/4 ... புகு திருவயிந்திர புரம் *. அழகிய நதி. அளவு பட்ட வாய்த்தலைகளாலே யாதல் கை வாய்க்கால்களாலே யாதல் புகுருகையின்றிக்கே, விளைவில்லாக் கடலிலே புகுருகையுமின் றிக்கே நதி தானே வயலிலே வந்து புகுருமாயிற்று.

செற்றது 2330/1 ...வும் சேரா விரணியனை *. கொன்றது. செற்ற மிலாதவர் * 253/3 ... அஸூயையில்லாதவர். செற்றலேறி 372/1 ... க்குழம்பிருந்து*. ஈயிருந்து முட்டையிட்டு.

செற்று நின்றது 3869/1, "வயிரத்தைச் ...". செதுக்கா நின்றது.

செற்றார் 484/2 ... திறலழிய *. சத்ருக்கள். செற்றி 3171/3 (9)' "கண்ண நீர் ... ". அநுபந்தம் பார். செற்றுக் களைந்து 3753/3. இன்ப துன்பங்கள் ... * அறவே விட்டு.

செற 1438/3. தாய் ... வுளைந்து *. சீற. செறி கழல் * 2371/1. பொருந்தச் சாத்தின வீரத் தண்டை. செறி குலை வாழை * 3707/3.

செறி கூந்தல் 277/4 ... விழச் சென்னி வேர்ப்ப *. செறிந்த நெருங்கின. செறித் திட்டு 1905/3 ... இலங்கை மலங்க *. அணை

கட்டி. செறித்து 2/ (?). "தம்முடைய கண்களையும்... ". நெருக்கி மூடி.

செறி தவச் சம்புகன் * 749/1. மிக்க தபஸ்ஸையுடைய சம்புகன்.

செறிந்த சிலை * 318/3. கிட்டின வில்.

செறிந்து (?). "திருவீதியிலே ... ". கிட்டி. "தங்களிலே ... போந்தார்கள்." 3189/4. கூடிப் போனார்கள். செறிந்தேன் நின்னடிக்கே * 1461/4. பிரிக்க வொண்ணாதபடி செறிந்தேன் – சேர்ந்தேன்.

செறிமென் கூந்தல் 16/2. ... அவிழ *. செறிந்து மெத்தென்றிருக்கிற கூந்தல். செறிய 3187/1. "அங்கே ... அமையும்". கிட்ட.

செறியிட்டாற் போலே (?). "கண் ... ". மறைத்தாற் போலே.

செறிவு 2908/1 "நீர்ச் ... வாலே திரண்டு தோற்றுகிறது." நிபிடதை, திண்ணிமை. செறிவு 2921/3. "தயிர்ச் ... வாலே மத்தாலே நெருக்கிக் கடையப்பட்ட வெண்ணெய்." நிபிடதை, கெட்டி, திண்ணிமை. செறிவென்னும் திண் கதவம் 2293/2. உள்ளக் குகையாகிற வலிய கதவு. அணைத்துக் கொள்கையாகிற திண்ணிய கதவு.

செறு 1190/2. எரி நீர் வளஞ் ... வில் *. விளை நிலம்.

செறுக்குகை 2128/1. மதித்த ஆனையைத் தண்ணீரிலே ... குமா போலே. தண்ணீர் காட்டாதிருக்கை, விலக்குகை.

செறுத்து 2672/16. ஐம்புல னகத்தினுள் ... *. அடக்கி.

செறுத்து நின்றபடி 2509/1 (?). "சிறிதிடம் போய் ...". செறுத்து - திரண்டு. செறுப்பன் 625/2. ஊட்டக் கொடாது ... ருகில் *. கோபித்துக் கொள்வேன். செறுப்பு 3419/2. "பரம பதத்தில் அகம்படி வைத்த அரசாயிருக்கும். அச்செறுப்புத்தீர ஸ்வைரம் ஸஞ்சரிக்கப் போந்த இடமிறே இது." ஸங்கோசம், நிர்ப்பந்தம்.

செறும் 3566/1. ... ஐம்புலனிவை *. நலியும். செறுவான் 2248/4. பின்னும் மறு நோய் ... *. போக்குவான். சென்மின்கள் 3331/4. பரவிச் ... *. ஆசிரயியுங்கோள்.

சென்றற்றது 3012/1. "அவர்கள் ஜீவிக்கையென்று ஒரு பொருளுண்டோ! இத்தால் சென்றற்றதென்றபடி." ஜீவிக்க சக்யமன்று.

சென்றற்றது கிடாய் 3419/4. முடியுமளவாயிற்று கிடாய். சென்றற்ற ஸமயத்திலே 3824/ப்ர. (24). "நாம் அவ்வளவிலும் முடியாமையாலே ... ". சென்றற்று 3383/1. "ஸகல பதார்த்தங்களுக்கும் அவகாச ப்ரதானம் பண்ணும் ஆகாசமானது ... நுண்ணிய துளியாய் இற்று விழா நின்றது". துக்கித்து. சென்று செல்லாதன முன்னிலங் காலம் 3205/3. பூத பவிஷ்யத் வர்த்தமான காலங்கள்.

சென்று சென்றாகிலும் 3218/1. ... கண்டு *. நெடுங் காலம்

கழிந்துச் சென்ருகிலும். சென்று ளென்நாள் * 3420/4. செல்லுகிற, கூட வருகிற நாள் என்ரு! சென்னிச் சிகரம் 1751/4 ... நன் மாடம் * ஓங்கின சிகரம். சென்னி வேர்ப்ப 277/4 கூந்த லவிழச் ... *: நெற்றி வேர்க்க.

சேக்கள் 3870/1. "நாகுகளைத்தொடர்கிற ... கழுத்தில் மணியி னுடைய த்வனி." ரிஷபங்கள். சேக்கையிற் சேராதே இரங்குதி. 3010/2. (12). படுக்கை. சேட்டை 881/4 ... தன் மடியகத்து *. ஜேஷ்டா தேவி, அக்காள், மூத்தவள், மூதேவி - மூத்த தேவி, முதற் பிறந்தவள், ஜேஷ்டை அஸ்ரீ, அலக்ஷ்மி. இரண்டாவதாய்ப் பிறந்தவள் ஸ்ரீ லக்ஷ்மி.

சேட்பட்ட யாமங்கள் 3010/2. நீண்ட யாமங்கள். சேட்பால. தூழி 3380/2 ... யாய்ச் செல்கின்ற கங்குல் * சேண் - அதி தூரமான. பாலது - ஸ்வபாவத்தையுடைய, ஊழி - கல்ப்பம், காலம்.

சேட்பாற் பழம் பகைவன் 3607/3. ... சிசுபாலன் *. மிகவும் ஜந்ம சத்ரு. சேண் - மிகுதி, பால் - ஸ்வபாவம். பழம் பகைவன் - வழிப் பகைவன். வழி வழியாய் பரம்பரையாய் வந்த பகைவன்.

சேடம் 912/4. போனகம் செய்த ... *. சேஷம் மிச்சம்.

சேடர் 1759/2. குடந்தைக்கிடந்த ... *. யுவா, இளைஞன். உயர்த்தி ஊர்த்தி இளமைகளில் இங்கு இளமை. சேடன் 1916/3 ... திருமறு மார்வன் *. இளைஞன்.

சேடார் பொழில் 1312/2 ... சூழ் திருவெள்ளக் குளத்தாய் *. சேடு திரட்சியும் தளிரும். தளிர்கள் நிறைந்த பொழில். சேடேறு பொழில் * 1254/4 இளமை மிக்க பொழில். சேண்குன்றம் 2485/4 ... சென்று * உயர்ந்த சிகரம். சேண்சினை 3434/3 ... யோங்கு மரம் *, உயர்ந்த கவடு, கிளை. சேண்பால வீடு 3095/3 ... டோவுயிரோ * உயர்த்தியே ஸ்வபாவமாயுள்ள பரமபதம். சேண் விசும்பு * 1287/4 3971/4. சேணுயர் வானம் 3871/2 ... த்திருக்கும் *. மிகவும் உயர்ந்த பரமாகாசம். சேத் தொழில் 1290/2 ... சிதைத்துப் பின்னை * ருஷபங் களின் சேஷ்டை.

சேதுபந்தம் திருத்தினாய்/ன் * 520/4 அணை கட்டினவன்/னே.

சேப்பூண்ட சாடு 122/1 ... சிதறி *. எருதுகள் பூட்டின சகடம்,

சேமம் கொள் தென் குருகூர் * 3439/2. க்ஷேமங்களான திருமதிள் முதலான ரக்ஷைகளை யுடைய அழகான குருகூர்.

சேமத்தது 2503/4. எப்பாலைக்கும் ... தே *. சேமமுடைத்து.

சேமத்துணை 1497/4 ... யாம் செப்புமவர்க்கு *. ரக்ஷணத்தை முடி யத் தலைக்கட்டிக் கொடுக்கும் துணை. சேம நீராகும் * 2216/4

ரக்ஷையே ஸ்வபாவமாகும். **சேமம் சாத்தி வைத்து 3881/1.** ரக்ஷை செய்து. **சேமம் தளிகை (?).** ராஜாக்களுக்கு காவலோடு வரும் தளிகை, **சேமமுடைய நாரதனார் * 416/3.** கர்ம பாவனை யன்றிக்கே பிரம்ம பாவநா நிஷ்டனா யிருக்கை. **சேம முண்ணாய் * 1884/4.** சேமத்தை விளைக்கக் கடவ, அம்மத்தை உண்ணாய். **சேம மேலன்றிது சால* 531/3.** இது சாலச் சேமமன்று. **சேய்த் தீர்த்தம் 572/3** ... மாய் நின்ற செங்கண் மால் *. பெரிய தீர்த்தம். தூரமாய் அதி பாவநமாயிருப்பது. **சேய்த்து 530/2** ஊரகம் சாலவும் ... *. தூரிது, தூரத்திலுள்ளது. **சேய் முகட்டுச்சி 982/3** ... யண்ட முழுதும் *. ஓங்கியிருந்துள்ள சிகரத்தின் உச்சி. **சேயரிக் கண் 2479/1** ... அமுநீர் துளும்ப *. சிவந்த அரியை யுடைய கண். சேய் – அழகு. அரி – வண்டு. அழகிய வண்டு போலே யிருக்கிற கண். **சேயவர் 2640/3.** ஆயவர் தாம் ... தாம் *. தூரஸ்தர். தூரியரா யிருக்குமவர். **சேயன் அணியன் 2992/3** ... யவர்க்கும் *. ஸ்வயத்நத்தாலே காண்பார்க்கு தூரஸ்தனா யிருக்கும், அவனாலே அவனைக் காண்பார்க்கு கைப்புகுந்து அணியனா யிருக்கும்.

சேயனென்னும் திரேதைக் கண் * 2054/1. திரேதா யுகத்தில் சிவந்த அடியை யுடையவனா யிருக்கும். அக்காலத்தில் புருஷர்கள் ரஜ: ப்ரசுரர்களா யிருக்கையாலே சிவப்பிலே யாயிற்று ருசி யுண்டாயிருப்பது. அந்த ருச்யநுகுணமாக சிவந்த வடிவைக் கொண்டு முகங் காட்டும் **சேயன் 1613/3.** தரையோர்க்கும் விண்ணோர்க்கும் ... ய் *. தூரஸ்தன். **சேயிழையார் 503/2** ... சென்றிறைஞ்சி *: சேய்- அழகு. இழை – ஆபரணம். **சேயூழியான் 2276/3.** முன்னம் ... * செய்த ஊழி, ஸ்ருஷ்டித்த ஜகத்து. அதிலுள்ளவன்: செய் சேய் என்று நீட்டியிருக்கிறது. **சேயோம் 2591/1.** யாமே யருவினையோம் ... *: தூரியோம். தூரத்தி லுள்ளோம்.

சேர்க்கை 3028/2 ... செய்து தன்னுந்தியுள்ளே *. ஸமாஹாரம் அதாவது ஸம்ஹாரம்- **சேர்க்கைப் பல்லி 3321/4.** விலைப்பல்லி. சேர்க்கைப் பல்லியானது ஒரு இடத்திலே பலகாலும் சொல்லிக்கொண்டிருக்கும். **சேர்கொடான் 1570/2.** தென்புலர்க்கு என்னை ... *. சேரக் கொடான், அகப்பட விடான். **சேர்த்தடத் தென் குருகூர் * 2920/1.** சேர்த்தடம் - திரண்ட தடாகம், **சேர்த்தி 3092/2** சேவடி மேல் பூந்தாமம் ... *. சேர வைத்து, சாத்தி, ஸமர்ப்பித்து.

சேர்ந்து குளிர்ந்த தண்ணீர் 3132/ப்ர. ஏலம் முதலியவை சேர்ந்து. **3297/4. 3917/4. சேர்ப்பன் 3582/2.** துகில் வண்ணத் தூநீர்ச் ... *. துறைவன், தலைவன். இங்கு துறைவன்

சேர்ப்பால் 447/1. குழம்புப் பால். ஏலாதிகள் சேர்த்துக் கெட்டியாய் குழம்பு போலக் காய்ச்சின பால். **409/1, 478/அவ.**

சேர்வகை 3747/3. திருமாலையடிச் ... *. சேருகை, சேரும்படி.

சேர்விடம் 406/4. என் திருமால்...மே *. சேருகிற, நித்ய வாஸம் பண்ணுகிற ஸ்தலம்.

சேர்வித்து 2591/3. செம்மாதை நின் மார்வில் ... *. சேர்ப்பித்து.

சேர்வுற்று 2527/4. மண் முதல் ... *. வந்து கிட்டி, சேர - வந்து. உற்று - கிட்டி.

சேர்வை 3230/1. "முத்து முக மறிந்து கோத்து ... பார்க்குமாப் போலே". சேர்க்கை. [தக்க பகை.

சேர வன்னிய மில்லை 3629/3. சேரவன்னியம் - ஸம சாத்ரவம்.

சேரா விரணியன் 2330/1. ... யனை சென்றேற்றுச் செற்றதுவும் *. ஆசிரிதர்களோடு சேராத இரணியன்.

சேரி 217/1. ஆய்ச்சியர் *. ... தெரு, குடியிருப்பு, கோஷ்டி, ஊர்.

சேரிக் களவு 2886/2 ... வின் கண் *, சேரியில் களவு, சேரி தோறும் களவு. **சேரிகை யேறும் பழி** 2496/4 ...யாய் விளைந்தது *. ஊரார் கையெடுத்துச் சொல்லும் பழி.

சேருங் கொடை புகழ் 3215/1 ... எல்லையிலான் *. கொடையால் சேர்ந்த புகழ். **சேலேய் கண்ணியர்** * 3348/3. நோக்காலே துவக்க வல்ல ஸ்திரீகள். சேல் - மத்ஸ்யம். அதை ஏய்கை - ஒப்புதல். [தம் பார்

சேலப்பால் 3393/4 (24). "கண்ட சர்க்கரையும் ... லும்". அநுபந்

சேலும் கயலுமிடுகை 3486/1. "அவன் தோளிலே ... யாவது" கண்ணாலே இலச்சினை யிடுகை. சேலும் கயலும் மீன். அது போன்ற கண்ணாலே பார்க்கை. **சேலையைக் கடுக்கி** 2521/1. "... திருவரையையும் துடைப்பற்றையும் ஒரு கால் காட்டியருளவேணும்." கழற்றி அவிழ்த்து. **சேவகம்** 8/1. நியதமும் அத்தாணிச் ... மும் *, ஸேவை. திருத்தக்க செல்வமும் ... மும் * 498/7. வீர்யம், விர சரிதம், ... மோ செய்ததின்று * 1937/2. விரப்பாடு, செய்த நின் சிறுச் சேவ ... மும்* 3442/2. ஆண் பிள்ளைத்தனம், சௌர்யம், 3223/1 "பாணனைக்காக்கக் கடவோம் என்று ... சொன்னாைபிற்று. விட்டுக்குள்ளிருந்து தந்தாம் ... சொல்லுவாரைப் போலே." பௌருஷம்.(?)**சேவகன்** 2848/1 தென்னுலகமேற்றுவித்த ... னை *. விரன்.

சேவகனார் 882/2. அரக்கர் கோனைச் சொற்றநம் ... *. சேவிக்குமவன். ரகர ஈறு பூஜ்ய வாசகமன்று; சேவகத்தி லுரைப்பைச் சொல்லுகிறது. **சேவடி** 1/4 ... செவ்வி திருக்காப்பு *, செவ்வடி பாடபேதம். செவ்விய அடி. **சேவடிக் கிண்கிணி** * 47/1. கால்சதங்கை. **சேவதக் குவார்** 377/1. ... போலப் புகுந்து *. எருதுகளை காளைகளை வசப்

படுத்துகைக்காக அவற்றின் செருக்கைக் குலைக்கும் நீச ஜாதியர். சே வதக்குகை - மாட்டுக்கு விதை அடிக்கை,

சேவல் 420/1. ... லொடு பெடையன்னம் *, ஆண் பறவை. பெண் பறவையும் சேவலாகும் 2932/2 நீயும் நின் ... மாய் *.

சேழுயர்ந்த மணி மாடம் * 1286/4. மிகவும் உயர்ந்த மணிமாடம்'

சேற்றள்ளல் பொய்ந் நிலம் * 2577/4. குழைந்த சேறுபோன்ற ஸம்ஸாரம். சேற்றள்ளல் காலிட்டால் கீழே சுரிக்கும்படி இருக்கை.

சேற்றுத் தாமரை 3402/3 ... செங்நெலொடு மலர்*. வறள் தாமரை யில்லாமல் சேற்றிலே செழித் தலரும் தாமரை (24).

சேற்றே ருழவர் 1361/3 ... கோதைப் போதூண் *. மிக்க சேற்றிலே ஏரை நடத்தவல்ல உழவர். சேறூர் சுனை 3551/3 ... த் தாமரை *. சேறு நிறைந்த சுனை. சேறு தோய்ந்து கழுவினவர்கள் 585/2. ஸம்ஸாரிகளாய்ப் பிறந்து ஸம்ஸார க்லேசம் நீங்கப் பெறும் முமுக்ஷுக்கள்.

சேறை யம்மான் * 1585/3. பைம்பொழில் சூழ் தண் ... *. திருச்சேறைப் பெருமாள்.

சேனைத்தொகை 1490/2 ... யைச் சாடி *. ஸேனா ஸமூஹம்.

சொக்குப் பொடி 3574/4. அரு. அம்மான் பொடி பார், சொக்க வைக்கும், மயங்கப் பண்ணும் பொடி. சுக்குப் பொடி என்றும் வழங்குவர். சொட்டை 2072/பட். சொட்டை-சுருகத்தி. 579/4. "ஆனைச் சொட்டை குதிரை சுமக்கவற்றே." சொட்டை - சவரணை, கட்டு.

சொட்டை முட்டி 1098/1. "... யிலைகையை வைத்துக் கொண்டு" கத்திப் பிடி.

சொணை யழகியார் 1922/1 ... என்று சொல்லுகிற க்ஷேப வசநம். அநுபந்தம் பார். சொப்பட 156/2 ... நான் சுட்டு வைத்தேன் *. ... நீராட வேண்டும் *. 156/4. நன்றாக.

சொப்பன 1524/1. "... க் குடியேற்றுவதற்கு முன்னே." நன்றாக.

சொரிகின்றது 2524/2 ... அதுவுமது * பொழிகின்றது. சொரிய 1230/3. இசலி வளம் ... *. சுரக்க.

சொல் திறம் 1857/3. கலிகன்றி யுரை செய்த ... *. சொல் வரிசை சொல் மாலை, சப்த ராசி, சொல்கின்ற தோள்நலம் * 2260/2. சொல்லப்பட்ட தோள் வலி. சொல் நேர்ப்பட்ட தமிழ் மாலை * 3769/1. சொல் வாய்ப்புடைய தமிழ் மாலை.

சொல் மிறுங்கன் 1741/4 "... னை திருவடி." அநுபந்தம் பார்.

சொல்ல கிற்கில் 3289/4. பெருந்தேவன் பேர் ... *. சொல்லில்,

சொல்லமை பாட்டு * 3052/2. அமைவு சமைவாய்-சப்தார்த்தங்கள் நிறைந்த பாட்டு.

சொல்லவா 3466/2. "உனக்கு நான் நல்லதொரு ஹிதம் சொல்லவா." சொழ்லுவதா, சொல்லட்டுமா என்று பொருள். இப்போதும் சில வட்டாரங்களில் இப்படிப் பேசுவதுண்டு.

சொல்லறம் 2453/2 ... அல்லனவும் *. சொல்லால் தர்மம் செய்தல், வாசா தர்மம் — என்று பாட்டுக்கு சம்பந்தமில்லாமல் பொருட்படுத்தலாம். சொல்லா 2506/2. அன்னன்ன ... *. சொல்லாது. சொல்லா 3162/4. "இவன் சிலவற்றைச் ... சொல்லி."

சொல்லார் தமிழ் 3978/3 ... ஆயிரம் *. சொல் செறிந்த, நிறைந்த தமிழ். சொல்லார வாழ்த்தி 196/4 ... நின்றேத்தி *. சொல்லாருவது பொருள் நிறைந்த இடத்தேயிறே. பொருள் நிறையும்படி வாழ்த்தி.

சொல்லான் 2385/3. எப்பொருட்கும் ...*, சொல்லப்படுகிறவன். ... 2445/4. நம்மேழ் பிறப்பறுக்கும் ... னை*. திருநாமத்தை யுடையவன்.

சொல்லிற்றுக் கெல்லாம் 480/6 "... மறுமாற்றம் சொல்லிக்கிடக்கிறது." சொன்னதுக் கெல்லாம். சொல்லினேன் 425/3 ... உன் நாமமெல்லாம் ... *. சொல்லுயர்ந்த நெடு வீணை * 2066/3. நாதம் மிக்கிருக்கையும் இசை நீண்டிருக்கையும். இசை நீண்டிருக்கையாவது அக்ஷரம் நரம்பில்லாதபடி கரைந்து இசையா யிருக்கை.

சொலவு 3452/1. "... மாத்ரமேயாய்ப் போகாதே அது தன்னை அநுஷ்டாந பர்யந்தமாக்கி." வார்த்தை.

சொற்பாடு 3441/2. "மதுவை வார் குழலார் என்பது மதுவார் குழலார் என்றபடி. மதுவையில் ஐகாரம் சொற்பாடு, அசைச்சொல்."

சொன்ன போதினுல் வாரீர் * 1928/3, சொன்ன காலம் கடவாதபடி வாரீர். சோடு 538/8. "ஒடை, முகபடம். மூகத்தை மறைக்கும் ...". சோடு 3870/1. (ஜோடு) ஈடு, கவசம், மூடி.

சோத்த நம்பி 1063/1 ... யென்று தொண்டர் மிண்டி *. (நம்பியே சோத்தம்). பரிபூர்ணனை உன்னையே ஸேவிக்கிறேன்.

சோத்தம் பிரா னிங்கே வாராய் * 142/4. பிரானே சோத்தம் — ஸேவிக்கிறேன்; இங்கே வாராய்.

சோத்து 1796/1 ... என நின்று *. சோத்து 1892/1 ... என நின்னைத் தொழுவன் *. சோத்தம் என்பது கடைக் குறைத்தலால் சோத்து என்று கிடக்கிறது.

சோதிக்கின்றான் 210/2, வெண்ணெயும் *. ஆராயா நின்றான்.

சோதிச் செவ்வாய் முகிழ் * 3715/2. புகரை யுடைத்தாய் சிவந்திருக்கிற அதரமாகிற முகிழ். சோதித் தாமரை 3079/1 ... பாதம் கைகள் கண்கள் *. ஒளியுடைய தாமரை. சோதித் தாள் 3137/4. நற்பொற் ... *. தேஜோ ரூபமான திருவடிகள். சோதி நம்பி 472/2. நெஞ்சினுள்ளே தோன்றுமென் ... * தேஜஸ்ஸால் பூர்ணனானவன்.

சோதி யகலம் 3040/2. பொங்கிளம் ... *. புகரையுடைத்தான திருமார்பு. சோதியம் 3040/2. ஒளிக் கொண்ட ... *. சோதியை யுடையோம். சோதியாத சோதி 784/2. பரீக்ஷிக்க வேண்டாத தேஜஸ் தத்வம்.

சோதி யாரமுதம் 1719/2. இலங்கு ... *. தேஜஸ்ஸை யுடைத்தான அம்ருதம். சோதி வட்டம் 3634/3. கொழுஞ் ... *. ஜ்யோதிர் மண்டலம். சோதி வாய் 2578/8 ... யவும் கண்ணவும் *. 3792/3. ... திறந்து *. சோப்பூண்டு 122/3 ... துள்ளித் துடிக்கத் துடிக்க *. அடியுண்டு. சோப்பு - அடி.

சோம்பர் 909/4. உன் கடைக் தலையிருந்து வாழும் ... *.

சோமு 1138/3. தூய நான்மறையாளர் ... ச்செய்ய *. 1512/3. ... ச்செய்யும் தொழிலினேம் *. ஸோம யாகம்.

சோர்தரும் 1558/2. என் கண்கள் நீர்கள் ... *. சோரும்.

சோல்வான் 2412/4 ... புகுந்து *. அபஹரிக்கைக்காக. சோர்வானாய் சோரப் பண்ணுகைக்காக. சோராதபடி கொள்ளுகைக்காக.

சோலை செய்து 1146/2. "... திருப்ப தொரு கற்பகம்." சோலை போலே தழைத்து. சோலைத் தடம் 232/1. ... கொண்டு புக்கு *. தடமான சோலை. இட முடைத்தான சோலை.

சோலை பார்ப்பாரைப் போலே பார்க்கை யன்றிக்கே அருள் கிடாய் 509/4. சோலை பார்க்கை-ஸமுதாய சோபை பார்க்கையன்றிக்கே அவயவ சோபை பார்ப்பதில்லை. சோலை மலை 594/3 ... ப் பெருமான் *. திருமாலிருஞ் சோலைமலை என்பதன் குறைவு. (சோலை நிறைந்த மலை. சோலை விலங்கல் 1760/1. வேயிருஞ் ... *. சோலை யுடைத்தான மலை. சோலை வேலி 801/4 ... மன்னு சீரரங்கமே * சோலையைச் சூழவுடைய திருவரங்கம்.

சோழக் குடி 877/1. "வீர ஸுந்தர ப்ரம்மா ராயன் ... க்கு இட்ட மதிள்." கோயிலிலே பிணங்கித் தன்னுடைய ஊரான சோழக் குடியிலே மதிளிட்டான். [மன்னர்.

சோழக் கோனூர், தொண்டமானூர் (?). சோழ மன்னர், தொண்ட

சோழர்கள் 968/1. "...வெற்றிலே சிலரிட வன்றிக்கே தாங்களே எடுத்திரே தின்பது, தலை கவிந்து வாங்கில் சிலரை வணங்கிற்று என்னும் துர்மாநத்தாலே." சோழன் 1500/4. தெய்வ வாள் வலங்கொண்ட ... *. சோழன் 1501/4. செங்கணான் கோச் ... சேர்ந்த கோயில் *.

சோளேந்திர சிங்கன் 3492/3 "... ணை உளுக்காக்கப் பண்ணு கிறேன்." பெருமாளுடைய ஆணை. சோளேந்திர சிம்மன் 1203/2. "... னில் இருப்பைக் காட்டியாயிற்று."

சோற்றுப் பருப்பதம் 264/1. அட்டுக் குவி ... மும் *. சோறு பர்வதமாகக் குவித்திருப்பது. சோருள்வி ஆண் பிள்ளைச் சோருள்வி பார்.

சோறு 8/1. செய்யிடை நல்லதோர் ... *. (வாமா. 292) எச்சிற் சோறு, பிணச்சோறு, மணச்சோறு, புகழ்ச்சோறு, மடி தடவினை சோறு, பொருட்சோறு — இவ்வாறு சோறும் தியாஜ்யம். தாய் இட, புத்திரன் உண்ணும் சோறு — நல்லதோர் சோறு.

சோறு சுட்டவாறே 3170/3. "... இது ஒரு கிருஷ்ணனும் நடுவில் பெருங் குடியாட்டமும் (என்று கோபிப்பது)." அல்ப்ப காரணத்திலே கோபம் கொள்வது — என்றபடி.

ஞ

ஞாதிப் பகை (தனி சுலோ.) குடிப் பகை. ஞாயிறு 418/3. இள ... *. சூரியன். ஞாலம் 3396/1. கடல் ... *. ஜகத்து, உலகு.

ஞான்று 422/4. எஞ் ... ம் *. நாள், காலம்.

ஞானத் துறை 2570/3 ... படிந் தாடி *. ஞானமாகிற துறை, தீர்த்தம். ஞானம் 3753/1. கன்ருய் ... கடந்து *. இந்திரிய ஞானம் என்று இங்கே பொருள். ஞானவிதி 3360/2 ... பிழையாமே *. பக்தி ரூப ஞான விதானம் பண்ணுகிற சாஸ்திர மரியாதை.

ஞான வேதியன் 3131/1. மெய் ... *. வேத வேத்யன். வேதங்களால் அறியத் தக்கவன். ஞானி 3249/1 ... க்குமப் பயனில்லை * ஞான யோகி.

த

தக்க ஞானம் 3306/4 ... க்கண்கள் *. தக்கணை 402/2. ஓது வித்த ... யா *. தக்ஷிணை.

தக்கணைக்கு மிக்கான் 2013/2. தாளால் அளவிட்ட ... னை * பூஜ்ய தமன். தக்கதிதன்று 103/2 ... என்று தானம் விலக்கிய *. இது தக்கதன்று. தக்க மரம் 1798/3 ... த்தின் தாழ்சினை *. ஏறத் தகுந்த மரம். தக்க மாமணி 87/4 ... வண்ணன்*. மிக்கப்ரகாசமான ரத்நம்.

தக்க வைவர் 3722/3 ... தமக்காய் *. தக்கோர்மை யுடைய ஐவர், பாண்டவர்கள். தக்கன் 1363/1 ... வேள்வி தகர்த்த தலைவன் *, தக்ஷன். தக்கார் 340/1 "...மிக்கார்களை ஒத்திருக்குமவர்கள்." துல்யர்.

தக்கிலம் 3848/1. தமரோடங் குறைவார்க்குத் ... மே *. யோக்கிய மல்லோம், தகோம். தக்கினது 1966/4 (?). "அதுக்கதுக்குத் ... " தகுந்தது. (தக்கினவி தக்கின வன்னி ... மற்றவை என்று தெலுங்கில் வார்த்தை.) தக்கோர் 1507/4. விருந்தாகும் பெருந் ... ரே *. பெருமை யுடையவர்.

தக்கோர்மை 3722/3. "... யுடையவர்கள்." ந்யாயம், நன்மை, கிருபை. "பிரளயம் கொண்ட பூமிக்கு என்ன ... யுண்டாய் நீ செய்தது" 3410/2. நன்மை.

தகண்-தழும்புக்குப் பொருள். "இரப்பிலே தழும்பேறின வடிவை யுடையவன்." தகர்க்கும் 3891/2. அசுரரைத் ... *. புடைத்துப் பொகடும், துணிக்கும். தகர்க்கும் 3846/1, "மஹாபாபம் ...". பாதிக்கும். தகர்ப் புண்ணும் 3323/2. பிணி மூப்பால் ...*. நலிவுபடும்.

தகர விழுந்தவன் 914/4. "உயர வேறித் ...". தகரும்படி, முறிந்து போம்படி (?), தகவன்று 3855/4 ... என்றுரையீரே *. தயை யில்லை.

தகவாத் தொழும்பர் 2665/2 ... இவர் சீர்க்கும் *. தகாத தாழ்மையை யுடையவர். தகவில் காலன் 1423/2 ... னையுக முனிந்து *. இரக்கமில்லாத காலன். தகவிலி 1860/1 ... யெங்கோமான் *. தயை யில்லாதவன். தகவுகள் 3046/4. பவள வண்ணர் ... ளே *. க்ருபாதி ஸ்வபாவங்கள்.

தகளி 2082/1. வையம் ... யா * 2182/1. அன்பே ... யா *. அகல், எண்ணெய்க்கும் திரிக்கும் ஆதாரமா யுள்ளது,

தருவது 3023/4. "பூத் தருவது ஸுகுமாரனுக்கு, பூசனை தரு வது மூதன்மை யுடையவனுக்கு".

தருவது 3573/3. முகில் வண்ண ... தோ*. போரும், ஸத்ருச மாகும். தருவார் 3467/3. தேவிமை ... *. தகுதியா யிருப்பார், உரி யரா யிருப்பார், உறுப்பா யிருப்பார்.

தகை 813/2. குறுங்குடி நெடுந்தகாய் *. இயல்வு, ஸ்வபாபம், பெருமை. தகைசேர் நாதன் 1438/3. நடமார்வர் ... *. குணங்கள் சேர்ந்த நாதன். தகைந்தது 1864/1 ... தே கண்டு * தயை செய்தது. அணை செய்தது. தகைமை 2550/4. சால்பின் ... *. ஸ்வ பா வ ம், பெருமை. தகையல்லால் பிறிதில்லை * 3126/2. தகை - ஸ்ப ர் ச ம், ஸ்பர்சித்த இடம் விட்டுப் புறம்பு போயிற்றதில்லை. தங்கத்தானுமேலும் தங்கு * 2668/4. தரிக்கக் கூடுமாகில் தரித் திரு.

தங்கலுற்றவன் 808/1. கொங்கை ... *. த ங் க விரும்பினவன், "தங்கல் - தொங்கல்." வியா. தங்கள் தலையால் 495/7 ... இட்டுவ தோன்றன்றே .* தங்களால்.

தங்கிய வன்பு 401/3 ... பால் செய் தமிழ் * நிலை நின்ற பிரேமம்.

தங்கும் பயணம் 2069/4. இடையிலே தங்கிப் போகும் பயணம்.

தங்கு வேட்டை 3008/4. "திருமோகூரிலே ... வந்து த ங் கி." பரஸ்தாநம். தசை முறுகினுல் 3578/4. "... வைத்தியர்கள் முகம் பாராதாப் போலே." தசை முற்றினுல்.

தசைப்பு 597/2. தடிப்பு: "மிடற்றேசையின் ... பைக் கேட்டு".

தஞ்சம் 817/4. ... மே லொன்றிலேன் *. ஆபத் தநம், உறு துணை.

தஞ்சு 1181/3. நீல மலைத் ... டைய விருள் *. தஞ்சம்.

தட்டி 3146/2. "... யிலிருந்த போது". சிறை.

தட்டித் திரிந்தார் 3451/ப்ர. தடுமாறித் திரிந்தார்.

தட்டு 1573/2 ... அலர்த்த *. இதழ்.

தட்டு - தராசுத் தட்டு 3319/ப்ர. "நம்மை ஒரு ... ம் சப்தா திகளை ஒரு ... டுமாக வைத்து". தட்டுப் படும் 3136/அவ. பிரதி பந்தகம், பிரயாஸம். தட்டுப் பாய் (வா.மா.27) "ராஜ மஹிஷி அந்த:புரத்துக்கு ... யிடுகை ஸ்வரூபமிறே." வைகுந்தத் திருவாசலிலே யி ரு ந் து ... வாங்கும்." (?). தடுக்குப் போன்ற பாய்.

தட்டு மாறிக் கிடக்கும் (ஸ்ரீவபூ 245)."பிரேம தசையிலே ... ". இடம் மாறியிருக்கும். தட்டுளுப்பாகின்றது * 288/4. த டு மா றி ச் செல்லா நின்றது. உளுவுடைய மரத்தைத் தட்டுந்தோறும் சிதிலமாய்

போலே எண்ணுதல். தட்டுள் உப்பாகின்றது. ஜல பாத்திரத்தில் லவணம் போல் கரையா நின்றது.

தட்டொளி 498/7 ... தந்து *. கண்ணாடி, பறையுமாம்.

தட்டோடு 877/2. அ ந. கட்டிடத்தின் மேல் தளத்தில் போட்டுத் தட்டும் ஒடு, கனமில்லாத செங்கல்.

தடக்கைமா * 1291/1. பெரிய கையை யுடைய யானை.

தடங்கடல் 1187/4 ... சூழுலகு *. விஸ்தீரணமான கடல்.

தடங் கண்ணன் * 280/1. பெருத்த கண்களை யுடையவன்.

தடங் கழுத்து * 172/2. பெரிய கழுத்து. தடங்கள் * 1238/3. தடாகங்கள், பொய்கைகள். தடங்கை 62/1. ஆர விழுங்கிய *. இடமுடைத்தான கை. தடஞ்சிலை 978/2 ... குனித்த *. மஹத் தநு: — என்கிறபடியே அளவுடைத்தான (பெரிய) வில்.

தடந் தாளிணை * 86/2. நடை பொறுக்கும்படி சிக் கென்றிருக்கையாலே தடந்தாள் — என்கிறார்.

தட நெஞ்சம் 2523/3. ... கீண்ட பிரான் *. பெரிய மார்வு.

தடம் படு தாமரைப் பொய்கை *. 215/1. இடமுடைத்தான தாமரைப் பொய்கை. தடம் பொங் கொத்தம் பொங்கோ * 1858/4. இது இத்தனையும் வாத்ய சப்தமாகலாம். தடம் என்று திடும் திடும் என்றபடி. தடம்போது 2553/4 ... ஒடுங்க *. பெரிய பூ.

தட மண்ணி * 1248/2. பரந்த மண்ணி யாறு.

தடமணி வயல் * 3891/1. அலங்கரிக்கப் பட்ட தடங்களையுடைய வயல், தடவ 621/2 ... த் திரும் *: ஸ்பர்சிக்க.

தடவந்த 3544/2. எல்லா வுலகும் ... *. தடவின, ஸ்பர்சித்த.

தடவந்து 1688/4. வன முலை ... *. ஸ்பர்சித்துக் கொடு வந்து.

தடவரை * 272/2. பெரிய மலை. தடவரைக் களிறு * 1828/3. மலையிலே வர்த்திக்கிற யானை. தடவரைத் தங்கு மாடம் * 1802/3. தடவரை போலே யிருந்துள்ள மாடம். மாடங்களைக் கண்டால் குல கிரிகள் மனதில் தங்குமாம்படி யிருக்கும். தடவிப் பரிமாற *. 282/1. தடவி வியாபரிக்க.

தடவற் பொய் 3526/4. ஆபாஸமான பொய், விளையாட்டாகச் சொன்ன பொய். தடவியதான கழுத்து 172/2. பெரிய கழுத்து.

தடா 592/2, 3. நாறு ... *- தவலை. தடாயேல் 688/1. தரு துயரம் ... *. மாற்றாயாகில், போக்காயாகில்.

தடாவிய கோடு 2856/1. ... ட்டுச்சி வாய் *, பரந்த சிகரம்.

தடாவியது 2482/4. ஒரு நான்று ... தே *. விலங்கிற்று.

தடாவிய வம்பு 2483/1 ... ம் முறிந்த கிளைகளும் *. வளைந்த அம்பு. தடவுதல் பரம்புதலாய் பரந்த வாயை யுடைத்தான அம்பு. வில்லோடே அடுத்துப் பிடித்த அம்பு: ஸுக ஸ்பர்சியாய் பேதிக்கும் (தடவிக் கொள்ளும்) அம்பு. வளைவா யம்பு.

தடி 1938/4. குறுங்...நெடுங் கடல் *.கோல். தடி 2483/4. "... பெரிய ஸம்ஸாரத்திலே குடியும் தடியுமா யிருக்க நினைத்தார்." குடி – குடில், கிருஹம். தடி – க்ஷேத்ரம், பூமி. தடியால் அளக்கை பற்றி தடி க்ஷேத்திரமாயிற்றது.

தடிக்க 1053/2. தமரும் தாங்களுமே ... *. உடம்பு பருக்க.

தடிக்கூறு 874/2. "ஒரு தடியிலே பாதி." தடி – வயல். கடிக்கூறு என்றும் இந்தப் பாட்டின் அரும் பதத்திலேயே காண்கிறது. கடிக்கூறு – செம்பாதி, சரி பாதி. தடித்து 3605/3. உண்டுடுத்துத் ...', பூரித்து, பருத்து. தடிந்த 391/1. தங்கையை மூக்கும் தமையனைத் தலையும் ... * அறுத்த. தடிந்த 748/2. வேல் வேந்தர் பகை ... வீரம் *. தீர்த்த, நசிப்பித்த, உழக்கி நெரித்த.

தடிந்துண்ணும் 3166/1 ... திண் கழற் காலசுரர் *. கொன்று தின்னும். தடி பிணக்கு 3468/4. ஒரு நான்று ... *: தடியெடுத்து சண்டை, தடிச் சண்டை. தடியர் 3315/4: "... கழுந்தர் என்னலாய்", தடியை யுடையர். தடுக்கு 501/8. "ஐயர் ... கின் கீழேயிருந்து கேட்டறியாயோ !" ஆஸநம் அல்லது குடிசை, விடு.

தடு குட்டம் 3167/3 ... மாய்ப் பறவாதார் *. கும்பிடு நட்டமும் குணலையும். கீழது மேலதாய், தலை கீழாக. குணலைக் கூத்து, அதாவது அளவு கெடப் பண்ணும் விகாரம்.

தடுமாற்றத் தீக்கதிகள் * 3770/2. தடுமாற்ற மற்று வர்த்திக்கிற தீக் கதிகள். பதற்ற மற்று நின்று நலிகிற புண்ய பாப ரூப கர்மங்கள்,

தடுமாற்ற வினைகள் * 3972/3. தடுமாறும்படி பண்ண வல்ல பாபங்கள். தடுமாறல் 1818/1. மடவார் கலவியை விடு ... *. இலேசம். தண்கடல் வட்டம் * 3165/4. குளிர்ந்த கடலுக்குட்பட்ட பூமி. தண்கா 1849/4. யாம் சென்று காண்டும் ... விலே *. திருத் தண்கால் என்னும் திவ்ய தேசம். தண்கால் 2068/3 ... லும் தண் குடந்தை நகரும் *. திருத்தண்கால் என்னும் திவ்ய தேசம். தண் கால் திறல்வலி * 2869/2 திருத்தண் காலிலே வந்தருளி பிரதி பக்ஷத்தை அடர்க்கிற பெரு மிடுக்கன்.

தண்கானல் 1724/3. செழுங் ... *. குளிர்ந்த நெய்தல் நிலம்.

தண்டகம் நூற்றவள் * 314/1. ராஜ்யத்தை விடுவித்து தண்ட காரண்யத்திலே விடக்கடவோமென்று விசாரித்த கைகேயி. நூல் சாஸ்த்ரமாய் அது விசாரரூமோகையாலே லக்ஷணயா விசாரித்தவள் என்று சப்தார்த்தம். தண்டகாரணியம் * 1860/1. தண்டடம் * 971/4. குளிர்ந்த கரை. தண்டம் 373/4. அரவ ... *. கிலேசம்.

தண்டமிழ் 1157/4. பாவு ... *. அழகிய தமிழ்.

தண்டமும் தண்மையும் * 3474/2. கொடுமையும் தண்ணளியும்.

தண்டயிர் 661/1. தோய்த்த ... *. குளிர்ந்த தயிர்.

தண்டல் படையினுன் (வா.மா. 278). யமன். "யமனுடைய தண்டல்" 1464/2. தண்டவரக்கன் 2425/2 ... தலைதாளால் *: தண்டிக்கத் தகுந்த ராக்ஷஸன். தண்டாமம் 2982/3 ... செய்து *. தட்பத்தையுடைத்தான பரம பதம். தாமம் – ஸ்தாநம், இடம்,

தண்டிக் கொண்ட (வா.மா. 286) அநுபந்தம் பார்.

தண்டினர் 17/2 ... பறியோலை *. தண்டத்தை, தடியை யுடையவர்.

தண்டீன் தேன் * 1359/3. குளிர்ந்து இனிதான தேன்.

தண்டு 3287/2. "தண்டேற வேணும்" ஆந்தோளிகை, பல்லாக்கு.

தண்டு காலூன்றி 2928/அவ. "... தள்ளி நடக்கும் போது." தண்டத்தையே காலாக வூன்றி.

தண்டுழாய் 789/3 ... வடங்கலந்த *. குளிர்ந்த துளசி. தண்டுளவம் 1203/1. ... வண்டு *. குளிர்ந்த துளசி.

தண்டுற நாற்றி 2545/2. தழைப் பந்தர் ... *. தண்டு – சாகை. அது உற நாற்றி - சிக்கென நாலா நின்று கொண்டு.

தண்டை 2549/அவ. வால். தண்ணளி 2464/1. விண்ணுகித் ... யாய் *. குளிர்த்தி. தண்ணனவு 428/1 ... இல்லை இரக்கம் *. மெத்தெனவு, தணிதல், த்ருப்தியுமாம்.

தண்ணும்பல் 220/1 குளிர்ந்த ஆம்பல். தண்ணுவாது 3319/4. ... அடியேனை * தாழாதே, விளம்பியாதே, தாமதியாமல். தண்ணுக்கை, தாழ்க்கை. தண்ணிது 3240/அவ. 3321/1. "நமக்கு சாலத் ...". தாழ்வு. தண்ணிய சாந்து 2498/1. மட்டமான சந்தனம்.

தண்ணியவர்கள் 3607/2. "... ளுங் கூடப் பொறுக்கமாட்டாமை". நிக்ருஷ்டர். தண்ணிலங்கை 3199/2 ... க்கிறையை *. கட்டளைப் பட்ட இலங்கை. தண் என்று அழகாய் கட்டளைப் பாடு.

தண்ணீர்த் துரும்பு 3583/ப்ர. "அவர் ... பறுத்துத் தர." இடையூறு. "... பற்று ப்ராப்தி கை புகுந்ததாவது எப்போதோ" 2918/4.

பிரதி பந்தகம். தண்ணீர் தண்ணீர் என்னப் பிறந்தவன் 2921/2. விரும்பி என்றபடி. தண்ணீர்ப் பந்தல் 551/4. ஒரு வாய்ச் சொல்லாலே ... லாம். தண்ணீர் வார்ப்பாரில்லை 3462/ப்ர. "ஸௌந்தர்யங் கொண்டு ...". துப்புவாரில்லை.

தண்ணுமை 254/1. ... யெக்கம் மத்தளி *. திருவரையில் சாத்தின பறை. ஒரு மங்கள வாத்தியம். 925/1: ஏதமில் ... யெக்கம் *. சிறு பறை. ஒரு தலைப் பறை. நகார் அல்லது தமுக்குப் போல.

தண்ணென்றது 2504/4. அவ்வாடையிதோ வந்து ... *. குளிரா நின்றது. தண்பசுஞ் சாந்து 3875/3 ... ணைந்து *. குளிர்ந்து ஆறின அங்கராகம், பூச்சு. தண்பாசடை 3715/3. ... யா தாமரை நீள் *. குளிர்ந்த பச்சிலைச் செறிவு. பாசு - பசுமை. அடை - இலை.

தண் பூங்காலம் 2484/3. கொடுமை குழறு ... *. குளிர்ந்து அழகிய காலம். சிரம ஹரமாய் அடிக்கழஞ்சு பெற்ற பகவதநுபவ யோக்யமான காலம். தண் முடி 3511/2. பூக் ... யர்க்கு *. அநுகூலமான திருவபிஷேகம், கிரீடம். தண் முத்தம் 3634/2. கோளிழைத் ... ... மும் *. குளிர்ந்த முத்து. தண்மை 3474/2. தண்டமும் ... யும் *. ப்ரஸாதம், அருள். 3876/2. (?). "மேலே வருகிற காலத்தினுடைய ... பாராதே." க்ரௌர்யம், 3060/3. "என் ... பாராதே வந்து கலந்தான்". நீசதை. தணரில் 1772/3. பின் ... ஆவி தளரும் *. பிரியில் தாழ்க்கில். தணி 515/2. ஆர்வந் தன்னை ... *. கெடு, குறை.

தணி போட்டுக் கிளப்புகை. 3576/2. (சி.அரு.) தன்னித்தடி திருப்பாவை மாரிமலை வியாக்கியானம் பார். இங்கே வடிம்பிட்டு என்றதற்குப் பொருள். 3583/2. (சி.அரு.) இங்கேயும் வடிம்பிட்டு என்றதுக்குப் பொருள். தணியும் பொழுதில்லை 3291/1. திருவதொரு பொழுதில்லை. தணிவிலர் 3008/4. ... கற்பரேல் *. சிரத்தை யுள்ளவர், அசிரத்தை யில்லாதவர். தணிவு – ஆறுதல். அது இல்லாதவர்.

தத்தி 3024/3. "பணையோடு பணை ..." தாவி - குதித்து.

தத்திப் பதித்து 24/2. ... த் தலைப் பெய்தாற் போல் *. மாறி மாறிப் பதித்து. தத்தி என்றது தத்த வாய் மாறப் பதித்த என்றபடி.

தத்துக் கொண்டாள் * 124/1. தத்த ஸ்விகாரம் கொண்டாள்.

தத்தும் 2556/4. ஞாலம் ... பாதனை *. தன் கீழே யாக்கிக் கொள்ளும். தத்துவம் 492/8. ... அன்று தகவேலோர் *. ஸ்வரூபம். தத்வமன்று - ஸ்வரூபத்துக்கு சேராது.

தத்துறும் 439/4. யானுன்னைத் ... மாறு *. கிட்டும். தத்துறுமாறு – கிட்டும் வழி. தத்துறுமாகில் 438/4. அவை ... அன்றெனக்கு *. தத்துறுகை - தட்டுப் படுகை. மாறுமாகில் – மாருட்டப்படு மாகில்.

ததர்த்த ஒலி 3598/1. ஊனுடை மல்லர் ... *. நெரிந்து விழுகிற ஒசை. (ததைந்த பாடபேதம்.) ததும்ப 3855/3. மலர்க் கண்ணீர்... *. நிறம்பும்படியாக, வழியும்படியாக. ததும்பி 254/1. தழைகளும் தொங்கலும் ... யெங்கும் *. ததும்புதல் கிளப்பம்.

ததைக்கின்ற தண்ணந் துழாய் * 2511/3. தழைந்துள்ள, செறிந்துள்ள. ததைத்து 604/4. ...க்கொண்டு*. நெருக்கி. தந்தலையாலே 872/1. "... வந்ததாகச் சொல்லுவானேன் !" தன்னாலே. தந்தலையாட்டம் என்பது தானாகத் தோன்றியபடி ஆடுகை. தந்திரம் 2151/3. ...த்தால் மந்திரத்தால்*. மந்திரமில்லாத கிரியை. தந்துவனாய் நின்றான் * 46/4. கொடுத்துவிட்டு தன்னுடைய வணக்கம்தோற்ற சற்று ஒதுங்கி நின்றான்.

தப்பச்சொன்னோம் 2922/அவ. பிழையாகச் சொன்னோம்.

தப்படி 1863/1. "தப்படிக் குள்ளே" – கவட்டிக் குள்ளே.

தப்பாமே 503/4. முப்பதும் ... *, குறையாமே.

தப்பிற்றின 3295/4. "தப்பாதவையும் ...". தப்பின பிள்ளை 70/3. ... களைத் தனமிகு சோதி புக *. தப்பிப்போன பிள்ளை.

தப்புத லின்றி 3652/2 ... தனைக் கவி *. தப்பாமல், தோஷம் தட்டாமல். தம்பகம் 681/4 ... மாய் நிற்கும் தவம் * ஸ்தாவரம், அசைவற்றது, ஸ்தம்பம்.

தம்பதி 3133/3. ... அவனி தேவர் வாழ்வு *. தம்முடைய பதி, ஊர். தம்பரமல்லன ஆண்மைகள் * 1920/1. தந்தாமால் செய்து தலைக்கட்ட வொண்ணாத வீரச் செயல்கள். தம்பாவையர் 266/3. தம்மைச் சரணென்ற ... *. தங்களுக்குப் பரதந்த்ரமான பெண்டுகள்.

தம்பிரான் 673/3. ... அமரர்க்கு * அதிபதி, ஸர்வாதிகன்.

தம்பி வளைக் காரியன்றே என்று நஞ்சியர் 2058/2. தம்பியான கண்ணனை வளைத்தவள், ரக்ஷித்தவள், துர்க்கை.

தம்மடியார் 434/2. பிழைப்பராகிலும் ... * அநந்யார்ஹ சேஷபூதர். தம்மடைந்தார் 950/3 ... மனத்திருப்பார் *. தம்மை சரணாகதி பண்ணினவர்கள். தம்மது 1126/1. நெஞ்சமும் ... மதே *. தம்முடையது. தன்னது ஒருமை. தம்மது பன்மை.

தம்மன்னை 881/4 ... நரகம் புகாள் *. தன்னுடைய அன்னை.

தம்மன 1123/2 ... வாகப் புகுந்து *. தம்மவை, தம்முடையவை.

தம்மனை 66/2 ... யானவனே *. தம்முடைய மனை, ஜன்ம பூமி. மகர வொற்று னகர வொற்றாய் தன்னுடைய அனை – அன்னையாய் தம்

முடைய தாய் என்றுமாம். தம்மான் 1072/4. எந்தை தந்தை ... னை * 1336/1. தனக்குத் தானே ஈசுவரன், தர்மான ஸ்வாமி, தம் அம்மான் தம்மான். தம்மில் கூடாதன 2499/3. என்று மாடாதன ... * தமக்குள்ளே சேராதவை.

தம்மின் 1872/2. இன்று ... எங்கள் வாணுள் *. தாருங்கோள்.

தம்மையம் 3078/4. மேவும் ... * தன்மையாக ஸ்வபாவமாக உடையோம். தமப்பன் 2916/அவ. தகப்பன் பிழை, தமப்பன் சரி. தம்முடைய அப்பன் தமப்பன். தமம் 3322/2. கொள்ளென்று ... மூடும் *. தபஸ். தமரும் தாங்களும் 1053/2. ... மே தடிக்க *. தாங்களும் தம்மைச் சேர்ந்தவர்களும்,

தமனகம் 184/4. பச்சைத் ... *. தமனகப் பூ. மருக்கொழுந்து.

தமிக்க 2938/3. "என் குற்றத்தைப் பார்த்துத் ... நினைத்தாராகில்." தண்டிக்க, தமம் - அடக்கம். அடக்குதல் இங்கே தண்டனையாகிறது. தமியம் 3869/4. புகலிட மறிகிலம் ... மாலோ *. தனிப்பட்ட நாம். தமியோம். தமியர் 2/1. "தாம் ... ராய் நின்று" தனியா யிருப்பவர், தமியன் 3513/1. குருந்த மொசித்த ... *. அஸஹாயன்.

தமியாட்டி 2550/4. ... தளர்ந்ததுவே *: தமி தனியாய் ஒப்பற்றவள். தமில் மருவி 71/1. ஒக்கலையிற் கொண்டு ... *. தந்தாம் கிருஹங்களில் சேர்ந்து. தமிழர் தமிழன் என்று வியாக்கியானங்களில் பலகால் வருகிறது. ஸம்ஸ்க்ருதத்தில் சாஸ்திரங்கள் கற்காமல் தமிழ் நூல் மட்டுமே கற்றவன் என்ற பொருளிலேயே இப்படி பலகால் காண்கிறது. [ணான்.

தமையன் 391/1. தங்கையை மூக்கும் ... னைத் தலையும் *. அண்

தயங்க 1985/1. மாலை இருபால் ... *, அசைய. 3796/2. நின் திருக்கண் தாமரை ... நின்றருளாய் *. விளங்க.

தயங்கொளி 1503/1 ... சேர் மூவுலகு *. மிக்க வொளி.

தயரதன் 727/1 ... குல மதலை *, தசரதன். தயலுற 3173/2. (9) "மநஸ்ஸிலே ..." தயவு உண்டாக.

தயிர்ப் பழஞ் சோறு * 3832/3. தயிரும் பழஞ்சோறும். இளம் போதைக்குத் தயிரை யுடைத்தான பழஞ் சோறு,

தயிர் வாவி 264/1. சோற்றுப் பருப்பதமும் ... யும் *. சோற்று மலைத் தொட்டியிலே வகுத்து விட்ட தயிர் வெள்ளம், தயி ரோடை.

தரக்கிற்றி 510/4. தலைப் புகழ் ... யே *. தர வல்லை.

தரங்கம் 761/1 ... வெண் டடங்கடல் *, அலை.

தரணி மங்கை 1139/2. ... தாமிருவர் *. பூமிப் பிராட்டி.

தரம் 956/1. நிலந்தரம் செய்யும் * தரை. நிலந்தரம் பார்.

தரம் 3086/1. ஆமோ ... அறிய *. விசேஷம், "தரமிட்டாலும் விடமுடியாத வடிவு" 3528/3. தரம் தார தம்யம். (பார்த்து பக்ஷபாதியாக ரக்ஷித்தாலும்). தரம் 3212/4. "நித்ய ஸூரிகள் ... த்னதக் கொடுத்து." அதிசயம்.

தரம் பெற்றூர் 3529/1. "அவன் பாடு ...". 3594/1. பஹுமாநம்

தரம் பெறவேணும் 878/4 (?). தரம் – சிரைஷ்ட்யம், மேன்மை.

தரவு 3319/ப்ர. "உன் ... வேணுமாகில்." சீட்டு. அநுமதி.

தரளம் 1184/4. வலம்புரி ... ஈனும் *. முத்து.

தராசு 3319/அவ. (சி.அ.) "... சிலே இரண்டு தட்டிலும்."

தராதலம் 1141/1 ... த்தோர் *. தருக்கிப் பருகும் 36/3. தொண்டை வாயால் ... * நெருக்கி. தரிசு கிடந்த தரை 3078/2. கரம்பு.

தரிப் பறுதி 3904/1. "இத் தேசத்தில் புகாத போதுண்டான ...". தரிக்க மாட்டாமை. தருக்கு 1054/1 ... க்கினல் சமண் செய்த * தர்க்கம், வாதம். தருக்கு மிடம்பாடு 2606/3. மேலால் ... *. ஹிம்ஸித்துப் போந்த உடமை. நலிந்த செல்வம்.

தருக்கேல் 200/2 ... நம்பி *. கர்வியாதே. தருக்கை 1179/1. மிகத் ... *. துர்மாநம், கர்வம். தருதுயரம் தடாயேல் * 688/1. நீயே தருகிற துக்கத்தை நீயே மாற்றுயாகில்.

தரும வரும் பயன் * 2962/1. தரும் அவ்வரும் பயன். அன்றிக்கே, தர்மத்தினுடைய பிரயோஜநம். அவ்வரும் பயன், அரும் பயன் என்று இரண்டு விதமாய்ப் பிரிப்பது.

தருமன் 2148/3. உயிரும் ... னேயே நோக்கும் *. யமன்.

தருமான மழை முகில் * 1749/1. தருவைப் போலவுமான மழை முகில் போலவுமானவன். அபேக்ஷித்தார்க்கு அபேக்ஷிதங்களைக் கொடுக்கக் கடவதா யிருந்துள்ள கல்ப தரு போலவும், அபேக்ஷா நிரபேக்ஷமாகக் கொடுக்கக் கடவதான பெரிய மேகம் போலவுமானவன்.

தரைக்கிடை 2745/1. "... கிடக்கிருய்" தரையில் இருப்பு.

தரைப் படுகை 811/2. தரைப்படும் படியாக 724/2. தரைப் படும்படியான 848/1. சக்தியற்று விழுகை.

தரையோர் 1613/2 ... க்கும் விண்ணோர்க்கும் *. தரையில் பூமியில் உள்ளவர்கள். தலக்கற்றுச் சொல்லும்படியான ஆற்ருமை

3990/ப்ர. லஜ்ஜையற்ற. தலக்கறுக்கும் போது 3517/4. "இப்பருவத்தில் இவளைத் ...". லஜ்ஜையை மாற்றும் போது.

தலசயனம் 1107/1 ... த்தடிகள் * திருக்கடல் மல்லை.

தலைக்கட்டான அமுதம் 3061/3 (9). தலைக் கட்டு பூர்த்தி, அதாவது ஸாரம். ஸாரமான அம்ருதம்.

தலைக் கட்டு 3578/4· "இப்பாட்டில் ஒரு ... மின்றிக்கே யிருக்கும்". பூர்த்தி, அதாவது கிரியா பதம், வினைச் சொல்.

தலைக்கட்டுங் காட்டில் 3207/4. "ஒன்று சொல்லப் புக்கால் அது ...". பூர்த்தியாகுங் காட்டில்.

தலைக் கடை புழக்கடையுமடைத்து 2055/3. 3611/3. தலைக்கடை - வாசல். புழக்கடை - கொல்லை. இரண்டையும் அடைத்து-மூடி.

தலைக்கணம் 767/1 ... த்துகள் குழம்பு * மேலான தேவ கணம். தலைக்கணி 3793/3 ... பாதபங்கயமே *. தலைக்கு ஆபரணம்.

தலைக்காட் பலித்திரிவர் * 2433/2. ஒருத்தன் பிழைத்தால் தலையரிகிறேனென்று ப்ரார்த்தித்து பலி த்ரவ்யமாய்த் திரிந்தன்றோ படுகிறது. தலைக்கு - ஒருத்தன் தலைக்காக, ஆட் பலி - நர பலியாக தங்கள் தலையை அறுத்து இடுவார்கள். தலைக்காவ லிருந்தவர்கள் 1142/1 அரு. முதலாளிகள். தலைக்கொண்ட பின்னை 2757/2. உறக்கம் ... *. அதிகமான பிறகு. தலைக்கொண்ட நாங்கள் 2565/4. திருமால் ... *. வியாமோஹம் அதிகரித்த நாங்கள், தலைக் கொள்ளுகை - மீள வொண்ணாதபடி முறுகு கொளுந் துகை, வயிரம் பற்றுகை, நெருப்பு வயிரத்தில் பற்றினால் அவிக்கப் போகாதாப் போலே ஒருத்தராலும் மீட்கப்போகாதென்றபடி. திருடமாகை.

தலைக்கொள்ளப் பாடி 3166/3. பண்கள் ... * தலைக் காட்ட. சமக்க, மிக, தலைபெறும்படி, தலைமை, மேன்மை, மேலாம்படி.

தலைகாண வொண்ணாது 1920/1. எல்லை காண வொண்ணாது.

தலைகீழதாக விழுந்து 3541/1. தலை கீழாக. தலை கொண்டாய் 186/2. முக்கோடு காவலனைத் ... *. 189/2 சக்கரத்தால் ... *. தலையை அறுத்துக் கொண்டாய். தலைச்சங்க நாண்மதி 2881/2. தலைச் சங்காட்டிலே, கடலிலே சந்திரன் உதித்தாற் போலே பரிபூர்ணனாய்க் குளிர்ந்து நிற்கிறவன். தலைச் சங்கம் 1736/2. தாமரை சூழ் ... *. தலைச்சங் காடு. தலைச்சாவி வெட்டப் போகிறதில்லை 3831/2. பயிர் மதாளித்துப் போனால் நுனிகளை அறுத்துப் பொகடுவது.

தலைச்சாவி வெட்டினபடி 2515/3. "செருக்குக்குத் ..."

தலைச் சிறந்து 3733/1, தான நகர்கள் ..., * மிகவும் சிலாக்கியு

மான, தலைப்பட்ட, சிறப்புடைய, விலக்ஷணமான. 3784/1.

தலைசாடி 397/1. மேலிருந்தவன் ... * தலை சிதறும்படி சாடி.

தலை சாய்ப்பதன் முன்னம் * 376/2. இறப்பதற்கு முன்.

தலை சிறப்ப 3961/2. இன்பம் ... *. அதிகமாக. தலை சீய்க்கிறார் 2032/அவ. "வந்த பேற்றின் கனத்தை அநுஸந்தித்து ..."

தலை சீய்க்கும் 3233/1. "புண் பட்டுத் ...". கிலேசப்படும்.

தலை சீய்ப்பு 946/அவ. (அழ). சிர: கம்பம். தலையசைப்பு "இனி எத்தைச் செய்வோமென்கிற ... போடே."

தலைத் தரம் 3767/4. "... மான கழனி." புரவார் கழனிக்குப் பொருள். புரவார்ந்திருக்கை - தலைத்தரப் பெருக்கா யிருக்கை. புரவு-ஸாரம், பூஸாரம், ஆர்ந்திருக்கை - மிக்கிருக்கை. தலைத்தரம் - தலையிடு — என்று சி. அ. ந. தலைத்தலை 3680/1. ... சிறப்ப *. மிகவும். மேன் மேலென. மிக. தலைத்தலை சிறந்து பூசிப்ப * 3799/2. ஒருவருக்கொருவர், சிறந்து - கிட்டி, பூசிப்ப - ஆசிரயிக்க. மிகவும் மேல் விழுந்து கொண்டாட. தலைத் தலைப் பெய்து 3320/1. தமருற்றார் ... *. மேல் விழுந்து மேல் விழுந்து. தலைத் தலைப்பெய்தல் தலையோடே தலை சேர்த்தலாகவுமாம். தலைத் துகை துகைந்து (வா.மா. 161) "உபதேசமாகிற உலக்கையாலே சிரவணமாகிற ...". தலைக் குத்தல் குத்தி. தலை துலுக்கு 535/4. "அவன் பக்கல் குறைவில்லை. உன் பக்கல் ... கேயிறே வேண்டுவது". தலை யசைத்தல், ஸம்மதி, இசைவு.

தலை நாகு 484/1. "எல்லாம் தலை நாகுகளா யிருக்கை." தலைச்சங்கன்று மாடு, முதல் ஈற்று மாடு. அதாவது இளமை மிக்கது.

தலை நிலாப்போது 145/4 ... தே உன் காதை *. தலை செவ்வே நில்லாதபோது. நில்லாவில் இடைக் குறைத்தல் நிலா.

தலை நீர்ப்பாட்டிலே 1/அவ. "... ஏற்றமெல்லா மறியும் பிராட்டி." தலை மடை, ஆரம்பம், பிரதம தாரை. தலை நொந்திடும் 148/2. ... என்று விட்டிட்டேன் *. தலையிலே நோக்காடு உண்டாகும். நோக்காடு-நோவு. தலைப்பணை (தனி ச்லோ: விஷயே தே). மேல் மரம்.

தலைப் பழி 625/3. நாட்டில் ... *. பெரிய பழி. தலையான பழி.

தலைப்பற்றி 399/3 ... க்கரை மரஞ்சாடி *. விருக்ஷங்களுடைய தலையைப் பற்றி,தலையளவும் சென்று. தலைப்பற்றி வாய்க்கொண்டதே * 464/4. பெருகி வாய்த்தலைக்கு மேலே போகா நின்றது.

தலைப்பறை 3917/2, "மத்த கஜமானது முன்னே ... கொட்ட வருமாப் போலே". வாத்தியம். மதம் பிடித்த யானையை மேளம் அடித்து அமைதியாக்கி அழைத்துச் செல்லுவது.

தலைப்பறை 2684/1. "கொல்லும் ஆனைக்குத் ... அடிக்குமாப் போலே". பெரிய வாத்தியம். தலைப்பு 457/3 ... எய்திட்டேன் *. தலைப்பெய்திட்டேன் பார். தலைப் புகழ் 510/4. தாரணியில் ... *. நிலை நின்ற புகழ். தலைப்பெய் காலம் 3141/1 ... நமன்தமர் *. கிட்டும் காலம், தலைப்படும் காலம். தலைப்பெய்தாப் போல் 92/4. தத்திப் பதித்து ... *. சேர்த்தாற்போல்.

தலைப்பெய்திட்டேன் * 457/3. தலைப்பட்டேன். ஏற்றுக் கொண்டேன். தலைப் பெய்து 396/1 ... குழுறி *. வந்து கிட்டி.

தலைப்பெய்து 3834/4 தழை நல்ல வின்பம் ...*. பெற்று. 3835/1 இன்பம் ... தெங்கும் *. உண்டாக்கா நின்று கொண்டு.

தலைப்பெய்தோம் 495/3. வந்து ... * கிட்டப் பெற்றோம்.

தலை மக்கள் 2583/அவ. "ஸ்ரீவைஷ்ணவர்களைத் ... ளாகச் சொல்லிற்று". தலைவர்கள். தலை மகன் 2278/1. இமையோர் ... *. 3066/1. விண்ணோர் பரவும் ... னை * 3087/1. அமரர் ... னை *. முதன்மை யுடையவன், மேன்மை யுடையவன், பரன், அதிபதி, பெரியவன், தலைமகன் 1644/2. மூவரில் முன்னிய விருத்தனையில் விருத்தன் தலை மகன் நாயகன் என்று பொருள்.

தலைமடாதே 3118/1 (9). "இதர புருஷார்த்தத்தில் பிரவணராய் ..." மூழ்காதே. தலை மண்டை யிட்டு 3726/ப்ர. (சி.அரு.). "பிரீதி ... முடிந்தாள்" அதிகமாகி. தலை மறியும் 618/3. மாயனைக் காணில் ... * திரும்பும், மீண்டு வரும். தலை மறை 2147/2. மேலைத் ... யோர் *. வேதத்தின் தலையான உபநிஷத்து.

தலை மன்னர் 2397/2 ... தாமே மாற்றுக *. தலைவரான மன்னர்:

தலைமிசையாய் வந்திட்டு * 3990/3. பூர்ணமாக வந்து தோற்றி, நிர்ஹேதுகமாக வந்தென்றுமாம். தலைமிசை - தலைக்கு மேல் என்றுய் பூர்ணமாய் என்றபடி. தலைக்கு மேலாய் வந்தமைந்து.

தலை முகடு 2327/2. ... தானொரு கை பற்றி *. தலை பாகம்.

தலைமேலான் 1999/4. தார் மன்னர் தங்கள் ... *. தலைமேலே வீற்றிரா நின்றான். தலைமை 3370/3. "இவள் ... இருந்தபடி" மேன்மை. சிலாக்கியதை. தலைய மத வேழம் 1620/1. குலம் சிறந்த மத யானை. தலையரங்கம் 2251/1. தஞ்சை ... *. திருப்பதிகளில் தலையான அரங்கம்.

தலையல்லால் கைம்மாறிலேன் * 550/4. தலையால் வணங்குவது தவிர, வேறு கைம்மாறிலேன். தலையழித்து 519/3. "இதுக்கு முன்பு ஒருவர் ... தறியாக் கடலை யடைத்து". செருக்கழித்து.

தலையழித்து 9/3. "... மூலையடியே போம்படி பண்ணி வந்தான்." நன்றாக அழித்து. தலையளிக்கும் 3962/2. ஊழியூழித் ... *. நன்றாக ரக்ஷிக்கும். தலையாடி 3614/4. ஸர்வதர்மாந் பரித்யஜ்ய சுலோகத்தில் ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி என்னும் 4-ம் பாதம். அதாவது - பிரதிஜ்ஞா வாக்கியம். பிரதாநாம்சம் — என்று பொருள்.

தலையாடி: "ஓரதிகாரிக்கு உபாயத்தில் ... யாயிருக்கும்; ஓரதிகாரிக்கு பிராப்யத்தில் உபக்ரமமா யிருக்கும்." உபக்ரமம் - ஆரம்பம். 601/2. முடிந்த நிலம், முடிவு - பூர்த்தி.

தலையாடி 1223/3. கண்ணார் கரும்பின் கழையில் கழைக்குப் பொருள். கழை - நுனி அல்லது குருத்து, கொழுந்து.

தலையாரி 3365/1. பாடி காப்பார், கிராம ரக்ஷகர்.

தலையாலே சுமந்தது 3991/1. "என்னைப் பிரித்துக் காண வொண்ணாத படியன்றோ நீ ...". தடுமாறிப் பரிமாறிற்று.

தலையாளன் 1389/3. வானவர்தம் ... *. அதிபதி.

தலையான அம்ருதம் 3061/3. "ப்ராக்ருத போகங்களிலே ...". நல்ல அம்ருதம். தலையான நறு நாற்றம் 3584/1. தலையிலே உண்டான சிரேஷ்டமான ... என்று இரண்டு பொருள். சிலேடை.

தலையான பேர் 3634/அவ. "... ரை நெற்றிக் கையிலே விட்டுக் காட்டிக் கொடுக்க வொண்ணாது." பிரதாநர். நெற்றிக்கை - முன் தூசி, தூசித் தலை, ஸேநா முகம்.

தலையான சாந்து 8/3. நல்லதோர் சாந்து, சந்தனம்.

தலையிடம் 1982/2 ... அற்று *. மேலான இடம்.

தலையிடமற்று * 1982/2. தலைகாட்ட இடமற்று.

தலையிடாதே 625/3. உங்கள் நன்மை யிழந்து ... *. லஜ்ஜித்துக் கவிழ் தலையிடாதே. தலையிலே பிரம்புகள் விழிலும் 2539/4. அநுபந்தம் பார். தலையினோடாதனம் தட்ட * 3167/3. தலையில் ஆதனம்-தரை தட்டும்படி, தரையோடு தலை தட்டும்படி.

தலையுடைத்தாக்கும் வண்ணம் * 511/3. தலைமை பெறும்படி.

தலையுலறி 511/1 உடம்பொடு ... *. தலையுதறி. தலைவலித்தான் 3712/1. "தேவர்களில் ... னுயிருக்கிற ருத்ரன்". பிரதாநன்.

தலை வலித்தார் 1251/2. "... அடங்கலும் எங்கள் பக்கலிலே பிரஸாதத்தைப் பண்ணியருள வேணும் என்ன". பெருந்தலையார், என்றும் தங்கள் தலைக்கு - அதிகாரத்துக்கு வலி - பாதகமுள்ளவர் — என்று இரு பொருள், ... வாசல் (?). கோபுர வாசல்.

... விளாக் கொண்ட எந்தை * 906/1. எல்லார் ... க்கும் அவ்வருகே போன ஸ்வாமி. விளா என்றது உழுமிடத்தில் மூந்தின விளா இடமாகக் கோலுகை (?).

தவ்வை 3478/2. பூவில் வாழ் மகளாய்...யாய் *. அஶ்ரீ, அலக்ஷ்மி, ஜேஷ்டை, மூதேவி. தவத் தேவ தேவன் 2401/2 ... னும் நீயே * தவத் தேவர்களுக்குத் தேவன்.

தவ தவ நாறுகிறபடி 3995/1. தபோ கந்தியா யிருக்கை. பாரதந்த்ரய கந்தியாய் ஸிலாக்கியமா யிருக்கை. அஸங் தேசாத்து ராமஸ்ய தபஸச் சாநு பாலநாத் — என்கிற இடத்திலே பாரதந்த்ரயமிறே தபஸ் என்கிறது. தவ நெறிக் கோர் பெருநெறி * 1090/3. ஸ்வப்ராப்தியுபாயங்களில் பெருநெறியா யுள்ளவன்.

தவமாமுனி 1162/2 ... யைத் தமக்காக்கி *. தவரும் 3869/1. குறிஞ்சி யிசை ... மாலோ *. துளைக்கும். தவழ் கதிர் 3796/2 ... முறுவல் செய்து *. புறப்படும் கதிர்.

தவளநகை 588/2 ... காட்டுகின்ற *. மந்த ஸ்மிதம்.

தவள நெடுங்கொடி 472/1 ... க்கொண்டு * வெள்ளைக் கொடி, சுத்தமான கொடி, துவஜம். தவளப் பொடி 3290/4 ... க்கொண்டு *. சுத்தமான பொடி. தவள மாடம் 916/1. வளவெழுந் ...*. வெள்ளியால் செய்தாற்போல மிக்க வெளுப்பான மாடம்.

தவிசு 94/4. தண்போது கொண்ட ...*. திருப்பள்ளி, மெத்தை, படுக்கை. தவிர்கிலம் 3484/4. இரவும் நன்பகலும்... *, ஒய்கிறிலோம்.

தவிராது நின்றான் * 3283/2. ஒன்றும் நழுவாதபடி வியாபித்து நின்ற ஸ்வரூபத்தை யுடையவன்.

தவிருமாகக் கொண்டு 3319/ப்ர. நிவர்த்திக்கும் போக்கும் என்று அநுஸந்தித்துக் கொண்டு. தவிவில் சீர் விளக்கம் * 3157/3. தவிவு - விச்சேதம். விச்சேதமில்லாத அழகை யுடைய பிரகாசம். அதாவது ஸூர்யாதி தேஜஸ்ஸுகள்.

தழ தழப்பு 952/3. கத்கதஸ்வரம். தழல்நிற வண்ணன் * 1450/1. அக்நி போன்ற நிறத்தையுடைய ருத்ரன்.

தழல் வாயரசு 2490/1. செங்கோல் நடாவு ... *. உஷ்ண கிரணனான ஆதித்யன். தழலாழி 1598/2 ... வலத்தான்*. நெருப்பையுமிழும் சக்ராயுதம். தழலும் நிழலும் * 3474/2. அக்நியும் நிழலும். சீதோஷ்ணங்கள். தழீஇ 2641/1 ... க்கொண்டு *. ஸ்பர்சித்து.

தழீஇக் கோளியர் 3246/1. எருதேழ்... * தழுவிக் கொள்ளுமவர்.

தழுத் தொழிந்தேன் 952/8. குரல் ... *. தழு தழுப்பிலே தெரியு படியானேன். தழு தழுப்பு - தழ தழத்த குரல்.

தழு தழுத்த நோக்கு 2935/(?). கலங்கின பார்வை.

தழுப் பரிய சந்தனங்கள் * 408/8. நால்வர் இருவர் தழுவினாலும் கைக் கடங்காதபடி வளர்ந்த சந்தன மரங்கள். தழுப்புதல் - தழுவுதல்.

தழுவப் பாடி யாட * 3307/4. ஒடுகிற கருத்தோடே கூடப் பொருந்தும்படி பாடி யாட: தழு வல் வினை 3422/2 ... யால் பக்கம் நோக்கி *. தழுவி விடாதே நிற்கிற பிரபலமான பாபம், உடன் வந்தி யான வல் வினை. த ழு வி மு ழு சி 681/2 ... ப்புகுந்து *. நெருக்கி யணைத்து. 3715/ப்ர. (9). [நள்ளிருள்·

தழுவு நள்ளிருள் 1695/4. தனிமையில் ... *. அணைக்கும்படியான

தழைக்கா 260/1 ... வின் கீழே *. பீலிக் குடைச் சோலை. பீலிக் குடை - மயில் தோகை. அதுபோன்ற சோலை. தழைக் கொழுஞ் செழுந் தடங் குடந்தை * 811/3. தழைத்த சிரத்தையை யுடைத்தாய் செழுந் தடாகங்களையுடைய குடந்தை. சிரத்தை அநுபந்தம் பார்.

தழைகள் 258/1. சுற்றி நின்றுயர் ... *. குடை, தழைக் குடை' தாழை ஓலையால் செய்த குடை, தாழங் குடை.

தழைகள் 254/1 ... ளும் தொங்கலும் *. பீலிக் குடை. மயில் தோகையால் செய்த குடை. தழை கூறு 2974/2 (24). "இஞ்சிப் பயிரில் ... கொள்வாரைப் போலே" த ழை ம யி ல் பாதி. அஸாரமான வஸ்துவில் பாதி. தழைத்து 3041/1. "... வேருன்றின ரக்ஷஸ்ஸு." ஸம்ருத்தமாய். தழை நல்ல வின்பம் * 3834/4. விஸ்தீர்ணமதாய் நன்றான இன்பம். தழைப் பீலி 206/4. மயில் ... சூடி *. தழைத் மயி லிறகு.

தள்ளி நடவா முன் * 972/8. தடுமாறி நடப்பதன் முன்.

தள்ளும் 2024/4. தாங்கா துள்ளம் ... *. தடுமாறு நின்றது.

தள்ளுவுதி 8414/2 (12). வீழ்த்தி. விழ்த்துவாய், தள்ளுவாய்.

தளப்பம் 8550/4 "... தீரமிறே இவர்க்கு". அலேச்சல். 2726/2. "இவளுக்கு நான் கரையவேணுமோ — என்று ... மற்றுள்". கவலை நீங்கினள். தளப் பெரு தன் முறுவல் 2486/4. தளப்பம் - த ள ம், முல்லை. அது போல பெருமையும் நீட்சியுமுடைய முறுவல், பல் வரிசை. தளப்பில் பகரம் இரண்டும் அசை.

தளர்ந்தார் தாவளம் 3289/4 (?). ஆர்த்த ரக்ஷகன். தாவளம் -

தஞ்சம். தளர்ந்ததோர் நடை * 713/3. தள்ளம் பாறுவதான நடை. தளர் நடை பார். [முறிந்தும்.

தளர்ந்தும் முறிந்தும் 3542/1 ... சகட வசுரர் * கட்டுக் குலேந்தும்

தளர்ந்தும் முறிந்தும் வரு திரைப் பாய் *. 2551/1. பெருந்திரைகளாக எடுத்து அக் கனத்தாலே தளர்ந்து காற்றாலே முறிந்தும் வருகிற திரைகளை யுடைத்தான படுக்கை. கொந்தளித்து விழுவ தெழுவதாய் ஒன்றோடொன்று மோதி முறிந்து வருகிற திரைக் கிளப்பத்தை யுடைத்தான திருப்பாற் கடலான படுக்கை.

தளர்ந்தேன் 2393/3 ... நானினி *. இழந்தேன்.

தளர் நடை 86/4 ... நடவானோ *. 701/1 ... யிட்டுச் சென்று * தள்ளம் பாறுகை, தவறுகை.

தளர்வு 746/1. பிரியலுற்றுத் ... *. நோவு. தளரில் கொலோ 2560/4 ... அறியேன் *. முடிந்தாலோ. தளவேழ் முறுவல் 2943/3 ... பின்னை *. தளம் - முல்லை. எழுகை தொற்றுகையா யிருக்கிற முறுவல்.

தளிர்ப்பிக்கின்றாள் 89/3. தன் வாயமுதம் தந்தென்னை ... *, தழைப்பிக்கின்றாள், ஸந்தோஷத்தாலே பூரிக்கப் பண்ணினாள். தளிர் புரையும் திருவடி * 2552/4. தளிர் போன்ற திருவடி.

தளிரும் முறியும் 2942/2. "திருநகரி ... மாயிற்று". பல்லவமும் மொட்டும். தளை 25/3. வெள்ளித் ... *. தண்டை. 436/1. வன் தளை * விலங்கு. தளை 995/2. கைத் தளை *. கை விலங்கு.

தளைக் கட்டவிழ் தாமரை 1224/1. தளைத் தாமரையும் கட்டவிழ் தாமரையும். அதாவது — மொட்டுத் தாமரையும் அலர்ந்த தாமரையும். தளைக் காலன் 2739/2. தடந்தோள் ... *. விலங்கிட்டிருக்கிற காலை யுடையவன். தளைத் தவிழ் தாமரை * 1171/2. தளைத்து என்கிற விடத்தில் அத்துச் சாரியையாய் தளை யவிழ் தாமரை என்றபடி.

தளைத்தாமரை * 1224/1. தளைக் கட்டவிழ் தாமரையே.

தளை விடு மாயர்கள் * 920/1. மேய்க்கைக்காக மேதிகளைக் கட்டவிழ்த்து விடும் ஆயர்கள்.

தற்சூழ 678/1. அரம்பையர்கள் ... *. மேல் விழ. "தப்ப நினைத்தாலும் தப்ப வொண்ணாதபடி ...". தற்செய்ய 3960/4 "... நெடும் பகை தானே கெடும்". தான் செய்வதைச் செய்தால்.

தற்பற்ற 3853/4 "... என் பிராணன்." தற்பு - பலம். பலமற்ற

தற்பற்றிருக்கிறவர் 3869/ப்ர. (24). தற்பு 2457/4. தனமாயையில் பட்ட ... * உண்மை. தற்பு ஸத்தையாய் உண்மை யென்றபடி.

தற்பு – தத்வம். தற்பெண்ணைத் தானறியான் * 2458/1. என்னை உள்ளபடி அறியான். தற்றோன்றல் 2608/2. தானே பிறர்கட்கும் ... *. ஸத்தை, தத் சப்தம் ஆந்தர்யாமி. தறி 1143/2 ... யார்ந்த கருங் களிறு *. கம்பம். கட்டுத்தறி என்பது இதுவே. தறி 1540/1. '... யோடே சேரக் கடவ தன்றிக்கே'' கட்டுத் தறி.

தறிக்க 2899/அவ. (அடை). "சமித்தைத் ... க்கொடுத்த கத்தியைக் கொண்டு பசுவின் வாலைத் தறிப்பாரைப் போலே''.

தறிகை யிட்டு வெட்டுண்ட மரங்கள் (தனி சுலோ: விஷயே தே). உளி. தறுகண் கரி 1669/3. மழை மதத்த சிறு ... * வட்டணித்த க்ரூரமான கண்ணையுடைய யானை.

தறுகண் பன்றி * 1751/1. தறுகணாளர் (?). [யினமு முண்டு.

தறை 504/1 ... விளக்கி * தரை. ஸ்தலம். தரையென்று இடை

தன்கணம் 109/3 ... த்தாலே சதிரா நடந்து *. தன்னுடைய திரள். தன் கால் (பால்) 2519/4. ... பணிந்த என்பால் *. தன் திருவடியில், தன்னிடத்தில், தன் செல்லாமையாலே 881/2. தன் அசக்தியாலே. "மூலைக் கடுப்புத் தீர தரையிலே பீச்சுவாரைப் போலே ... காட்டினாயிற்று.'' தன்தனக்கு 832/2. உடைந்த வாலி ... *. தம்பி தனக்கு, தம்பிக்கு. மவ்வுக்கு ன ஆதேசமாய், தம்பி என்றத்தைத் தன் என்று கடைக் குறைத்தலாய்க் கிடக்கிறது — என்றான் ஒரு தமிழன். தன் தம்பி. தன் தனக்கு - தம்பிக்கு.

தன் தனக்கு 3281/1 ... கின்றி நின்றானை *. தானான தனக்கு, அதாவது — ஸ்வா ஸாதாரணாகாரம், ஆசிரத பார தந்த்ர்யாதிகள்.

தன் தாமம் (ருமம்) 720/2. பரம பதம். தன் துணை 1072/2 ... ஆயர் பாவை *. தன்னையே துணையாக.

தன் தேற்றி 3651/1. ஆமுதல் வனிவனென்று ... *. தன்னை உள்ளபடி அறிவித்து. தன் நம்பி 90/4 ... யோட *. தன் தமையன். நம்பி - பெரியவன், தன் நம்பி நம்பி * 1911/2. தன் தமையனான நம்பி மூத்த பிரான், பலராமன்: தன்மம் 209/4. தாய் சொல்லுக் கொள்வது ... *. தர்மம். தன்ம பாவம் 3468/4 ... என்னார் *. தர்மமும் பாபமும். தன்மை பெறுத்தி * 3193/2. ஸ்வரூபத்தைக் கொடுத்து,

தன்மை யறிவார் * 3608/1. உண்மை யறிவார்.

தன்றிறம் 835/3 ... த்தொரன் பிலா *. தன்னிடை யாட்டத்து.

தன்னகம் 2271/2. விண்ணுலகக் ... த்து *. தன்னிருப்பிடம்.

தன்னடிச்சி 2726/1 ... யல்லளே *. தன்னடிமை.

தன்னது 872/2 (?). தன்னுடையது. தன்ன தோரணி 3008/1

... யைத் தென்குருகூர் *. தனக்குத் தானே ஆபரணமான அழகுடையவன். தன்னரசு நாடு (?). தன்னுடைய ஆட்சியிலுள்ள நாடு. அராஜகமாய் எல்லாரும் தன்னரசு என்று ஸ்வதந்திரமா யிருக்கிற தேசம். தன்னலர்ந்த திருத்துழாய் 2076/2. தன்னிலத்திற் காட்டில் செவ்வி பெற்று அதி பரிமளிதமான திருத்துழாய்.

தன்னலப் பொன்றில்லாதவன் * 2608/1. உபமாந ரஹிதன்.

தன்னன்ன செம்மை 287/1 ... சொல்லி *. தன்னோடொத்த செவ்வை, தன்னுடைய க்ருத்ரிமாநு குணமான குடிலோக்திகள்.

தன்னாக்கி 1048/2 ... த்தன்னின்னருள் *. தன்னோடொக்கப் பண்ணி, தனக்காக்கி. தன்னாகவே கொண்டு * 3212/4. தனக்காகக் கொண்டு. தன்னாயம் 1391/1 ... த்தோடணைவாள் *. தன்னுடைய ஸகிஜநம், தோழிமார். தன்னாற்றான் 2464/8 ... நேமியான் *. எல்லாம் செய்தும் தான் ஒன்றும் செய்யாதானா யிருப்பவன்.

தன்னானார் 3712/8. இனையர் ... *. தன்னோடொத்தவர்கள்.

தன்னியலோசை 97/2 ... சல சல னென்றிட *. தனக்கு இயல், இயல்வான, ஸ்வாபாவிகமான ஒசை. தன்னிலம் வெளிநிலம் 3165/1. தானிருக்கு மிடம். தனக்கு அப்பாற்பட்ட இடம்.

தன்னின வாகப் பேசா நின்ருள் 3404/அவ. தன்னதுகளாக, தன்னுடையனவாக. தன்னினுடனே 2855/1 ... சுழல *. தன்னுடனே. தன்னெற்று மாற்றலர் * 89/4. தனக்கு எதிரே வந்து சத்ருக்களாய் நிற்கிறவர்கள். தன்னேராயிரம் பிள்ளைகள் * 223/1. தனக்கு நேரான ஒத்த பருவத்திலுள்ள பிள்ளைகள்.

தன்னை யென்னாக்கி * 3685/2. என்னைத் தன்னைப் போலாக்கி.

தனஞ்சயன் 111/2. தாழ்ந்த ... *. அர்ஜுநன்.

தனத்துள்ளான் 2284/2. மலராள் ... *. ஸ்தநத்தையும் தனக்கு வாஸஸ்தாநமாக வுடையவன். தனதாக 2117/2. தரணி ... த்தானே *. தன தாயப் பதி 3733/4. தனக்கு தாய ப்ராப்தமான தேசம்.

தனம் கொள் மென் முலை * 1865/2. தநமாய் ஸர்வ ஸ்வமா யிருக்கிற மெல்லிய முலை. தன மருவு வைதேகி * 746/1. ஸ்தநத்தின் அழகுமிக்க வைதேகி. விஷ்ணோ: ஸ்ரீ: —என்கிறபடியே பெருமாளுக்கு தனமான பிராட்டி. தனமாய தானே கைகூடும் 2124/2. தனமா யிருக்கிற தெல்லாம் தானே வந்து கை புகுரும்.

தன மாயை 2457/4 ... யிற்பட்ட தற்பு *. தன்னுடைய ஸங்கல்ப்பம். தன மிகு சோதி * 70/3. தனக்கு அஸாதாரணமாய் தேஜோரூபமான பரமபதம். தனது புல்லறிவாண்மை *. 2583/5. தன்னு

டைய. தனிக் கடல் 471/3 ... லே தனிச் சுடரே *. ஒப்பற்ற கடல்.

தனிக் கோல் 3275/1 ... செல்ல *. ஒப்பற்ற செங்கோல்.

தனிச் சுட்டி 76/2 ... தாழ்ந்தாட *. அத்விதீயமான, அழகான சுட்டி, தலைச் சுட்டி. தனிசர் 3435/4. குறும்பர். "தனிசற இருக்கிற இடமிறே".

தனிசாளன் (அர்ச்சி மு. ப்ர.) பெருந்தனிசாளன், கடனாளி.

தனி சுடையார் 1663/4. "... பணைய மெடுப் பாரைப் போலே". தனிசு - கடன். பணயம் - பிச்சை. கொடுக்கு மத்தனை தனமுடையவர் கள் பிச்சை யெடுப்பது போல.

தனிசு பட்டிருக்கும் 2687/2. "தன்பேர் சொன்னவர்களுக்குத் திருவுள்ளத்திலே ...". தனிசு - ருணம், கடன்பட்டவனாக நினைத் திருக் கும். தனிசு வாங்கி ஜீவிக்குமவர்கள் 2933/4.

தனித்தடி போட்டு - விசி வில்லிட்டு எழுப்புகைக்குப் பொருள். 496/4. தனி நின்ற சார்விலா மூர்த்தி * 2655/2. காரிய ஜாத மெல் லாம் அழிந்து காரண வஸ்தமாய் நாம ரூப விபாகா நர்ஹமாய் "நான்" என்ற சொல்லிலே அடங்கி தனக்கும் வேறொரு அபாச்ரய மின்றிக்கே நிற்கிறவன். தனி நெஞ்சம் 2480/4. அப்புள்ளின் பின்போன ... * தனிப்பட்ட நெஞ்சம்: ஸ்வதந்த்ரமான நெஞ்சம்.

தனிப் பாகீர் 1924/1. கருளக்கொடி யொன்றுடையீர் ... *. அத் விதியமாக நடத்த வல்லவரே — என்று விளி.

த(நி)னிபோட்டுக் கிளப்பி 3221/3. (சி.அரு). வடிம்பிட்டுத் தாக்கிக்குப் பொருள். தநி என்று தன்னகரம் இங்குமட்டும் காண்கிறது.

தனி மாத் தெய்வத் தடியவர் * 3580/7. தனிமாந் தெய்வம் - அத்விதிய பர தேவதை. அதற்கு அடியவர் - ஸ்ரீவைஷ்ணவர்கள்.

தனிமா முரண் 1219/1. முதலைத் ... *. ஒப்பற்ற மிடுக்கு.

தனிமுதல் ஞானம் * 3229/1. அத்விதிய காரணமான ஸங்கல்ப்ப ரூப ஜ்ஞானம். த்ரிவித காரணமும் தானேயான ஸங்கல்ப்ப ரூப ஜ்ஞா நம். தனியர் 3148/2 (24). "... ரல்லாமையாலே திருவுள்ளத்தோ டொக்கும்." அஸஹாயர் - துணை யில்லாதவர்.

தனியன் 3170/2. மாயப் பிறவி பிறந்த ... *. அத்விதியன். தனி யன் - சிறப்புப் பாட்டு. ஆழ்வார்கள், பிரபந்தம், ஆசார்யர்கள் — இவர்களுக்கு தியாந சுலோகமாய் அமைந்த சுலோகம் அல்லது பாட்டுக் குத் தனியன் என்று பெயர். தனியன் 659/1 "... ஒரு பெரு வெள் ளத்திலே யிழிந்து". தனியா யிருப்பவன், தனியாள்.

தனி யனுபவிக்க 3031/ப்ர. (9). "தம்மால் ... வொண்ணாது".

தனியாய் அனுபவிக்க. த (மி) ஸியாட்டியேன் * 2549/3. தனியா யுள்ள நான். தனியாழித் தேரார் * 2678/2. ஸூர்யன்.

தனியாள் 2071/1. "ஒரு ... ளைப் புகவிட்டு லங்கையை தக்த மாக்கி". ஒற்றை யாள். தனில் 3022/3. மால் ... மிக்கும் * ஐந்தாம் வேற்றுமை. தனிவளர் செங்கோல் 2490/1 ... நடாவு * அத்விதீய மாய்க் கொண்டு வளர்கிற ஆஜ்ஞை.

தனை 327/1. வைதேவி ... *. தன்னை. தனை 578/4. "இதின் ... நன்மையுடையார் ஒருவருமில்லை" ... அளவு.

தாக்க 3233/1. "ஸ்ரீபாதத்திலே தலை ...". படும்படி. தாக்கி ஞலும் 3311/4. "பிராட்டியுடைய திருப்பரியட்டம் ... முழுகத் தேடா நிற்பர்". பட்டாலும். தாங் கருஞ்சீர் மின்னிடை * 2783/1. தாங்க வரிதான அழகு. முலையைத் தாங்க அரிதாய், சீர் அழகிய மின்போலே யிருந்துள்ள இடை. தாங்குவித்து 2424/4. "இடிபேறத்...க்கொண்டு" தரித்து. தாடாளன் 1178/2 ... தாளணைவீர் *. ஸர்வாதிகள், மேன்மையுடையவன். தாணெடுந் திண் சிலை * 1243/2. தாள் - பூட்டு. பூட்டின நாணையுடைய திண்ணிய வில். தாதாடு வனமாலை * 1393/1. வனத்திலே இருக்கிற தாது மாருத வன மாலை. தாது சேர் தோட் கண்ணன் 3789/4. தாது என்று உள்ளிதழாய் மாலையை லக்ஷிக்கிறது. தோள் மாலையாலே அலங்க்ருதனான கண்ணன்.

தாதை 91/4. காமர் ... *. தந்தை. தாபதர் 1865/3. தஞ்சமே சில ... *. தாமஸர், தபஸ்விகள். தாம்பு 26/3. பழந் ... பாலோச்ச கயிறு. தாமம் 1925/2 ... த்துளவம் *. மாலை. தாமரைக் கண்கள்* 3385/3. தாமரைக்காடு 2582/5 ... மலர்க்கண்ணோடு *.

தாமரைக் கை 715/1. தாமரைத் தாள் *. 40/2.

தாமரை பாதம் * 3079/1. தாமரைப் புலங்கள் * 1777/1. பொய்கைகள். தாமரைப் பொய்கை * 215/1. தாமரை மங்கை * 3794/3. லக்ஷ்மி. தாமரை மேலார் * 2472/1. பிரம்மா. தாமரை யடி * 3896/4.

தாமரையாள் * 1318/3. லக்ஷ்மி. தாமரை யுந்தி * 2578/14.

தாமோதரன் * 299/2. ஓர் அபலை கையாலே கட்டவும் அடிக்க வுமாம்படி எளியனும் அசக்தனுமா யிருந்தவன்.

தாய்க் காவல் 2071/1. "இவளும் ... விட்டவாறே", தாயின் உதவி. தாய் செய்யும் ரக்ஷணம்.

தாய்த்தலைத் தென்றல் 2938/2. தாய் - பிரதமம். தலை - சிலாக்கியம். பிரதமத்திலே உண்டான சிலாக்கியமான தென்றல். "புறம்பே சிலர்க்கு உடம்பு கொடுத்துச் சுணங்காதே ... லாயிருக்கை".

3434/2. தாய் தலை 547/2 ... அற்றற்று வீழ *. மெய்யான தலை.

தாய 2047/2. வையம் ... *. அளந்த, தாவிய. உலகம் ... * 2179/2. தாயம் கிளர்ந்து கொண்டவன் * 2528/4. ஞாதிகள் நாலைந்து கிரயம் சென்று போனதை எங்களுடையதென்று தொடருவர்: தாயம், தாய பாகம், தாயாதிகளின் பாகம்,

தாயஞ் செறு மொரு நூற்றுவர் * 3613/2. தாய ப்ராப்தியாலே செருகிற துர்யோதநாதிகள்.

தாயப் பதி 3733/4. தன ... யே *. தாய ப்ராப்தமான ஸ்தாநம்.

தாயப் பதிகள் 3734/1. அஸாதாரணமான அர்ச்சா ஸ்தாநங்கள். பழையதாய் வருகிற ஸ்தாநங்கள். தாயம் 229/3. பொருட்டாய மிலேன் *. ப்ராப்தி. விபாகார்ஹமான த்ரவ்யம்.

தாயர் 96/2 ... மகிழ வொண்ணுர் *, தாய்மார்.

தாயவர் 2640/3. அன்றுலகம் ... *: நினைத்தபோது தாமே வந்து கிட்டுமவர். தாயவள் 306/3 ... சொல்லிய சொல்லை *. தாயானவள்.

தாயவன் 2092/2. கையுலகம் ... னை * அளந்து கொண்டவன்.

தாயவன் 3200/4. ஆனுயவர் ... னே *. தாய்போலே பரிவனுனவன். தாயன் 3787/3. எங்கள் பெற்றத் ... *. ரக்ஷகன்.

தாயான் 993/4. உலகேழுந் ... *. தாயின 1760/2. இவ்வையமெல்லாம் ... *. தார் (வா. மா. 340). "ஊரும் பேரும் ... குடியும் வைத்துக் கவி பாடுமாப்போலே". அநுபந்தம் பார்.

தார்க் கிளந் தம்பி * 314/1. மாலையிட்டு ராஜ்யம் பண்ண மறுத்த இளந்தம்பி, பரதாழ்வான். இளந்தம்பி என்பதற்கு சரியான வியாக்யாநம் இல்லை. தார் சதுரங்கம் சேனை என்று திபி.

தார்தழைத் துழாய் முடியான் 1534/4. துழாய்த் தார் தழைத்த முடியான் — என்று அந்வயிக்கை எளிது. பூந்தாரை யுடைய துழாய் முடி என்று பதவுரை. தார் வடம் 1202/1. (?). முத்துத் தாவடம்.

தாரகை 66/2 ... மின்னுலகம் தடவி *. நக்ஷத்ரம்.

தாரகை 2412/2. நாரணனெழித்தான் ... யுள் *: பூமியுள்.

தாரகை 2438/3. வானவர்தான் தானவர்தான் ... தான் *. பூமி.

தாரம் 379/2 ... முமொரு பக்க மலற்ற *. மனைவி.

தாரா கணப் போர் விரித்துரைத்த வெந்நாகம் 2444/1. நக்ஷத்ர கணங்களுடைய ஸஞ்சாரத்தை விரித்துரைத்த திருவநந்தாழ்வான்.

தாரா வயல் 991/4 ... சூழ்ந்த சாளக்கிராமம் *. தாராவாகிற பக்ஷிகளாலே சூழ்ந்த வயல். தாரா வாரும் வயல் * 997/1.

தாராவாரும் வார் புனல் * 1805/3. தாராளமான நீர் 3515/4 (?). தாரையாகப் பெருகுகிற நீர். தாரான் தரும் 2781/1 ... என்று*. தரிலுமாம், தாராதொழியிலுமாம். தரமாட்டான், தந்தாலும் தருவான்.

தாரித்து 80/1 ... நாற்றவர் *. தரித்து என்பதை நீட்டிக் கிடக்கிறது. தாரியாதாகில் 148/2 ... தலை நொந்திடும் *. பொருதாகில். தரியாதாகில் என்றத்தை நீட்டிக் கிடக்கிறது.

தாரில் நறுந்துழாய் * 1683/4. செவ்வியை யுடைத்தான நறுந்துழாய். தாரை யூறும் நறுந் தளிர் * 688/4. தாரை - பூ. பூவைத்தோற்றுவிக்கும் தளிர். தாரையென்று விழுகிற நீர்த்தாரையாய் தேனொழுகும் தளிர். தாலக்கால் 921/3. கால் - தாலக்கால். காலும் கலமும் பார்.

தாலாட்டிய செஞ்சொல் 53/2. ஆய்ச்சி ... * தாலாட்டுப் பாடின பாட்டு. தாலாட்டு விளையாட்டுப்போலே ஆட்டு என்னும் துணைவினையோடு வருவது. தாலிக் கொழுந்து 172/2 ... தைத்தடங் கழுத்தில் *. கொழுந்தான தாலி, சிரேஷ்டமான தாலி. தாலி – தாலம், பனை. அதன் கொழுந்து, வெள்ளைக் குருத்து பனையோலைத் தாலி கட்டுவது சாதி வழக்கம். தாலேலோ 44/4. மாணிக் குறளனே ... *, தாலாட்டு அதாவது - நாவசைத்தல். ஏல் பொருத்தம். பிள்ளைகளைத் தூங்கப் பண்ணுகைக்காக தாய்மார் நாக்கை அசைத்துக் கொண்டு உளுளாயி — என்று சப்திக்கை. தாலொலித்திடும் 708/4 ...திருவினை *. தாலாட்டும். தாவடி 219/4 ... யிட்டான் *. தாவிய அடி. தாவுவதாக இட்ட அடி. தாவருந் தீமை 3064/3. செய்குந் ... *. தாவ அரிதாய கடக்க அரிதான, தப்ப அரிதான தீமை - பாபம்.

தாவளந்து 1298/2 ... உலகமுற்றும் *. தாவித் திரிந்து, அநாயாஸேந அளந்து. தாவிலை 2169/4. "எனக்கு எதானல் ...". தேவலை என்று நாம் சொல்லுவது. தாழ்கின்ற நெஞ்சம் * 2549/3. கால் தாழ்ந்து கிடக்கிற நெஞ்சம். ஈடு பட்ட நெஞ்சம். சிரமப்பட்ட நெஞ்சம்.

தாழ்ச்சி 3175/3. சிற்றின்பப் பற்று. விஷய ப்ராவண்யம்.

தாழ்சடை 2344/1 ... யும் நீண்முடியும் *. தொங்குகிற சடை.

தாழ்சினை * 1185/3. நீள் பலவின் ... *. தாழ்ந்த பணை, தாழ்ந்த கிளை. தாழ்த்தான் 139/1. கின் தந்தையும் ... * விளம்பித்தான், தாமதித்தான். தாழ்ந்த சொல் 3725/2 ... ற்களால் *. ஸ்நேஹமான சொல். ... சொற்கள் 3269/2. நீசோக்திகள்.

தாழ்ந்த தனஞ்சயன் * 111/2. சரணாகதி செய்த அர்ஜுநன்.

தாழ்ந்தது 3585/1. செஞ்சுடர் நீண்முடி ... *. தறைப்பட்டது.

தாழ்ந்து வரங்கொண்டு * 2204/1. ஆசிரயித்து.

தாழ்ந்து 2935/அவ. "அரை க்ஷணம் ...". விளம்பித்து.

தாழ்ந்தூதாய் 1679/4 ... கோல் தும்பீ *. குனிந்து.

தாழ் பீலி 254/1. எக்கம் மத்தளி ... *. தூக்கின சின்னம், பீலி தாழ்ந்த வாத்யம். சின்னம் – ஊதுகிற திருச்சின்னம்.

தாழ் பொழில் 1573/2. கோங்கின் ... *. தழைத்த பொழில்.

தாழ்வர் 1770/2. தடஞ்சூழ் பொழில் ... *. பர்யந்தங்கள். பக்க பூமிகள். தாழ்வர்/ரே 3152/4. மொய் பூந்தடம் ... *. தாழ்வரை. தாழ்வரையை என்று அர்த்தம். தாழ் விசும்பு 2645/3 ... பின் மீதி லகி *. 2669/1 ... பின் மீது பாய்ந்து *. ஒத்த ஆகாசம்.

தாழ்விடங்கள் 2641/3. சுழித் தெங்கும் ... *. பள்ளங்கள்.

தாழ்வு 2343/4. நீரேற்றான்...*. தாழ்மை தோற்றும் இடம், திவ்ய தேசம். தாழ்வுறுவர் 2616/3. தீ வினைக்கே ... *. பின் வாங்குவர்.

தாழப் படாமல் 3609/3. அழுந்திய ஞாலத்தை ... *. தளரப்படா மல், மங்காமல். தாழப் பெருக்கி 142/1. வார் காது ... *. தாழும்படி பெருக்கி. தாழ மின்றி 1864/1 ... முந்நீரை *. விளம்ப மின்றி.

தாழாதே 477/6 ... சார்ங்க முதைத்த *. விளம்பியாமல்.

தாழி 62/1 ... யில் வெண்ணெய் *. வெண்ணெய்த் தாழி.

தாழை 220/1 ... தண்ணும்பல் *. தாழம்பூச் செடி.

தாள் சாய்த்து 419/4. கதிர் செந் நெல் ... * நெல் கதிரை நீட்டி:

தாள் சாய 3722/3. ஈரைம் பதின்மர் ... * காலற்றுப் போம்படி.

தாள் தாமரை 2472/2. அமரர்கள் ... *. தாளையுடைய தாமரை.

தாள் வரை வில் 2601/4 ... ஏந்தினார் *. திண்ணிய வில், வளைந்து மலை போலே யிருக்கிற வில். தாள் என்று வளைவு.

தாள தாமரை 3812/1, 3891/1. தாள் தாமரையே.

தாளநன் மாதுளை 73/2. தாளையுடைய நன்றான மாதுளை.

தாளாளன் 578/2 ... வார்த்தை யென்னே *. தாள் – திருவடி. அல்லது தாளாளன் மேன்மையை யுடையவன்.

தாளி - கொடி. "அருகும் தாளியும் பறித்தவன்". (தனி சுலோ: தருணெள). ஒக தீக — என்று தெலுங்கு வியாக்கியானம். தீக – கொடி. செடியின் கொடி.

தாறு 2615/2. நிழலும் ... ம் *. அளவு. 1796/1. இன்று ...

ம் *. அளவு. தாறு 3764/2 (?). பழந்தாறு. பழஞ் சீப்பு.

தான் கடத்தும் தன்மையான் * 2415/4. தானே கடத்தும் ஸ்வ பாவன். தான் கவலை தீர்ப்பானாவதே * 2042/2. தானே தன் துக்கத்தைத் தீர்க்கப் போமோ !

தான் சேர் புணர்ப்பன் * 3090/3. தனக்குத் தகுதியான சேஷ்டிதங்களை யுடையவன். தான் தோன்றி 3776/1. நிற்கும்படியாகத் ...*. பிறர் அர்த்திக்கையின்றிக்கே தானாகவே வந்து தோன்றினவன்.

தான்தோன்றியான கைப்பற்று 3822/4. ஸ்வ யத்ந மூலமான ஸாதநம். தான் முகமாய் 2382/2 ... சங்கரனைத் தான் படைத்தான் *. தானே பிரதானனாய்.

தானத்த 3596/1. ஏழ் மண்ணும் ... வே * தானம், ஸ்தாநம் ஸ்தாநத்தை யுடையன். தான நகர்கள் 3733/1 ... தலை சிறந்து *. தானமான இருப்பிடமான நகரங்கள்.

தானவர் கூற்று * 1070/2. அஸுர வர்க்கத்துக்கு மிருத்யு.

தானறி தெய்வம் 2583/4. ப்ராமாணிகர்கள் அறிந்த தன்றிக்கே தானாக அறிந்த க்ஷுத்ர தெய்வம்.

தானாங்காரமாய்ப் புக்கு * 3967/2. தானே ஸர்வ அஹங்காரத்தோடு புக்கு. தானான தன்மை 3078/ (?) ஸ்வ ஸ்வபாவம்.

தானுகந்த வூர் 2057/2 ...எல்லாம் *. உகந்தருளின நிலங்களான திவ்யதேசங்கள். தானுங் கில்லான் * 2972/2. தானும் சக்தனல்லன்

தானே தனக் குவமன் 2319/1 ... தன்னுருவே *. தனக்குவமையில்லாதவன். தானே தனித் தோன்றல் * 2608/1 ஒரு ஹேதுவாலே தோன்றுகிறவனல்லன்.

தானே பிறர்கட்கும் தற்றோன்றல் * 2608/2. அல்லாதார்க்கும் அந்தர்யாமி. தானேல் 3342/3 ... எம்பெருமான் *. தான் செய்தபடியாகில், தானாகில். தானை 657/3. விறல் ... *. சேனை.

தி 1714.2. எரிதியொடு *, தீ. திக்குப்பட்டு 3499,4. "இவள் தோழிலும் ஒரு திக்குப் பட்டல்ல திராது காணும்." அடைவு பட்டல்லது. திக்கை யுடைத் தல்லது என்று இரு பொருள். திக்குப் பட 3959/4. "ஒரு ... விறே இவர் விரும்புவது." அடைவு பட.

திகழ்தரு திகிரி 919/4 ... யந் தடக்கை *. திகழா நின்றுள்ள திருவாழி. திகிரி 696/3. மின்னையே சேர் ... *. திருவாழி.

திங்கள் ஞாயிறு 2055/2. திசை நான்குமாகித் ... ருகி * சந்திராதித்யர்கள். திங்கள் துண்டம் 2059/1. நிலாத் ... த்தாய் *. சந்திர

கண்டம். திங்கள் புக்கிருப்பார் 566/1. கர்ப்பிணி. மாஸமாயிருக்கிருள் — என்பதுபோல மாஸத்தாலே சொல்லுகை

திங்கள் மும்மாரி 476/3 ... பெய்து *. வெள்ளக்கேடும் வறட்கேடுமின்றிக்கே ஊறெண்ணெயிட்டாப்போலே ஒன்பது நாள் வெய்யிலும் ஒரு நாள் மழையுமாயிருக்கை. ஊறெண்ணெய் பார்.

திங்கள் வெங்கதிர் * 1954/2. நிலா. பிரிந்த காதலர்களுக்கு வெங்கதிராயிருக்கும். திங்களம் பிள்ளை * 2549/2. அழகிய பால சந்திரன். திங்களாகிற அழகிய பிள்ளை.

திங்களும் சுடரும் 1270/1 ...திடவிசும்பும் *. சந்திர ஸூர்யர்கள்.

திங்களும் நாளும் விழா 3585/1. மாஸோத்ஸவ நித்யோத்ஸவங்கள். திருநாள் உச்சி வீடு விடாதே செல்லுமூர்.

திசைக் கருமம் 9/3 ... திருத்தி *. 412/2 ... திருத்தி *. அந்தந்த திக்கிலே ஏற்பட்ட கருமம், காரியம்.

திசைக்கின்றது 3286/1. சிந்தை துழாய் ... *. மதி கெடுகிறது' அறிவழியா நின்றது, மோஹிக்கிறது, திசைக்கும் 212/4. எண் ... *. திக்குக்கும். 3576/4: சிந்திக்கும் ... * மோஹிக்கும், அறிவு கலங்கும், திகைக்கும். திசை கை கூப்பி 3711/2 ... யேத்தும் *. திக்குதோறும் கை கூப்பும்.

திசை ஞாலம் 3497/4 ... தாவி *. திக்குடன் கூடிய பூமி.

திசை திசை 461/4 ... விழச் செற்றும் *. திக்கு தோறும்.

திசை நான்முகன் 1644/1 ... தந்தை *. நாற்றிசை முகன். நாலு திசையிலும் முகத்தை யுடையவன்.

திசைப்ப 1132/3. தென்னவனைத்... ச்செரு மேல் *. அறிவு கெடும்படியாக. திசைப்பு 3287/3 ... இன்றியே *. பிரமம், திகைப்பு.

திசைப் பெண் 2512/2 ... புலம்புறு மாலை *. திக்காகிற பெண்.

திசை யுறு தெய்வம் 2085/1. திக்பாலர்கள்.

திட்கொடி மதிள் 3574/4 ... சூழ் *. திண்ணிய மதிளில் திண்ணிய கொடி. அவிழ்த்துக் கட்டாத கொடி.

திடநெஞ்சம் 2523/4 ... மாயெம்மை *. த்ருடாத்யவஸாயம்.

திடமாக வையேன் 2447/2... மதிசூடி தன்னோடு *. திட பதார்த்தமாக நினையேன். திடமொழி 1270/3 ... மறையோர் *. பழுது போகாத வார்த்தையை யுடைய வேதம். திடர் விளங்கு கரை 657/1 ... ப்பொன்னி *. மேடு, திருமுடிக் குறை, பெருமாளுடைய சிரோபாகத்திலுள்ள இடம்,

திடவிசும்பு 1270/1 ... எரி நீர் *. ஸ்திரமான ஆகாசம். பிருதிவியாதி நாலு பூதங்களை விட அதிக காலம் இருப்பதால் திடமாகிறது:

திடல் 1673/3 ... எடுத்துச் சுடர் *: மேடு.

திண் கடல் 1399/3 ... ஏழும் *. கரையை அதிக்ரமிக்கக் கடவதன்றிக்கே, நிற்கிற நிலையை ஒருவரால் கொலைக்க வொண்ணுதபடி அதில் திண்ணியதா யிருக்கிற கடல்.

திண் கதவம் 2293/2 ... செம்மி *. வலிய கதவு.

திண் கழல் 2919/4. நாரணன் ... *. ஆச்ரிதரை ஒருநாளும் விட்டுக் கொடாத திண்மையைப் பற்று.

திண் கழற்காலசுரர் * 3166/2. அநீதிகள் பண்ணுகைக்கு காலிலே ஒருவரால் தவிர்க்க வொண்ணுத வீரக் கழலை யிட்டிருக்கிற அசுரர்.

திண் களக மதிள் 1537/1 ... புடை சூழ் *. திண்ணிதான சாந்து பூசின மதிள். களகம் சாந்து என்று அரும்பதம். சாந்து என்பது சுண்ணும்புச் சாந்து. களகம் கலவை என்று பொருளாக வேண்டும்.

திண் கொளசுரர் 38/3 ... மைத்ரேய வளர்கின்முன் *. காய பலமும் மனோ பலமுமுடைய அசுரர். திண்மை பலம்.

திண் சக்கர நிழறு தொல்படை * 3466/1. திண்ணிய சக்கரமாய், நிழறு - தேஜஸ். தேஜ: ப்ரஸாரியான தொல்படை. அஸாதாரணமான ஆயுதம். திண் சிலை 1120/1 ... தண்டொடு *. எதிரிகள் மேல் நாலிரண்டு பண்ணை வலித்தாலும் மெல்காத வில்.

திண்டி 96/3. ஊட்டி, தீனி, உணவு.

திண் டிமிலேறு 1359/1. செறம் ... *. திண்ணியதான திமிலையுடைய ஏறு - எருது. திண்டிறல் 1830/3 ... மா கரி *. திண்மையான வலி. திண்டேர் 119/3 ... முன்னின்ற *. திண்ணிய தேர். அர்ஜுநனுடைய தேர். திண்ணக் கலம் 164/1 ... த்தில் திரை யுதறி மேல் *. சிக்கென்ற கலம். கெட்டியான, உடையாதிருக்கும் பாத்திரம், சட்டி.

திண்ண நாரணம் 3935/4 ... மே *. நாரணமே திண்ணம் - நிச்சிதம். திண்ண மழுந்தக் கட்டி * 3345/3. த்ருடமாக நெருக்கிக் கட்டி.

திண்ண மறி 3084/3 ... அறிந்து *. த்ருடமாக அறிந்து கொள்.

திண்ணன் வீடு 3020/1 ... முதல் முழுதுமாய் *. ஒரு நாளும் அழியாத பரம பதம்.

திண்ணனவு 2485/2. பொருள் படைப்பான் கற்ற ... வே *. சிக்கனவு. த்ருடமான வசநம்.

திண்ணனவு 3019/4. வைகுந்தம் ... *. நிச்சிதம்,

திண்ணென 152/2 ... இவ்விரா *. நிச்சிதமாக.

திண்ணென நாமது கற்றிலோம் * 519/2. அழகிதாக.

திண்ணெனவு 2895/2. மன்னிய ... *. ஆண்பிள்ளைத் தனம்.

திண்ணை 87/2. செந்துவர் வாய் ... *. உயர்ந்த நிலம், மேடை. 362/2 ... சூழ் திருக்கோட்டியூர் *.

திண்படை 1249/3 ... மன்னை *. திண்ணிய ஆயுதம்.

திண் பாகன் 3704/2. ஊர் கொள் ... *. திண்ணியனாய் ஆனையை நடத்துகிற பாகன். திண்பூஞ்சுடர் 2486/1 ...நுதி நேமி *. திண்ணியதாய் அழகிதான ஒளி.

திண் மதி 3036/1 ... யைத் தீர்ந்தார் *. திண்ணியதான புத்தி. த்ருடாத்யவஸாயம். கலக்க வொண்ணாத த்ருட ஜ்ஞாநம்.

திணர் 3554/3 ... ரார் மேகம் *. திண்மை, செறிவு.

திணர்த்த வண்டல் 3455/2 ... கள் மேல் *. கொழுத்த திணுங்கின, கதிப்பை யுடைத்தான, செறிமின வண்டல்.

திணி வண்ணம் 3016/1. இருளின் ... *. செறிந்த நிறம்.

திணி ஞாலம் 3590/3. மண் ... *. கடினமான பூமி.

திணிந்த மண் 3150/1 ... கிடந்த கால் * கடினமான பூமி.

திணிமினே 364/4 புல்லைத் ... *. திணியுங்கோள்.

திணிம்பை 2549/1. இருளின் கருக் ... * திண்மை, செறிவு.

திணுங்கினப் போலே 3054/1. "நெய் ...". திணுங்குகை. கெட்டியாகை.

தித்திக்கும் 149/2 ... பெருமானே *. ரஸிக்கும். தித்திப்பான் 3728/2. உள்ளுந்தோறும் ... *. இனியனாகா நின்றான்.

திமிர்க்கும் படியான நோக்கு 1125/3. "இலக்காவார் ...".

திமிர் கொண்டாலொத்து நிற்கும் * 3496/3. ஸ்திமிதையாய் நில்லா நின்றான்.

திமிர்த்து 3064/1. "அணைத்த போதை ஸ்பர்சத்தாலே ... ச் சொல்லுகிறார்." திமிர்ந்து 3221/3. "ஸ்பர்சத்தாலே ...". ஸ்தப்தமாய்: திமிரும் 52/1. மெய் ... கானப் பொடி *. மர்த்திக்கைக் கிடான.

திமில் 1859/1. திண்டி மிலேறு * கழுத்து. 1792/1. திமிள்.

திரட் கோவை 1638/2. முத்தின் ... * திரண்ட மாலை.

திரட்டு 1285/3. மாங்கனிகள் ... டுருட்டா வரு நீர் *. திரள விட்டு, திரட்டி.

திரடோள் 1047/2. மல்லார் ... *. மாம்ஸளமான, பருத்த தோள்

திரண்டெழு தழை 283/1 ... மழை முகில் வண்ணன் *. செறிந்தெழுந்த பசுந் தழை. கார் காலத்திலே தன்னிலே திரண்டு கிளர்ந்து அகவாயில் நீர்க் கனத்தாலே தழைப் புண்டாயிருப்பது. தழைப்பு - ஸம்ருத்தி. திரள்மா மாளிகை * 1497/2. நெருங்கி ஓக்கத்தை யுடைத்தான மாளிகை. திரள் - நெருக்கம். மா - ஓக்கம்.

திரள்/ளை: பால் திரள். "ராஜ புத்ரனோடே விளையுண்ட கைக் கூட்டனுக்கும் ... ளை யிடுமாப் போலே". 2672/12.

திரள அநுபவிக்குமவர்கள் 3192/அவ. "ஸௌந்தர்யாதிகளைத் ..." ஸங்க்ரஹமாக, திரட்டி. திரளச் சொன்னார் 3320/அவ (?). ஸமுதாயேந. திரளை 3237/2. "ஒரு ... ளையைத் திரட்டி". உருண்டை.

திரி கால் சகடம் * 1706/3. உருகிற காலை யுடைய சகடம், வண்டி. திரிகிலே 3922/3. உடன் ...*. திரிகிறிலே.

திரிகை 2528/1. "குசவன்...ஒரு கால் திரித்துவிட்டால்" சக்கரம்.

திரிசுடர் 356/4 ... சூழும் மலை *. ஸஞ்சரியா நின்றுள்ள சந்திர ஸூர்யர்கள். திரிதந்தாகிலும் 989/1 ... தேவபிரானுடை*. மீண்டாகிலும், ஸஞ்சரியா நிற்கச் செய்தேயும்.

திரிதருவன் 2727/2. திரிவேன், திரிந்தேன்.

திரிதி 139/2. தனியே போ யெங்கும்... *. திரிவுதி.

திரிப 761/3. நிற்பவும் ... வும் *. ஜங்கமங்கள்.

திரிமின் 389/3. குனலமாடித் ... னே *. திரியுங்கோள்.

திரிய அத்தைக் கிடந்து சிக்ஷிக்கிறது 2154/2. (?) மீண்டும்.

திரிய இருந்தாள் 3463/3. திரும்பி யிருந்தாள்.

திரியட்டும் 1059/1. " ... ராமாவதாரம் அநுவர்த்தித்த படி" மீண்டும். திரியட்டும் அவர்க ளளவிலே பிரஸாதத்தைப் பண்ணி 1989/2. பின்னையும், மீண்டும்.

திரியவிட்டுவை 3324/1. "உன் க்ஷேத்ரத்தையும் என் மேலே ...", ஏறிட்டு எழுதி வை. திரியுங் கலியுகம் * 3354/1. பால் திரிந்தது என்றாப்போலே பதார்த்த ஸ்வபாவங்கள் மாருடும் கலியுகம்.

திரியவுங் காண்டி 148/3. காது பெருக்கித் ...*. மீண்டும் கண்டாயே, திரியுண்ட 3982/4. "பங்கு பெருதே ... ஸ்ரீவைஷ்ணவர்கள்". அல்லல்பட்ட.

திரிவன 3325/1. திற்பனவும் ... வும் *. ஜங்கமங்கள்.

திரிவிக்கிரமன் * 3417/1. திரிவு 623/1. வண்ணம் ... *. மாறுதல். திருக்கடித்தானம் * 3828/3. திருக்கண்ணங்குடி * திவ்யதேசங்கள். 748/4. திருக்கண்ணபுரம் 723/3.

திருக்கமல பாதம் 927/4 ... வந்து என் கண்ணினுள்ளன *.

திருக்காட்கரை 3836/3 ... மருவிய மாயன் *.

திருக்காப்பு 1/4. உன் சேவடி செவ்வி ... *. 200/3 ... நானுன்னைச் சாத்த *. குறைவற்ற ரக்ஷை. அழகிதான ரக்ஷை. திருக்காப்பு சேர்க்கை என்று ஸந்நிதியில் கதவுகளைச் சாத்துவதற்கு சொல்லுவது. கதவு சாத்துவதும் ரக்ஷையே.

திருக்கார்த்திகை 948/அரு. (?). உத்ஸவம்.

திருக்கால் 3542/1 ... லாண்ட பெருமாள் *. திருவடி.

திருக்காவணம் (வா. மா. 413). "... இட்டுக் கோடித்து". திருப்பந்தல். திருக்கி வைத்து 1280/1. "படலைத் ...". திருப்பி அல்லது திருகி. திருக்குடந்தை 3418/3. செழு நீர்த் ... *. கும்பகோணம்.

திருக்குணம் 897/2 ... செப்ப மாட்டேன் *. கல்யாண குணங்கள். திருக் குதிப்பது 939/4 (அழ). ',இருந்த விடத்திலே வந்து ... தே". பாக்கியம் ஸித்திப்பது.

திருக்குருகூர் நம்பி 941/3. செம்பொன் மாடத் ... *. திருக்குருகூர். ஆழ்வார் திருநகரி, அங்கே அவதரித்த நம்மாழ்வார்.

திருக்குலத்து வளச் சோழன் 1505/4. க்ஷத்ரிய குலமாகையால் வந்த ஆபிஜாத்ய முடையவன். திருக்குலம் - க்ஷத்ரிய குலம் என்று பாடலில் பொருள். திருக்குலம் என்று ஸ்ரீவைஷ்ணவர்களான பஞ்சமர் குலத்துக்கும் பெயர். திருக்குழல் 259/1. சோரம்பும் ... லும் *.

திருக்குற்றெலியல் (வா. மா. 174). "... சாத்தியருளி" குற்றெலியல் சிறு துண்டு. திருமஞ்சனச் சாலையிலே என்று பிரஸ்தாவிப்பதால் ஸ்நாந வஸ்திரம், ஒலியல் வஸ்திரம். ஒலியன் என்றும் சொல்லுவதுண்டு.

திருக்குறளன் 3772/2. செந்தாமரைக் கண் ... * வாமநப் பெருமாள். திருக்குறளப்பன் 3661/2 ... அமர்ந்துறையும் *. ஸ்ரீ வாமநனை மஹோபகாரகன். ஸ்ரீரங்கம் வாமநப் பெருமாளுக்கு திருக்குறளப்பன் — என்று திருநாமம். திருக்குறிப்பு 463/4. இனியென் ... பே *. திருவுள்ளத்தில் நினைவு. 852/2. வரந்தரும் ... *. திருவுள்ளம்.

திருக்குறுங்குடி * 3385/2. திருக்குறையலூர் 2069/4. "... ரில் நின்றும் புறப்பட்டுத் திருநீர் மலையிலே புக்கு". திருமங்கை யாழ்வாரின் வாஸஸ் தலம்.

திருக்கைத்தலமிழந்தவன் 948/1 ... "இற்றைப் புறப்பாடு காணப் பெறாத நாம்." திருக்கைத்தல ஸேவை: பெருமாளைத் திருக்கைத்தலத்தில் எழுந்தருளப் பண்ணும் ஸேவை.

திருக்கோட்டி * 2268/4. திருக்கோட்டியூர் 1838/4. செங்கமல மலரும் ... ரானே *. பிரஹலாதன் நிமித்தமாக ரிஷிகள் கோஷ்டி பண்ண, அதுக்காக ப்ரத்யக்ஷமாகையாலே திருக்கோட்டியூ ரென்று பேர். திருக்கோயில் * 446/3. சிங்கப் பிரான் சேரும் ... கண்டீர் *. ஸ்ரீ விமானம். 448/2. பேணும் ... கண்டீர் *. திவ்ய விமானம். 487/4. தங்கள் ... சங்கிடுவான் *. இங்கே விமானமல்ல. கோயில் மட்டுமே.

திருக்கோவலூர் * 1138/4. கோபால புரம். கோபாலன் என்பது கோவலாயிற்று. திருக்கோளூர் * 3517/4.

திருச்சாழலிலே இரண்டு பிராட்டிமார் அவஸ்தை 307/அவ் (தி. பி.) இரண்டு தோழிமார் பேசும் பாடலுக்கு திருச்சாழல் என்று பெயர். மானமருமென்னோக்கி என்று பெரிய திருமொழி 11/5. திருச்சாழல். திருச்சித்திர கூடம் * 741/3. சிதம்பரம்.

திருச்சிற்றாற்றங்கரை 3706/3 ...மீபால் *. திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறு *. 3704/4. மாடமாமயிலைத் திருவல்லிக்கேணி என்னுமாப் போலே. (மயிலை - மயிலாப்பூர் படை வீடு. திருவல்லிக்கேணி திருப்பதி) திருச்செங் குன்றூரென்று பட்டணமாய் திருச்சிற்றாறென்று திருப்பதி.

திருச் செய்ய கமலக்கண் * 3710/2. சிவந்த கமலம் போலேயிருக்கிற திருக் கண். திருத்தக்க செல்வம் 498/7 ... மும் சேவகமும் *. திருவுக்குத் தக்க செல்வம்.

திருத்தக்கீர் 1658/1. தேவர்க்கும் தேவர் ... *. பிராட்டிக்குத் தகுதியாயன்றோ தேவர் இருப்பது. திருத்தண்கா 2065/3.

திருத்தண்கால் * 1399/1. திருத்தலாவதே * 2609/2. ஆராய்ந்து ... *, திருத்த முடியுமோ. திருத்தன் 1644/1 ... னைத் திசை நான்முகன் தந்தையை *. ஸ்வாநந்தா நுபவத்தாலே நித்ய த்ருப்தன்.

திருத்தி 3175/1 ... ப்பணி கொள்ள வல்ல *. ஏவி.

திருத்தி 3078/2 ... என்னைக் கொண்டீர் *. தரிசு கிடந்த தரையைச் செய்காலாக்குமாப் போலே. தரிசு - கரம்பு. செய் கால் - பயிர் நிலம். திருத்தினேன் 955/1 ... கருத்துளே *. வலிய மூட்டிப் போந்தேன். திருத்துழாய் 2695/1 ... த்தார் *.

திருத்தெற்றி யம்பலம் * 1278/4. திருநாங்கூர் திவ்ய தேசம்.

திருத்தேவனார் தொகை * 1248/4. திவ்யதேசம்.

திருந்த வுள 3764/2. அடையாளம் ... * வியக்தமாக உள்ளன.

திருந்தாத ஓரைவர் * 3738/2. ஸர்வ சக்தியான ஸர்வேசுவரனு லும் அநாதி காலம் திருந்தப் போகாதபடியிறே இவற்றின் (இந்திரியங் களின்) வன்மை இருப்பது. திருந்தாத சேதநரைப் போலே நின்று நலி கிற ஐந்து இந்திரியங்கள். திருந்திய செங்கண் மால் * 2285/2. இவன் ஈசுவரனென்று அறியலாம்படி திருந்தச் சிவந்த கண்களை யுடையவன். இவ்வாத்மாக்கள் திருந்தாவிட்டால் இவற்றைத் திருத்தப் பாராதே தன்னைத் திருத்திக் கொண்டிருக்கும் ஸர்வேசுவரன்.

திருந்து செம்பொற்கழல் * 3758/1. ஆசிரிதரை வேறொருவர் காலில் குனிய விடாததாய் ஸப்ருஹணீயமாய் வீரக்கழலை யுடைத் தான திருவடிகள்,

திருந்து சேவடி 1965/2 ... யென் மனத்து *. ஐசுவர்ய ப்ரகாச மான திருவடி. திருவுந்து என்றது குறைந்து உந்துகை-முன்னே தள்ளு கையாய் பிரகாசிப்பிக்கை யாகிறது.

திருந்து திசை முகன் * 2218/2. ஸமர்த்தனான பிரம்மா.

திருந்து நல் லின் கவி * 3653/1. கட்டளைப்பட்ட லக்ஷணங்கள் நிறைந்த கவி. கட்டளைப்பாடு – திருத்தப்பாடு,

திருந்து நான்மறை 366/2 ... யோர் *. திருத்தத்தை யுடைத்தாய் நாலுவகைப்பட்ட மறை. திருந்துலகு 3714/1 ... ண்ட வம்மானை *. கட்டளைப்பட்ட ஜகத்து. திருந்து வேதம் 3502/1 ... மும் வேள்வியும்*, பகவத் ஸ்வருப ரூப குண விபூதி ப்ரதிபாதநத்தில் திருத்த முடைத்தான வேதம். நிறம் பெற்ற வேதம்.

திருநகரம் 3438/2. மண்ணும் விண்ணும் தொழ நின்ற ... *. மஹா நகரம். திருநறையூர் நின்றாய்/ன் * 2067/3. பிராட்டியைத் தேடி அலமந்து நிற்கிறவன். க்ஷீராப்தியினின்றும் புறப்பட்டு பிராட்டி மேதாவி மஹர்ஷியிடத்தில் திருநறையூரிலே வந்திருக்க, அங்கே தேடி வந்தார் நம்பி.

திருநன் மார்பு 892/2 ... ம் மரகத வுருவும் *. பிராட்டியினுடைய செம்பஞ்சின் சுவடுகளும் கழிந்த மாலைகளுமா யிருப்பது. பிராட்டியா லே விலக்ஷணமான மார்பு. திருவுக்கு நன்றான மார்பு.

திருநாடு 3857/3. தெளி விசும்பு ... * நிரதிசய விபூதி, பரம பதம். திரு நாம மிட்டு * 261/1. ஊர்த்வ புண்ட்ராகாரமாய் அழுத்தி வைத்து. திரு நாரணன் 205/2. திருப்பேர்க் கிடந்த ... ணு *, ஸ்ரீமந் நாராயணன். திரு நாவாய் 3858/3. சோலைகள் சூழ் ... *. திவ்ய

தேசம். திருநாள் திருவோணம் * 252/1. திருவோணத் திருநாள்.

திருநாளெழுந்தருளு விக்கிறது 2060/2. "இவனை இங்ஙனம் ..." குவாலாக விசேஷணங்கள் சொல்லுகிறது, அடைமொழிக ளிடுவது.

திருநிறம் 1153/2 ... த்தவனிடம் வடிவழகு *.

திருநின்ற பக்கம் 2443/1 ... திறவி தென்றேரார் *. பிராட்டி வாஸம் செய்யும் வலது பக்கம்.

திருநீர் மலை 1865/1 ... வாழெந்தை *, திவ்ய தேசம்.

திரு நுதல் 3633/3. பெருமான்தன் ... லே *. திருநெற்றி 259/1. சிந்துர மிலங்கத்தன் ...*.

திருப்படலிகை (வா மா 388). "... யிலே திருமாலையைச் சேர்த்துக்கொண்டு." பூக் கூடை. படலிகை - கூடை.

திருப்படித்தாமம் 917/அவ. பெரி. "ஆராதநோ பகரணமான ... ங்கள்". துளஸி.

திருப்பள்ளித்தாமம் 342/1 (மண) ... பறித்திட்டு. துளஸி என்று அரும்பதம். கஜேந்திராழ்வான் பிரஸ்தாவமாகையால் துளஸி அல்ல. புஷ்பம். திருப்படித்தாமம் இதன் கொச்சை.

திருப்பாத கேசம் 43/2. முன் சொன்ன ... த்தை *. பாதாதி கேச வர்ணநம். திருப்பாவாடை 3262/3 (24). "... ரஸித்தது என்ன; தன் வயிறு அறியாதே பரிச்சேதிக்க இழிவாருண்டோ." பாவாடை போட்டு விநியோகம் செய்யும் பிரஸாதம். பாவாடை விரித்த துணி.

திருப்பிரம்பு 927/அவ. (பெரி). "... க்குள்ளே பத்தாம் பாட்டுப் பாடி." ஸ்ரீ ரங்கம் கோயிலுக்குள் குலசேகரன் படிக்கு வெளியிலுள்ள கணை, குறுக்குத் தடி.

திருப்புகழ்கள் 655/1 ... பலவும் பாடி *. கல்யாண குணங்களுக்கு வாசகமான திருநாமங்கள். திருப்புலியூர் 3759/3. குட்ட நாட்டுத் ...*

திருப்புளிங்குடி * 3792/4. திருப்புன்னை 2530/1. ஸ்ரீ ரங்கம் சந்திர புஷ்கரிணிக் கரையிலுள்ள புன்னை மரம்.

திருப்பேர் 1428/3. தென் ... *. அப்பக்குடத்தான், கோயிலடி என்னும் திவ்ய தேசம். திருப்பேரெயில் 3583/4. தென் திருப்பேரை என்னும் திவ்யதேசம், ஆழ்வார் திருநகரிக்குக் கிழக்கில்.

திருப்பொலிந்த சேவடி * 469/2. அழகு விஞ்சியிருப்பதாய் ருஜுவாயுள்ள திருவடிகள். திருப்பொலிந்த வாகத்தான் * 2221/2. ஸர்வேசுவரன்.

திருமகள் * 3308.1. பெரிய பிராட்டியார். திருமங்கை * 707/1. பெரிய பிராட்டியார். திருமங்கை மன்னன் * 1427/1. திருமங்கை யாழ்வார். திருமணங் கொல்லை 2072/பட். திருமங்கை யாழ்வார் கள்ளரா யிருக்கையில் பெருமாளை மறித்த இடம்.

திருமணிக் கூடம் * 1288/4. திருநாங்கூர் திவ்ய தேசங்களில் ஒன்று. திருமணி வண்ணன் * 3174/2. திரு-காந்தி. காந்தி மிக்கிருந்துள்ள நீலமேனி போலே சிரமஹரமான வடிவை யுடையவன்.

திருமதுரை * 10/3. மதுரா புரி. திருமருகன் 721/2. சனகன்... கா *. மருமகன், மாப்பிள்ளை. திருமலை * 2038/3. திருவேங்கட மலை'

திரு மறு மார்வன் * 911/1. திருவையும் மறுவையும் (ஸ்ரீவத்ஸ மென்னும் மச்சத்தையும்) மார்விலே யுடையவன்.

திருமாது * 658/1 ... வாழ் *. திருமாமகள் 1707/2 ... ளாலருள் மாரி *. திருமாமகளிர் 3502/1 ... ரும் தாம் * இம் மூன்றும் லக்ஷ்மிக் குப் பெயர்.

திருமாமணி 2290/4 ... வண்ணன் *. அழகிய சிலாக்கியமான மணி. திருமாமணி மண்டபம் ஸ்ரீரங்கம் ஆயிரக்கால் மண்டபத் தின் நடுவில் திருவாய் மொழித் திருநாளுக்கு பெருமாள் எழுந்தருளும் மண்டபம். பரமபதத்திலுள்ள திவ்ய ரத்ந மண்டபத்தின் பெயர் இதற் காயிற்று. திருமார்பு 1164/2. திருமார்வு என்றும் பல பாசுரங்கள்.

திருமால் * 2089/3. ... விடம் *. பிராட்டி பக்கல் பிச்சேறினவன். திருமாலவன் கவி * 2525/3. திருமாலுக்குத் தகுதியான கவி. திரு மாலிருஞ் சோலை மலை * 3963/4 அழகர் மலை.

திருமுகம் 1108/1 ... த்தரிவை *. அழகான முகம். திருமுகம் சிலேடை பார். திருமுடி * 166/2. பற்றி யெறிந்த பரமன் ... *. திரு வபிஷேகம், கிரீடம். திருமுடிக் குறை 3429/2 "... யிலே ஒரு மரத்தை வெட்டப் புக" பெருமாளுடைய சிரோ பாகத்திலுள்ள உபய காவேரி மத்ய ப்ரதேசம். குறை யென்ற சொல்லுக்குப் பொருள் காண்க.

திருமுற்றத்தடியார் * 656/3. உள் திருமுற்றத்தி லிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள். திருமுற்றம் 660/3. திருமுற்றம் 479/1. கோயில் என்று பொருள். "கொண்டாடுகைக்கு ஒரு ... உண்டோ"

திருமூழிக் களம் * 3847/2. திவ்ய தேசம்.

திரு மெய்யம் 1206/3 * திவ்ய தேசம். திருமேனியடிகள் * 3849/4. 3850/1. வடிவழகையும் அவயவ சோபையையும் காட்டி எழுதிக் கொண்டவன். திருமேனியம்மான் * 1228/2. திருமேனி யழகாலே ஸர்வேசுவரன் என்று தோற்றும்படி யிருக்கிறவன்,

திருமொழி 1336/4 ... எங்கள் தேமலர்க் கோதை *. 1505/3 இருக்கிலங்கு ... *. 2245/3. கதையும் ... மியாய் *. சிறந்த சொல். இனிய சொல். திருமொழி : பெரிய திருமொழி. திருமங்கையாழ்வார் பிரபந்தம், பெரியாழ்வார் திருமொழி, பெருமாள் திருமொழி, நாச்சியார் திருமொழி — 4 திருமொழிகள்.

திருமொழித் திருநாள் மார்கழியில் முதல் இரண்டு ஆயிரம் பாட்டுக்கள் ஸேவிக்கப்படும் பகல் பத்து உத்ஸவம். திருமோகூர் 2746/1. திவ்ய தேசம். திருமோகூராத்தன் * 3896/3. அவ்வூர் எம்பெருமான். திருவடி * 412/3. எம்பெருமான் திருவடி.

திருவடி 3950/3 "... திருத்தோளிலும்." கருடன். "திருவடியைப் பொறுப்பிக்குமவள்." (முமுக்ஷுப்படி). கருடன் ஹநுமாந் இருவருக்கும் இப்படிப் பெயர். பெரிய திருவடி சிறிய திருவடி என்பது நூதநம்.

திருவடிக்கள் 3326/4, 3327/4. கூட்டறிய ... *.

திருவடி திருவடி 3923/1. அத் ... மேல் *. திருவடி - ஸ்வாமி. திருவடி திருவடி - ஸ்வாமிக்கும் ஸ்வாமி, ஸர்வ ஸ்வாமி.

திருவடி நிலை 3462/ப்ர. "... கோத்து" பாதுகை.

திருவடியே துணை * 1503/2. திருவடிவு 2054/1 ... விற் கரு நெடுமால் *. திருவினுடைய வடிவு.

திருவண் வண்டூர் * 3421/2. திவ்ய தேசம்.

திருவணுக்கன் திருவாசல் : அணுக்கன் வாசல் பார்' திருவபிஷேகம் 3388/3 (6) கிரீடம். திருவபிஷேகம் 2899/3. மூஸ்ரீ. "...பண்ணியருளி." பட்டாபிஷேகம். திருவனந்தபுரம் * 3906/4. திவ்ய தேசம்.

திருவயிந்திரபுரம் * 1149/4. திருவரங்கச் செல்வனார் 609/3. ரங்கநாதன். திருவரங்கம். திருவரசு : ஸந்யாஸிகளைப் புதைக்குமிடம். அங்கே அரச மரம் நடவேண்டியதால் வந்த சொல். அரச மரம் இல்லாவிடிலும் திருவரசு என்றே பிரஸித்தி.

திருவருட் கமுகு 3764/4 ... ஒண்பழத்தது *. அவனுடைய கடாக்ஷத்தாலே வளர்கிற கமுகு. திருவருள்கள் 3467/2. பரமேயித் ... *. அதிசயமான அருள்கள். திருவல்லவாழ் 2429/3. திவ்ய தேசம்.

திருவல்லிக்கேணி 1068/4. திருவழுந்தூர் 2744/2: திருவளர் சோலை 3840/3 ... தென் காட் கரை *. அழகு விஞ்சின சோலை.

திருவன் 1683/1. மார்வில் ... *. 2265/3. சிங்கமாய்க் கீண்ட ... * ஸ்ரீமாந்.

திருவாகம் 3874/3. திருமடந்தை சேர் ... *. சில ஸம்பத்தை

யுடைய திருமேனி. 2604/4 ... திண்டிறறு *. விலக்ஷண வடிவு.

திருவாகாரம் 1285/1 ... குலுங்க *. பிராட்டியினுடைய ஸந்நி வேசம். திருவாட்டாறு * 3946 — 3956. திருவாணை 454/2. நின் ... கண்டாய் *. பெரிய பிராட்டியார் ஆணை, ஆஜ்ஞை. 3991/2 ... நின்னாணை கண்டாய் * 384/4. "நிற்பாயாகில் ..., கிடப்பாயாகில்...".

திருவாய் 1146/3. சேவடிகை ... * வாய். (திருவாய்ப்பாடி) திரு வாயர் பாடிப் பிரான் 145/3. திருவாய்ப்பாடியிலுள்ள ஜநங்களுக்கு ஸர்வ ப்ராகாரத்தாலும் உபகாரகன். திருவாய் மொழி * 3961/1. உகவாதார் நெஞ்சுளுக்கும் படியான பிரபந்தம். நம்மாழ்வார் அருளிச் செய்த பிரபந்தத்தின் பெயர்.

திருவார் பண் 1441/1 ...ணில் மலி கீதம் * அழகு மிக்கிருந்த பண். திருவாலி நகர் * 1201/3. திருவாலி நாடு * 1577/1. திரு வாளன் 411/2 ... திருப்பதி மேல் *. ஸ்ரீயை யுடையவன் 421/4.

திருவாழி மோதிரம் (வா.மா. 235). திருவாறன் விளை* 3660/3. திவ்ய தேசம். திருவிக்கிரமன் 1832/2. அளந்த ... *. திருவிடம் 3054/2 ... மே மார்பம் *. லக்ஷ்மீ ஸ்தாநம். திருவிண்ணகர் 3473/4· செல்வம் மல்கு குடி ... *. திவ்ய தேசம். திருவிருத்தம் 2478/அவ. விருத்தாந்தம், அல்லது தாழிசை, துறை, விருத்தம்—என்கிற இனத்தின் வகையான கலித் துறையின் விருத்தம். நம்மாழ்வாரின் முதல் பிரபந் தத்துக்கும் இதுவே பெயர்.

திருவில்லாத் தேவர் 2434/3 ...ரைத் தேறேன் *. லக்ஷ்மீ ஸம்பந்த மில்லாத ருத்ராதிகள். திருவிலேன் 712/4 ... ஒன்றும் பெற்றி லேன் *. பாக்ய ஹீநையான நான்.

திருவிழவு 6/1. திருவோணத் ... *. 9/3. திருநாள், திவஸம்.

திருவிளக்குப் பிச்சன் 1187/1: ரங்கநாதனுக்கு அந்தரங்கனாயிருப் பான் ஒருவன்; பெருமாளிடம் வரும் ஒவ்வொருவரையும் ஏதோ ஒரு குற்றம் காண்பவன். திருமங்கையாழ்வார் மீது என்ன குற்றம் சொல் லுவாய்—என்று பெருமாள் கேட்க,—"செங்கமலத் தயனனைய என்கிற (1187) பாசுரத்தில், தேவரைக் கவி பாடத் தொடங்கி, தன்னையே பாடிக் கொண்டான், — என்ன. அதுவும் நம்மையன்றோ சொல்லிற்று" — என்று திருவுள்ளமானார் பெருமாள்.

திருவிளையாடு சூழல் 2060/1. "இவனுக்கின ... லுக்குள்ளே வந்து தரைக்கிடை கிடந்த விடமாயிற்று". விளையாடு மிடம்.

திருவிற் பொலி மறைவாணர் * 337/3: ஸ்ரீவைஷ்ணவர், ஸ்ரீயா லே மிக்கிருப்பாராய் வேதத்துக்கு நிர்வாஹகரான பெரியாழ்வார்.

திருவினூர் வேதம் 1818/3 ... நான்கு *. ப்ரமாண்ய லக்ஷணங்களால் குறைவற்றிருக்கிற வேதம்.

திருவினை 708/4 ... யில்லாத் தாயர் *. திருவை. இரண்டாம் வேற்றுமை. திருவுக்கும் திருவாகிய செல்வன் 1608/1. தானன்றி மற்றவர்களின் ஸம்பத்துக்கு மூலபூதையான பிராட்டிக்கு ஸம்பத்தானவன். [பிள்ளை.

திருவுடைப் பிள்ளை 204/1 ... தான் தீய வந்து *. ஸ்ரீமானான

திருவுடையார் * 3187/3. ஸம்பத்துடையார்.

திருவுடையாள் மணவாளன் * 183/3. திருவுக்கும் திருவான ஸர்வேசுவரனை யுடையவளான பெரிய பிராட்டிக்கு வல்லபன்.

திருவூற்றங்கரை 3902/3. பட்டர் பேரோலக்கமா யிருந்த இடம்.

திருவெட்டெழுத்து * 1740/3. அஷ்டாக்ஷர மந்திரம். ஓம் நமோ நாராயணாய என்பது. திருவெள்ளக் குளம் * 1322/3. திருவெள்ளறை* 192.3. திருவெள்ளியங்குடி 1338/4. திவ்ய தேசங்கள்.

திருவேங்கடத்தான் * 1518/3. திருவேங்கட முடையான் பாட்டில் இல்லை. ஸம்ப்ரதாயமான சொல்.

திருவேட்டை 3902/3. "ஒரு ... யிலே பட்டர் திருவூற்றங்கரையிலே. அரும்பதம் மௌனம். அநுபந்தம் பார்.

திருவேளைக்காரன் 3823/1. (சீ. அ). திருவெள்ளைக் காரனா யிருக்குமோ என்று தோன்றுவதாகக் குறிப்பு காண்கிறது. அதற்குத் தான் பொருள் யாதோ! அநுபந்தம் பார். பூவேளைக்காரர் பார்த்துத் தெளிவோம். திருவொடு மருவிய இயற்கை * 2579/5. ஐசுவர்யம் நிலைநின்று அது தானே யாத்திரையா யிருப்பது. திருவோணம் 15/4 ... த்தானுல காளும் *. வைஷ்ணவ நக்ஷத்திரம்.

திருவோலக்கத்தின் படியே தள்ளும்படியா யிருக்கை 3435/3. சிஷ்டர்களோலக்கத்திலே அசிஷ்டாகள் வந்திருந்தால் க்ரமேண கடத்திவிடுகை.

திரேதம் 1613/3. கிரேத ... துவாபர *. திரேதா யுகம். திரேதை 2054/1 ... க்கண் வளையுருவாய் *. திரேதா யுகம்.

திரை 3452/2. "நரை திரை". உடம்பில் நரம்பு படைக்கை. புடைக்கை (?). திரைக் கவரி 2753/2. பன்னு ... வீச *. திரை-அலை. அலையாகிற சாமரம். திரைந்தான் 1484/2. பொல்லான் ... என்னும் *. ஒடிந்த சிதிலமான சரீரத்தை யுடையவன். திரைப்பாயல் 2551/1. வரு ... *. திரைக்கிளப்பத்தை யுடைய க்ஷீரார்ணவமான படுக்கை.

திரை மாறின கடல் 2915/1. அலை ஒய்ந்த கடல்.

திரையுறி 164/1 ... மேல் வைத்த *. வைத்தவர்களாலும் வாங்க வொண்ணாதபடியான உறி. திரைக்கயிறுகள் சூழ நாற்றிக் கண்ணி தெறித்த உறி; பெரிய உறி. கயிற்றுப் பின்னலாகக் கொண்டு சமைத்த உறி. திரையை வளைத்து 3143/1. "தானும் பிராட்டியுமாய்த் ... க் கொண்டிருந்தாலும்". திரை போட்டு. திரை வயிற்றுப்பேய் * 2789/2. பேய்களானவை நினைத்தபடி ஜீவிக்கப் பெறுமையாலே நரம்பு படைத்து அவை தான் தன்னிலே பன்னிப் பத்தெட்டு மட்டும் நிரைத்துக் கிடக்கு மாயிற்று. பெருவயிறுடைய பேய் — என்று எளிதிலே பொருளாகும்.

தில்லைச் சித்திர கூடம் * 1168/4. சிதம்பரம். திலதம் 1275/3. தென் திசை ... *, திலதம் 3960/3. தென் கொள் திசைக்குத் ... மாய் நின்ற *, சிரஸா வாஹ்யமாய் நின்ற. ஆபரணம். 3550/3. திலகம்.

திலோத்தமை 278/3 ... யரம்பை *. ஒரு அப்ஸரஸ், அணங்கு.

திவம் 3922/4 ... த்திலும் பசு நிரை *. பரம பதம். திவலை 889/1 இனி திரைத் ... மோத *. நீர்த் துளி. திவளும் 3046/3 ... தண்ணந் துழாய் *. 1749/4 ... மாளிகை சூழ் *. 1749/4 ... வெண் மதி *. ஒளி விசும். திளைக்கின்ற நம்பி 1880/2. தெருவில் ... *. விளையாடு கிற நம்பி. திளைக்கும் 337/4. தெட்டித் ... *. களியா நிற்கும்.

திளைகொண்ட பழம் * 1530/2. பழுத்த பழம். திளை - பருமன்.

திறங்கள் 2214/4. வாய்த்...*. ப்ரகாரங்கள், படிகள். 2622/3. குமைத் ... *. 3440/2 ... காட்டி விட்டு*. திறங்கள் 3453/1 ... ளாகி யெங்கும் *. திறள் - ஸமூஹம். திரள் திரளாக.

திறத்தகத்து 413/1. தன்னடியார் ... *. விஷயமாய். திறத்து அகத்து. அத்து சாரியையாய் அகம் ஏழாம் வேற்றுமை. திறத்தது 3584/4, செங்கனி வாயின் ... துவே *. ஸம்பந்தித்தது, அகப்பட்டது.

திறத்தம் 1966/4. பின்னை மணாளர் ... மாயின *. இடையாட்டத் தோம். திறத்துக்கே துப்பரவாம் திருமால் * 3657/1. காரியத்தைத் தலைக் கட்டிக் கொள்ளும்படிக் கீடான துப்பரவு - ஸாமர்த்தியம், அத்தை யுடையவன். திறம் - காரியம். திறத்தோம் 1859/4. ஒருவர் தம் ... *. இடையாட்டத்தோம்.

திறப்பு 278/4. வாய்ப்பின்றி *. திறத்தல் - வாய் திறப்பு. வாய் திறந்து சொல்லுவது. திறம் திறமை, காரியம், விஷயம்.

திறம்பாச் செடி நரகு * 2269/3. தப்பாமல் செடி மிக்க நரகம். தப்பாததாவது அநுபவித்து முடிக்கப் போகாதபடி, செடி - காடு. காடேறியிருக்கிற நரகு. திறம்புதல் – தப்புதல்.

திறம்பாத கடல் 3400/3. ... வண்ணன் * சாஸநத்தைத் தப்ப

வொண்ணாதபடி அபரிச்சேத்யமான கடல். திறம்பாத் - அதிக்ரமிக்கப் போகாத, சலிக்கக் கடவாத.

திறம்பாத வுலகம் 3400/4 ... த்தீர் *. சலியாதிருக்கிற ஜநங்கள்:

திறம்பாது 2177/1 ... என்னெஞ்சமே *. நான் சொல்லிற்றுத் தப்பாது. திறம்பாமல் 1469/4 ... கொண்டேன் *, தவறாமல்.

திறம்பாமல் கடல் கடைந்தேன் * 3400/3. பிரிகதிர்ப் படாதபடி, தப்பாதபடி. திறம்பா வழி 2269/2 ... சென்றார் *. சலியாத வழி:

திறம்பிற்று 2269/1 ... இனி யறிந்தேன் * கதவு திறம்பிற்று, சாத்திக் கொண்டது. திறம் பேன் மின் 2449/1 ... கண்டீர் *. மறுக்காதீர்கள், தப்பாதிர்கள்.

திறமா 70/2. நப்பின்னை தன் ... *. திறமாக, ஹேதுவாக.

திறமுடை வலம் 3114/1 ... த்தாய் * திறம்-ஸமூஹம். வலம்-பலம். நாநாவிதமான பலம். திறல் 984/1 ... களிறு *. மிடுக்கு.

திறல் தேன் 658/1. தேட்டருந் ... *. பலத்தைக் கொடுக்கும் தேன். திறல் மீளி 3624/2 ... மொய்ம்பில் * மிடுக்குடைய ஸிம்ஹம்.

திறல் வலி 2669/2. தண்கால் ... யை *. பெரு மிடுக்கு.

திறலாகம் 1598/1. அவுணன் ... * மிடுக்குடைய சரீரம்.

திறவிது 2443/1 ... என்றோரார் *. திறத்தை யுடையது. ஒன்றுலறியப் போகாதது. திறனுரை 2122/4 ... யே சிந்தித்திரு *. இடையாட்டமான சொல்.

திறை 3232/ . உய்ம்மின் ... கொணர்ந்து * கப்பம், காணிக்கை.

திறை கொண்டு 1343/2. "யமனைத் திறை ...". திறை செலுத்தும்படி செய்து கொண்டு. பர தந்த்ரனாக்கி.

தின்ற விடம் 872/அவ. "... த்தைச் சொறிதல்". அரித்த இடம். தினவு கண்ட இடம், தின்ற இடம். தின்னலுறுதியேல் 156/2 ... நம்பி *. தின்பதில் உற்றிருந்தாயாகில்.

தினைத்தனையும் 1014/4. செல்லவொண்ணா *. தினை ஸூக்ஷமமான தாந்யம். எள்ளத்தனை என்னுமாப் போலேயாய் பரிமிதமான காலத்தைச் சொல்லுகிறது. ... விடாள் * 3526/3.

தினைத்தனையும் விடாள் * 3526/2. சிறிது போதும். க்ஷண காலமும். தினைத்தனையும் அச்சம் 1919/1. ஏக தேசமும். தினையாஞ் சிறிதளவும் 2929/2.

தீ 7/1 ... யில்பொலிகின்ற *. அக்நி. தீக்கதி 2144/2. நினையேனும் ... *. துர்மார்க்கம். 2176/4 ... க்கட்சென்று *. விநாசத்துக்கு ஈடான மார்க்கம். நரகத்துக்குப் போகும் வழி.

தீக் குணங்கள் 860/3 ... தீர்த்த *. அஹங்கார மமகாரங்களாகிற நாசக ஸ்வபாவங்கள்.

தீக்குறள் 475/6 ... ளைச் செந்ரேதோம் *. பிறர்க்கு அநர்த்தா வஹமான பொய். குறள் – குற்றம். தீக்கொளீஇ 464/3 ... வேகின்ற தால் *. நெருப்புக் கொளுத்தி.

தீங்கரும்பு 1141/4 ... கண் வளரும் கழனி *. இனிய கரும்பு.

தீங்கவி செய்குந்தன் * 3655/3. இனிதான கவிகளைச் செய்யும் படியான ஸ்வபாவத்தை யுடையவன். தீங்கழை 2353/2 ... போய் வென்று *. அழகிய மூங்கில். களை என்ருக்கி பிடித்து விளையாடுகிற மூங்கில். வளைக்கையாலே எறிந்து விளையாடுகிற மூங்கில். தீங்குயில் 476/3. மாவேறி ... * மதுர ஸ்வபாவத்தையுடைய குயில்.

தீங்குழல் 262/2. இனிதான குழல். ப்ரணய ரோஷ பரிஹாரமாக ஊதுகிற குழல்.

தீட்டி வாட்டான் 2136/3. "ஒரு பேரான ஸம்ஸாரி பேரும் ...". எழுத்தாணியைத் தீட்டி, வாட்டான் எழுதமாட்டான். தீட்டு (வா. மா; 441) "அத்தீட்டை யாருக்குச் சொல்லுவேன்." ஆசௌசம். தீப கம் 2478/(?) "... கட்டி மிருகம் பிடிப்பாரைப் போலே". ருசி காட்டி.

தீண்ட 323/1. சிறு காக்கை முலை ... *. நலிய.

தீண்டாமை 1902/2 ... நினைந்து *. ஸ்பர்சியாதபடி.

தீத் தொழில் 1290/4. வண்கைத் ... *. தீயினுடைய தொழில். தீ தவம் கெடுக்கு மமுதம்* 3077/3. புத்தி பூர்வமான தீமையையும் ப்ராமாதிகமான அசுபத்தையும் கெடுக்கும்படிக் கீடான நித்ய போக்ய பூதன். தீது அவம், தீ தவம்.

தீதறு திங்கள் 1934/1 ... பொங்கு *. தர்சநீயமுமாய் கண்ணுக்கு குளிர்ந்திருக்கும் சந்திரன். தீதில் சீர் 3147/4 ... திருவேங்கடத்தான்* சீருக்குத் தீதாவது – ஆசிரயிப்பாரின் குறை குண நிரூபணம் பண்ணுகை. குற்றமற்ற குணங்கள்.

தீதில் நன்னெறி 663/3 ... காட்டி *. தீமையோடே கூடின நெறியன்றிக்கே, நல் வழி. 672/1 ... நிற்க*. தீமையோடு விரவாத நன்னெறி

தீதிலந்தாதி 3692/3 ... யோராயிரம்*. பகவத் குணங்களை யொழிய கதாந்தர ப்ரஸங்கமாகிற பொல்லாங் கில்லாத அந்தாதி.

தீதிலாத வொண் தமிழ்கள்* 3791/3. சப்தார்த்தங்களில் குறை வற்று பஹு குணமான த்ராமிடம்.

தீப்பப் பூடுகள் 278/1 ... அடங்க வுழக்கி *. முளைக்கிறபோதே ஸர்ப்பாதிகள் போலே பிரஸித்தமான காஞ்சொறி எரி புழு இவையான விஷப் பூண்டுகள். தீம்பிலே ஒருப்பட்ட த்ரிவித கரணங்களையு முடைய வர்கள்.

தீப்பால பேய்த் தாய் 2624 2 ... புயிர்களாய் *. பொல்லாத ஸ்வபாவத்தை யுடைய பேய் - பேய்ச்சி, பூதனை, அவளான தாய்.

தீப்பால வல்வினையேன் * 3880/4. தீய ஸ்வபாவத்தை யுடைத் தாய் பேர்க்கப் போகாதபடி கனவிய பாபத்தைப் பண்ணின நான். தீபம் 560/1, கதிரொளி ... *.

தீம்பலங்கனி 1371/4. தேனது நுகர் *. இனிய பலாப் பழம்.

தீம்பால் 1880/3 ... உருகி *. இனிய பால். தீம்பு 10/1. தௌஷ்டியம். தீமழை 3693/4 ... காத்து * நாச கரமான மழை.

தீமனம் * 3082/4. பொல்லாத நெஞ்சு. அம்ருதத்தையும் விஷத்தையும் ஒக்க விரும்புவாரைப் போலே உன்னையும் உகந்து க்ஷுத்ர விஷயங்களையும் உகக்கும் பொல்லாத நெஞ்சு.

தீமாற்றமும் சாரா * 2431/2. கெட்ட பெயர் அணுகாது, அபவாதம் வாராது. தீமுகத்து நாகம் 607/3 ... த்தணை மேல் *. உகவாதார்க்கு வந்து கிட்டவொண்ணாதபடி நெருப்பை யுமிழ்ந்தாப் போலே யிருக்கிற திருவநந்தாழ்வான். தீமுற்றத் திலங்கை யூட்டினுன் * 3011/3. இலங்கை முற்ற, முழுதும் தீ யூட்டினுன்.

தீ மூன்று 1725/3. செந்தீ ... மில்லிருப்ப *. த்ரேதாக்நிகள். தீமை 136/5 ... செய்திம் முற்றத் தூடே *. தீம்பு.

தீயகம் 2638/1. மாருதமோ ... ரோ *. அக்நி. தீய பணம் 120/2 ... த்தில் *. விஷத்துக்கு ஆச்ரயமாய் தீயதான பணம்.

தீய புந்திக் கஞ்சன் * 132/1. துர்ப்புத்தியான கம்ஸன், பிள்ளைக் கொல்லியிறே! மக்கள் அறுவரைக் கல்லிடை மோதிய பாபிஷ்டனிறே!

தீயர் 1221/3. முறையாய் வளர்க்கும் மூத் ... *. அக்நியை யுடையர். தீயரக்கி 2647/3 ... மூக்கும் *. தீய அரக்கி, கொடிய அரக்கி.

தீய வலவலை 2951/1 ... ப் பெருமா வஞ்சப் பேய் *. கொடிய நினைவை யுடையவளாய், அலவலை-வாய் பாறி யேத்துமவள். தீயன 3357/1 ... வெல்லாம் *. க்ரூர ஸ்வபாவங்கள்.

தீயிணக் கிணங்காடி 287/3. பொல்லாத இணக்கத்தோடே இணங்கி வந்து. தாய்க் கடங்காதபடி. தலக்கறுக்கும் விஷயத்தோடே கலந்து என்றபடி. தலக்கறுக்கும் -உறவறுக்கும். தீயிணக்கு - உசிதமல்

லாத விளையாட்டு. தீயினில் கொடிது * 1111/2. தீயினில் தூசாகும்* 478/8. நெருப்பிலிட்ட பஞ்சுபோலே யாகும். தீயுலா வெங்கதிர் * 1814/3. உஷ்ண கிரணனான ஆதித்யன். தீயெம்பெருமான் 1332/1 ... நீரெம்பெருமான் *. அக்நிக்கு அந்தர்யாமியாய் நிர்வாஹகனுயிருக்கிற ஸர்வேசுவரன்.

தீயோம்புகை மறையோர் * 1634/3. தீயோம்புகையே ஸ்வபாவமாயுள்ள பிராம்மணர்கள், ஹோமம் செய்யும் பிராம்மணர்கள்.

தீர்க்கல் 454/1. தீவினை ... லுற்று *. போக்குகை.

தீர்க்கிற்றிரே 3534/4 ... விளையாட்டியேன் *. தீர்க்கவல்லிகோளோ. தீர்த்த கர ராமின் 2195/4 ... திரிந்து *. திரிந்து, உங்கள் ஸஞ்சாரத்தாலே தீர்த்த கர ராமின். பாவந ராகுங்கோள். ஆமின்-ஆகுங்கோள்.

தீர்த்தங்க ளாயிரம் * 3670/3. தீர்த்தங்களான ஆயிரம் திருவாய்மொழி. தீர்த்தமாவது— தன் போக்யதையாலே மற்றொன்றில் போகவொட்டாதபடி பண்ணவற்றாதல், பாவநமாதல்.

தீர்த்தத் தினன்றிரா 3445/1. தீர்த்தோத்ஸவத் தினன்று. "தீர்த்த வாரீ" யன்று, இரா - இருந்து.

தீர்த்த நீர் 801/3. இறைஞ்சியாடு ... *. ஸர்வ பாபங்களையும் போக்கும் சக்தியை யுடைய நீர். 1021/4 ... த்தடஞ்சோலை *. எல்லா ஸம்ருத்தியையும் பண்ணிக் கொடுக்கவற்றான ஜலம். தீர்த்தம் என்ற பதம் பாவநத்வத்தைச் சொல்லுகையாலே அது உபலக்ஷணமாய் த்ருஷ்டா த்ருஷ்ட ஸகல பல ப்ரதத்வத்தையும் சொல்லுகிறது.

தீர்த்த பலம் தரு நீர் * 95/3. மங்களாசாஸந பர்யந்தமான பலத்தைத் தரும் நீர், தீர்த்தம்.

தீர்த்தம் ப்ரஸாதியாதே 3110/2. "... நித்யவாஸம் பண்ணுகிற தேசம்." தீர்த்தத்துக்கு அநந்தரம் திருநாள் ஸமாப்தி. தீர்த்தம் பிரஸாதித்துப் போய்விடாதே இங்கேயே இருந்து என்று பொருள்.

தீர்த்தம் — என்று வைஷ்ணவர்களின் பேச்சில் சிராத்த தினத்துக்குப் பெயர். திருநக்ஷத்திரம் - பிறந்த நாள். தீர்த்தம் - சிராத்த நாள். தீர்த்த மனத்தனன் 3670/2 ... னகி *. துணிந்த மனத்தை யுடையவன். தீர்த்த முடைத் திருமாலிருஞ் சோலை * 454/4. தீர்த்தங்களை - துறைகளை, ஸ்நாந கட்டங்களை யுடைய திருமாலிருஞ் சோலை.

தீர்த்தருளாய் 1814/4. என் வல்வினை ...யே *. போக்கியருளாய்.

தீர்த்தவடிமைக் குற்றேவல் * 3793/1. இதர புருஷார்த்தங்களில் நசை யறுக்கவல்ல அடிமைகளில் அந்தரங்கமான அடிமை. தீரப் பண்ணின அடிமை. தீர்த்தவன் 982/1. துயர் ... * போக்கினவன்.

தீர்த்தன் 1835/3 ... னைப் பூம்பொழில் சூழ் *. சுத்தியை யுடைய வன், சுத்தன். 3092/4 பெருமான் என் ... னே *. அவகாஹிக்கும் துறையாம்படி ஸுலபனானவன், தவிர்ந்தவன்.

தீர்த்த வெம்பெருமான் 3537/4. (சீ. அரு.) ஸாளக்ராம மூர்த்தி. ஒருவரால் செய்ததல்லாமல் கண்டகீ நதி தீர்த்தத்தில் மட்டுமே ஆவிர்ப் பவிக்கும் மூர்த்தி. எவ்வித அலங்காரமும் உபசாரமும் செய்ய முடியா மல் திருமஞ்சனத்துக்கு மட்டுமே உபயோகிக்கப்படும் மூர்த்தி.

தீர்ந்த வடியவர் 3175/1 ...தம்மை *. உறுதியோடுள்ளஅடியவர். ப்ராப்ய ப்ராபகங்கள் அவனே என்றிருக்குமவர்களாயிற்று தீர்ந்த அடி யவராகிறார். தீர்ந்த வென் தோழி * 3365/4. அந்தரங்கையான தோழி. தீர்ந்தார் 3036/2 ... தம் மனத்து *. ஸம்யக் வ்யவஸ்திதர்.

தீர்ந்தேன் 2462/2. குறையும் வினையாவி ... *. தளர்ந்தேன்.

தீர்ந்தொழிந்தேன் 3303/3. பேதைமை ...*. போகப் பெற்றேன், தீரப் பெற்றேன். தீர் மருந்து 3564/4. வினை ...*. போக்கும் மருந்து, தீர்க்கும் மருந்து.

தீரக்கழிய அபராதத்தைப் பண்ணி (பர. ரஹ. த்வ.) அத்யந்தாதிக மாக. தீரக்கழியும் 2903/1 "... அபராதத்தைப் பண்ணின பின்பு.'

தீரஇரும்புண்ட நீர் * 3994/3. காய்ச்சல் தீர இரும்பு உண்ட நீர்

மாக்கதி 2176/3 மூவாத ... *. பரம ப்ராப்யமான மோக்ஷம். மாக்கலவி 3776/4 வேண்டற்பாடுடைத்தான கலவி. மாக்கோல் 3134/1 கொல்லா ... *. குதிரையை நடத்துகிற முட்கோல், உழவுகோல், உளவுகோல், சாட்டைக் குச்சி.

மாகங்கள் 2509/3 ... எல்லாம்*. லோகங்கள். மாகண் 2977/4 செம் ... ணனே *. பெரிய கண். மலர்ந்த கண். மாகத் திள மதியம் * 3929/3 ஆகாச வர்த்தியான இளம் பிறை. மாகதத்த கரி 1749/1 கவள ... *, மிக்க சினம் என்றுய் மிக்க மதமுடைய யானை. மாகதி 2630/3 நீங்காத ... *. ப்ராப்யம்.

மாகந்த நீர் 3661/4 ... கொண்டு தூவி*. மகத்தான கந்தத்தை பரிமளத்தையுடைய நீர். மாகம் * 3661/3, 3929/3 ஆகாசம்.

மாகமா நிலம் 1422/1 ... முழுதும் *. பெரிய ஆகாசமும் பெரிய பூமியும். மாகழல் * 1165/2 போக்யதை மிக்க திருவடி.

மாகாணிப் பணம் 974/2 விசம் பணம், ஒரு அணு. விசத்துக்குப் பெயர். மாகாயம் * 2294/4 பெரிய வடிவு காயம் – சரீரம். மாகீண்ட கைத்தலம் * 2064/3 மா – குதிரை. குதிரை முகத்தனான கேசி ராக்ஷஸனுடைய வாயைப் பிளந்த கை.

மாச்சிலை 1704/4 கலை ... *. பெரிய வில். மாசதிர் 3075/2 ... இது பெற்று *. பெருஞ் சதிர். மாசி முன்னாள்* 504/1 மாசி முதல் பதினைந்து. பூர்வ பக்ஷம். மாசுடம்பில் வல் லமணர் * 1582/1 உடம்பில் அழுக்குக் கழற்றாதிருக்கு மது தானே தர்மமென்றிருக்கும் அமணர். வல்லமணர் – வலிய வாதம் செய்யும் ஜைநர். மாசுடம்பு 614/2 ...பில் நீர் வாரா *. அழுக்கேறின உடம்பு.

மாசுணம் 771/1 ... படுத்து *. பெரும் பாம்பு. மாசூணாச் சுடருடம்பு* 3128/1 மாலிந்ய மடையாத தேஜ: சரீரம். மாசூணா ஞானம்* 3128/2 மாசேறக் கடவ தல்லாத ஞானம்.

மாசூணாது/தே 3127/4 அழுக்கேறாதே, மழுங்காதே. மாசுணா வான் கோலம் * 3128/3 குறைவற்றுப் பூர்ணமா யிருந்துள்ள ஞானாதி பூஷணம். மாசூணும் 2163/3 ... வேங்கடமே*. மாசேறும்படி பண்ணா நிற்கும்.

மாட்சி 867/4 ... நின் மாட்சியே * பெருமை. மாட்டாத தகவற்றீரே * 2007/4 செய்யமாட்டாத கிருபை யற்றிகோளோ, மாட்டாது 217/3 கொள் ... தங்காப் புண்டிருந்தானால் *. மாட்டாமல். மாட்டாமை தானாக 2448/1 வலமாக ... *. இல்லையாகவுமாம்.

மாட்டி 2779/1 மணி விளக்கை ... *. ஸந்திப்பித்து, வைத்து. மாட்டிய 481/6 மல்லரை ... *. அழியச் செய்த. மாட்டிய வல் விளக்கு * 3628/4 சுடர் வெட்டின பெரு விளக்கு. தூண்டின ஸ்திரமான விளக்கு. மாட்டினேன் 1746/2 ... அத்தனையே*. போக்கினேன்.

மாட்டு 2152/4 அடலாழி கொண்டான் ... *. 2568/2 மாவலி ... *. அருகு, பக்கல். மாட்டுயர் கற்பகம் * 3628/2 கடலுக்கு அருகில் வளரும் உயர் கற்பகம்.

மாடக் கொடி 1158/4 மாடத்திலுண்டான கொடி. மாட நெற்றி 1219/3 ஒளி ...*. மாடத்தினுடைய நெற்றி - புலிமுகம். மாடமாடே 3903/2 ... குருந்து *. மாடத்தி னருகில். மாட மாளிகை * 1262/4

மண்டபங்களும் கிருஹங்களும். மாடலர் பொழில் * 3164/2 பக்கங்களில் அலர்கிற பொழில்.

மாடுடை வையம்* 3509/2 மாடு – தநம். தநம் மிகு தரணி. மாடு வந்து * 1598/2 பக்கலில் வந்து. மாடுறு பூந்தடம்* 3436/3 அருகேயுள்ள பூக் குளம்.

மாண் குறள் * 3434/4 அழகான வாமநன். மாண்பு 2635/4 மாட்சிமை. அழகு. மாணி 3491/3 ... யாய் *. சிறுவன் வாமநன்.

மாணிக்கக் குப்பி 482/1 "... போலே புறம்பே நிற்க உள்ளுள்ளதெல்லாம் தோற்று நிற்கும்." மாணிக்கப் படி 3266/1 "ஒரு ... ... சாத்தி." ரத்நாங்கி. மாணிக்கப் பண்டாரம் * 447/3 மாணிக்கம் வைக்கிற செப்பு. மாணிக்கல் 1824/3 மா ... லதர் *. மணிப்பாறை மண்ணில்லாத பாறை. மாணிக்க வித்து * 1855/3 அழகான ஸர்வ காரண பூதன்,

மாணிக் குறளன் 44/4 ... னே தாலேலோ*. அழகான வாமநன். மாணியார் 1810/4 மண்ணிரந்த ... *. சிறுவன், சிறுவர்.

மாணுரு 1134/2 ... வாய் முன நாள் *. இரப்பிலே தகணேறின வடிவு. மஹாபலி பக்கல் இரப்பாளனாய்ச் செல்லுகையிலும் அழகு குன்றுத வாமந வடிவம்.

மாத்தடைப்ப 265/2 ... மதுசூதன் *. மாற்று – புறம்பே போகை அத்தை அடைப்ப – தடுக்க. மாத்தமர் பாகன் 1304/2 ... வீழ *. மா – மிருகம், ஆனை. அத்து ஏழாம் வேற்றுமைச் சாரியை ஆனையிலமர்ந்த பாகன். மாத்தவம் 2458/3 நால் வேத ... *. பெரிய தபஸ். மாத்தானை * 2608/3 மஹா ஸேனை. மாத்திரைப் போது * 3201/3 க்ஷணப் போது. மாத் தெய்வம் * 2580/8, 3776/3 பர தேவதை. மாத் தொழில் * 1290/1 பெருஞ் செயல்.

மாதக்க 49/3 ... வென்று வருணன் *. மிகத் தகுதி. மாதர் * 201/2. மாதரார் 791/3. மாதராள் * 1657/1. மாதவி * 547/1 இந்திரனுடைய தேர்ப் பாகன். மாதவனென்ப தோரன்பு * 617/1 மாதவன் விஷயமான அன்பு. மாதவி * 3430/2 குருக்கத்தி. மாதவியின் பூ * 73/2 மாதளம் பூ.

மாதா பிது 2654/3 ... வாக *. மாதா பிதாக்கள். மாதாய மால வன் * 2446/2 அழகுதான் வடிவு கொண்டாற் போலேயாய் வியா முக்தனு யிருப்பவன். மாதாள் * 3134/4 பூஜ்யமான திருவடி. மாதா ளன் 1393/3.

மாதிரங்கள் * 2797/1 திக்கு விதிக்குகள். மாதிரம் * 1500/2 திக்கு. மாதுகந்த மார்பன் * 2335/3 மாது-பெண், லக்ஷ்மி. மாதுளம் பூ 45/2. மாதுறு மயில் 3119/3 பெடையோடு கூடின மயில். மா – மார்த்தவமாய் மிருதுவான மயில். மாதுன்பு 3347/3 ... ஒழித்தாய் *.

மாந்தர் * 878/2 மநுஷ்யர். மாந்தளிர் மேனி வண்ணம் * 1110/3 மாந்தளிரின் நிறம் போன்ற நிறம். மேனி, வண்ணம் – நிறம். மாந்தி 1374/4 தேறல் ... *. பருகி. 2074/2. மாந்தி யிருப்பர் * 2785/2 இன்னமுத ... *. பாகம் பண்ணியிருப்பர். மாந்து 1854/2 வெண்ணெய் ... *. தின்று. மாந்தும் 3584/1 "மயிர் பட ... படி யிறே இவள்படி." நசிக்கும். மாந்தேர் 1802/1 கலி ... *. பெரிய தேர்.

மாநிதி 924/1 ... கபிலை *. சங்க நிதி, பதும நிதி. 3527/1 வைத்த ... *. மஹா நிதி, விலை யுயர்ந்த பெரு நிதி.

மாநில மாமகள் மாதர் கேள்வன் * 1169/2 பெரிய நிலத்தைப் பிரகாரமாக வுடைய மாமகள் - பூமிப் பிராட்டிக்கும், மாதர் - பெரிய பிராட்டிக்கும் கேள்வன்.

மாநீர் 2494/1 ... த் திரை *. கறுத்த நீர். பெரிய நீர் – வெளுப் பான நீர் கறுத்திருப்பது நீர்த் திரட்சியாலே. பறித் தள்ளினல் வெளுப் பாயே இருக்கும். மாநீர் வெள்ளி மலை 3718/3 பெரிய நீர் வெள்ளத் தில் வெளுத்த மலை போன்ற திருவநந்தாழ்வான்.

மாநீள் படை* 2998/1 மிக்க வளர்த்தியை யுடைய ஆயுதம். மா நெடுந் தேர்* 3530/3 மா - குதிரை பூண்ட பெருந் தேர்.

மாநொடி * 3964/4 நொடியில் அஷ்டாம்சம் மா நொடி என்பர் தமிழர். மாப் பொழுது, க்ஷணத்தில் ஏக தேசம். தாய்ப் பொன்னி லும் மாப் பொன் எடுப்பான். மா – பெரிய என்பது சிறிது என்று விபரீத லக்ஷணம்.

மா நோக்கம் 1698/3 மடந்தை ... *. மஹத்தான ஸங்கல்ப்பம். மாப் பிரமம் 3776/2 முனி ... *. பரப் பிரம்மம். மாபோகு நெடுங் கானம் * 733/3 ஆனைகள் ஸஞ்சரிக்கிற காடு.

மாம்பணை * 1266/4 மா மரத்தின் கிளை. மாம்பழவுண்ணி 2947/1 பெரிய வுண்ணி, சரகுண்ணி. "மாம்பழத்தோடு ஒரு ஸம்பந்தமு மின்றிக்கே அப்பேரை தரிக்குமாப் போலே". மாம்பழவுண்ணி என்று பெயர் மட்டுமே. அது மாம்பழ முண்பதில்லை. மாம் பழத்திலிருந் துண்டாவது மில்லை.

மாமகன் 1419/1 வாத ... *. சிலாக்கியமான புத்திரன். மாமண்டு வெஞ் சமத்து * 2847/1 ரத கஜ துரக பதாதிகளால் மிகைத்து வருகிற யுத்தத்தில். மாமணிக் கல்லதர் * 1824/3 மா - கருப்பு. நீல மணிப் பாறை வழி. மாமணி நீர்க் கங்கை * 986/4 மா – பெரிது மணி – தெளிவு. பெரியதாயும் தெளிந்ததாயுமுள்ள கங்கை. மாமணி பொன் * 1926/2 ரத்தினங்கள் பதித்த ஆபரணம்.

மாமதலை 722/1 தயரதன் தன் ... *. மூத்த குமாரன். மதலை - குழந்தை. சிலாக்கியமான குழந்தை. "... ப் பெருமாள்." 1578/2(?) திருச்சேறை எம்பெருமான்.

மாமயில் 3501/1 ... சிறுமா னிவள்*. மாமை நிறமாய், இல் இருப்பிடமாய் அழகிய நிறத்தை யுடையது என்றபடி. மாமையில் என்பது மாமயில் என்று ஐகாரத்துக்கு அகரம் வந்தது.

மாமயிலை * 1069/4 மயிலாப்பூர். மா மருந்தம் * 3159/2 மஹௌஷதம், பசு மருந்தம். விக்ரஹம். மாமன் * 301/1 ... நந்த கோபாலன் *. மாமனார். மாமனிசர் 3772/2 சிறு ... *. மஹாபுருஷர்.

மாமாயக் கூத்து * 3714/4 ஆச்சர்ய நாடகம். மாமான் மகள் * 482/3 மாமான் - யஜமாநனும் அம்மானும்.

மாமி 514/2 ... தன் மகனை *. மாமியார். மாமிமார் 531/4 ...மக்களேயல்லோம்*. தாய்மார். மாமியார் 1925/அரு. அவ. "...முதலானரறிய இப்படிப் பாடுவாருண்டோ". மாமீர் 482/4 ... அவளை எழுப்பீரோ *. அன்னைமீர்.

மாமுதல் 2581/9 ... அடியே *. பரம காரணம். மாமுறி * 2590/2 மாந்தளிர். மாமேனி காட்டும் வரம் * 2170/4 மாமேனியை வரம் - நன்றாகக் காட்டும்,

மாமைத் திறம் 2482/3 தடங்கண்ணி அழகு ... *. 3586/1 ... இழந்த*. மாமை யென்கிற நிறம். மாமை நிறம்* 3507/4 மங்கை யிழந்தது ... *. மாமை பெண்களுக்குத் தனிச் சிறப்பான நிறம்,

மாயக் கடவுள் 2581/9 ... மாமுதலடியே *. ஆச்சர்ய சக்தியுக்த ஞன பர தேவதை. மாயக் கவி * 3957/2 க்ருத்ரிமமான கவி.

மாயக் குழவி * 331/2 ஆலிலை மேலொரு பாலகன். மாயக் குற ளன்* 3514/1 ஆச்சர்யமான வாமநன். வஞ்சகனுன வாமநன். மாயக் கோலம் * 3485/3 ஆச்சர்யமான ஒப்பனை, அலங்காரம்.

மாயத் தெல்லையில் பிள்ளை * 718/2 ஆச்சர்ய சேஷ்டிதங்க ளுக்கு அவதியின்றிக்கே யிருக்கிற கிருஷ்ணன். மாயப் பற்று* 2952/1 சிற்றின்பத்திலுள்ள பற்று.

மாய மந்திரம் * 517/2 அம்மான் பொடி. சொக்குப் பொடி. மாய மனிசர் * 3286/4 அல்ப்ப மநுஷ்யர். மாயமா 3441/2 ... வினை *. வஞ்சகமான, மா – குதிரை, கேசி ராக்ஷஸன். மாய முலை * 1391/3 வஞ்சகமான முலை, பூதனை யினுடையது.

மாய வலவை 3289/1 ... சொற் கொண்டு*, வஞ்சகமாகப் பேசு கிறவள். ... ப் பெண் *. 1895/2 வாயாடியான பெண்.

மாயவாக்கை * 3959/1 நீசமான உடல், அழியும் உடல். மாயாது 3378/4 பேரென்னை ... *. முடிக்க வொட்டாது. மாயாப் பெரு விற லுலகம் * 2579/7 ஒரு நாளு மழியாத மிடுக்கை யுடைய கைவல்யம்.

மாயா மூர்த்தி 3427/1 ... யாய் *. அழியாத மூர்த்தி. மாயிதழ்* 2486/4 மட மான் விழிக்கின்ற ... *. மாந்தளிர். மா - கருப்பும் சிவப் பும். கருப்பானபோது கண்ணிற் கரு விழி. சிவப்பான போது கண் ணிற் கடை வழி.

மாயிருள் 1410/2 துன்னு ... *. பேரிருள். மாயும் வகை * 3376/4 ... முடியும் வகை. மாயை வல்லை* 424/3 வஞ்சகம் பண்ண வல்லை. ஆச்சர்யமான ஸங்கல்பத்தை யுடையை. மாயோம்* 2951/1 ... மாயக் கடவோ மல்லோம்.

மாயோனிகள் * 2945/1 விலக்ஷண ஜந்மாக்கள். அதிசயப் பிற விகள். மார்க்கம் 903/3 உன்னைக் காணும் ... *. வழி, உபாயம்.

மார்கழித் திங்கள் * 474/1 மார்கழி மாஸம். மார்பம் 3314/2 அகல் ... *. மார்பு 1079/3 ... அகலம் *.

மார்மட்டு 1878/3 " உபமாநம் ... டாய் நிற்கு மித்தனை." மார் பளவு. மார்வு 83/3 ஒண் ... அகலம் *. மார்பு. மார்வெழுந் தாக்கி

3440/ப்ர. ஒரு ... பார். மாரதர் * 840/3 மிஹாரதர். மாரனூர் * 670/1 காமன், மந்மதன்.

மாரிகையேறி 2496/2 ... அறையிடுங் காலத்து*. மாரி - மழை, கையேறி - யுத்தமாகத் தோற்றி. மாரிப் பகை 264/2 ... புணர்த்த * மழையாகிற பகை.

மாரி மாக் கடல் வளைவணர் * 1689/1 மேகம் போலேயும் மாக் கடல் போலேயு முள்ள வடிவம். வளை - சங்கு போன்ற வணர் நிறத் தையுடையவர் - பலராமன்.

மாரி மாருத தண்ணம் மலை* 3285/1 மழை தவிராமலும், தண்- குளிர்த்தியாயும், அம் - அழகாயு முள்ள மலை.

மாரியனைய கை * 3215/3 கொடைக்கு மேகத்தை யொக்கும் கை. பிரயோஜந நிரபேக்ஷமாகக் கொடுக்கையும், கொடுக்கப் பெறாத போது உடம்பு வெளுக்கையும். கை - கொடை. மாருதம் * 918/1 மாருதி * 746/3 திருவடி, ஹநுமாந்.

மால் செய்கின்ற மால் * 3094/4 மால் ஸர்வாதிகனான ஸர்வே சுவரன் செய்கிற மால் - பிச்சு, கலக்கம். மால் புருடோத்தமன் * 395/2 தானே தனக்குப் பெருமையா யிருக்கும் புருஷோத்தமன்.

மால் வண்ணன் * 2472/3 கரு நிறத்தவன். மால் பிச்சாய் கறுப்பு. மால்வரை * 812/2 பெரிய மலை. மால் விடை * 2841/2 நாகின் மேலே பிச்சேறிப் படுகிற காளை. மால்வினை * 1087/3 பெரிய வினை.

மாலதாகி 296/2 ... மகிழ்ந்தனள் *. வியாமோஹத்தை யுடைய வளாகி. மாலதிடம்* 1350/2, 2119/4 ஸர்வேசுவரனுடைய இடம் மாலவன் * 1790/3 சாலப் பெரியவன். 2387/3 வியாமுக்தன்.

மாலவனை மாதவனை * 2446/2 அடியாரிடம் வியாமோஹங் கொண்ட மாதவன்.

மாலிகன் 189/1 ச ... *. மாலி. மாலிமாலி* 779/3, 3797/2 மாலி ஸுமாலிகள். மாலிமான் * 779/3, 3797/3 மான் - மஹாந். மாலி - மஹாநான மாலி. மாலி மான் விலங்கு * 779/3 மிருகம் போலே பெரு மிடுக்கனான ஸுமாலி.

மாலிருஞ் சோலை * 3111/3. மாலினந்துழாய் * 1959/2 ஸர்வேசுவரனுடைய திருமேனி ஸ்பர்சமுள்ள திருத்துழாய், அந்துழாய். மாலின மொழியாள் * 1109/3 வியாமோஹத்துக்குச் சேர்ந்த பேச்சையுடையவள். இனம் – ஒப்பு.

மாலுங்கடல் * 1082/1. மாலுங் கருங்கடல்* 2100/9 ஜல ஸம்ருத்தியாலே பிச்சேறின கடல். மாலுருவாய் நின்ற விண் * 1646/1 த்ரிபாத் விபூதி யென்னும்படியான பரப்பை யுடைத்தான நித்ய விபூதி யுக்தன்.

மாலை சேர் வெண்குடை * 1397/4 முத்து மாலைகள் ஸரம் ஸரமாகச் சேர்ந்துள்ள வெண்குடை. பெருமாளுடைய குடையில் முத்து மாலைகளும் குஞ்சலமும் கட்டி யிருக்கும்.

மாலைத் தஞ்சுடைய இருள் * 1181/1 மாலையைத் தஞ்சமாக வுடைய இருள். மாலை நண்ணி 3880/1 ... த் தெழுமின் *. மாலையுற்று – பக்தியுக்தராய். ஐ அசையாய் மால் நண்ணி மாலுற்று.

மாலைப் பூசல் * 3879/1 ஸந்தியா காலத்தில் கூப்பிட்ட கூப்பீடு. மாலையந் தண்ணந் துழாய் * 2497/4 மாலா ரூபமாய் தர்சநீயமாய் குளிர்ந்த திருத்துழாய். மாலைவாய் * 347/3 இராக் காலத்தில்.

மாவல்லிக் கேணி 2416/3. மாவலத் தொருவன் * 958/1 மஹா பலிஷ்டனான ஒருவன். மாவலவன் * 1847/1 மா - குதிரையை நடத்த வல்லவன். மாவலன் * 2323/2. மாவலி * 1380/1 மஹாபலி. மாவளம் * 1298/3 பெரிய ஸம்பத்து.

மாவளரு மென்னோக்கி * 1657/1 மான் போலேயாய் பரப்பை யுடைத்தாய், மிருதுவான நோக்கை யுடையவள்.

மாவிகாரம் 3375/1 ... மாயோர் வல்லிரவாய் *. மஹத்தான விகாரம். மாவியம்புள் * 2544/3 மா – மஹானாய், வியம் – வியக்கத் தக்கதான புள் – கருடன். மாவிலங்கல் 1412/3 வெள்ளி ... *. பெரிய மலை.

மாவிளை வயல் 1718/3 விளை வயல். அது, மா-பெரிது. மாவினை 3770/3 கொடு ... *. மா வீடு 3098/4 எம் ... *. நிரதிசய போக்யமான மோக்ஷாநந்தம்.

மாவேகி 2250/2 ... ச் செல்கின்ற *. மா - குதிரை. ஏகி - ஏறி. மாழாந்து 3014/2 ... தேம்புநியால்*. ஒளி மழுங்கி. மாழை 1938/3 ... மென்னேக்கி *. இள மான். ... நோக்கு * 3051/4 அழகிய நோக்கு. ... மழை மான் * 1418/2.

மாள்வித்து * 2961/3. மாளாத காதல் 691/2 ... மருத்துவன் பால் *. நீங்காத அன்பு. மாளிகையும் மண்டபமும் 1077/1 மாட ... *. மாளிகை - மேல் மச்சுள்ள வீடு. மாடம் - வெறும் வீடு, மச்சில்லாத வீடு. மண்டபம் - நாலு பக்கமும் அடைப்பில்லாமல் திறந்த கட்டிடம் (?).

மாளிகைச் சாந்து 8/1 நல்லதோர் சாந்தம், கோயில் சாந்து. அரமனைச் சந்தநம், சிலாக்கியமான சந்தநம்.

மாளும் நாளது * 863/2 முடியும் நாளாய்த்து கிட்ட வந்து நிற்கிறது. மாளு மெல்லேக் கண் * 371/2 கடைசி காலத்தில். மாளுமோரிடம் * 2928/4 அந்திம தசை.

மாற்பால் மனஞ் சுழிப்ப* 2295/1 மால்-வியாமுக்தன், பெருமாள். அவனிடத்தில் மனம் சுழிக்க. மாற்றங்கள் 306/1 ... கேட்டு *. வார்த்தைகள். மாற்றங் கொண்டருளீர் * 3456/4 மறு மாற்றம் சொல்லீர்.

மாற்ற மாலே 3279/3 ... புனேந்து *. சொல் மாலே. மாற்றமுள 2022/1 ... ஆகிலும் *. மறு மாற்றங்கள் உள. மாற்றரசர்* 1278/1 சத்ரு ராஜாக்கள். மாற்றலர்* 89/4 சத்ருக்கள். மாற்றழிக்க வல்லான்* 488/7 பலம் போக்க வல்லன்.

மாற்றுண்மை * 3095/4 சாத்ரவம். மறுதலேயான ஆள். மாற்றுள், வேற்றுள் என்பது காண்க. மாற்றுதே 489/7 முன்னம் முன்னம் ... *. தடுக்காதே. 494/2 ... பால் சொரியும் *. தவிராமல் விடாமல். மாற்றுர் 494/6 ... உனக்கு *. சத்ருக்கள். மாற்றுனே 2641/1 ... வல்வினையை *. போக்கானே.

மாற்றிலி சோறிட்டு 369/1 பிரத்யுபகாரம் இல்லாதபடி சோறு போட்டு-துர்மாநிகளுக்கு இரா மடம் கற்பித்து. மாற்றி வந்து 1873/1 கல்லின் முந்நீர் ... *. அணை கட்டித் தகைந்து வந்து.

மாற்றுத் தாய் 310/1 சத்ருவான தாய், கைகேயி மற்றைத் தாய், மாறு ஒப்பாய், பெற்ற தாய்க்குப் போலியான தாய், மாற்றுந் தாய்.

மாற்றேல் 2642/1 மாலே படிச்சோதி ... *. மாற்றுதே. மாற்றேலைப் பட்டவர் 598/4 ... கூட்டம் *. மாற்றுகை – நீங்குகை. ஓலை – மாற்றப்படுகை. கைவல்ய நிஷ்டர். மோக்ஷத்தை அநாதரித்து கைவல்யம் புகுந்தவர்.

மாறன் 3340/3 மகிழ் மாலை மார்பினன் ... *. குடிப்பேர். ஆழ்வார்க்குத் திருநாமம். சத்துரு. மாறனில் மிக்குமோர் தேவு முளதே * 3022/4 மால் தனில் – மாறனில். மாருக 2603/3 ஓரைவரையே...*. எதிராக. மாருடி நினைப்பர் (?) மாற்றி நினைப்பர். 1/அவ. " ஸ்வ ஸ்வாமி பாவத்தை ... *, மாற்றி.

மாருத மலர்க் கமலம்* 1235/3 இடைவிடாத மலரையுடைய கமலம். மாருய தானவன் * 2399/1 எதிரியான ராக்ஷஸன். மாருளன் 3308/4 ... கவராத *. ஆண்பிள்ளை, பெரு மிடுக்கன், சாத்ரவ நிர்வாஹகன். மாருன் 2408/1 ... புகுந்த மால் தான்*.

மாறு கொண்டு 1151/1 ... உடன்று *. நான், மாறு – சத்ரு — என்று சொல்லிக் கொண்டு. மாறு செய்த 867/1 ... வாளரக்கன் *. எதிரிட்டுக் கொண்ட, மாறுசேர் படை * 3410/1 எதிரியாய் வந்து சேர்ந்த படை.

மாறு நிறைத்து 3600/1 ... இரைக்கும் சரங்கள்*. எதிராக நிறைத்து – வந்து குவிந்து. மாறும் பல் யாக்கை * 2130/1 மாறி மாறி வருகிற பல் யாக்கை. மாறென் றில்லா வாசம் * 1516/3 ஒரு மாறில்லாத பரிமளம். ஒப்பற்ற பரிமளம்.

மான் கொண்ட தோல் * 1518/1 மான் தோல். மான் பிணை * 276/3 மானின் பேடு. மான்றேர் * 989/1 ஒலி மாந்தேர் பார்.

மானங்கள் 3644/2 துயரஞ் செய் ... *. அபிமாநம், துர்மாநம். மானம் வேண்டோம் * 1872/1 நாங்களும் ஆண் பிள்ளைகள் என்கிற துர்மாநத்தை வேண்டோம்.

மான மணி 1728/2 மைம்...*, பெரு விலையனுன மணி. மானம் – பெருமை. அது பெரு விலையாயிருக்கை.

மானமரு மென்னேக்கி * 322/1 மானை விட்டு, இங்கே அமரும் படியாயிறே கண்ணழகு தான் இருப்பது. மானமிலாப் பன்றி * 614/2 மான அவமானம் தெரியாத பன்றி. மானவர் 1048/2 மாதவ ...*,

மநுஷ்யர்கள். மான வெண் குடை * 1277/4 பரப்பை யுடைத்தான வெண் கொற்றக் குடை. மானவேல்* 1372/1 இலை யகன்ற வேல்.

மானாங்காரம்* 3967/4 மஹத்து அஹங்காரம். ... த்திவை பத்து* 3967/4 மஹதஹங்காராதி ரூபமான பிரக்ருதி, அதைப் போக்குகைக் காகச் சொன்ன பத்துப் பாட்டு.

மாண(நா)விச் சோலை 3982/2 மஹா நவ மிக்கு அலங்கரிக்கும் சோலை. தந்நகரம் றன்னகரம் இரண்டும் வருவது காண்க.

மானிட சாதியர் 363/3 நாவிற் கொண்டழையாத ... *. பெரு தற்கரிதான மநுஷ்ய ஜாதியிலே பிறந்தவர்கள்.

மானுகர் சாரல் 1824/4 ... மாலிருஞ் சோலை*. மான்கள் தேனை நுகரும் சாரல். மானுரியதள்* 1935/1 மானில் உரித் தோல் - மான் தோல். அன்றிக்கே மா - மஹானான ஆனை. அதில் உரித்த தோல்.

மானை நோக்கி * 3883/1 மான் நையும் படியான நோக்கை யுடையவள். மான் நாணும்படியாய்த்து இவள் நோக்கு இருப்பது. நை - நையும் என்றதில் கடைக் குறைத்தல். மானோக்கம் * 2772/2 விலக்ஷணமான பார்வை. மான்போன்ற பார்வை.

மிக்க சீர்த் தொண்டர்* 1960/2 அநந்ய ப்ரயோஜநரான ஸ்ரீ வைஷ்ணவர்கள். மிக்க சுற்றம்* 1409/2 அளவிறந்த ஜ்ஞாதி வர்க்கம். மிக்க தாடாளன்* 1539/3 ஏற்றத்தை யுடைய திருவடிகளையுடையவன். மிக்கவன் 3517/3 வளம் ... *. பரிபூர்ணன்.

மிக்கவாதிப் பிரான் * 3337/4 தன்னுடைய ஐசுவர்யாதிகளால் ஸம்ருத்தனும் ஜகத் காரணமான ஈசுவரன். மிக்க வுலகுகள் 3361/1 ...தோறும்*. விஸ்த்ருதமான, ஸம்ருத்தமான லோகங்கள். மிக்க வேதியர் * 945/1 வேதியர் - பூர்வபாக நிஷ்டர். மிக்க வேதியர் - உத்தர பாக நிஷ்டர், அநேக சாகாத்யாயநம் பண்ணினவர். மிக்கனன் 3520/1 குணம் ... *. மிக்கவன்.

மிக்கார் 3106/3 ... வேத விமலர்*. அதிசயிதமான ஸ்வபாவர்கள். மிக்குள்ள பிள்ளைகள்* 481/2 எஞ்சின, அவசிஷ்டரான பிள்ளைகள்.

மிகப் பல வசுரர்கள் * 3921/3 மிகவும் பல அஸுரர்கள். மிக வெல்லை * 3277/1 முடிந்த எல்லை. மிகுத்திருக்கும் 1984/அரு. அவ. அதிகமாயிருக்கும். மிகுத்தாலும் 3042/ப்ர. (12) "விரோதி ... ", அதிகமானாலும், வலுத்தாலும்.

மிகுந்தேவு * 3024/2 ஈசுவரனோடே மசக்குப் பரலிடும் படியான தேவ ஜாதி. ஆட்டத்தில் மயக்கமுண்டாம்படி பரலிடுகையால் வந்த சொல் மசக்குப் பரலிடுதல். மிகுநரை யிலனே * 2900/4 மிக்காரை யில்லாதவன். மிகுநர் – மிக்கார். மிகு மதத் தேன்* 2351/2 மிக்க மத கரமான தேன்.

மிகை 434/4 ஓர் புள்ளி ... *. அதிகம். "சொன்ன ... யெல்லாம் பொறுக்கும்". ஏற்றம். 3187/ப்ர.

மிச்சில் 713/3 அடிசிலின் ... *. மிச்சம். மிசை 1194/3 மலரின் ... *. 1846/1 மலர் மிசை ... *. 3493/1 மண் ... *. மேலே.

மிடற்றுக் கழலை 2901/4 அடை அரு. "... போலே ஸர்வதா அநுவர்த்திக்கும்": கழுத்துப் புண்.

மிடறு 239/1 ... மெழு மெழுத்து *. கழுத்து. மிடறு பிடி (வா. மா. 16) "அவனுக்கு ... யாய்ப் போருவது". மென்னைப் பிடி, கழுத்துப் பிடி. மிடா (வா. மா. 190) "தேனமுதையும் ... வோடே ஸமர்ப்பித்து." தடா, அண்டா, கொப்பரை,

மிடி பட்டார் – கிலேசப் பட்டார். மிடியற – கிலேச மற. மிடியில்லை 3488/4 எனக்கு இனி யொரு ...". கிலேச மில்லை. மிடியன் ஸ்ரீ வ. பூ. 339. மிடுக்கு* 21/4 சக்தி.

மிடைந்த சொல் தொடை * 2975/3 நெருங்கின. மிடைந்தது 2309/2 ... பாரத வெம் போர் *. மிடைந்த மாலி * 779/3 கோபித்த மாலி. மிடைந்திட்டு* 1904/3 நெருக்கிக் கொண்டு. மிடைப் பட்டது – சிரமப் பட்டது, மிடிபட்டது. மிடைந்தவை 2140/2 ... மீண்டொழிய *. நெருங்கினவை, ஸம்மந்தப் பட்டவை.

மிடையா வந்த * 1514/1 ... வேல் மன்னர் *. திரண்டு வந்த. மிடைவது * 3803/3 நெருக்கப் பண்ணுவது, சிந்திப்பது, மிடைகை – நெருக்க மாதல், விசார மாதல்.

மிண்டர் * 885/4 மூர்க்கர். விழுக்கா டறியாதவர்கள், முன்னும் பின்னும் விஷய மறியாதவர்கள், நன்றி கெட்டவர்கள். மிண்டிப் புகுந்து * 17/4 நெருக்கிப் புகுந்து, முற்பட்டு மேல் விழுந்து.

மிதப்பு 3418/ப்ர. தெப்பம். "ஒரு ... ப் பெற்று தரிக்குமாப் போலே". மிதி 2056/1 ஒண் ... யில் *. அடி. மிதியடி 3419/2 "... யாம் படி ஸ்ரீ சடகோபனுக்கு." பாத ரக்ஷை,

மிலைக்க 2571/3 ஊரா ... *. கனைக்க. மிழற்ற 379/1 குமிழிக் கண்கள் ... *. நிரம்பா மென் சொல்லாலே ஆளத்தி வைக்க. மிளிர் கண்ணார் 929/2 அழ. நா. "குருடர்க்கு வைத்த அறச்சாலையிலே ... புகுரலாமோ". மிளிர் தந்து 2525/1 ... ஆங்கே *, மிளிர்ந்து.

மிளிர்ந்த கண் 2542/4 ... ணு யெம்மை*. மிளிர்ந்தால்* 2479/1 கயல் ... *. புரண்டால். மிளிருகை சலிக்கை. மிளிர்ந்தவை 2401/1 உயிர் மேல் ... யோ *. புரிந்தவை, திருப்பினவை. மிளிர்ந்து 472/1 ... மின்னும்*. ஒளி விட்டு. மிளை முயல் 1710/3 முயல் துளர் ... ...*. மிளை - சிறு தூறு, சிறு புதர். அதிலுள்ள முயல்.

மிறுக்கி யோஜிக்கிறுர் 3426/4, 3428/4 சி. அரு. (?). மிறுக்கு 3062/4 கோணை, பிரயாஸம். 3483/4 "இதில் கோணை யில்லை. ஒரு மிறுக்கில்லை". அநுபபத்தி. 3612/1 "... கின் கார்யம்." துக்கம். பீடை. மிறுக்குகள் 3612/1 "தேவ ஜாதி கிடந்த இடத்தில் கிடவாதபடி பல ... ளைப் பண்ணி." 3469/1 "கிட்டி நின்று இவர்களை சில ... ளைப் பண்ணப் புக்கான்". நிஷ்டுரோக்திகளை.

மிறுக்குப் பட்டு 3217/4 "... நிற்கும்". கிலேசப் பட்டு. "... ப் படா நின்றேம்." 1270/3 பீடை படா நின்றேம்.

மிறுங்கன் (?). "சொல் ... ணை திருவடியும்", அநுபந்தம் பார். மிறை 3612/2 பல செய் ... *. பீடை. செய் மிறை – செய்யப் பட்ட பீடை. 1002/2 கொடு ... க் கஞ்சி *. ஹிம்ஸை. மிறைத்து 263/1 விரும்பித் தொழ ... *. ஆதரித்து.

மின் குலா மருங்குல் * 1146/3 மின் போலே வளையா நின்றுள்ள இடை. மின்கொள் சேர் புரி நூல் * 3461/1 மின்னை வென்று திரு மார்வுக்குச் சேர்ந்திருந்துள்ள யஜ்ஞோப வீதம். மின் கொள் நேமி *, 770/3 மின்னு நின்றுள்ள நேமி.

மின்மினி பறவா நின்றது 3190/3 வெறியோடுகிறது. கண் வெறித்துப் போகிறது. மின் மினி – மின் மினிப் பூச்சி. கண் பூச்சி பறக்கிறது. நன்றாகத் தெரியாததால் பூச்சி பறப்பது போலுள்ளது என்று பொருள்.

மின்னியல் மேகம் * 97/3 மின்னை இயலாக ஸ்வபாவமாக உடைய மேகம். மின்னை யிரு சுடரை 2866/1 மின் – பெரிய பிராட்டியார். இரு சுடர் – திருவாழி திருச் சங்கு.

மினுக்கம் 1474/1 (?) மேன்மை (?). மினுங்க 638/4 வன மாலே ... *. விளங்கும்படி. ... 3523/3 (24) "ஐசுவர்யம் ... அவன் கிடந்த தேசம்." பிரகாசிக்க. மினெளி 3232/3 வெம் ... வெயில் *. பேய்த் தேர், மிருக திருஷ்ணிகா.

மீட்சி 3340/4 ... யின்றி வைகுந்தம்*. திரும்புதல். மீட்டு 404/1 உயிர் ... *. மீட்டும் 357/2 ... மதுண் டுமிழ்ந்து *. பின்னேயும், மறுபடியும், திரியவும், திரியட்டும். மீண்டேயும் 692/3 எறி கடல் வாய் ... *. மீண்டும் ஏயும் - வர்த்திக்கிற.

மீதளிப்ப 494/1 எதிர் பொங்கி ... *. மேலே வழிய/யும் படி. மீதிட்டு 2578/8 ... ப் பச்சை மேனி *. ஸ்பர்த்தித்து. போட்டி போட்டுக் கொண்டு. மீதியன் 3020/2 எண்ணின் ... *. மேற் பட்டவன். மீதினில் 2672/3 இரு சுடர் ... இயங்கா *. மேலே.

மீதூர்ந்து 3264/ப்ர. "ஆற்ருமை ... ". மேலிட்டு. மீதூர 2035/4 வேட்கை ... *. அதிசயிக்க. 3009/3 நோயும் பயலேமையும் ... *. மீபாரம் 1525/1 மண்ணின் ... *. மேல் பாரம். மீபால் 3706/3 ... நின்ற வெம் பெருமான் *. மேலேத் திக்கில்.

மீமிசை 1266/2 உந்தி மாமலர் ... *. மேலே. மீமிசை யண்டம்* 1050/3 பரம பதம். மேலுலகம். மீமீது 633/1 ... ஆடா வுலகத்து*. மேன்மைக்கு மேல். மீ மீது இரண்டுக்கும் மேலே என்று பொருள்.

மீள்வில்லே * 3238/3 மீட்சி யில்லே. மீள்விலாத போகம் * 863/4 மீட்சி யில்லாத, இடையூறில்லாத, பின்வாங்காத கைங்கர்ய போகம். மீள்வு - மீட்சி. மீள 65/2 ... அவன் மகளே *. மீண்டும்.

மீளாத் துயர் * 691/3 நித்ய துக்கம். மீளா வடிமைப் பணி * 3861/2 இடையருத கைங்கர்யம்.

மீளி 3624/2 ஆண் திறல் ...*. ஸிம்ஹம், மிருத்யு. மீளியம்புள்* 3623/3 மீளி யென்று ஒரு சொல்லாய் வலியுடைய பெரிய திருவடி. மீளி அம் புள் - பிரதிகூலர்க்கு மிருத்யு போலேயாய் அம் அழகான புள். மீளி வலியும் மிருத்யுவும்.

மீன்படு குட்டம் 3050/ப்ர. "ஸமுத்ரம் தன்னே ... மாக அறிகிற தில்லே". மீன் உண்டாகும் குழி. படுதல் உண்டாதல், குட்டம் - குழி. ஸமுத்ரத்தை மீன் குழியாக அவமதித்துச் சொல்லும் சொல்.

மீனேக்கு நீள் வயல்* 690/1 கடல் வற்றினாலும் நமக்குப் புகலிடம் இதுவே என்று மீன் நோக்கி யிருக்கும் பெரிய வயல்.

முக்க 3084/4 "புறம் போய் மண்ணை ... வே." தின்ன. முக்கணம்பி * 1068/3 முக் கண்ணனுக்கும் நம்பி – அந்தர்யாமி. முக்கணன் * 804/1 முக் கண்ணன். முக்காலைக்கும் 1474/3 அரு. இறப்பெதிர் நிகழ் மூன்றிலும்.

முக்கி 2653/2 முகம் சிதைவராமன்றே ...*. வருந்தி, சிரமப்பட்டு. முக்கியம் 279/1 ... த்தை முடிப்பான் *. 3448/2 முடித்துக் கொண்ட ... மும் *. வேண்டப் பாடு, பெருமை. முக்குணம் * 2672/17 ஸத்வம் ரஜஸ் தமஸ் என்ற மூன்று குணம். முக்குவார் 967/1 "கர்ப்ப கேதத்தாலே ... ரைப் போலே."

முக்கைசு 1648/1 பைதல் பார். கைசு பார். மூன்று சிருங்கை. முக்கோட்டை 3276/3 "பாடுவித்த ... இருக்கும்படி" எல்லார்க்கும் கவி தோற்றுவிக்கும் விநாயக ஸ்தலம் (மலையாளத்தில்). 3961/4 பாடுவித்த ... பிறே. மூகாம்பிகா க்ஷேத்ரம். முக்கோட்டை பார்.

முகக் கமலம் * 1183/3 முகத் தாமரை. முகக் கொள்ள 3423/4 "... வொண்ணாத" பரிச்சேதித்து க்ரஹிக்க.

முகங் காத்த மலை 271/2 நாரணன் முன் ...*. வர்ஷ முகத்தைத் தகைந்த மலை. முகச்சுளிப்பு 1740/4 அரு. "அவனுக்கு ... வாராதோ" அஸம்மதி. முகச் சோதி 3121/1 ... யாய் மலர்ந்ததுவோ *. முகக் காந்தி. முகஞ் சிதைவர் 2653/2 ... ராமன்றே *. முகம் கீழ்ப் படுவர், சிதைந்த முகமாயிருப்பர். முகஞ் செய்கை (?). அரு. தேஜஸ்ஸு ஒரு முகமாயிருக்கை.

முகட்டுச்சி 982/3 சேய் ... *. சிகரத்தின் மேல் பாகம். முகடு – உச்சி. 2827/1 மலை ...*. முதுகு பாகம். முகடுருவ வளர்ந்தது. 963/3 "ஆகாசத்திலே ... ததால்". ஸாந்த்ரமாக – நெருக்கமாக.

முகத்தலை 3768/1 "... யறிந்து உடுத்துதல்" தலைப்பு அல்லது கரை. வேஷ்டி புடவைகளில் முகதலை என்கிறோம். முகத்தன 518/4 ... கண்க ளல்லவே *. முகத்திலுள்ளவை.

முகந்து கொடு 477/2 ... ஆர்த் தேறி *. கிரஸித்துக் கொண்டு, மொண்டு கொண்டு. முகந்து கொண்டருளிச் செய்யும்படி 3521/4

மண்டி அநுபவித்துக் கொண்டு பேசுகை. "எம்பார் அருளிச் செய்யும் போது ... கேட்டறிகை யில்லையே".

முகந் தெழு பானை 3406/4 " ... யான நிரவதிக ஸம்பத்து". ஏற்றப் பானை, ஏற்றச் சால்: உத்தரோத்தரம் அபிவிருத்தமாய் வருகிற ஸம்பத்து.

முகப்படாம் (?) முக மூடி. " கொல்லு மானைக்கு ... ". முகப் பட்டம். (முக படாம்) 538/3 முகத்தை மறைக்கும் சோடு. முகப்படாய் 3573/2 முன் செய்த வினையே ... *. முகம் தோற்ற நில்லாய். முகப் பழக்கம் 3451/1 ப்ர. (?). முகப்பு 3798/4 கண் ... பே*. எதிர், முன் பாகம். 1/அவ. " முகப்பிலுண்டான ஸௌந்தர்யம்." முகப்பே 3721/2 ... கூவி *. கண் வட்டத்திலே. முன் புறத்தில்.

முகம் பண்ண வேணுமோ 3042/3 அலங்கரிக்க வேணுமோ. நரஸிம்ஹ முகமாய் வரவேணுமோ என்று பொருள்.

முகம் பழகின 3462/ப்ர. 3959/3 (?). முகம் பனி படைக்கும் 1183/4 முகம் துக்கத்தை யடையும். பனி கண்ணீராய் துக்கம். முகம் பெறுகை 3169/2 (?) "பாரியை பக்கல் ... க்காக.

முக மாளிகை 1183/3 துங்க ... *. முகத்தை யுடைய மாளிகை, முன்புறம். முக வொளி * 3470/4 ... திகழ.

முகவணைக் கல் 2703/1 "... ஏற்றுவாரைப் போலே". போதிக் கல், தூண் மேலுள்ளது. முகவரை 1/4 " எல்லாப் பாட்டுக்கும் இது தான் ... ". நாயகக் கல் போலே பிரகாசமா யிருக்கும்.

முகவுரை 1/4 " எல்லாப் பாட்டுக்களுக்கும் ... ... ". வருஷம் மாஸம் எழுதுவது. பத்திரிகைகளில் முன் சொல்லும் மங்களம்.

முகில் கணம்* 710/2 மேக ஸமூஹம். முகிலின் பவளம் 3795/4 பளிங்கு நீர் ... *. மேகம் பூத்த பவளம். நீலமேக மூர்த்தியின் சிவந்த உதடு. முகில் கன்று 185/3 ... போலே *. சிறு மேகம். முகிழ்தர 3715/2 சோதிச் செவ்வாய் ... *. முகுளமாக, மொட்டிக்க. முகிழ் நகை 28/4 ... யிர் *. மந்த ஸ்மிதம். முகிழ் நிலா 2772/1 ... வந் தரும்ப *. இள நிலா. முகிழ் முலை 26/4 ... யிர் *. குவிந்த முலை.

முகை 1722/3 ... யோடும் *. கரு முகைப் பூ. முசிக்கை 9/1 "திருவரையிலே ...யாலும்" நலங்கப் பண்ணுகை, நசுங்கப் பண்ணுகை,

கசக்குகை. முசித்தேன் 1034/4 (?) இலேசித்தேன். முசிந்த ஆடை 500/5 " அவனுடுத்து ... ". கசங்கின ஆடை: முசிப்பு 3548/4 (9) " ... பாலே அக்தோ என்கிறார்." அத்ருப்தி. முசியாத 3092/2 " ... அத்விதிய காரணம்." சோம்பாத.

முசு 1543/1 ... வும் படையா*. முசுக்கணங்கள்* 272/3 கோலாங்கூலம். மாட்டு வால் போன்ற வாலுள்ள குரங்கு. கொண்ட முசுரு. மலைக் குரங்குகள்.

முசுகு 3127/2 " ... வாலெடுத்தாப் போலே." கிளர்ந்து. முசு, கொண்ட முசுரு.

முட்குத்து நிலம் 3171/2 கோல் குத்து நிலம், ஊசி குத்து நிலம். முட்கோல் 3171/2 தாற்றுக் கோல், தாற் குச்சி. " ... லாலே சாடி" " அம்பும் தாற்றுக் கோலும் ".

முட்டப் போக மாட்டாதே 3429/ப்ர. ... ச் சொல்ல மாட்டார். முட்டாணி (வா. மா. 442) (?) " அவிவேகம் ... யாகவும்."

முட்டி 971/2 " தம்மில் ... ". தாக்கி. 3466/3 வார்த்தை ... நிருத்தரனு யிருந்தான்." 2562/1 " இருளோடு ... ". கிட்டி முட்டில் பல் போகம் * 3222/1 நித்யமான போகம். முட்டிலன் 3221/4 யானொரு ... னே *. விலக்கிலன். தடையிலன். முட்டு – தடை.

முட்டுப் படக் கடவது 3222/1 "தட்டுப் பட ..." தடைப் பட ... முட்டுக் கட்டை என்பது போல.

முட்டுப் பொருது 3333/1 " அர்த்தம் ... ". முட்டுப் பொறுக்கும் 2583/4 " ஆசிரயிக்கைக்கு ... ம் அத்விதிய பர தேவதை இவனல்ல தில்லை". " ... த்து நின்ற ருத்ரன்" 3332/2. ஸமர்த்தத்வேந நின்ற சிவன். முட்டை 1938/4 கோழி வெண் ... *. முட்டைக் கோட்டை* 3326/2 ஜக தண்டமாகிற கோட்டை.

முடக்கி 709/2 ... ச் சேவடி *. மடக்கி. முடிக் கடவுள்* 1819/2 கிரீடாதிபதியான பகவாந். முடிக் கோலம் * 2996/2 அழகான முடி. முடி கூடிற்றில * 287/1 முடியும்படி சேரவில்லை. முடிச் சோதி * 3121/1 முடித்து 3120/4 அணைவிக்கும் ... தே *. போக்கி. முடிந்த அதிகாரிகள் 433/ " ... பிராட்டியும் நித்ய ஸூரிகளு மிறே": ஸர்வோத்தரமான அதிகாரிகள்.

முடிபாத மெழ * 3594/3 முடியும் பாதமும் ஒக்க எழ. முடி புல்கு நெடு வயல்* 1715/3 காத்து முடிகளையுடைய பரந்த வயல்.

முடியன் * 178/4 முடியை கிரீடத்தை யுடையான். முடியான் * 2328/3. முடியினன் * 3126/3. முடி யொன்றி * 312/1 திரு முடி சூடி. முடி வட்டம் * 2294/2 நீண்ட ... *. கிரீடம். முடிவது 2383/4 அருள் ... ''. பெறுவது.

முடிவில்லது 935/3 ... தோ ரெழில் *. அவதி காண வொண்ணு தது. முடிவிலி/லீ * 3998/4 அபரிச்சேத்யனவன்.

முடுக்குத் தெரு 538/2 குறுந் தெரு. ஸ்ரீரங்கத்தில் மேல முடுக் குத் தெரு கீழ முடுக்குத் தெரு உண்டு. " மாலாகாரருக்கு ... வி லே யிறே அகம்."

முடுகிக் கொடு நிற்கையாலே 2545/அவ. " அது ...". 2558/அவ. " இருளும் போய் ... ". 3665/2 " சிசுபாலன் ஸ்வயம் வரத்துக்கு ... கின தசையிலே". 3314/1 " சிறுக்கன் மேலே அவன் ... கின வாறே". துணிந்தவாறே. 3634/அவ. " சத்ருக்கள் வந்து ... வாறே". நிறைந்த வாறே என்னலாம். முடுகுதலும் 265/3 இளஞ்சியம் தொடர்ந்து ...*. கிட்டப் புகுந்த வளவிலும்.

முடை 1528/3 ... யடர்த்த சிரம் *. துர்க் கந்தம். முடைக் கலம் 2563/2 ... த் தூண் *. துர்க் கந்தியான கபாலம். ... நாற்றம் 3628/3 " வெண்ணெயிலே ... ". சிக்கு நாற்றம் முதலியவை.

முண்டத்துக் காற்று 105/2 ... முகில் வண்ணுவோ*. கையிலுள்ள கபாலத்துக்குப் போருகிற தில்லை. முண்டம் தலையோடு.

முண்டர் 879/1 சமணர் ... *. சைவர். தலை மொட்டை யடித்துக் கொண்டிருப்பவர். முண்டன் 822/3 ... னீறன்*. ருத்ரன். ஜடாதாரியா யிருக்கையில் முண்டன் எப்படி? முண்டியான் 2050/2 ... சாபம் தீர்த்த*. தாபஸ வேஷத்தையுடைய ருத்ரன். தாபஸ வேஷம் ஜடா தார ணம். இங்கே முண்டியான் என்பது எப்படி?

முத்தக் காசு 2954/4 " ஸ்ரீ வராஹ நாயனார்க்கு ... ". கோரைக் கிழங்கு. முத்தப்பன் 3481/2 பொன்னப்பன் ... *. முத்துப் போலே போக்யன், உபகாரகன்,

முத்தம் தா 245/4 குட்டனே ... *. முத்தம் அதரம், உதடு. முத்தன்ன வெண்முறுவல் * 550/2 பல். முத்தனார் 866/3 ... முகுந் தனார் *. முத்தார் கொங்கை * 232/2.

முத்தாறு 1547/1 மணி ... *. முத்துக்களை யுடைய ஆறு. முத்தி 330/4 ... னற்றலாகுமே *. பகவல்லாபம். ... 1919/2 உச்சியில் ...* மோக்ஷ, முத்தமிட்டு. முத்தி(தீ) மறை * 2277/2 ... யாவான் *. மோக்ஷத்தைச் சொல்லும் வேதம். முத்தீ யென்று பாடமாகில் மூன்று அக்நியைச் சொல்லும் வேதம்.

முத்திறத்து மூரி நீர்* 833/2 மூன்று விதமான நீருக்கு இடமான கடல். மூன்று விதமாவது - ஆறு, ஊற்று, மழை. மூரி - இடம். முத் திறத்து வாணியம் * 819/1 மூன்று விதமான வாணியம். ராஜஸ தாமஸ ஸாத்விக ரூபமான தேவதைகளை ஆராதித்துப் பெறும் பலன். வாணியம் - பலன். முத்திறம் 481/2 நந்தகோபர்க்கு ... உண்டே." ஆட்டுத் திறம், மாட்டுத் திறம், எருமைத் திறம் மூன்றுவிதமான மந்தை

முத்தின் குப்பாயம் * 640/3 முத்துச் சட்டை. முத்தின் பவளம்* 77/1 முத்தும் இனிய பவளமும். முத்தி னிள முறுவல் * 689/3 முத் துத் தோன்றும்படி இனிதான இள முறுவல் - மந்த ஸ்மிதம். முத்தீ 2672/13 மூன்று அக்நி. கார்ஹபத்ய ஆவஹநீய தக்ஷிணாக்நிகள். முத்தீயர் * 1221/3 ... நால் வேதர்*. மூன்று அக்நிகளையு முடையவர்.

முத்துக் குவை * 1638/2 முத்துக் குவியல். முத்துடைத் தாமம்* 561/2. முத்துத் தாமம் * 935/3 முத்துமாலை, முத்து வடம். முத் துப் பட்டது 2953/4 முத்து உண்டாயிற்றது.

முத்துப் பந்தல் 919/2 ... விரித்தாற் போலே". முத்தாலான மேற் கட்டி. முத்துலை யிட்டு 2348/4 "... க் கொண்டு". இவள் நலியா நின்றாள். முத்துலையிடுகை - ஒன்றை மூன்றாகப் பெருக்கிச் சொல்லுகை.

முத்து வடம் 269/3 ... பிறழ *. முத்து மாலை. முத்தூண் (வா. மா. 327) "... ணிட்டுக் கறக்கிலும் பசலுக்குப் பாலன்றோ வேண்டு வது". முத்தூணுவது முக்காலி. அதன் மேல் பாத்திரம் வைத்துக் கறக்கை. முத்தொளி மரதகம் * 2041/3 முத்தின் குளிர்த்தியும் மர தகத்தின் சியாமளத்தையு முடையவன்.

முதல் கெடல் 2923/2 அமைவுடை ... *, ஸ்ருஷ்டியும் ஸம்ஹார மும். முதல் சாய்த்து * 3370/2 வேரோடே பறித்து.

முதல் தனி 3998/2 ... யுன்னை *. பிரதாநமாய் ஒப்பில்லாதது. முதல் தனி வித்து* 162/1 த்ரிவித காரணமானவன். 3997/4 ப்ரதம ஸுக்ருதம். 3998/1 காரணம். முதல் பத்தர் 3651/3 தூ ... *. பிரதாந பக்தர்கள். முதல் முன்னம் 3036/4 அடைந்தேன் ... *. முதலுக்கும் முன்பே. 532/4 " எங்கள் பரியட்டத்தை ... தா ". முந்துற முன்னம், முதலில். முதல் மூர்த்தி* 1829/2 பிரதாந மூர்த்தி. முதல் வித்து* 3776/2 பிரதாநமாயுள்ள உபாதாந காரணம்.

முதல் விரல் 1048/1 " திவ்யாயுதங்கள் ஆபரணங்களுக்கும் அழகுக்கும் ... லாயிற் றிருப்பது." முத லெண்ணு யிருக்கை.

முதலடி 2899/அவ. முழுச் சொல்லு. காரியத்துக்கு முதலடி. ஸாதந தசை. முதலடி யிடாத லௌகிகர் 3123/அவ. " நம் பக்கல் ... ". பழக்க மில்லாத என்று சொல்லத் தகும். முதலப்பன் 3651/3 வாய் ... *. ப்ரதாந பந்து, காரண பூதனான உபகாரகன். முதலரிய வல்லார் * 1097/4, 2081/4 ஸவாஸநமாகப் போக்க வல்லார்.

முதலாம் 3088/3 வீடு ... *. ஹேதுவாகும். முதலா முற்றும் 2941/1 உயிர் ... *. ஞதலான எல்லாம். முதலாய நல்லான் * 2096/2 காரண பூதனான அறவன். முதலாயோர் 1102/1 சமண் குண்டர் ... *. முதலானோர். முதலார்கள் 1453/3 ... ளுமறிவரு நிலை *. பிரதாநர்கள். முதலாளி 1142/அரு. " ... பட்டபடி ". முதலிகள். " திருவாசல் காக்கும் ... ". அதிகாரிகள், ஸ்வாமிகள்.

முதலிட்டு 2999/அவ. "... நடுவிட்டு, முடியிட்டு". முதலில், நடுவில், முடிவில் என்று பொருள். முதலியார் (?) அடிகள், ஸ்வாமிகள் முதலித் தனம் 3467/4 பெருந்தனம்.

முதலில கேடில * 2922/2 முதலுமில்லை, முடிவுமில்லை. முதலுறவு 3145/2 " ... பண்ணும் கண் ", 3627/1. முதலொரு வீடு 1989/1 ... மறியாதே *. முதலும் முடிவும்.

முதிர் சுவை 3037/1 யாழ் நரம்பின் ... *, பண் பட்ட ரஸம். முதிர் மாலை 2550/2 சுர ... *. முதிர்ந்த மாலையான ராத்ரி. முதிராத இன் சொல் * 1225/3 மழலைச் சொல்.

முதுகம் 364/1 ஆமை ...*. முதுகு. மூது கயம் 1693/1 ... தீப்பட *. கடல். முதுகிற் பெய்து 272/3 ... தம்முடைக் குட்டன்களை *. முதுகிலே கட்டிக் கொண்டு.

முதுகிட்டார் 3249/2 முதுகு காட்டி ஓடினர். முதுகிலே இடப் பட்டார். முதுகுன்று* 1165/1 பழைய மலை. முதுகோடே போம் 3165/ப்ர. திங்கு வரும். முது புணர்ப்பு 2435/2 பிரதாநரான விஷ்ணு. மூவராய் நின்ற் பார். முது பெண் * 308/3 நலிகையில் முதிர்ந்த தாடகை.

முது மணற் குன்று* 115/1 உயர்ந்த மணற் குன்று. முது மதிள்* 2046/1 வலிய மதிள். முதுமை 3477/2 இளமை ... *. வார்த்தகம். கிழத்தன்மை.

முந்தி 1336/3 ... நிற்றிர் *. 1582/2 ... ச் சென்று. முன்னே. முந்திரிகை நிலம் 3231/1 அல்ப்பம் நிலம். முந்திரி மாகாணி என்பது. முந்திரிகைப் பழம் 3917/4 திராக்ஷைப் பழம். முந்து நூல் * 1494/1 முன்பே பழசாய் அபௌருஷேயமாய்ப் போருகிற வேதம். முந்துற்ற நெஞ்சம்* 2585/1 முற்பட்ட நெஞ்சு. முந்துற முன்னம் 3697/4 (?) முதல் முதலாக.

முந்தை 710/1 ... நன்முறை *. தொன்று தொட்டு வருகிற. முந்தைத் தாய் தந்தை* 3413/2 முதலிலுண்டான மாதா பிதாக்கள். முந்தையர் 2300/4 ... ராய் நிற்பர் *. முற்பாடர். முந்தை யாயிரம் * 3505/3 பழையதான ஆயிரம்.

முந்நீர் 1488/1 ... கடைந்தும் *. ஆற்று நீர், ஊற்று நீர், மழை நீர். முநீர் 1816/3 ... அமுது தந்த *. முந்நீர்.

முப்பத்து மூவரமரர்* 493/1 முப்பத்து முக்கோடி .... அஷ்ட வசுக்கள் 8, ஏகாதச ருத்ரர் 11, துவாதசாதித்யர் 12, அசுவிநி தேவர்கள் 2 ஆக 33. முப்பதாறு 755/1 மூன்று ... றிரேடு *. முப்பத்தாறு. முப்பது வட்டமும்(?) "...வரவேணும்". முப்பது நாழிகைக் கொரு வட்டம்

மும்மதப் புனல் 86/2 படு ... *. கன்னம், தலை, லிங்கம் - மூன்று இடங்களில் ஒழுகும் மத ஜலம். மும் மதிள் 2672/3 ... இலங்கை*. காட்டரண், நீரரண், மலையரண் என்று மூன்று விதமான மதிள்.

மும்மை 1985/4 பெரு நீரின் ... *. மும் மடங்கு. முயங்க 3755/2 ... மொய்த்து *. கட்டிக் கொள்ள. முயங்கமர் 2089/2 ... ருள் *. தனி யிடமல்லாமல் ஜநங்கள் நெருங்கி யிருக்கும் யுத்த பூமி. முயங்கிய 1150/3 சண்பகம் ... முல்லை*. தழுவின, கட்டிக் கொண்ட. முயங்கும் 2381/2 ... கார் *. ஸம்ச்லேஷிக்கும்.

முயல் 3114/2, 3346/4 ... லாழி*. முயலுகை - யத்நம் பண்ணுகையும் உத்ஸாஹிக்கையும். ஸர்வேசுவரனிலும் ஆசிரித ரக்ஷணத்திலே முயலா நின்றுள்ள திருவாழி.

முயல்கிற்பார் * 2130/2 யத்நம் பண்ணுவார். முயல்மினோ * 2272/2 முயலுங்கள். முயலாதேன் * 2933/4 கோலாத நான். ப்ரவ்ருத்தி செய்யாத நான். முயலுகை - ஒருப்படுகை.

முயலாலு மிளமதி * 1205/3 முயல் ஆலுகிற சந்திரன், சந்திரனுடைய இளமையிலும் முயல் ஆலா நிற்கக் குறையில்லை. ஆலுகை- துள்ளுகை. முயலின் 3291/4 அணிய ... *. முயன்றிடில்.

முயற்றி சுமந்து* 2585/1 முயற்றி - உத்ஸாஹம். அதை சுமந்து- வஹித்து, ஏற்று. முயற்றிய வாய் * 2669/1 முயற்சியுடையனவாய்க் கொண்டு.

முரசங்கள் * 3233/2. முரசு* 917/3. முரசம். அம் சாரியை. முரட்டு வடிவு 1075/4 "ஹிரண்யனுடைய ...". முருட்டு என்றும் உண்டு. "முருட்டுடல் ...". 3955/2 ஹிரண்யன் விஷயமாகவே இத் தொடர். வல்லினமும் காண்க. அரக்கர் அனைவரிலும் அவனொருவனே தடியன், பரியன்.

முரண் 2140/3 ... அழிய *. மிடுக்கு. 2116/4 படைத்த ... *. பிராதிகூல்யம். முரணையவன் 1901/1 ... னையுகிரால் *. மிடுக்கன், முரணைவலி 117/1 ... தொலைதற்கு *. விபரீதமான பலம் - முரணவலி என்றும் பாடம். முரண்பட்ட பலம், தகாத பலம். அதாவது, அஹங்கார மமகாரங்கள்.

முரல் 3209/3 வண்டு ... திருவேங்கடம் *. முரல்வன 499/3 நடுங்க ... *. சப்திக்கின்ற.

முரன் 67/3 தேனுகனும் ... னும் *. முர ராக்ஷஸன். முரன்று 1148/3 இன்னிசை ... *. முரலி. முரனாள் 2359/2 ... வலம் கழிந்த *. முராஸுரனுடைய நாள் - ஆயுஸ்ஸு.

முரி 1471/1 அணை. "... க்குக் கிழக்குப் பட்ட நீர்". முரி திரை 1118/2 ... மா கடல் *. அசைகிற அலை. முரிந்த சிலை* 2483/1 வளைந்த சிலை. முரியேறு * 2330/3 உலாவுகின்ற ஏறு.

முருக்கமலர் * 506/1 பலாச புஷ்பம். பலாசம் - அரசு. முருக்கிதழ் வாய் * 1937/3 அரசம் பூப் போன்ற உதடு. முருக்கிலங்கு கனித் துவர்வாய் * 1505/1.

முருக நின்று 637/அவ. "... நலிந்தவை சொல்லி". முருகும்படி நின்று. முருக நின்று என்றே பொருள். முருகன் 1607/1 திறல் ...* ஸுப்ரமண்யன். அழகன். முருகு - அழகு. முருகு 1372/4 தேனின் வாய் மலர் ... *. தேன். முருகு வண்டு * 1769/2 தேனைப் பருகும் வண்டு. முருகு 3473/ப்ர. (?) "... கொளுந்தினபடி". நாற்றம் கொளுத்துகிறது — என்பது போல. முருகு, வரை முருகு வறுத்த வஸ்துவின் மணம். தோசை வடை முருகச் செய்தல், முருகியிருத்தல்.

முருங்கையில் தேன் * 1933/4 குச்சிபோல் நீளமான காயுள்ள மரம். அதில் தேனுண்டு போலும்! முருக்கு - பலாசம், அரசு, மூன்றில் முருங்கை என்கையாலே வீட்டின் முற்றத்தில் வளரும் முருங்கை வேறு. முருக்கு மரம், பலாசம் வேறு.

முருடு 3084/4 "முருட்டுடம்பு" முரடு முருடு இரண்டும் ஒரே பொருள். கரடு முரடு என்னுமது. 3809/2.

முல்லைப் பிராட்டி * 600/1 அம்மா முல்லைக் கொடியே! முல்லைப் பிள்ளை * 1364/3 பிள்ளை பெண் பிள்ளையாய், அது போன்ற கொடி. முல்லைக் கொடி.

முலை 2673/1 "... யாவது காந்தன் டடுகாடு கிடக்கு மிடம்". 2756/1. முலைக் கடுப்பு 2899/2 ஸ்தந பீடை. முலைக் கால் விட முண்டவேந்தன் * 2433/2 கால்-வழி. முலைக் குவடு 2099/3 முலையாகிற மலை. ஸ்தம்பம் என்றும் வியாக்யாநம். ஸ்தம்பம் போலே பிடிக்கையாலே. முலைத் தடம் * 1504/1 முலைப் பிரதேசம்.

முலைத் தலை * 164/1 முலைக் காம்பு. முலை நோக்கம் 1865/2 ... ஒழிந்து *. முலை பேணுதல், விரும்புதல். முலைப் பாவைமார் * 1810/1. முலை போந்திலாதோம்* 519/1 ஸ்தநம் உண்டாகப் பெற்றிலோம். போக யோக்யதை உண்டாகப் பெற்றிலோம். முலை மடவார் * 1147/3. முலை மடவாள் * 1281/1.

முழக்கு 3982/3 அலை கடல் ... *. முழக்கம். முழங்கழலெரியம்பு 1693/1 முழங்குவதாய் நெருப்பு எரிவதாயு முள்ள அம்பு.

முழங்கைத் தண்ணீர் 2478/2 "ஈசுவரனும் ஒரு ... ரும் என்று இருந்த காலம்". அவசிய மில்லாமையைக் காட்டுகிறது. 2081/4, 3648/4 ஒருவன் தண்ணீர் குடிக்கையில் அவன் முழங் கையில் வழியும் தண்ணீர் நிஷ்ப்ரயோஜனம்,

முழங்கொளி முகில் * 2041/3 இடியும் மின்னலுமாயுள்ள மேகம். முழஞ்சி 449/2 முழை. முழஞ்சு 285/2 குழல் ... *. துவாரம். குழல் முழஞ்சு பார். முழைஞ்சு வேறு.

முழந்தாள் 26/4 ... இருந்தவா *. முழங்கால். முழவ் 259/2 அந்தர ... *. முழங்க. முழவம் அதனுடைய செயல் முழக்கம். முழவம் 925/1 யாழ் குழல் ...*. பெரு வாயன், பெரிய மத்தளம், மத்தளி, முழவம் ஓசை யென்று நஞ்சீயர் வியா. முழவு 3294/2 ... வின்கிழ்*. முழாவுகிற ஆயுதாபரணங்கள். (அர்ச்சி. 3) முழங்குகிற.

முழுக்க 516/2 " எங்களை ... ப் பார்க்க வல்லே". முடிக்க. முழுத்துதல் ஆழத்தில் அழுத்துதல். 3957/ப்ர. (12) "திருமேனி ...". முழுதும். முழுக்காட்ட 493/8 " ... வேணும்" பூர்ணமாக ஸ்நாநம் பண்ணி வைக்க வேணும் முழுக்கூட்ட வேணும் — என்றிருப்பது பிழையாகும்.

முழுக் காயாக 959/1 " ... செத்துக் கிடந்தது". 496/4 "... அவிந்து கிடந்தது". எல்லாருமாக. 3315/4 மெத்திட்ட காயாக.

முழுசா 1880/4 "... முகத்தைப் பாரா." முழுமனக. முழுசாதே 735/2 தழுவாதே ... *. தழுவுதலும் முழுசுதலும் ஒன்றே. முழுசி 631/1 தழுவி ... *. 3365/2 " ... ன வாறே". முட்டினவாறே.

முழுதகலும் 1447/4 கொடு வினைகள் ... *. ஸவாஸநமாகப் போகும். முழுதியன்றாய்/ன் * 3128/2 எல்லாவற்றையும் நிர்வஹித்தான். முழுதுடன் மாள * 3706/2 எல்லாம் போம்படி.

முழு நோக்கு 495/7 " ... ப் பொறுக்குமவள்". முழுமனக 496/4 முழுக்காயாக என்பதன் பொருள். எல்லாருமாக. பருமன் தடிமன் போல முழுமன் - முழுதும், எல்லாம்.

முழு முதல் 2973/1 ... ஆகிய ஆதியை *. எல்லாவற்றுக்கும் ஹேது. முழு முதலான்* 2972/4. முழு முற்றும் 2537/1 போந்தில* பூர்ணமாக. மீமிசையால் மிகுதியைக் காட்டுகிறது. முழுமுற்றுறு வாழ் பாழாய்* 3998/3 முழுதிலும் எங்கும் உறுகிற வியாபிக்கிற வாழ் பாழ்.

முழு மூவுலகு * 3998/1 ... முழு என்பது மேலே எல்லாம் என்பதோடு சேரும். முழுவெல்லாம் ஒன்றொழியாமல் எல்லாம். முழுவினை* 2933/3 பூர்ண பாபம்.

முழை 449/2 ... யில் புக்கிட்டு *. பாழி, முழஞ்சி, யோநி. 965/1 வரை ... *. முழைஞ்சு.

முள் பற்றை 1998/3 முள் கற்றை. முள் முளரி* 2833/2 முள்ளுள்ள தாமரை. முள்ளு மில்லாச் சுள்ளி * 505/2 இள விறகு, சிறு குச்சி. முள்ளெயிறு * 1666/1 தந்தாங்குரம், பல் முளை.

முளரி 2560/2 ... க் குரம்பை *. முள், தாமரை, முளரிக் குரம்பை - தாமரை இலையால் செய்த கூடு. ... க் கூட்டகம்* 1957/3 தாமரைப் பூவால் செய்த கூடு.

முளை 72/2 ... போல் சில பல் *. முளைக் கதிர்* 2065/1 உதய ஸூர்யன் போலுள்ள திவ்ய மங்கள விக்ரஹம். முளைப்பித்த 3776/2 உலகமூன்றும்...*. உண்டாக்கின. முளையட்டி* 252/2 திருமுளை சாத்தி

முற்கலன் 883/1 நமனும் ... னும் *. முத்கலன். முற்குழை 631/3 "...கடைக்.குழை." கும்பல் (?). முற்கூற்று (முமு). முதல்பாகம். முற் கொழுந்து 3869/ப்ர. "பசுக்களின் ... வந்து". இளங் கன்று (?).

முற்கோலிக் கொண்டு 917/அவ. முந்திக் கொண்டு. பிற்காலியாதே என்பதன் எதிரிடை. முற்றூசி 2058/2 "பாண யுத்தத்திலே பிரதானனுப் ... யிலே நின்ருன்." தூசித்தலே. முற்பட 3378/4 முதலில். பிற்படவுக்கு எதிரிடை, முற் பாடனாக 8/2 " ... ப் பெருமையாலே ". முந்திக் கொண்டவனாக.

முற்றக் கரந்து 3997/4 ... ஒளித்தாய்*. எங்கும், முழுதும் வியாபித்து. முற்றம் 13/4 கண்ணன் ... *, வீட்டின் முன்புறம்.

முற்றல் முரியேறு * 2330/3 திண்ணிதாய் உலாவுகிற ஏறு. முற்றல் மூங்கில்* 803/3 முற்றின மூங்கில். முற்றல் யானை* 803/1.

முற்றலாகும் 830/4 முத்தி ... மே*. உண்டாகாது. முற்று அல்ப்பம். ஆகும் என்பது ஸ்வரம். ஆகுமோ என்றபடி. அல்ப்பமாவது ஆகுமோ என்ருல் சிறிதும் உண்டாகாது என்று பொருள். முற்றல் - பக்வம். பக்வமாகாது, பலிக்காது என்றுமாம்,

முற்ற வருவது 68/3 ... தன் முன்*. பூர்ணமாக வருவது. முற்றவிம் மூவுலகும் 3636/3, 3997/3 த்ரை லோக்ய மெல்லாம். முற்ற விட்டு 3692/1 மற்ற வன் பாசங்கள் ... *. எல்லாம் விட்டு, முழுதும் விட்டு. முற்றவும் நின்றவன் * 2915/2 எல்லாமா யிருந்தவன்.

முற்ரு விளையார் * 1225/2 விளையாட்டுக் கவ்வருகு காரியம் கொள்ள வொண்ணுதபடி பருவத்தை யுடையவர்கள். யௌவநம் ஊச லாடாத பருவம். முற்றில் 41/4 ... லும் தூதையும் *. சிறு சுளகு, முறம். 286/1 முச்சில் என்று அரு. அதுவும் சுளகு தான். முற்றில் 2915/4 அவன் ... அடங்கே *. கைங்கர்யம், ஸகலம்.

முற்றூட்டாக 3976/2 ஏக போகமாக, பூர்ண ப்ரயோஜநமாக. 3451/3 " முறுவலே எனக்கு ... க்கினவன்."

முறி 349/3 ... யாழியும் காசும் *. துண்டு, முறிந்த ஒடிந்த பாகம். முறியாழி-முறிந்த மோதிரம். 2590/2 கருமா ... மேனி *. தளிர். முறி மேனி – தளிர் போன்ற மேனி. முறிந்து 630/2 தளர்ந்தும் ... ம்*. மயங்கி,

முறுக்கடி 3572/ப்ர. "விச்லேஷத்தினுடைய ... யாலே". முதிர்ச்சி. 3506/ப்ர. (9). "வ்யஸநம் ... யிடுகையாலே." முதிருகையாலே.

முறுக்கி 397/1 வேழத்தை ... *. கொன்று. முறுகச் சொன்னது 3379/4 " இப்படி... ". உறுதியாகச் சொன்னது.

முறுகி 1441/1 ... யெதிர் பொருதும் *. மிகைத்துக் கொண்டு. முறுகின பாட்டு 1375/4 " ... ப் பாடா நின்று கொண்டு ". பரி பக்வ மான பாட்டு.

முறுகு பொருந்தினபடி 2565/1 திருடமாகப் பற்றுகை. வயிரம் பற்றினபடி. வயிரத்தில் தீப் பற்றினுல் அணைக்கப் போகாது. முறுவலிக் கும் 1511/4 முல்லை ... *. சிரிக்கும்.

முறை 1695/1 ... கெட *. மரியாதை. முறை நின்று* 2280/2 வரிசையாக நின்று. முறைப்பட்ட 222/2 "நல்லார்கள் தாம் வந்து ...". முறையிட்ட. முறைப் படமாட்டி கோளோ 530/1 (?) முறையிட மாட்டிகோளோ.

முறை முறை 2582/4 வானவர் ... *. முறையைச் சொல்லும் சாஸ்திரம். ... ... யாக்கை * 3346/2 மாறி மாறி வரும் சரீரம். ... ... யா 135/4 இரு முலையும் ... ... *. மாறி மாறி.

முறைமை 554/2 நலியு ...*. நியாயம், முறை. ... யேனல்லேன்* 1968/1 காமன் தனக்கு ... *. ப்ராப்தி யுடையே னல்லேன்.

முன்தானை 3008/1 " ... யிலே முடிந்து." தலைப்பு. முந்தாணி என்னுமது. முன் தோன்றல்* 2802/2 முன்னே பிறந்தவன்.

முன்றில் 2560/1 ... பெண்ணை *. முற்றத்தில். முன்னைக் கன்று (?) கடைக் குட்டிக்கு முற்பட்டது.

முன்னம் முன்னம் * 489/7 முதலில். முன்ன(ை)மாயம் * 3568/2 அநாதியான ஸம்ஸாரம். முன்னகமும் 68/3 ... த் தணியார்* முகத்துக்கு மேலே யுள்ள நெற்றி. முன்னமே 612/1 ... கைக் கொண்டார்*. முன்பு ஒரு காலத்தில்.

முன்னல் 90/1 ... ஓர் வெள்ளிப் பெருமலைக் குட்டன்*. முன்னே. முன் நல் — என்றும் பிரிக்கலாம். முன்னல் யாழ் 3037/1 ... பயில் நூல்*. ஒற்றைப் போக்கி, முனல் என்ருக்கி முரலும் யாழ் என்பாருமுண்டு. அன்றிக்கே, முன்னல் உன்னல் நினைத்தலாய் வாய் புலற்றும் வீணை. முன்னே நல் யாழ் என்றுமாம்.

முன்னம் 2878/1 வானவர் தம் ... *. முன்னு 1122/4 ஏதலர் ... *. முன்பே. முன்னுக 377/2 பின் ... *.

முன்னுய தொண்டை * 2828/2 அவயவங்களில் முன்னேடி வருகிற தொண்டை, உதடு. முன்னுல் 2272/2 ... வணங்க முயல்மினே *. முற்பட.

முன்னுள் 504/1 மாசி ...*. முற் கூறு. பூர்வ பக்ஷம், வளர்பிறை. முதல் பதினைந்து. முன்னுனய்/ன் 2061/4 இமையோர்க் கென்றும்...*. ப்ரத்யக்ஷமா யிருக்கிறவன்.

முன்னி 2897/2 ... முனைத் தெழுந்து *. 3504/3 ... வந்தவன்*. முற்கோலி, முந்தி. முன்னிமை 2049/1 ... யைக் கூட்டி*. மேல்இமை. முன்னிய விருத்தன் * 1644/4 ப்ரதாந நாயகன்.

முன்னிய பெண்ணை* 2833/2 முன்னே நிற்கிற பெண்ணை - பனை. முன்னிய மூவுலகு * 3645/3 பழையதான மூவுலகு. முன்னியவன் 3587/4 ... வந்து *. முன்னி - முற்கோலி, அவன் வந்து.

முன்னிலாங் காலம் 3205/3 சென்று செல்லாதன ... *. முன்னிலாம், முன்னே நிற்கிற, வர்த்தமாந காலம், நிகழ் காலம்.

முன்னிலை 3052/2 ... போலத் தோற்றும் *. அபரோக்ஷம், ப்ரத்யக்ஷம். முன்னி வந்தவன் * 3504/3 முற் கோலி முற் பாடனய் வந்தவன். முன்னிற் பாட்டுக்களும் 3033/அவ. " ... பின்னிற் பாட்டுக்களும், ப்ரீதியோடே நடவா நிற்க." முன்னுலுள்ள பாட்டுக்கள்.

முன்னும் 1727/1 ... இராமனுய் *. முன்பும். மூன்னுரு2 052/1 மின்னுருவாய் ... வில் *. முன்னுலுள்ள வஸ்துக்கள். பிரத்யக்ஷத்தி லுள்ள பதார்த்தங்கள்.

முன்னுருக் கொண்டாள் * 1658/2 " தன் மகள் படியை ... ". அநுபந்தம் பார். முன்னுரை 2802/2 ... யில் கேட்டறிவது *. புரா தந நூல்கள். முன்னெலாம் * 815/2 முன் காலத்தில். முன்னெற்றி 273/3 ... நரைத்தன போல் *.

முன்னே 1935/3 ... நின்று போகாய் *. எதிரில். முன்னே யொரு கால் * 1136/1 முன் பொருகால்.

முன்னைத் தீவினைகள்* 3069/2 ... ப் படிக் கோலம் * 2261/4 முன் - ஸ்வாபாவிகமான தூப்பனை. முன்னை - முன்பு. முன்னை யமரர் * 2972/4 பூர்வரான நித்ய ஸூரிகள். முன்னைய வண்ணம் 104/2 ...மே*. முன் போலவே, முன்பிருந்த வடிவிலேயே. முன்னை வல்வினை கள் * 3706/2.

முன்னேட்டுக் கொடுத்த கங்குல் * 2570/1 ஏலக் கோலி ஓடிப் போன கங்குல். முன்னேட்டுக் கொடுத்தவன் 507/4 " பதினாறுமா யிரம் பெண்களுக்கும் ... வேணுமாய்த்து இவர்களுக்கு." தோற்கடித் தவன். "... க் கொடுத்த வாமனன்" 3638/1 முன் பே எண்ணிக் கொண்ட, ஸங்கல்ப்பித்துக்கொண்ட. "...கொண்டு" 3255/1 அறிந்து கொண்டு, கடாக்ஷித்துக் கொண்டு. 1701/2 "அவன் பண்ணின க்ரௌர்யத்தைத் திருவுள்ளத்தாலே ... ".

முன்னேடி 174/3 குழல்களை நீங்க ... *. முன்னேயோடி: முன் னேர்நாள் * 824/1 முன்னொரு நாள். முன்னேன் 3751/1 யவர்க் கும் ... *. காரணமானவன்.

முன நாள் 3137/1 ...ளில் *. முன்னாள், முற்காலம். முனம் 3116/2 நில ... மிடந்தார் *. முன்பு, முற்காலத்தில்.

முனாள் 1080/2 பொறைதிர் ... *. முன்பு. முனிக்கரையன் 1088/3 முனிந்த ... *. முனி ராஜா, பரசுராமன். முனித் தலைவன் * 2005/3 ஸத்வஸ்தனான ஸர்வேசுவரன்.

முனிதிர் 3387/1 அன்னையரும் ... *. பொடியா நின்றிகோள், நலியா நின்றிகோள், முனியா நின்றிகோள். கோபித்தீர்கள்.

முனிந்தீந்த வெங்கடம் * 1475/1 உலர்ந்து எரிந்துபோன வெங் கானம். கடம் - காடு. முனிந்து தீய்ந்து - முனிந்தீய்ந்து. கடைக் குறைத் தல். முனிமாப் பிரம முதல் வித்து * 3776/2 முனிகிற ஸங்கல்ப்பிக் கிற பிரம்மமாகிற முதல் வித்து - பரம காரணம்.

முனியாளர் 1445/1 ... திருவார் பண்*. 1506/1 ... ஏத்த நின்ற* முனிகள். முனி வஞ்சப் பேய்ச்சி* 2481/3 முனிந்து வஞ்சனத்தை யுடைய பேய்ச்சி. முனிவு 1695/1 முனிவனும் ... வெய்தி *. அப்ரீதி.

முனே 1079/1 ... முண்டார் *. முன்பே. முனைகள் 3944/2 ... வெருவிப்போம் *. முயற்சி.

முனைத்த சீற்றம் 1014/1 ... விண் சுடப் போய் *. மிக்க சிற்றம். முனை முகம் 1301/1 ... த் தரக்கன் *. பூசல் நெற்றி.

முனையார் சீயம் * 1489/1 பூசலென்றால் பணைக்கும் ஸிம்ஹம். முனையில் 1129/3 தென்னவனை ... *. தூசித்தலை. போர் முனை. 1308/2 நண்ணார் ... வென்றி *. யுத்தம். முனைவன் 1829/2 அரங்க நகருள் ... னை*. 3763/4 திருப் புலியூர் ... *. ப்ரதானன்.

மூக்கத்தவன் 2265/2 (மூர்க்கத்தவன்) உரங் கருதி ... *. மேனு ணர்ப்புடையவன். மூக்கறைச்சி 3921/2 சூர்ப்பணகி. மூக்கறுந்தவள். மூக்கின்று 2841/1 முன்னிருந்து ... *. பாதிக்கிறது.

மூக்கு வலி 3239/4 மூச்சு பலம். மூக் கோட்டை 1746/4 மலை யாளத்தில் ... என்கிற ஊர். அதை நினைத்தால் கவிகளுக்கு பாட்டுக் கிளம்பும். முக்கோட்டை பார்.

மூங்கில் 803/3 முற்றல் ... *. மூசி 1330/2 ... வண்டு முரலும்*. மொய்த்து. மூட்ட 1524/1 தீ ... *. மூடம் 3475/1 ஞானமும் ... மூமாய் *. அஞ்ஞானம்.

மூண்டார் 1079/2 ... அமலுண்ண *. எதிரிட்டவர்கள், சத்ருக் கள். மூண்டு 1079/2 ... ஆரமலுண்ண*. மேல் விழுந்து.

மூத்த 115/1 ... வை காண*. மூத்தன். கடைக் குறைத்தல். மூத் தவை வ்ருத்த ஜன ஸபை. மூத்த நம்பி 1063/3 தேவர்க் கெல்லாம் ...*. முன்னே பிறந்தவன்.

மூத்தப்பன் 6/1 தந்தைதன் ... *. பாட்டனார். பெரிய பாட்டனார். மூத்தவன் 1304/1 ... ற் கரசு *. முதல்வன், ஜ்யேஷ்டன். மூத்தவை மூத்த பார். மூத்தன் 1063/3 ... நம்பி *. முன்னே பிறந்தவன்.

மூத்தார் - இளையார் 3793/1 மூத்தவர் – பெரியவர். மூத்திடுகின்றன 1796/3 ... என் கொங்கை *. செவ்வி யழியாநின்றன. முதிர்கின்றன. மூத்திரப் பிள்ளை* 389/2 மூத்திரக் குழியில் பிறந்த பிள்ளை.

மூத்து 968/1 முற்ற ... *. கிழத்தன மடைந்து. மூதறியு மம்மனைமார் 2691/1 ஆரானும் ... *. மூதறிவாட்டிகள் 2530/ அவ. 2558/அவ. பழைய மர்யாதைகளெல்லாம் அறிந்தவர்கள்.

மூதறிவாளர் 444/3 ... முதல்வன் *. நித்ய ஸூரிகள். மூதுரை 289/4 ... யு மிலளே *. பழமொழி. மூதுவர் 2479/3 ... ராம் *. பழையவர். மூதூர் 3786/3 மல்லை ... *. பழைய ஊர்.

மூப்பிறப்பு 3325/3 நோயே ... *. மூப்பும் இறப்பும். மூப்பு 2156/3 ... ன்னைச் சிந்திப்பார் *. கைவல்யம், ஷட்பாவ விகாரம். மூப்புக்குச் சோறிடுகை (வா. மா. 221) பகவத் விஷயம். (?)

மூர்க்கத்தவன் 2265/2 ... னை நரங்கலந்த*. துரபிமாநத்தை யுடையவன். மூர்க்கனேன்* 903/3 மூர்க்கனுன நான். மூர்த்தியர் 2157/2 வழுவா மொழிநின்ற ... ரே*. வடிவை யுடையவர்.

